தஞ்சை சரசுவதி மகால் நூலக வளர்ச்சி வரலாறு

T.23435

முனைவர் ஆ.குணசேகரன்

தஞ்சை சரசுவதி மகால் நூலக வளர்ச்சி வரலாறு

01.714632
2017

முனைவர் ஆ.குணசேகரன்

மன்னர் இரண்டாம் சரபோஜி நினைவக அறக்கட்டளை
சதர்மகால் அரண்மனை
தஞ்சாவூர்

நூல் விவரம்

நூலின் தலைப்பு	: தஞ்சை சரசுவதிமகால் நூலக வளர்ச்சி வரலாறு
ஆசிரியர்	: முனைவர் ஆ.குணசேகரன்
பதிப்பாண்டு	: 2017
உரிமை ©	: ஆசிரியருக்கு
நூலின் அளவு	: டெம்மி
அச்செழுத்து அளவு	: 11 புள்ளி
மொத்த பக்கங்கள்	: 253
ISBN	: 978930132020
ஒளி அச்சு	: சிவா கணினியகம், தஞ்சாவூர். 9486686750
நூலாக்கம்	: அகரம், தஞ்சாவூர். 9443159371
விலை	: ரூ. 250.00
வெளியீடு	: Rajah II Serfoji's Memorial Hall Trust, Sadar Mahal Palace, Thanjavur-613 009.

அணிந்துரை

முனைவர் இ.சுந்தரமூர்த்தி
(மேனாள் துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்)
16 திருமலை நகர்,
பெருங்குடி
சென்னை-600 096

தஞ்சை சரசுவதிமகால் நூலகம் உலகப் புகழ்பெற்ற நூலகமாகும். இந்நூலகத்திலுள்ள அரிய ஓலைச்சுவடிகள், காகிதச் சுவடிகள், ஆவணக் குறிப்புகள் முதலானவை தஞ்சை மராட்டிய மன்னர்கள் தொகுத்த அரிய வரலாற்று ஆவணங்களாகும். மராட்டிய அரசர்கள் மிகுந்த ஈடுபாட்டோடும், அறிவுத் தேடலோடும் உருவாக்கிய இந்நூலகம் இன்று அறிஞர்களுக்குரிய ஆய்வுக்களமாக இருந்து வருகிறது.

உலகின் பல பாகங்களிலிருந்தும் ஆய்வுக்காக அறிஞர்கள் இந்நூலகத்திற்கு வருகை தந்து மகிழ்கின்றனர். 'இந்தியவியல்' குறித்து ஆராய்வதற்குரிய கலைக்கருவூலமாகத் திகழ்வது சரசுவதிமகால் நூலகம். சோழர்கள் காலத்தில் தோற்றம் பெற்று வளர்ந்த இந்நூலகம் மராட்டிய மன்னர்கள் காலத்தில் பெரிதும் விரிவாக்கம் பெற்று இன்று உலகப் புகழ்பெற்ற நூலகமாக விளங்குகின்றது.

உலகெங்கும் உள்ள அறிஞர்களின் அறிவுச் சிந்தனைகளைப் பாதுகாக்கும் பெட்டகமாக நூல்கள் விளங்குகின்றன. முந்தைய தலைமுறையின் அறிவுச் செல்வத்தை எதிர்வரும் தலைமுறையினருக்கும் வழங்கும் அரியபணியை இந்நூலகம் செய்து வருகின்றது. முந்தையோர் இதனை நன்கு உணர்ந்து அறிஞர்தம் அறிவுச்செல்வத்தைப் பல்வேறு நிலைகளில் போற்றிப் பாதுகாத்து வளர்த்தனர். பழந்தமிழ்க் கல்வெட்டுகள் திருமுறைநூல்களைப் போற்றிப் பாதுகாத்த நெறிகளைச் சுட்டுவதும் இங்கு எண்ணுவதற்குரியது. நூலக வளர்ச்சியின் வரலாற்றை அறிவதற்கு இத்தகைய வரலாற்று ஆவணங்கள் பெரிதும் பயன்தரும்.

தஞ்சை மராட்டிய மன்னர்கள் கலைகளில் பெரிதும் நாட்டமுடையவர்கள். அவர்கள் காலத்தே விளங்கிய புகழ்பூத்த அறிஞர்களின் பணியைப் பெரிதும் பாராட்டிப் போற்றித் தம் ஆளுகை நெறியால் அவர்தம் அறிவுச் சிந்தனைகளை நூலகத்தே முறையாகப் பதிவு செய்தனர்.

'சரசுவதிமகால் நூலகம்' இன்றும் அவர்தம் கல்வி ஈடுபாட்டைக் காட்டும். இந்நூலகத்தின் தோற்றம் வளர்ச்சி, வரலாறு ஆகியவற்றை மையமாகக் கொண்டு நூலகவியல் ஆய்வாளர் முனைவர் ஆ.குணசேகரன் 'சரசுவதிமகால் நூலக வளர்ச்சி வரலாறு' என்னும் அரிய நூலை உருவாக்கியுள்ளார்.

சோழர்கள் காலந்தொட்டு இருந்துவரும் சரசுவதிமகால் நூலகம் பற்றிய விரிவான ஆராய்ச்சியை இந்நூல் எடுத்துரைக்கிறது. தொடர்ந்து தஞ்சை நாயக்க மன்னர்கள் இந்நூலக வளர்ச்சிக்கு ஆற்றிய அரும்பணிகளையும் தொகுத்துரைக்கின்றது.

'நூலும் நூலகமும்' என்னும் பகுதியில் உலகப் புகழ்பெற்ற நூலகங்கள் குறித்து விளக்கியுரைப்பது நூலாசிரியரின் தரவுகள் கொடுப்பதில் உள்ள ஈடுபாட்டையும் உழைப்பையும் காட்டும். இத்தகைய நூலகங்களின் வரலாற்றுப் பின்னணியில் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து அடுத்த பகுதி எடுத்துரைக்கின்றது.

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களைச் சார்ந்தே அக்காலத்தில் சரசுவதி பண்டாரங்கள் அமைந்திருந்தன. சோழ மன்னர்களும், அதற்குப் பின்னர் நாயக்க மன்னர்களும் இந்நூலகத்தைப் போற்றி வளர்த்தனர்.

இந்தியாவின் தொன்னூலகமாக விளங்கும் தஞ்சை சரசுவதி மகால் நூலகம் சோழர் காலத்தில் தோன்றி வழிவழியே வளர்ச்சி பெற்று நாயக்க மன்னர் காலத்திலும் நிலைபெற்று விளங்கியது. தொடர்ந்து ஆட்சிபுரிந்த மன்னர்கள் பலர் பல நூல்களை உருவாக்கியும் படியெடுத்தும் பாதுகாத்தும் வந்துள்ளனர்.

இன்றுள்ள சரசுவதிமகால் நூலகம் அமைந்துள்ள அரண்மனையைக் கட்டிய நாயக்க மன்னர்களின் பணிகள் வரலாற்றில் குறிக்கத்தக்கன. அடுத்து வந்த மராட்டிய மன்னர்களின் கலை, பண்பாடு தொடர்பான பணிகளுக்கும் இவர்களுடைய பணிகள் பல அடித்தளமாக விளங்கின.

சரபோஜி மன்னர் காலத்தில் சரசுவதிமகால் நூலகம் பெருஞ் சிறப்புப் பெற்றது. ஓலைச்சுவடிகளைப் பாதுகாத்து வைத்தது போலவே இக்காலத்தில் ஆயிரக்கணக்கான காகிதச் சுவடிகள் உருவாக்கப்பெற்றன. பகவத்கீதைக்கு 15ஆம் நூற்றாண்டில் முகமதியத் துறவி அம்பர்ஹிஸின் மராட்டிய மொழியில் எழுதிய உரையின் சுவடி இந்நூலகத்தில் பாதுகாக்கப்பெற்றுள்ளது.

தஞ்சையின் நாயக்கர் ஆட்சி முடிவுற்ற பின்னர் ஏற்பட்ட மராட்டிய போசள வம்ச மரபினரின் ஆட்சியில் நூலகம் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற்றது.

ஏகோஜி மன்னர் இயல், இசை, நாடகங்களை வளர்ப்பதில் பேரார்வம் கொண்டவர். நூல்கள் பல எழுதியும் நூலகத்தை வளப்படுத்தினார்.

முதலாம் சரபோஜி புலவர்களை ஆதரித்து அரிய நூல்களை நூலகத்தில் சேர்த்தார். மருத்துவ நூல்கள் பலவற்றையும் பாதுகாத்து நூலகத்தினை வளர்த்தார்.

இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்தில் நூலகம் பெரு வளர்ச்சி பெற்றது. ஆட்சிப்பொறுப்பு அப்பொழுது கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் இருந்ததால் இம்மன்னர் தம்காலம் முழுவதும் நூலகப் பணியை மேம்படுத்துவதையே தலையாய பணியாகக் கொண்டார். ஆங்கிலம், செர்மன், பிரெஞ்சு போன்ற பல மொழிகளிலும் புலமை பெற்ற இவர் அம்மொழியில் அமைந்த அரிய நூல்கள் பலவற்றையும் தம் நூலகத்தில் பாதுகாத்தார்.

மேனாட்டினர் பலரும் தஞ்சைக்கு வருகைதந்து இம்மன்னரோடு தொடர்பு கொண்டிருந்தனர். சுவார்ட்ஸ் பாதிரியாரின் ஆதரவோடு வளர்ந்ததால் ஐரோப்பிய இலக்கியங்களை நன்கு கற்றுத் தேர்ந்தார். சேக்சுபியர் கவிதையைக் கணிப்பதில் பைரனைவிடச் சிறந்து விளங்கினார் எனப் பிஷப்ஹீபர் இவரைப் போற்றினார்.

மராட்டிய மன்னர்களால் தோற்றுவிக்கப்பெற்ற கல்வி நிலையம் இவர் காலத்தில் 'நவவித்யா கலாநிதிசாலா' எனப் பெயர் மாற்றம் பெற்றது. இங்கு ஆறு மொழிகள் கற்பிக்கப் பெற்றன என்பர். இப்பள்ளி சரசுவதி பண்டாரத்தில்தான் இருந்தது.

வண்ண ஓவியங்களும் இவர் காலத்தில் சேகரிக்கப்பெற்று நூலகத்தில் பாதுகாத்து வைக்கப்பெற்றன. மன்னர் சரபோஜி தம் பெண்ணின் திருமணத்தின்போது மராட்டிய நூல்களைத் தம் மாப்பிள்ளைக்குச் சீர்வரிசையாகத் தந்தார். மாதவசுவாமி மராட்டியில் எழுதிய மகாபாரத்தின் மொழிபெயர்ப்பைத் திருமணப் பரிசாக அளித்தார். நூல்களைப் போற்றும் மன்னரின் மாண்பு இவற்றால் நன்கு புலனாகும். காசி யாத்திரைக்குச் சென்ற போதும் நூல்களைச் சேகரித்தனுப்பி நூலகத்தை வளப்படுத்தினார்.

மன்னரின் நூலகத்திற்கு வருகைதந்த அயல் நாட்டறிஞர் வாலென்ஷியா நூலக அமைப்பைப் பார்த்து வியந்து போற்றினார் என்பர். இவர் காலத்தில்தான் நூலகப் பணிகள் செம்மையாக்கப் பெற்றன. நூல் அட்டவணைகள் தயாரிக்கப்பெற்றன. அச்சு நூல்களும் வண்ணப் படங்களும் சேர்க்கப்பெற்றன. நூலகத்தை நன்கு உருவாக்குவதையே முதன்மை நோக்கமாகக் கொண்டு வாழ்ந்தவர் சரபோசி மன்னர். கல்வி நிலையங்களை உருவாக்கினார். பன்மொழிப் புலவர்களையும் போற்றிப் பாராட்டி அரிய நூல்களை உருவாக்குவதற்கு உதவினார்.

மேலைநாட்டுக் கல்விமுறையை இவர் பெற்றிருந்ததால் இவர் காலத்தில் நூலகம் மறுமலர்ச்சியைப் பெற்றுச் சிறந்தது. மருத்துவம், அறிவியல் தொடர்பான பல நூல்களும், படங்களும், வண்ண ஓவியங்களும் சேர்க்கப்பெற்றன. இவரைத் தொடர்ந்து வந்த பல மன்னர்களும் நூலக வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டனர்.

இவற்றையெல்லாம் விரிவாக ஆராய்ந்து எழுதிய நூலாசிரியர் முனைவர் ஆ.குணசேகரன் அவர்கள் நூலகவியல் துறையில் பன்னெடுங் காலம் உழைத்து வருபவர். மறைமலை அடிகளார் நூலகத்தில் பணியாற்றிய காலத்திலிருந்து அவர்தம் பணியை அறிவேன். நூலகருக்குள்ள பல்வேறு திறமைகளையும் பெற்றுச் சிறப்பாகப் பணியாற்றுபவர். ஆய்வாளர்களுக்கு அருந்துணையாக நிற்பவர். நூலினை உடனடியாக எடுத்துத் தந்து ஆய்வாளர்தம் அறிவு வேட்கைக்குப் பெரும் துணையாய்ப் பொலிபவர். நல்ல புலமையும் திறமையும் வாய்ந்த அவர் 'தஞ்சை சரசுவதிமகால் நூலக வரலாறு' என்னும் தலைப்பில் நன்கு உழைத்துத் தேடற்கரிய தரவுகளைத் திரட்டிச் செறிவுமிகுந்த ஆய்வுநூலைப் படைத்துள்ளார்.

நூல்களைப் போற்றிப் பாதுகாக்கும் முன்னையோரின் மரபு நெறியுணர்ந்து அரிய நூலாகத் தந்துள்ளார்.

நூல்கள், நூலகங்கள், அரிய பதிப்புகள், நூலகத்தைப் போற்றி வருபவர்கள் முதலாய செய்திகள் பற்றிய ஓர் அரிய தகவல் களஞ்சியமாக இந்நூல் திகழ்கிறது. நூலக ஆய்வு நூல்களுள் குறிப்பிடத்தக்க நூல்.

நூலகவியல் துறைக்கு இவ்ஆய்வு ஒரு புதுவரவு, நல்வரவு. நூலின் இறுதியில் தந்துள்ள பல்வேறு இணைப்புகள் மேலும் பல நூல்களை உருவாக்குவதற்குரிய அரிய தரவுகளாக விளங்குகின்றன.

நூலகவியல் மாணவர்கள் இவ்வரிய நூலைப் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். முனைவர் ஆ.குணசேகரன் நூலகவியல் குறித்து நிறையத் தரவுகளை வைத்துள்ளார். அவற்றையெல்லாம் நன்கு தொகுத்து அவர் நூல்களாக்குதல் வேண்டும். நூலக அறிஞராக விளங்கும் இவரைத் தக்கவாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது என் அவா.

நூலகவியல் துறையில் ஈடுபாட்டோடு உழைத்துவரும் நூலாசிரியர் முனைவர் ஆ.குணசேகரன் மேன்மேலும் பல நூல்கள் எழுதித் தமிழுக்கும் நூலகவியலுக்கும் தொண்டாற்றுவாராக. அவருக்கு இனிய பாராட்டுதல்களும் வாழ்த்துக்களும்.

தமிழகமும், நூல் ஆர்வலரும் இந்நூலைப் பெரிதும் பாராட்டிப் போற்றி வரவேற்பர் என நம்புகிறேன்.

சென்னை

25.5.2017

முனைவர் ம.திருமலை
மேனாள் துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
எப்217 சாந்தி சதன் குடியிருப்பு
கோச்சடை
மதுரை

வாழ்த்துரை

முனைவர் ஆ.குணசேகரன் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் பல்லாண்டுகள் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நான் பொறுப்பேற்கும் வரை அவரை யான் அறிந்திலேன். துணைவேந்தராக இருந்த காலத்தில் ஒருமுறை ஏதோ ஒரு நூல் பற்றி வினவியபோது ஒருசில மணித்துளிகளில் தகவலும் பின்னர் நூலும் எனக்குக் கிடைத்தன. அந்த அளவிற்கு நூல்கள் பற்றித் தெரிந்து வைத்திருந்தவர். இத்தகைய தொழில் ஈடுபாடு உள்ளவர்களை இற்றை நாட்களில் காண்பதரிது. இவரை எண்ணும் போதெல்லாம்,

கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்

என்ற குறட்பா எனக்கு நினைவுக்கு வரும். அந்த அளவு கடமையுணர்வு கொண்டவர்.

மறைமலையடிகள் நூலகத்தில் பணிபுரிந்தவர் இவர். நல்ல நாற்றங்காலில் நல்ல பயிர்தானே விளையும்! தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் அவர் நல்வாய்ப்புக்கள் எதுவுமின்றி முதல்நிலை நூலகராகவே பணியாற்றி ஓய்வு பெற்றார். பதவி உயர்வுகள் எதுவுமற்ற நிலையிலும் அவர் தன் முகத்தில் சலிப்புணர்வைக் காட்டாமல் பணி செய்தவர். அதனால் அவர் மீது தனிப்பட்ட அன்புடன் இருந்தேன்.

தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் பல லட்ச ரூபாய்களுக்கு நூல்கள் வாங்கியபோதும் அவர் மிகுந்த எச்சரிக்கையுடனும் ஆர்வத்துடனும் உழைத்தவர். நூலகத்தை மேம்படுத்த அவர் மிகுதியாக ஒத்துழைத்தார். தஞ்சை சரசுவதி மகால் நூலகம் குறித்த அவரது ஆய்வு இப்போது நூலாக

வெளிவருகிறது. இதனை எண்ணி நான் மிக மகிழ்வு பெறுகிறேன். தஞ்சை நகரத்தின் பெருமைகளுள் ஒன்றாகக் கருதத்தக்க சரசுவதி மகால் நூலகம் பல வியப்புக்களை உள்ளடக்கிய நிறுவனமாகும். கற்றோர்தாம் அதன் அருமை பெருமைகளை நன்குணர்வர். தமிழகத்தின் ஆளுநராக இருந்த மேதகு ரோசையா அவர்கள் இந்த நூலகத்தினைக் குறித்து நன்கு அறிந்திருந்ததை நான் அறிவேன். இதனைப் பற்றிய ஓர் ஆய்வு நூல் வருவது சாலவும் பொருத்தமுடைய ஓர் நிகழ்வு; இதற்காக முனைவர் ஆ.குணசேகரன் அவர்களை நான் மனமுவந்து பாராட்டுகிறேன்.

மனம் துன்பத்தில் ஆழும்போதெல்லாம் சான்றோர் மருந்தாக எதனையும் உண்பதில்லை; மருத்துவரைக் காண்பதில்லை! நூல்கள் ஒன்றே 'மம்மர் அறுக்கும் மருந்து'. அவ்வகையில் கடின உழைப்பு ஒன்றே மனிதனை வாழ வைக்கும். உழைப்பினால் வரும் முன்னேற்றமே முன்னேற்றமாகும். வள்ளுவர்,

> செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
> பெருக்கம் பெருமித நீர்த்து

என்று கூறினார். அவ்வகையில் முனைவர் ஆ.குணசேகரன் பெருமிதம் கொள்ளலாம்.

முனைவர் ஆ.குணசேகரன் மேலும் நூல்கள் எழுதிப் புகழ்பெற வாழ்த்துகிறேன்.

வாழ்த்துக்கள்!

மதுரை-16
17.8.17



முனைவர் வே.இரா.மாதவன்
பேராசிரியர் (ஓய்வு)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
30 நட்சத்திர நகர்
தஞ்சாவூர்-613005

வாழ்த்துரை

மனிதனின் அறிவுப் பெருக்கத்திற்கும் நாகரிக வளர்ச்சிக்கும் பெருந்துணையாவன நூல்கள். அத்தகைய நூல்களைப் பாதுகாத்து வைத்தலும், பயன்படுத்துவோருக்கு அவற்றை வழங்குதலும் சிறப்பான நூலகப் பணிகளாகும். தமிழகத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாக இத்தகைய பணிகள் நடைபெற்று வந்ததைக் கால வரலாறு காட்டும்.

உலகின் தொன்மையான நூலகங்களில் மிகவும் குறிப்பிடத்தக்கது தஞ்சை சரசுவதிமகால் நூலகம் என்பது பன்னாட்டு நூலறிஞர் கருத்தாகும். உலகத்திலேயே மிகப் பெரியதும் மிக முக்கியத்துவமும் கொண்ட இந்நூலகம் மற்ற இந்திய நூலகங்களில் கிடைக்காத அரிய நூல்களின் ஒரே பிரதிகளை ஏராளமாகக் கொண்டதாகும். இங்குள்ள ஏட்டுச் சுவடிகள் ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும் பயன்தருபவை; வேறு எங்கும் கிடைக்காதவை; விலை மதிக்க முடியாதவை எனப் பலவிதமான சிறப்புக்களை இந்நூலகம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சோழர் காலம் முதலாகத் தஞ்சையில் பெருகி வந்த நூலகப் பணிகள் தஞ்சை மராட்டிய மன்னர்கள் காலத்தில் மேலும் சிறப்புற்றதை எடுத்துக்காட்டும் வகையில் இந்நூல் உருவாக்கப் பட்டுள்ளது.

சென்னையிலுள்ள மறைமலையடிகளார் நூலகத்தில் பல்லாண்டுகள் பணியாற்றிய பின்னர்த் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம் நூலகத்தில் முதல்நிலை (சிறப்புநிலை) நூலகராகக் கடந்த 31

ஆண்டுகளாகப் பணிபுரிந்து வந்த முனைவர் ஆ.குணசேகரன் அவர்கள் 'தஞ்சை சரசுவதிமகால் நூலக வளர்ச்சி வரலாறு' என்னும் தலைப்பில் இந்நூலக வரலாற்றை ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார். இவருடைய ஆய்வின் பயனாக இந்நூல் இப்பொழுது வெளிவருகின்றது. இதற்காக இவர் பலதரப்பட்ட தரவுகளை மிக அரிதின் தேடித்திரட்டித் தொகுத்துத் தந்திருப்பது இவருடைய பேருழைப்பைக் காட்டுகின்றது.

இந்தியப் பண்பாட்டிற்கும், குறிப்பாகத் தமிழக நூல் பாதுகாப்பிற்கும் நிலைக்களனாக விளங்கும் சரசுவதிமகாலின் வரலாறு, பண்பாடு, அச்சுப்பணிகள் ஆகியவற்றை முழுமையாக அறிந்துகொள்ள உதவும் முதன்மை நூலாக இந்நூல் அமைகின்றது.

இந்நூலாசிரியர் முனைவர் ஆ.குணசேரகன் அவர்கள் தலைசிறந்த நூல்கள் மரபில் வந்தவர். நூலகப் பணிகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். சென்னை மறைமலையடிகளார் நூலகத்திலும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக நூலகத்திலும் சிறப்பான நூலகர் என்ற பெயர் பெற்றள்ளவர். ஆய்வறிஞர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் அரிய நூல்களைத் தேடியளிப்பதில் மிகவும் பொறுப்புடனும் பணியாற்றியவர். இவருடைய முனைவர் பட்ட ஆய்வேடே இவருடைய முதல் நூலாக வெளிவருவது மிகவும் பெருமைக்குரியதாகும்.

பொதுமக்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கும் இத்தகைய அரிய நூல்களை முனைவர் ஆ.குணசேரன் அவர்கள் மேன்மேலும் தொடர்ந்து உருவாக்கியளிக்க வேண்டுவதுடன் அவருடைய அரிய உழைப்பிற்காக நெஞ்சார்ந்த பாராட்டுதல்களையும் வாழ்த்துரைகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்

வே.இரா.மாதவன்

சிவாஜி ராஜா டி.போசலே
தஞ்சை இளவரசர்
வாழ்நாள் உறுப்பினர்,
தஞ்சை சரசுவதிமகால் நூலகம்
சதர் மகால் அரண்மனை
தஞ்சாவூர்-613 009

வாழ்த்துரை

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதிமகால் நூலகம் உலகப்பிரசித்தி பெற்றது. மாமன்னர் சரபோஜி அவர்களால் சேகரிக்கப்பட்டு அரண்மனை நூலகமாக 1855 ஆம் ஆண்டு வரை அரண்மனை வளாகத்தில் பேணி காக்கப்பட்டு வந்தது. அதனை நாம் பிஷப் ஹீபர் எனும் பாதிரியாரின் டைரிக் குறிப்பு மூலம் அறியமுடிகிறது. அவருடைய டைரிக் குறிப்பில் மன்னர் சரபோஜியின் சந்திப்பின் போது அரண்மனை வளாகத்தில் பெரும் மரப் பீரோக்களில் நூல்கள் அடுக்கப்பட்டு, பேணி காக்கப்பட்டதாக பதிந்துள்ளார். மன்னர் இரண்டாம் சிவாஜி மரணத்திற்குப் பின் பிரிட்டிஷ் அரசாங்கம் நூல்களை லண்டன் கொண்டுசெல்ல முயன்றபோது சீனியர் ராணி காமாட்சி பாய் அவர்கள் தடுத்து நிறுத்தி தஞ்சையிலே பாதுகாத்து வைத்தார். இந்நூலகத்தின் புகழை குறிப்பிடும்போது ராணியின் இச்சேவையை குறிப்பிடாமல் இருக்கமுடியாது. அதன்பின் இந்நூலகம் 18 of 1918 தீர்ப்பின்படி அரண்மனை நூலகம், பொது மக்களின் பயன்பாட்டுக்காக, அரச குடும்பத்தினரின் 1 லட்சம் நிதி உதவியுடன் பொது நூலகமாக அறிவிக்கப்பட்டது. இந்நூலகம் உலகில் உள்ள நூலகங்களிடையே ஒரு மாறுபட்ட நூலகமாக கருதப்படுகிறது. இங்கு ஓலைச் சுவடிகள், காகிதச் சுவடிகள், புத்தகங்கள், ஓவியங்கள் மற்றும் செப்பேடுகள் முதலியன பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. இங்கு இலக்கியம், இலக்கணம், மருத்துவம் நாட்டியம், நாடகம், ஜோதிடம், புராணம், வரலாறு, பூகோளம், தாவரவியல், வானியல் மற்றும் தமிழ், தெலுங்கு, மராட்டி, சமஸ்கிருதம், மோடி ஆகிய மொழிகளில் உள்ளன. மேலும் இந்நூலகத்திற்கு சிறப்பு

சேர்க்கும் வகையில் சரபோஜி மன்னரால் உலகமெங்கும் இருந்து சேகரிக்கப்பட்ட 4500 புத்தகங்கள் (Serfoji collection) ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன், லத்தின், அரபிக், உருது மொழிகளில் உள்ளன. இந்நூலகத்தின் வரலாறு, புத்தகத்தின் வரலாறு மற்றும் சிறப்பினை ஆ.குணசேகரன் அவர்கள் இப்புத்தகத்தில் மிகச் சிறந்த முறையில் பதிவு செய்துள்ளார். இந்நூல் ஆராய்ச்சியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் மிகவும் பயன்படும் வகையில் எழுதப் பட்டுள்ளது. இவரது முயற்சியை நான் பாராட்டுகிறேன். இந்நூலகத்தைப் பற்றி இதுவரை எழுதப்பட்ட நூல்களில் இதையே சிறப்புமிக்க நூலாக கருதுகிறேன். இந்நூலாசிரியர் குணசேகரனுக்கு என் வாழ்த்துகளையும் பாராட்டுதலையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

-டி.போசலே

சுருக்கக்குறியீட்டு விளக்கம்

உ.ஆ.	- உரையாசிரியர்
ச.ம.நூ.எண்	- சரசுவதிமகால் நூலக எண்
ச.ம.மோ.த.	- சரசுவதிமகால் மோடி ஆவணத் தமிழாக்கம்
த.ப.க.மோ.த	- தமிழ்ப் பல்கலைக்கழக மோடி ஆவணத் தமிழாக்கம்
த.ம.ம.மோ.ஆ.த.கு.	- தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும்
தொ.ஆ.	- தொகுப்பாசிரியர்
ப.ஆ.	- பதிப்பாசிரியர்
பக்.	- பக்கம், பக்கங்கள்
மன்னர் தொகுப்பு	- இரண்டாம் சரபோஜி மன்னர் தொகுத்த அச்சு நூல்கள்
ARE	- Annual Report on Indian Epigraphy
B.No.	- Burnell Catalogue Number
JTMSSML	- Journal of Tanjore Maharaja Serfoji's Saraswati Mahal Library
p.	- page number
pp.	- pages
S.I.L.	- South Indian Inscriptions
TC No.	- Tanjore Collection Number
TMSSML	- Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library
Vol.	- Volume
Vols.	- Volumes

உள்ளடக்கம்

என்னுரை	...	16
1. நூலும் நூலகமும்	...	21
2. சரசுவதிமகால் நூலகம்-தோற்றமும் வளர்ச்சியும்	...	68
3. மராட்டியர்களின் நூலகப் பணிகள்	...	86
4. இரண்டாம் சரபோஜியின் நூலகப் பணிகள்	...	110
5. இரண்டாம் சரபோஜி மன்னருக்குப் பின்னர் சரசுவதிமகால் நூலக வளர்ச்சி	...	157
முடிவுரை	...	215
பயன்பட்ட நூல்கள்	...	229
படங்கள்		

என்னுரை

உலகப் புகழ்பெற்றதொரு தொன்னூலகமாக விளங்கும் தஞ்சை சரசுவதி மகால் நூலகம் உலகிலேயே மிகப் பெரியதும் மிக முக்கியமானதுமானதொரு நூலகமாகும். வேறு எங்கும் கிடைக்காத, மிகவும் பயனுடைய, அரிய நூல்கள் பல இந்நூலகத்தில் ஓலைச்சுவடிகளாகவும், காகிதச் சுவடிகளாகவும், அச்சு நூல்களாகவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய சிறப்புமிக்க இந்நூலகம் நீண்ட காலமாகத் தஞ்சை மன்னர்களின் குடும்பச் சொத்தாகவே இருந்துவந்தது. மிக அண்மையிலேதான் இந்நூலகம் பொதுநூலகமாக மாற்றப்பெற்றது. உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து இந்தியாவிற்கு வருகின்ற பார்வையாளர்களைக் கவர்ந்துவரும் பெருமைமிக்க இந்நூலகம் பல்துறை அறிஞர்களின் ஆய்வுக்குப் பயன்படும் நூலகமாக விளங்கி வருகிறது. பொதுவாக நம் இந்திய நாட்டிற்கும், சிறப்பாகத் தென்னகத்திற்கும், அதிலும் குறிப்பாகத் தஞ்சைக்கும் உலகப் புகழைத் தேடித் தந்த இந்நூலகம் இத்தகைய உயர்நிலையை எய்துவதற்குக் காரணமாக இருந்தவர்கள் தஞ்சை மராட்டிய மன்னர்கள் ஆவர். சோழர்கள் காலம் முதலாகவே தோற்றம் பெற்று வளர்ந்து வந்த இந்நூலகத்தினை மராட்டிய மன்னர்கள் தம் நூலகப் பணிகளால் மேலும் வளர்த்தனர். இதனை வரலாற்று அடிப்படையில் அணுகி ஆராயும் வகையில் இந்நூல் அமைகின்றது.

தஞ்சை

செந்தமிழ் நாடாகிய சோழநாட்டின் தலைநகர் தஞ்சை - தஞ்சாவூர் ஆகும். சோழ வளநாடு நீர்வளம் மிக்கது. நீர் மிகுதியாகப் பாய்வதால் வயல்கள் எப்பொழுதும் குளிர்ச்சி பொருந்தியனவாக மாறின. அவை, தண் + செய் 'தண்செய்' எனப்பட்டன. தண்செய் என்ற பெயரே பின்னாளில் தஞ்சை என மாறியது என்பர்.

'தஞ்சன்' என்று ஒரு அரக்கன் வாழ்ந்து வந்தான். அவனை ஆனந்தவல்லி அழித்தாள். ஆனந்தவல்லியால் கொல்லப்படுமுன்

தஞ்சன் தான் வாழ்ந்த ஊருக்குத் தன்பெயர் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அவன் விருப்பப்படியே 'தஞ்சபுரி' தஞ்சாவூர் ஆயிற்று என்பர் சிலர்.

சோழநாடு சோறுடைத்து. அதனால் பிற நாடுகளில் பஞ்சம் முதலியன ஏற்பட்டால் மக்கள் இங்குதான் 'தஞ்சம்' புகுவர். மக்கள் தஞ்சம் புகுந்த இந்நகருக்குப் பெயர் தஞ்சஊர் > தஞ்சாவூர் ஆயிற்று என்பர். அஞ்சினான் புகலிடத்தோடு இப்பெயரை ஒப்பிட்டும் காட்டுவர்.

'தண்சாய்' என்பது ஒருவகைக் கோரையின் பெயர். அத்தண்சாய்க் கோரை மிகுந்துள்ள இடம் 'தஞ்சை' எனப்பட்டது என்பர் சிலர். அருகில் மாணாங்கோரை, தண்டாங்கோரை எனச் சில ஊர்கள் உள்ளன.

தஞ்சாறை என்பதே இந்நகரின் பழம்பெயர் என்பர் சிலர். 'ஆறை' என்றால் கோட்டை, மதில், அரண் என்று பொருள் கொள்வர். தஞ்சாறை என்ற பெயரே தஞ்சாவூர் ஆயிற்று என்றும் கொள்வர்.

'ஆவூர்' என்பது சோழ நாட்டின் மிகத் தொன்மையான ஊர்களில் ஒன்று. ஆவூர் மூலங்கிழார் என்ற சங்கப் புலவர் வாழ்ந்த ஊர். தேவாரப் பாடல் பெற்ற தலம். சங்க காலத்திற்குப் பின் விசயாலயன் காலம் வரை முற்காலச் சோழர்கள் பன்னெடுங்காலம் அப்பகுதியில் தங்கியிருந்தனர். அப்பகுதிக்குப் பழங்காலத்தில் 'செம்பியங் கிழார் நாடு' என்று பெயர். கண்டியூரில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டால் அது தெரியவருகிறது.

தஞ்சைக்கு ஆவூரிலிருந்து வந்த சோழர்கள் தஞ்சையுடன் தம் ஆவூரையும் சேர்த்துத் தஞ்சைஆவூர் என வழங்கியிருக்கலாம். பின் அப்பெயரே தஞ்சாவூர் என ஆகியிருக்கலாம். பல்லவர் கல்வெட்டு, முத்தரையர் கல்வெட்டு, ஆழ்வார்கள் பாடல், திருநாவுக்கரசர் தேவாரம், விசயாலயன் கல்வெட்டு ஆகிய தொன்மையானவற்றில் 'தஞ்சை' என்ற பெயரே காணப்படுகின்றது. ஏறக்குறைய முதல் பராந்தகன் காலத்தில்தான் 'தஞ்சாவூர்' என்று பெயர் வழங்கத் தொடங்கியது என்பர்.

தஞ்சை போலவே சோழநாட்டின் தொன்மையான ஊர்கள் பல ஐகாரத்தால் முற்றுப்பெற்று விளங்கின. இரும்பூளை, இலந்தை,

உறந்தை, கழிப்பாலை, குடந்தை, குறுக்கை, கொடும்பை, தண்டலை, தில்லை, நாகை, பழையாறை, புள்ளமங்கை என்பன அவை. இவற்றால் தஞ்சை என்பதே பண்டைய வழக்கு என்பதனை அறிகிறோம்.

அரசர்கள் போற்றிய ஊர்

அரசர்கள் சிலர் தங்கள் பெயருடன் தஞ்சையின் பெயரை இணைத்துக் கொண்டனர். அதன் மூலம் தஞ்சையின் பெருஞ் சிறப்புப் புலப்படுகிறது. தஞ்சை மீது அவர்கள் கொண்டிருந்த பற்றும் பாசமும் வெளிப்படுகிறது. சிலர் தஞ்சையை வென்றதாகக் கூறிக் கொள்கின்றனர். அரிய அவ்வெற்றியைப் பெயருடன் இணைத்துக் கொண்டனர்.

பல்லவரின் கீழ், நியமத்திலிருந்து ஆட்சிபுரிந்த முத்தரையர்களில் பெரும்பிடுகு முத்தரையன் சுவரன்மாறன் (655-680) மீது பாடப்பட்ட பாடல்களில் அவன் தஞ்சைக்கோன், 'தஞ்சை நற்புகழாளன்' என்று குறிக்கப்பெறுகிறான்.

மார்பில் 96 விழுப்புண்களைப் பெற்றுப் பெருவீரனாகப் போராடி வென்று பிற்காலச் சோழமரபை நிறுவின விசயாலய சோழன் (846-881) தஞ்சையை முத்தரையர்களிடமிருந்து மீட்டான். அதனால் விசயாலயன் 'தஞ்சை கொண்ட பரகேசரி' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான்.

ஆட்சியாளர்கள் என்ற நிலையில், பல்லவர், முத்தரையர், சோழர், பாண்டியர், போசளர், விஜயநகர அரசர்கள், நாயக்கர்கள், மராட்டியர்கள் எனப் பலரும் தஞ்சையை ஆண்டனர்.

இவருள், தஞ்சை மராட்டிய மன்னர்கள் மிகவும் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

நூலகப் பணிகள்

மனிதனின் அறிவு வளர்ச்சிக்கும் பண்பாட்டுச் சிறப்பிற்கும் அடிப்படையாக விளங்கும் கலை மற்றும் அறிவியல் நூல்களைப் பயன்பாட்டு நோக்கில் பாதுகாத்து வைத்திருத்தல் என்பது நூலகப் பணியாகும். நூல் ஆர்வம் உடையவர்களுக்கு நூல் பாதுகாப்பு எண்ணங்கள் மேலோங்கியிருப்பதும் இயல்பே. மேலும், எதிர்காலத் தேவைகளைக் கருதி நூல்களை உருவாக்குதல், படியெடுத்தல், அட்டவணைப்படுத்துதல், பல நிலைகளில்

பாதுகாத்தல், பயன்படுத்துவோருக்கு உரிய வகையில் நூல் வழங்கல் போன்ற பலவும் நூலகப் பணிகளாகும்.

சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கும் மேலான பழமையானது தஞ்சை சரசுவதிமகால் நூலகம். தஞ்சை மராட்டிய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இந்நூலகம் வளர்ச்சியடைந்தது. குறிப்பாக, இரண்டாம் சரபோஜி மன்னர் தமது பன்மொழிப் புலமையாலும் மேனாட்டுக் கல்வியால் பெற்ற அறிவாலும் இந்நூலகத்தினை நூலகவியல் முறைப்படி வளர்ச்சி அடைவதற்கு வகை செய்தார்.

சோழர்கள் காலந்தொட்டு இருந்துவரும் சரசுவதிமகால் நூலகம் தஞ்சை மராட்டிய மன்னர் ஆட்சிக்காலத்தில் பெரும் வளர்ச்சியடைந்ததைப் பற்றிக் கால அடிப்படையில் இதுவரை ஆய்வு செய்யப்பெறவில்லை. மேலும், உலகின் தொன்னூலகங்களில் ஒன்றான இந்நூலகம் தொடக்க கால முதல் இதே இடத்திலேயே உள்ளதா? இதிலுள்ள மிகப் பழமையான நூல்கள் எவை எவை? அவை எக்காலங்களில் இங்கே சேர்த்து வைக்கப்பெற்றன? சோழர்கள் முதலான மன்னர்கள் நூலகப் பணிகளைச் செய்திருந்தும் மராட்டியர்களின் பெயரோடு இந்நூலகம் சிறப்பாக விளங்குவதற்குரிய காரணங்கள் யாவை? பொதுநூலகமாக இது மாறிய பின்னுள்ள நிலைகள் யாவை? என்பன போன்ற பல ஐயங்களுக்கும் தெளிவு காண வேண்டியுள்ளோம். எனவே, 'சரசுவதிமகால் நூலக வளர்ச்சி வரலாறு' என்ற தலைப்பிலான இவ்வாய்வு தஞ்சை மராட்டிய மன்னர்களின் நூலகப்பணிகளைத் தொடக்கமுதல் இன்றுவரை வரலாற்றுச் சான்றுகளுடன் விளக்குவதாக அமைகின்றது.

தஞ்சையை ஆண்ட சோழர்கள் காலமுதல் இன்றுவரை போற்றிப் பாதுகாக்கப்பட்டு வரும் சரசுவதிமகாலின் வரலாற்றினையும் அதற்காகத் தஞ்சை மராட்டிய மன்னர்கள் ஆற்றிய பணிகளையும் ஆராயும் வகையில் சோழர்கள் காலம் முதல் இன்று வரையிலுள்ள வரலாற்று நிகழ்வுகள் அனைத்தும் இந்நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன.

இந்நூலுக்கான தரவுகள்

சரசுவதிமகால் நூலகம் பற்றி இதுவரை வந்துள்ள ஆய்வறிக்கைகள். வழிகாட்டி நூல்கள், தஞ்சை மராட்டிய மன்னர்களின் வரலாறு மற்றும் ஆய்வுகள், மோடி ஆவணங்கள்,

இந்நூலகச் சுவடிகள், விளக்க அட்டவணைகள் ஆகியவை முதன்மைத் தரவுகளாக அமைகின்றன.

சரசுவதிமகாலிலுள்ள பிற நூல்கள், இந்நூலகக் காலமுறை இதழ்களில் வெளிவந்துள்ள கட்டுரைகள், இங்குள்ள பன்மொழிப் பண்டிதர்களிடம் நேர்காணலில் கிடைத்த செய்திகள் போன்றவை துணைத்தரவுகளாக அமைகின்றன.

தரவுகளைச் சேகரித்தல்

தஞ்சை சரசுவதிமகாலில் உள்ள நூல்களையும் சுவடிகளையும் நேரடியாகப் பார்த்தும், நூல்களைப் படித்தும், அங்குப் பணிபுரிவோரையும் பணியிலிருந்து ஓய்வுபெற்றோரிடம் நேரில் கேட்டறிந்தும், படங்களின் மூலமாகவும் இந்நூலகம் பற்றிய தரவுகள் சேகரிக்கப்பட்டு இந்நூலில் தரப்பெற்றுள்ளன.

ஆய்வின் பயன்

தஞ்சை நாயக்க மன்னர்களால் உருவாக்கப்பட்ட சரசுவதி நூலகத்தினைத் தஞ்சை மராட்டிய மன்னர்கள் மேலும் வளர்த்தது பற்றியும்; அவர்கள் சுவடிகள் பல எழுதுவித்தும், படியாக்கம் செய்தும், மொழிபெயர்ப்புச் செய்தும், பாதுகாத்தும், பட்டியலிட்டும் வைத்துள்ளமை பற்றியும்; மன்னர்களின் ஆதரவைப் பெற்ற மராட்டிய மடங்களிலும் நூலகப்பணி சிறப்பாக நடைபெற்றது பற்றியும்; இந்நூலகத்தில் அச்சிடும்பணி தொடங்கப்பட்டது பற்றியும்; இங்குள்ள பன்மொழிச் சுவடிகளின் பழமை பற்றியும்; மன்னர்களின் நூல்கள் தொகுப்புப் பற்றியும் வரலாற்று அடிப்படையில் தெளிவாக அறிய இந்நூல் துணைபுரியும் என நம்புகிறேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள முனைவர் இ.சுந்தரமூர்த்தி ஐயா அவர்களுக்கு என் நன்றி என்றும் உரியது. இந்நூல் தொடர்பாக பல கருத்துக்களை வழங்கிய தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தின் முன்னாள் இயக்குநர் முனைவர் த.பத்மநாபன் அவர்களை இந்நேரத்தில் நினைவுகூர்கிறேன்

நூலகம் எவ்வாறு உருவானது என்றும், சரசுவதி கால் நூலகத்தின் வளர்ச்சி குறித்தும் விவரிக்கும் இந்நூல் வருங்கால ஆய்வாளர்களுக்கு பெரிதும் உதவும் என்று நம்புகிறேன்.

- ஆ.குணசேகரன்

1. நூலும் நூலகமும்

பண்டைய கால முதல் தமிழர்கள் எப்பொருளுக்கும் அதன் பண்பு அடிப்படையிலும், அதன் பயன்பாடு, உருவ அமைப்பு ஆகியவற்றினைக் கொண்டும் பெயரிட்டு வழங்கி வந்தனர். ஆதிமனிதர்கள் தங்களின் அறிவு வளர்ச்சியின் தொடக்க காலத்தில் தங்களது கருத்துக்களை ஒலியின் மூலமாகவும், பின்னர் அவர்களுக்கு எளிதில் கிடைத்த பொருள்களில் ஓவிய வடிவில் எழுதியும் தெரிவித்து வந்தனர். பழந்தமிழர்கள் தமக்கு எளிதில் கிடைத்த பனைஓலையில் எழுதினர். அதுவே பின்னாளில் எழுதப்பட்ட நூலுக்கும் பொருளானது. பனையோலை நறுக்கில் எழுதப்பட்டு, தொகுதியாகக் கட்டப்பட்ட நிலையில் சுவடி, தூக்கு, பனுவல் என்றும், பின்னர் நூல், புத்தகம், பொத்தகம் என்ற சொற்களும் வழக்கில் வந்துள்ளன. இவ்வாறு உருவாக்கப்பட்ட நூல்களின் தொகுப்புக்கள் அமைந்த இடங்கள் நூல் நிலையம், நூலகம் எனவும் வழங்கப்பெறுகின்றன. தனியொருவர் சேகரித்து வைத்த நூல்களின் தொகுப்பு என்ற நிலைமாறி, பின்னாளில் அரசே முனைந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்காக நூலகங்களை அமைத்துள்ள நிலைகளும் உருவாகியுள்ளன. இதனால் நூலகங்களின் வகைகள் பலவாறாகப் பெருகி நிற்கின்றன.

சுவடிக் கல்வி

நூல் மற்றும் நூலகம் பற்றி ஆராயுமிடத்து, முதலில் நூல் உருவாவதற்கு அடிப்படையான 'சுவடி' (Manuscript) பற்றி அறிய வேண்டுவது மிகவும் தேவையாகும். பல்வகைப்பட்ட பழைய சுவடிகளைப் பற்றி அறிந்த பின்பே நூல் மற்றும் நூலகம் பற்றிய தன்மைகளையும் வரலாறுகளையும் முழுமையாக அறிய இயலும்.

சுவடி

சுவடி என்னும் சொல் கையால் எழுதிய நூலைக் குறிப்பது. காரணப் பெயராய் அமைந்தது. தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ் என்பனவும் எழுதிய பொருள்களைக் குறித்தன. தந்திரம், தூக்கு,

பனுவல், நூல், புத்தகம் என்னும் சொற்களும் சுவடியைப் போன்று அமைந்தன.

தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ் என்னும் பெயர்கள் எழுதப்பெற்ற ஏட்டிற்கும் நூலுக்கும் ஆகுபெயர்களாய் வழங்கி வருவதுபோலச் சுவடி என்னும் பெயரும் காரணப் பெயராய் அமைந்துள்ளது.

சுவடு + இ = சுவடி, சுவடு உடையது சுவடி. எழுதப்படுதலின் எழுத்து என்றாற்போல எழுத்துச்சுவடு உடையது ஆதலின் சுவடி எனப் பெறுகிறது. பதிதலால் உண்டாகும் குறி சுவடு ஆகும். எனவே எழுத்துக்கள் பதியுமாறு எழுதப்பெற்ற ஏடுகளின் தொகுப்பு சுவடி எனப்பெறுகிறது.

பூவா ரடிச்சுவடுஎன் தலைமேல் பொறித்தலுமே[1]

என்னும் மாணிக்கவாசகரின் பாடலடியில், சுவடு என்னும் சொல் பதிதலால் உண்டாகும் குறியினைச் சுட்டுகிறது.[2]

சுவடி என்பது இணை, கற்றை, கட்டு, பொத்தகம் என்னும் பெயர்களையும் பெறுகிறது. சுவடித்தல்-பொருத்தி அழகு படுத்துதல். சுவடி - சோடி, சோடணை - அழகுபடுத்துதல் என்னும் பொருள்களைத் தேவநேயப்பாவாணரின் சொல் ஆய்வுகள் தெளிவுறுத்துகின்றன.

பட்டுச் சுவேகமொடு பாட்டுப்புறம் எழுதிய
கட்டமைச் சுவடி பற்றிய கையினர்[3]

என்னும் அடிகளில் ஏடுகளின் தொகுப்பாகிய கட்டு, சுவடி என்று குறிப்பிடப்பெறுகிறது. கையால் எழுதப்பெற்ற படிவம் சுவடு எனப்படும். இந்தப் படிவம் பல பொருள்களிலும் எழுதப்பட்டதாக இருக்கும். பொதுவாக, எளிதாகவும் விரைவாகவும் எழுதக்கூடிய எழுது கருவிகளால் எழுதப்பெற்றதே சுவடியாகும். கல்லில் வெட்டுவது போன்ற கருவிகளைக் கொண்டு செதுக்கப்பெறும் கல்வெட்டுப் படிவங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டக்கூடியதே சுவடி என்பதாகும்.[4]

பழங்காலத்தில் அல்லது இடைக்காலத்தில் எழுதப்பெற்ற எழுத்துப் படிவங்களைக் குறிப்பதற்கே சுவடி என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது என்று ஆங்கிலப் பேரகராதி கூறுகிறது.[5]

தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா

ஈர்க்கே குலையென நேர்ந்தன பிறவும்

புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்[6]

என்னும் தொல்காப்பிய நூற்பா தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ் என்பன புறத்துக்காழுடைய பனை, தெங்கு, கமுகு முதலியவற்றின் இலையாகிய உறுப்பினைக் குறிக்கும் மரபுச் சொற்களாகும் என்பதை எடுத்துக் கூறுகிறது.

எழுதப்பெற்ற ஏடுகளும் தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ் என்னும் பெயர்களால் சுட்டப்பெறுவதை இலக்கியங்களிலும் வழக்காற்றிலும் காணமுடிகிறது. இவற்றுள் பெரும்பாலும் கடிதவடிவில் எழுதப் பெற்றவை மடல், ஓலை என்ற பெயர்களைப் பெறுகின்றன. நூல் வடிவில் அமைந்தவை ஏடு என்ற பெயரைப் பெறுகின்றன. இவை ஆகுபெயர்கள். இவ்வாகு பெயர்களைப் போலவே சுவடி என்னும் காரணப்பெயரும் அமைகின்றது.

ஏடு

எழுதப்பெற்ற ஓலைகள் ஏடு என்ற பெயரையும் பெறுகின்றன.

வடமொழி வாசகஞ் செய்த நல் லேடு[7]

பொருவருங் கவிதை யேட்டைப் போற்றிமுன்[8]

என்னும் பாடலடிகளால், செய்தியும் கவிதையும் எழுதப்பெற்ற ஓலைகள் ஏடு என்ற பெயரால் வழங்கப்பட்டன என அறியலாம்.

ஏடு தேடி யலைந்தஊர் எத்தனை[9]

செய்ய சிவஞானத் திரளேட்டில் ஓர்ஏடு[10]

என்னும் பாடலடிகள், எழுதப்பெற்ற ஓலைகளின் தொகுப்பாகிய சுவடி வடிவில் உள்ள நூலையும் ஏடு என்றே குறித்ததைச் சுட்டுகின்றன.

இவ்வகையில், ஏடு, சுவடி என்பன நூலைக் குறிக்கும் சொற்களாகக் காண்கிறோம். இடை நரம்பு நீக்கப்பட்ட ஓலையின் ஒற்றை அலகு ஏடு எனப்படுகிறது. அவ்வேட்டில் எழுதப்பெற்றதால் நூலும் ஏடு என்றே பெயர் பெறுகிறது. சுவட்டினைத் தாங்கும் அவ்வேடுகளின் தொகுதி சுவடி எனப் பெறுகிறது.

இவற்றைப் போலவே தந்திரம், தூக்கு, பனுவல், புத்தகம் என்னும் பெயர்களும் நூலைக் குறித்து நிற்கின்றன.

தந்திரம்

தரும்வகை செலுத்துதல் தந்திர வுத்தி[11]

என்னும் அடியில் உள்ள தந்திரம் என்ற சொல் நூலைச் சுட்டுகிறது. தன்திறம் பெறுதற்குரிய வழிமுறைகளை வகுத்துக் காட்டுவது என்னும் பொருளில் தந்திரம் என்ற பெயர் பெறுகிறது.

தூக்கு

மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்[12]

தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி

வாக்கி னால்சொல வல்லபிரான்[13]

என்பனவற்றுள் தூக்கு என்பது சீட்டுக்கவியையும் நூலையும் சுட்டுகிறது. ஆய்ந்து அறியத்தகும் பாக்களின் தொகுதி என்ற காரணத்தால் வந்த பெயர் என்பர். செய்யுளால் ஆன நூல் எனினும் அமையும்.

பனுவல்

புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்[14]

பாயிரம் இல்லது பனுவல் அன்றே[15]

என்பனவற்றுள் பனுவல் என்னும் சொல் நூலைக் குறித்தது. ஆழ்ந்து ஆய்ந்து எழுதப்பெற்ற காரணத்தால், பாட்டுகளின் தொகுதியாகிய நூல், பனுவல் என்னும் காரணப்பெயர் பெறுகிறது.

புத்தகம்

புதிய கருத்துக்களைத் தன்னகத்துத் தாங்கி நிற்பதனாலும், அக்கருத்துக்களை உள்ளத்தில் பதிய வைப்பதனாலும் நூல் என்பதே புத்தகம் என்னும் வேறு பெயரையும் பெறுகிறது.

புத்தகம் என்னும் சொல் 'பொத்தகம்' என்பதன் வழிவந்த சொல். பொத்துதல், பொருத்துதல், சேர்த்தல், தைத்தல், மூட்டுதல், மூடுதல், பொத்து-பொத்தகம்-பொத்திய (சேர்த்த) ஏட்டுக்கற்றை; எழுதிய ஏட்டுத் தொகுதி. சுவடி சேர்த்தல் என்னும் வழக்கை நோக்குக என்பது சொல்லாராய்ச்சியாளரின் கருத்தாகச் சுட்டுவர்.[16]

புத்தகம் படிக மாலை குண்டிகை பொருள்சேர் ஞான[17]

புத்தகம் அக்க மாலை வராபயம் பொருந்து கையாள்[18]

பொத்தகமும் ஞானத்து முத்திரையும்[19]

அறநிலை பெற்ற அருள்கொள் அவையத்து

நிறைநூல் பொத்தக நெடுமனை ஏற்றி[20]

போன்ற பாடலடிகள் புத்தகம், பொத்தகம் என்ற சொற்கள் நூலைக் குறிப்பதைக் காட்டுகின்றன.

பொதுவாக, இன்று அச்சு நூலைக் குறிக்கும் சொல்லாக இது அமைந்துள்ளது.

நூல்

நூல் என்ற சொல்லுக்குப் பல பொருள்களைச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) தருகின்றது. அது, நூல் என்ற சொல்லுக்குப் பஞ்சுநூல், பூணூல் முதலான வெவ்வேறு பொருள்களைச் சுட்டுகின்றது. அப்பொருள்களுள் பெரும்பாலான, பருத்தி நூல் சார்புடையனவாக உள்ளன. சாத்திரம், ஆகமம், ஆலோசனை முதலியன புத்தகமாகிய நூல்களையும் அது தொடர்பாக அமைந்த அதன் வகையினையும் உணர்த்துவனவாக உள்ளன.[21]

தொல்காப்பியர் செய்யுளியலில் நூல் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.

நூல் எனப்படுவது நுவலுங்காலை
முதலும் முடிவும் மாறுகோள் இன்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உள்நின்று அகன்ற உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே[22]

இவ்வாறு, தொகுத்தும் வகுத்தும் பொருள் விளக்கி நிற்கும் பொருண்மை நோக்கி நூல் என்னும் சொல் பெருவழக்காய் வழங்கி வருவதைக் காண்கிறோம்.

மேலும், பஞ்சினைக் கொண்டு நூற்கப்பெறும் நூலினைப் போல, சொற்களைக் கொண்டு ஆக்கப்படுதலினாலும், மரத்தின் புறக்கோட்டத்தைத் தீர்க்கும் எற்று நூலினைப் போல, மக்களின் மனக்கோட்டத்தைத் தீர்ப்பதனாலும் உவமையாகுபெயராய் நூல் என்ற பெயர் வழங்குவதாயிற்று என்னும் கருத்தினை வழங்குகிறது நன்னூல்.

பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு[23]

மரத்தின் கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோல் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு[24]

என்பன நூலென்னும் பெயர் வந்ததற்குக் காரணம் கூறும் நன்னூல் நூற்பாக்களாம்.

முனைவன் கண்டது முதல் நூல் ஆகும்[25]

என்பதில் தொல்காப்பியர் முதல் நூலைப் பற்றிக் கூறுகிறார்.

தரமான ஒரு நூலின் புறஅமைப்பு எப்படி இருக்க வேண்டுமென்றும், அந்நூலின் பொருள் அமைப்பு எவ்வாறு அமைய வேண்டுமென்றும், முதன்முதலில் முதன்மையாக எடுத்துக்கூறிய பெருமை தொல்காப்பியரையே சாரும் என்பர்.[26]

நூல் மற்றும் நூலகத் தொடர்புடைய நூலகர்கள் நூல் என்ற சொல்லைக் கருத்துத் தொகுதிப் பொதுப்பெயராக Book அல்லது Document என்ற ஆங்கிலச் சொல்லின் பொருளாகப் பயன்படுத்துகின்றனர்.

இதன்படி நூல் என்பது,

1. ஒரு கருவி, ஒருவர் கருத்தை அடுத்தவருக்கு எடுத்து உரைக்க உதவும்;
2. ஒரு குறிப்பிட்ட உருவில் அடங்கி இருக்கும்;
3. ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எளிதில் எடுத்துச்செல்ல வசதியாக இருக்கும்;
4. பயன்படுத்துவோர் கையாள வசதியாய் அமைந்திருக்கும்; கல்வி அறிவுதந்து, நடைமுறை நிலை தெரிவித்து, கடமைகளைச் சுட்டிக் காட்டி உரிமைகளைப் பாதுகாத்து, பொருளியல் வளர்ச்சிக்கு உதவி, கலாச்சாரத்தைக் காக்கும் ஐந்து செயல்பண்புகளைக் (Function) கொண்டிருக்கும் என நூல் பற்றிய விளக்கங்களைத் தருகின்றனர்.[27]

தமிழில் நூல் என்ற சொல் பெருவாரியாகப் பயின்று வருகின்றது. நூலழகு, நூலறி புலவர், நூலறிவு, நூலாசிரியர், நூலுரைகாரர், நூல் குற்றம், நூல்நயம், நூல் வகை, நூல்வல்லார், நூல் வழக்கு, நூற்பா, நூற் பொருள், நூன்முகம், நூன்முடிபு, நூலகம் என்னும் தொடர்கள், நூல் என்னும் சொல் வழக்காற்றில் மிகுதியாக வருவதைப் புலப்படுத்துகின்றன.

மேற்கூறிய சொற்களைத் தொகுத்து நோக்க, தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ் ஆகிய சினைப்பெயர்கள் ஆகுபெயர்களாய் எழுதப்பெற்ற சுவடிகளைக் குறிக்கின்றன என்பதும்; தந்திரம், தூக்கு, பனுவல், புத்தகம் என்னும் சொற்கள் காரணக் குறிகளாய் நூலை

உணர்த்துகின்றன என்பதும்; நூல் என்ற பெயர் பொருட்சிறப்போடு உவமையாகு பெயராகவும் காரணக்குறியாகவும் பெருவழக்கில் இருந்து வருகிறது என்பதும் தெளிவாகின்றன. இவ்வாறே 'சுவடி' என்னும் சொல், நூலைக் குறித்து நிற்கும் காரணப்பெயராகி வழக்காற்றிலும் நிலவி வருவதை அறிகின்றோம்.

நூலின் மூவுரு

நூல் ஒவ்வொன்றும், பிற உலகத்துப் பொருள்களைப் போலவே மூவுரு (Trinity) கொண்டதாகும். அவை, பருவுடல், நுண்உடல், உயிர் என்பனவாம்.

பருவுடல் (Gross body-physique) என்பது, எழுதப்படும் பொருள், எழுதும்முறை, கட்டு முதலிய மூன்று மூலக்கூறுகளைக் கொண்டதாகும்.

மனிதனை ஓர் உருவாக்கிக் காட்டுவது எலும்புக்கூடு (skeleton) என்பது போலவே நூலுக்கு எலும்பு போன்றது அது எழுதப் பயன்படும் பொருள்கள் (Writing materials) ஆகும்.

எழுதப்படும் பொருள்

உலகில் தோன்றிய மனிதன் முதலில் தனித்தனியாகவும் பின்னர் சிறுசிறு கூட்டமாகவும் வாழத் தொடங்கினான். அக்காலத்தில் ஒருவனுடைய அனுபவ அறிவு மற்றவர்க்குச் செய்கையின் மூலமாகவே தெரிவிக்கப்பட்டன. பின்னர் ஏற்பட்ட அறிவு வளர்ச்சியினால் ஒலிவழியாகத் தொடர்பு கொண்டான்; அதன் வளர்ச்சியாக மொழி பிறந்தது.

நாகரிக வளர்ச்சியின் காரணமாக ஒருவனுடைய பட்டறிவு பிற்காலச் சந்ததியினருக்குப் பயன்படும் முகத்தான் பதிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனைச் செய்ய கோடுகள், வரைவுகள், குறியீடுகள் போன்றவற்றைப் பயன்படுத்திய மனிதன் எழுத்துக்களைக் கண்டுபிடித்தான். இக்கண்டுபிடிப்பு நாகரிகக் காலத்தின் முக்கிய வளர்ச்சியாகும்.

முதன்முதலில் மனிதன் தனது அனுபவத்தினைப் பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் சித்திரங்களாகவும் எழுத்துக்களாகவும் எழுதி வைத்தான். பாறைகள் நிலையான பொருளானதால், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எளிதாக எடுத்துச்செல்லக்கூடிய பொருளைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வாறு

பயன்படுத்தப் பட்ட பொருள்கள் களிமண் பலகை, இலைகள், பட்டை, மரப் பலகைகள், தோல், துணி, உலோகங்கள், கல் எனப் பலவாகும்.

1. களிமண் பலகை

யூப்ரெடிஸ், டைகிரிஸ் ஆறுகள் பாய்கின்றவிடத்து வாழ்ந்த சால்டியா, சிரியா நாட்டு மக்கள் ஆதிகாலத்தில் களிமண் பலகைகளை எழுதப்படும் பொருளாகப் பயன்படுத்தினர். களிமண் பலகையில் அவர்கள் எழுதிய எழுத்துக்களுக்கு கியூனிபார்ம் (Cuneiform) எழுத்து என்று பெயர். இப்பலகைச் சுவடிகள் சில இப்பொழுது பிரிட்டீஷ் அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ளன.

2. பபைரஸ் (Papyrus)

பபைரஸ் என்னும் புல்லை எழுதுபொருளாகப் பல நாடுகளில் பயன்படுத்தினர். கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பே எகிப்தியர்கள் ஆற்றங்கரையில் விளைந்த இவ்வகைப் புல்லில் நாணல் குச்சிகளால் இலைச்சாறு, மிருகங்களின் இரத்தம் ஆகியவற்றைக் கொண்டு எழுதினர். கிரேக்கர் (யவனர்), பினீஷியர், உரோமர், எபிரேயர், அர்மீனியர் ஆகிய பலரும் பபைரஸ் புல்லையே எழுதப்படும் பொருளாகப் பயன்படுத்தி வந்தனர்.[28] கி.மு. 1500 இல் ஒரு மரணத்தைக் குறித்து எழுதிய கையறுநிலைப் பாடலின் பபைரஸ் பிரதியொன்று பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் உள்ளது.[29]

> "உலகில் உள்ள நூல்களுள் மிகவும் பழமையானது எகிப்தில் நீல நதிக்கரையில் தோன்றியதாகும். இந்நூலின் பிரதியைத் தீப்ஸ் நகரத்தின் ப்ரீஸ்ஸி என்பவர் கண்டு பிடித்தார். இதனைப் ப்ரீஸ்ஸி சுவடி என்று வழங்குகின்றனர். இந்நூலின் பிரதியொன்று பாரீஸ் நகரத்தின் தேசிய நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இது கி.மு. 2500 இல் எழுதப் பட்டுள்ளது. இந்நூலின் பெயர் 'ப்டாஹ் - ஹோட்டெப் உபதேசங்கள்' ஆகும். ப்டாஹ்-ஹோட்டெப் என்பவர் கி.மு. 3850 இல் எகிப்து அரசராக இருந்தவர். ஆகவே இந்நூல் சுமார் 6000 ஆண்டுகளுக்கு முற்பட்டது" என்பர்.[30]

பபைரஸ் சொல்லின் வளர்ச்சி

சுவடி அல்லது புத்தகம் என்ற பொருளில் பபைரஸ் சுருளைக் கிரேக்கர் 'பிப்லியன்' என்றும், உரோமர் 'பிப்னி' என்றும் வழங்கினர். இதுவே பின்னர் கிறித்துவ வேதநூலாகிய

விவிலியத்துக்கும் பைபிள் என்னும் பெயராயிற்று. பேப்பர் என்ற சொல்லும் பபைரஸ் என்பதிலிருந்து உருவானதாகும்.[31]

3. தோல்

எகிப்து நீங்கலாக மத்தியத்தரைக்கடல் ஓரத்திலுள்ள நாடுகள் தொன்று தொட்டு தோலினையே எழுதப்படும் பொருளாக உபயோகித்து வந்தனர். வெள்ளாடு அல்லது செம்மறியாட்டின் தோலினை நன்கு பதப்படுத்திப் பயன்படுத்தினர். இதற்கு மெம்ப்ரேனா (Membrana) என்று பெயர். கன்றுக்குட்டியின் தோலில் செய்யப்பட்டது 'வெல்லம்' (Vellum) எனப்பட்டது. வெல்லம் எனும் இலத்தீன் சொல்லுக்குக் கன்றுக்குட்டியின் தோல் எனப் பொருளாகும்.

சின்ன ஆசியாவில் பெர்கமம் என்னும் நகரில் தோலினாலான எழுதப்படு பொருள்கள் ஏராளமாகத் தயாரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டதால் இத்தோல் தாள்களுக்கு அந்நகரத்தின் பெயரான பெர்கமேனா (Pergamena) என்பதே பெயராயிற்று.

நம் நாட்டில் காகிதம் புழக்கத்திற்கு வரும்முன்னர் களிமண் பலகை, கல், ஓடு, உலோகத்தகடு, இலை, மரப்பலகை, பூர்ஜப் பட்டை, பனையோலை, துணி, மூங்கில் பத்தை ஆகியவற்றினை எழுதப்படும் பொருள்களாகப் பயன்படுத்தினர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

4. கல்வெட்டுக்கள்

தமிழகத்தினை ஆண்ட மன்னர்கள் மக்களுக்கான ஆணைகளையும் அம்மன்னர்களின் சாதனைகளையும் கல்வெட்டுக்களில் பொறித்தனர். அவை காலத்தால் அழியா வண்ணம் அமைந்தன.

> **நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்**
> **கல்மேல் எழுத்துப்போல் காணுமே**[32]

என்னும் ஔவையாரின் மூதுரை நல்லவைகளையும் நிலையானவைகளையும் கல்லில் பொறித்த செய்தியைத் தெரிவிக்கின்றது.

பல்லவர்களும் சோழர்களும் கோவில், குகைகள் மற்றும் பிறவிடங்களில் கல்லில் பொறிக்கும் வழக்கத்தினை மிகுதியாக மேற்கொண்டனர்.

ஸ்ரீராஜராஜ தேவர் திருவாய் மொழிந்தருளினபடி
கல்லில் வெட்டியது[33]

என்னும் கல்வெட்டு மன்னனின் ஆணைப்படி கல்லில் வெட்டப் பட்டதை உணர்த்துகின்றது.

5. துணி, இலை

துணியில் எழுதும் பழக்கம் தமிழகத்தில் பழமையானது.

கையிற் புனையும் கழிநுண் ணாளர்
ஏட்டிலும் கிடையினும் மூட்டமை கிழியினும்[34]

என்னும் வரிகள் இலை மற்றும் துணியை எழுதப்படும் பொருளாகப் பயன்படுத்தியதைத் தெரிவிக்கின்றன. இன்றும் கன்னட வணிகர்கள் துணிகளில் கணக்கெழுதும் புத்தகங்களைச் செய்கின்றனர்.

6. உலோகங்கள்

உலோகத் தகடுகளில் எழுத்துக்களைப் பொறித்து வைக்கும் பழக்கம் நமக்கு மிகவும் தொன்மையானது. மன்னர் தானம் செய்ததற்கான ஆவணங்களை உலோகத் தகடுகளில் எழுதி வைத்தனர்.

செல்வந்தர்களும் மன்னர்களும் பொன்னாலான தகட்டினை எழுதப்படும் பொருளாகப் பயன்படுத்தினர் என்பதை,

. . . பைம் பொன்செய் தவிசின் உச்சி
இருந்துபொன் ஓலைசெம்பொன் ஊசியால் எழுதி[35]

பைம்பொனின் ஓலைமீது பண்புற வெழுதி யின்னே
எம்பியும் ஏகு கென்றான்[36]

என்ற வரிகளால் அறிகிறோம்.

செப்புத்தகடுகளே அதிகமாக எழுதப்படும் பொருளாக வழக்கிலிருந்ததற்கான சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன.

. . . அகல் ஞாலமும் உள்ளளவும்
செப்பேடு செய்து கொடுத் தருளினன்[37]

. . . சோமாசிக் குறிச்சியது . . . காடக சோமயாஜியாருக்கு ஏகபோகமதுவாக எழிற்செப் பேட்டொடு கொடுத்தனன்[38]

போன்ற அரசு ஆணைகளும் உறுதிமொழிகளும் செப்பேடுகளில் பொறிக்கப் பட்டுள்ளனவற்றைச் சுட்டுகின்றன. இவ்வாறே பாண்டியர், சோழர், தஞ்சை மராட்டிய மன்னர்களின் செப்பேடுகள்

பல கிடைத்துள்ளன.

வெள்ளித் தகட்டின் பயன்பாடு நமக்கு அதிகமாகத் தெரியவில்லை. இருப்பினும் "டச்சுக்காரர்களுக்கு 1658-இல் தஞ்சை விஜயராகவ நாயக்கர் அளித்த பட்டயம் வெள்ளித்தகடுகளில் பொறிக்கப்பட்டிருக்கின்றது. இத்தகடுகள் முன்னர் பட்டேவியா என்று வழங்கிய ஜாக்கர்த்தாவின் பொருட்காட்சிசாலையில் இருக்கின்றன"[39] என்ற குறிப்பிலிருந்து வெள்ளித் தகடு எழுதப்படும் பொருளாகப் பயன்படுத்தப்பட்டதனை அறிய முடிகின்றது.

ஓலையின் பயன்பாடு

இந்தியாவில் ஓலையின் பயன்பாடு மிகவும் பழமையானது. காகிதம் புழக்கத்திற்கு வந்த பின்னரும் தென்னிந்தியாவில் ஓலையின் பயன்பாடு தொடர்ந்து வந்தது. ஓலையில் எழுதுவதை மிகவும் புனிதமாக எண்ணினர். இவ்வாறு எழுதப்பட்ட சுவடிகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளில் கிடைக்கின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சங்கப்பாடல்களும், இலக்கியங்களும் கிடைப்பதற்குத் துணைபுரிந்தவை பலகாலமாக எழுதப்பெற்று வந்த ஓலைச்சுவடிகளேயாகும். புலவர் பெருமக்களும் அவர்களிடம் படித்த மாணவர்களும் ஓலைகளில் படியெடுத்துப் படித்ததனால் பல நூல்களுக்கான சுவடிகள் பல்கிப் பெருகின.

பொதுநிலையில் சுவடி என்ற சொல் ஓலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்ட நூல்களையே குறிக்கின்றது. தமிழ்த் தெய்வத்தை வணங்கி சுவடியில் எழுதுவது என்பது நமது மரபு. இதனை, 'தமிழ்த் தெய்வத்தினை உள்நினைத்து ஏந்தல் செய்வோம்' என்ற தொடரால் அறியமுடிகின்றது. புலவர் பெருமக்கள் தமிழ் ஏடுகளைத் தொகுத்தல், படியெடுத்தல், பாதுகாத்தல் மற்றும் ஆராய்ந்தும் தம் பணியைத் தமிழ்த் தெய்வ வழிபாடாகவே செய்து வந்தனர்.[40]

தமது பதிப்புப்பணிக்காகப் பத்துப்பாட்டுச் சுவடிகளைத் தேடியலைந்த உ.வே.சா. அவர்கள் பின்வருமாறு கூறுவது இவண் கருதத்தக்கது. "திருநெல்வேலி மேலவீதியில் உள்ள கவிராஜ ஈசுவரமூர்த்தி பிள்ளை வீட்டில் புத்தக அறை இருந்தது. அதுதான் அவர்கள் பரம்பரை வீடு. புத்தக அறையைத் திறந்து காட்டினார்கள். பார்த்தவுடன் என் உடம்பு சிலிர்த்தது. தமிழ்ச்சங்கத்தில் முன்பு

இப்படித்தான் சுவடிகளை வைத்திருந்தார்களோ? என்று விம்மிதமடைந்தேன். ஏட்டுச் சுவடிகளை அடுக்காகவும் ஒழுங்காகவும் வைத்திருந்தார்கள். சுவடிகளைக் கட்டி வைத்திருந்த முறையே திருத்தமாக இருந்தது. புழுதி இல்லை; பூச்சி இல்லை; ஏடுகள் ஒன்றோடொன்று கலக்கவில்லை. தமிழ்தெய்வத்தின் கோயிலென்று சொல்லும்படி இருந்தது அவ்விடம்"[41] என அவர் குறிப்பிடுவதிலிருந்து தமிழ் மக்கள் சுவடிகளைப் பாதுகாத்த முறைபற்றியும் அவற்றினைத் தங்களது செல்வங்களாகப் போற்றியமையும் அறியமுடிகின்றது. ஏடுகளைத் தொகுத்துப் பாதுகாத்த புலவர் பெருமக்களின் இல்லங்களே தமிழ்க் கோயில்கள் என்பது உ.வே.சா.வின் ஆய்ந்த முடிவாகும்.

தொல்காப்பியம் ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகள் பழமையானது. வழிவழியாக இதனைப் படியெடுத்துக் காத்து வந்தனர். இதற்கு உரையெழுதிய உரையாசிரியர்கள் மூலநூல் அழிந்துபடாமலும் மூல நூலில் அழிந்துபட்ட பகுதிகளுக்கு உரைவிளக்கம் செய்தும் வெளிப்படுத்தினர். இவ்வாறு கிடைத்த ஓலைச்சுவடிகளைச் சான்றோர்களும், கல்வி அமைப்புக்களும், மடங்களும் தொகுத்துப் போற்றும் பணியினை மேற்கொண்டன. அடுத்தநிலையில் ஏட்டுச் சுவடிகளை நூல்களாக்கிப் பதிப்பித்தல் என்பது ஒரு குறிப்பிட்ட பணியாகும். இப்பணியைச் செய்த பதிப்பாசிரியர்கள் என்றும் போற்றப் பெறுகின்றனர்.

அக்கால நூல் தயாரிப்பு முறை

பழுப்பு நிறமடைந்த பனையோலைகளைப் பதப்படுத்தி, நீண்ட தனியோலையின் அடி, நுனிப்பாகத்தை நீக்கி, ஓலையின் நரம்பு பாகத்தினை நீக்கி ஒரே அளவினதாக வைத்துக் கொள்வர். இதனை 'ஓலை வாருதல்' என்பர். இவ்வாறு நறுக்கிய ஓலைகளை ஒன்றாகச் சேர்த்து இருமரச் சட்டங்களை இருபுறமும் வைத்து அவற்றில் துளையிட்டு நூல்கொண்டு கட்டிவைத்தனர். நூலின் மேல்பக்கத்தில் பனையோலையின் துண்டு அல்லது சோழியைக் கட்டிப் பயன்படுத்துவர். இதற்கு 'கிளிமூக்கு' என்று பெயர். இவ்வாறு கட்டி வைக்கப்பட்ட சுவடிகளே சுவடிப்புத்தகம். மேலும் இதனைப் பொத்தகம் என்றும் சொல்வர்.

பனையோலையில் தாளிப்பனை என்பதும் ஒன்று. இதனைச் சீதாளம் என்றும் கூறுவர். இதன் ஓலையையும் எழுதப்படும் பொருளாகப் பயன்படுத்தினர். அகலமான பரப்பினைக் கொண்ட

இவ்வகை ஓலைகளை வடஇந்தியாவிலும், பர்மாவிலும் அதிகமாகப் பயன்படுத்தினர்.

ஒரு மன்னர் மற்றொரு மன்னருக்குத் தூதர் வழியே முடங்கல் அனுப்புதலை 'ஓலைப் போக்குதல்' என்பர். இத்தகைய முடங்கல் மேல் முத்திரையிட்டு அனுப்பும் பழக்கத்தினைக் கலித்தொகை மற்றும் சிலப்பதிகாரப் பாடல்கள்வழி அறியலாம்.[42] ஓலைக் கடிதத்தினை ஓலைப்பாசுரம் என்றும் அழைத்தனர். இதனை அடியார்க்குநல்லார் உரை,[43] நச்சினார்க்கினியர் உரை[44] ஆகியவற்றில் காணலாம்.

புலவர்கள் வள்ளல்களுக்கு எழுதும் கடிதக்கவி ஓலைத்தூக்கு என்றும் சீட்டுக்கவி என்றும் அழைக்கப்பட்டது. இதனை,

மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்[45]

என்னும் நூற்பாவால் அறியலாம். சோழ மன்னர்கள் ஆட்சியின்போது பெயரும் குடும்பமும் எழுதப்பெற்ற ஏடுகளுக்குக் குடவோலை எனப்பட்டது.[46] கடன் மற்றும் ஒப்பந்தம் பற்றி எழுதப்பட்டது ஆவண ஓலையாகும். ஆவணங்கள் வைக்கப்பட்ட இடம் ஆவணக்களரி என்றும், ஆவணத்தின் முதல் ஓலையை மூலஓலை என்றும் பதில் ஓலைக்குப் படியோலை என்றும் பெயர்.[47]

அரசர் கூறும் செய்தியை ஓலையில் எழுதுபவர் 'திருமந்திர வோலை' என்றும் அவர்களின் தலைவர் 'திருமந்திரவோலை நாயகம்' என்றும் அழைக்கப்பட்டனர். நாட்டின் நடவடிக்கைகளை அவையோருக்குப் படித்துக் காட்ட எழுதப்பட்ட ஓலை 'நீட்டோலை' எனப்பட்டது. இதனை,

சபை நடுவே, நீட்டோலை வாசியா நின்றான்,
குறிப்பறிய மாட்டாதவன் நன்மரம்[48]

எழுத்தோலை பல்லார்முன் நீட்ட வளியா,
வழுக்கோலை கொண்டுவிடும்[49]

என்ற பாடல்களால் அறியலாம். நீட்டோலையைப் படிக்கத் தெரியாதவர்கள் அறிவுடையாரின் பழிக்கு ஆளாயினர் என்பதும் விளக்குகின்றது.

வெண்பா இருகாலில் கல்லானை வெள்ளோலை,
கண்பார்க்கக் கையால் எழுதானைப் பெண்பாவி,
பெற்றா ளேபெற்றாள் பிறர் நகைக்கப் பெற்றாளே,

எற்றேமற் றெற்றேமற் றெற்று[50]

இப்பாடலால் ஓலையில் எழுதத் தெரியாதவர்கள் இகழப் பட்டதையும் அறியலாம். இவ்வாறு எழுதப்பட்ட ஓலைகளில் படங்களும் வரையப்பட்டன. மேலும், சுவடிகளின் மேல்வைத்துக் கட்டப்படும் சட்டத்தின் மேல் ஓவியங்கள் வரைவதும் பலவித வண்ணங்கள் தீட்டுவதும் உண்டு.[51]

சுவடிகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கு பயன்படுத்திய பலகை 'தூக்கு' எனப்பட்டது. சேக்கிழார் இதனைக் கவளி என்கின்றார். இதனை,

கையினிற் படை சுரந்த புத்தகக் கவளி ஏந்தி[52]

என்னும் பாடல் மூலம் அறியமுடிகின்றது.

எழுதும் முறை

நம் நாட்டில் ஓலைகளில் எழுதுவதற்கு இருமுறைகள் கையாளப் பட்டுள்ளன. ஒன்று எழுத்தாணிகளைக் கொண்டு ஓலையின் மேற்பரப்பில் கீறி எழுதுவது. மற்றது தூரிகையை எழுதுகோலாகக் கொண்டு மைதொட்டு ஓலையின் மேற்பரப்பில் எழுதுவதாகும். பொதுவாக எழுத்தாணிகள் இரும்பினால் செய்யப் பட்டே பயன்படுத்தப்பட்டன. அவ்வகை எழுத்தாணிகள் குண்டெழுத்தாணி, கிளிமூக்கு எழுத்தாணி, வாரெழுத்தாணி, மடக்கெழுத்தாணி என்பனவாகும்.[53] குண்டெழுத்தாணியின் நடுவில் ஒரு குண்டு இருக்கும். அக்குண்டினை உள்ளங்கையால் இட்டுக்கொண்டு எழுதுவர்.

வாரெழுத்தாணி என்பது பாதுகாப்புடன் வைப்பதற்காக ஓலைகளால் செய்யப்பட்ட வாருடன் - உரையுடன் கூடியதாகும். மடக்கெழுத்தாணி, மரம், தந்தம், மாட்டுக்கொம்பு ஆகியவற்றால் அமைந்த பிடியில் மடக்கிவைக்கும் முறையில் அமைந்திருக்கும். இவ்வாறு எழுத்தாணி கொண்டு எழுதப்பட்ட ஓலைகளில் மஞ்சள் அல்லது விளக்குக்கரியுடன் கொவ்வை இலைச்சாறும் சேர்த்துப் பூசப்பட்டது. இதனால் ஓலையின் மேற்பரப்பில் எழுதப்பட்ட எழுத்துக்களைத் தெளிவாகப் படிக்க முடிந்தது.

வடஇந்தியாவில் ஓலையின் மேற்பரப்பில் மைகொண்டு எழுதப்பட்ட சுவடிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. கருகிய சங்கின் பொடி அல்லது விளக்குக் கரியுடன் வேப்பமரத்துப் பிசின், மழைநீர் கொண்டு தயாரிக்கப்பட்ட மையினைக் கொண்டே

எழுதியுள்ளனர்.[54] இம் மையினால் வரையப்பட்ட சித்திரங்களும் காணக்கிடைக்கின்றன.

காகிதச் சுவடிகள்

உலகில் முதன்முதல் காகிதத்தினைக் கண்டுபிடித்தவர்கள் இந்தியர்கள்தான் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அலெக்சாண்டர் இந்தியாவின் மீது கி.மு. 327-இல் படையெடுத்த பின்னர் அவரின் தூதுவராகச் சில காலம் பஞ்சாபில் இருந்த நியர்கஸ் (Nearchus) பஞ்சிலிருந்து காகிதம் செய்யப்பட்டதைக் குறிப்பிடுகின்றார்.[55]

கி.மு. 306-311 வரை பாடலிபுத்திரத்தில் இருந்த மெகஸ்தனிஸ் இந்தியாவில் காகித உபயோகம் பற்றியும் குறிப்பிடுகின்றார்.[56]

வெப்பநாடான இந்தியாவில் அதற்கான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. ஆகையால் காகிதத்தினைக் கண்டுபிடித்த பெருமை சீனாவைச் சேர்கின்றது. கி.பி.105-இல் சீன அரண்மனைப் பணியாளர் டிசைலூன் என்பவர் பழைய துணி, மல்பேரி, சேதமடைந்த மீன்வலை போன்றவற்றைக் கொண்டு காகிதத்தினைத் தயாரித்தார். இம்முறை பல நாடுகளுக்குப் பரவி கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு மொகலாய மன்னர்களால் அறிமுகமானது. இந்தியாவில் பலவிடங்களில் கையினால் காகிதம் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது. காகிதம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் அவற்றில் கையெழுத்துச் சுவடிகளாக எழுதியவர்கள் பின்னர் அச்சிடத் தொடங்கினர். இதனால் ஒரே சமயத்தில் பல படிகள் தயாரிக்க முடிந்தது. மக்கள் பெருக்கத்திற்கு ஏற்ப கையெழுத்துப்படி தயாரிப்பது போதுமானதாக இல்லை.

அச்சுக்கலையில் முதலிடம் பெறுவது சீனாவாகும். கி.பி. 767-க்கும் 780-க்கும் இடைப்பட்ட காலத்தில் இங்கு ஒரு இலட்சம் படிகள் தரணி என்ற சீனநூல் உருவானது.[57] இதன் வளர்ச்சியாக 1455-இல் செர்மனியில் 42 வரிகள் கொண்ட பைபிள் வெளியிடப்பட்டது. மேலை நாடுகளில் ஏற்பட்ட இயந்திரப் புரட்சியின் காரணமாக மனிதச்சக்திக்குப் பதில் இயந்திரச் சக்தி அச்சகங்களில் ஏராளமாகப் பயன்படுத்தப்பட்டது.

கிறித்தவத் துறவிகள் இந்தியாவில் தங்கள் மதத்தினைப் பரப்புவதற்காக கோவாவில் முதல் அச்சகத்தினை 1556-இல் நிறுவினர். இங்கு போர்த்துக்கீசிய மொழியில் முதல் நூலாக

Doutrina Christa *1557-இல் அச்சிடப்பட்டது. 1712-இல்* தரங்கம்பாடிக்கு இங்கிலாந்திலிருந்து காகிதம் மற்றும் அச்சு இயந்திரங்கள் வந்து சேர்ந்தன. இங்கு *1727-இல்* தமிழில் புதிய ஏற்பாடு வெளியிடப்பட்டது. சென்னை வேப்பேரியில் பாதிரியார் பேப்ரியசு அவர்களால் தொகுக்கப்பட்ட 'தமிழ் - ஆங்கில அகராதி' அச்சிட்டு வெளியிடப்பட்டது. இந்த வேப்பேரி அச்சகம்தான் தற்போதைய டயசெசன் அச்சகமாகும். இதனைத் தொடர்ந்து பல அச்சகங்கள் இந்தியாவில் தோன்றின.

1554-இல் லிஸ்பன் நகரில் அச்சான கார்டிலா என்ற நூலே தமிழின் முதல் அச்சு நூலாகும். *1578* இல் தம்பிரான் வணக்கம் என்ற நூல் கொச்சியில் அச்சானது. ஐரோப்பியர்களின் வருகையால் இந்தியாவில் வளர்ந்த அச்சுக்கலை முதலில் தமிழ் நூல்களை வெளிட்டே வளர்ந்தது எனலாம்.

நூலகம்

மக்களின் பயன்பாட்டுக்காக அறிஞர்களால் எழுதி வைக்கப்பட்ட பல சுவடிகள் கல்வியில் சிறந்தவர்களின் இல்லங்களிலும் கோயில்களிலும் அரண்மனை மற்றும் சமய வளர்ச்சிக்கான மடங்களிலும் வைத்துப் பாதுகாக்கப்பட்டன. இந்தியாவில் இவ்விடங்கள் ஞானப் பண்டார், புஸ்தகப்பண்டார், சரஸ்வதிமகால், சரஸ்வதி பண்டார், தர்மகஞ்சா, கிழாப்கானா என்னும் பெயர்களால் அழைக்கப்பட்டன.

இப்பொழுது நாம் வழங்கிவரும் 'நூலகம்' என்னும் சொல்லுக்கு நூல்களின் அகம் என்பது பொருளாகும். இதனை ஆங்கிலத்தில் லைப்ரரி (Library) எனக் குறிப்பிடுகின்றனர். இச்சொல் லிபர் (Liber) என்னும் இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்ததாகும். லிபர் என்பதற்கு மரப்பட்டை என்பது பொருள். மரப்பட்டையால் எழுதப்பட்ட நூல்களைச் சேமித்து வைக்கப்பட்ட இடத்தினை லைப்ரரி என்று குறிப்பிட்டனர். ஆனால், இப்பொழுது அனைத்து வகை நூல்களையும் சேர்த்து வைக்கும் இடங்களுக்கும் இச்சொல் பொதுவானதாக உள்ளது.

நூலக வளர்ச்சியும் நாகரிகத்தின் போக்கும்

நூலகங்கள் மலையினைப் போலப் பழமை வாய்ந்ததாக உருவகித்துச் சொல்லப்படுவது மிகவும் பொருத்தமானதாகும். கிடைக்கக்கூடிய அறிவுச் செய்திகளை எங்கும் பரவச்செய்யும்

முயற்சியே நூலகத் தலைமைக்குரிய பண்பாகக் கொள்ளப் படுகின்றது.

"பொதுவான பண்பாட்டுப்போக்கின் சட்டவரையறைக்குட் பட்டு இயங்கும் ஒரு நிறுவனத்தின் வளர்ச்சியாக நூலகங்களின் வளர்ச்சி மதிப்பிட வேண்டும்"[58] என்று கெஸ்சல் (Hessel) குறிப்பிடுகின்றார்.

"நாகரிக அறிவு வளர்ச்சியின் வரலாற்றில் நூலக வரலாறு ஒரு இன்றியமையாத அத்தியாயமாகும்"[59] என்று தாம்சன் (Thompson) குறிப்பிடுகின்றார்.

நாகரிகத்தின் தொடக்கக்காலத்தில் நூலகங்களின் இலக்கு பொதுவானதாக இருந்ததை நாம் காணமுடிகின்றது. தொடக்க கால உரோமானியர்களின் நூலகங்கள் பொதுமக்களுக்காக ஏற்படுத்தப் பட்டிருந்தன. வரலாற்றின் இடைப்பட்ட காலத்தில் நூலகங்களின் பயன் மிகுதியாகக் கட்டுப்படுத்தப்பட்டன. அச்சுயந்திரங்கள் கண்டுபிடிக்கப் பட்டதன் பயனாக நூல்களின் பயன் பன்மடங்காகப் பெருகியது. அதனால் படிப்பவர்களின் எண்ணிக்கையும் பன்மடங்கானது. ஆனால் தற்காலத்தில் நூலகங்களின் நோக்கங்கள் வரையறுக்கப் பட்டிருக்கின்றன. அவை நூல்களுக்கும் வாசகர்களுக்கும் இடையிலுள்ள தொடர்பின் அடிப்படையில் அமைகின்றன.

மனித சமுதாயம் ஒரே வகையான முன்னேற்றத்தினை ஒருபோதும் அடைந்திருக்க முடியாது. சில இடங்களில் விரைவான வளர்ச்சியை அடைந்துள்ளது. பொதுவாக நோக்கும்போது மதவாதிகள், மந்திரவாதிகள், வீரம் செறிந்த கதைகளைச் சொல்பவர்கள் ஆகியோர் வாய்வழியான செய்தித் தொடர்பு முறையையே பெற்றிருந்தனர்.

பின்னர், மனிதனின் முக்கியக் கண்டுபிடிப்பான எழுத்துமுறை கண்டுபிடிக்கப்பட்டபின், எழுத்துமுறையுடன் செய்தித் தொடர்புமுறை தொடங்கியது. நாகரீக வளர்ச்சியின் உச்சகட்டமாக அச்சடிக்கும் முறை மத்தியக் கிழக்கு நாகரிகத்தின் தொடக்கத்திலும் பிறகு சீனா மற்றும் இந்தியாவிலும் மீண்டும் வந்தது. இந்நிலை கிரீஸ், உரோமுக்கும் பின்னர் மேற்கத்திய நாகரிகத்திற்கும் மீண்டும் தொடர்ந்தது.

பண்டைய கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள எழுத்துமுறை, அதன் நடை, எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள், அந்தக் குறிப்புகளால் கிடைக்கும் பயன், அவைகளின் பாதுகாப்பு முறை ஆகியவை நாம் பெற்றிருக்கும் நாகரீகம் மற்றும் பண்பாட்டின் வளர்ச்சிக்கான காரணங்களாகும்.

பழங்கால நூலகங்கள்

1. சுமேரியன்

சுமேரியர்கள் கி.மு. 2700-இல் தனியார் நூலகங்கள், சமய நூலகங்கள் மற்றும் அரண்மனை நூலகங்களை நிறுவியிருந்தனர் என்பதனை இவர்களின் அழிந்துபோன பண்டைய நகரங்களின் வாயிலாக அறிய முடிகின்றது. களிமண் பலகை வடிவிலான சுமார் 30,000 சேகரிப்புக்களைக் கொண்ட டெல்லோ நூலகம் மிகவும் புகழ்வாய்ந்தது. கி.மு. 3100-க்கு முன்பாகவே சுமேரிய வரலாற்றாசிரியர்கள் தங்களின் வரலாற்றினைப் பதிவுசெய்யத் தொடங்கினர். இவர்களின் எழுத்து முறை 'கியூனிபார்ம்' (Cuneiform) எனப்படும். இது சுமேரியர்கள் மனித இனத்திற்கு அளித்த மிகச்சிறந்த கொடையாகும். இவர்கள் எழுதுவதற்குப் பயன்படுத்திய களிமண் பலகை, எழுதியபின் கல் போலாகும் வரை சுடப்பட்டு கடினமாக்கப்பட்டது. இதுவே முதல் நூலாக இருக்கிறது என்று வரலாறு கூறுகின்றது.[60]

2. பாபிலோனியன்

சுமேரியன் பண்பாட்டுக்கு அடுத்து வருவது பாபிலோனியன் பண்பாடாகும். பாபிலோனியர்களின் படிப்புமுறை, எழுத்துநடை, எழுதுபொருள்களின் தன்மை ஆகியன சுமேரியர்களையே ஒத்துள்ளது. இங்கு, கோயில்களிலும், அரண்மனைகளிலும் நூலகங்கள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. இங்குக் கண்டெடுக்கப்பட்ட களிமண் பலகை நூல்கள் இப்பொழுது பிரிட்டிஷ் அருங்காட்சியக நூலகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது.[61] இவர்களின் போர்சிப்பா நூலகம் (the library of Borsippa) மிக முக்கியமான உதாரணமாக இருக்கின்றது.

3. அசீரியன்

மிகப்பழமையான அசீரியன் நூலகம் அல்சூர் என்னுமிடத்தில் அமைந்திருந்தது. அதில் களிமண் பலகையிலான நூல்கள் சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. நினேவே அசீரியாவின் தலைநகராக

மாறியதும் மன்னர் அசூர்பானிப்பால் (king Asurbanipal) 20,000 களிமண் பலகைகளுடன் நினேவேயில் நூலகத்தினை அமைத்தார். விரிவான பாடங்களைக் கொண்ட நூல்கள் நூலடுக்குகளில் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. ஒவ்வொரு பலகைக்கும் ஒரு மெல்லிய கயிறு அடையாளமாக இருந்தது. அரண்மனையின் அருகிலே இருந்த இந்நூலகம் ஒரு பொதுநூலகமாகவே காணப்படுகின்றது. இதில் இருந்த நூல்கள் பாபிலோனியன் நூலகத்தில் இருந்த நூல்களின் பிரதியாகவே இருந்தன.[62]

உலக நூலக வரலாற்றில் முதன்முதலாக நினேவே நூலகத்தில்தான் நூல்களின் அட்டவணைப் பட்டியல் (Catalogue) இருந்ததை நாம் காணமுடிகின்றது.

இக்களிமண் பலகைகள் தர்க்க சாத்திர அடிப்படையில் பாட வரிசையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

4. எகிப்தியன்

அசீரியன் நூலகங்களுக்கு அடுத்த பழமைவாய்ந்தது எகிப்தின் நூலகங்களாகும். அசீரியன் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் களிமண் பலகைகளின் பயன்பாடு மிகுதியாகக் குறைந்தது. இங்கு கி.பி. 3000இல் நைல் நதிக்கரையில் வளர்ந்த பபைரஸ் என்ற நாணல் புல்லினால் செய்யப்பட்ட நூல்கள் கிடைத்துள்ளன. இவை ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு சுற்றிக் கட்டி வைக்கப்பட்டுள்ளன. கி.மு. 2500 இல் ஜீஜெயில் (Gizeh) என்னும் ஒரு நூலகம் இருந்தது. கி.மு. 1250-இல் தெபிஸ் (Thebes) யில் இருந்த நூலகத்தில் பபைரஸ் சுருள்கள் களிமண் ஜாடிகளிலும் உருளைகளிலும் வைத்துப் பாதுகாக்கப்பட்டன. பபைரஸ் சுருள்களான புத்தகங்கள் ஒரு அடி உயரமும் 20 அடி நீளமும் உடையதாக இருந்தன. பண்டைய எகிப்தில் தனியார் நூலகங்கள், கோயில் நூலகங்கள் மற்றும் அரசாங்க ஆவணக் காப்பகங்கள் ஆகியவை இருந்தன.

5. அலெக்சாண்டிரியா நூலகம்

அலெக்சாண்டிரியா நூலகம் பண்டைக்கால நூலக வரலாற்றின் மிகச் சிறந்த சான்றாகும். அலெக்சாண்டிரியா நூலகங்களில் முதல் நூலகம் அருங்காட்சியகத்திலும் அடுத்தது செராபியத்திலும் இருந்தன. கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் 7,00,000 பிரதிகளைக் கொண்ட நூலகம் ஜுலியஸ்சீசரால் நிறுவப்பட்டது.

இந்நூலகத்தில் இருந்த நூலகர்கள் மிகச்சிறந்த அறிஞர்களாகத் திகழ்ந்தனர். அவர்கள் கல்விஅறிவின் பாதுகாவலர்களாகக் கருதப்பட்டனர். முஸ்லிம்கள் எகிப்தினை வென்றபோது இத்தகைய நூலகங்கள் முழுவதுமாக அழிக்கப்பட்டன.

கி.மு. 197-159 இல் பெர்காமில் யூமெனஸ் (Eumenes II) என்பவரால் மேலும் ஒரு நூலகம் ஏற்படுத்தப்பட்டது. சீசரின் நண்பர்களான பிளுடார்க் மற்றும் கால்விசியஸ் கூற்றுப்படி 2,00,000 பிரதிகளைக் கொண்டிருந்த பெர்காமம் நூலகம் (the library of Pergamum) முழுவதையும் ஆண்டனி, கிளியோபாட்ராவுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தான். பெர்காமம் நூலகம் கலைகளுக்கும் இலக்கியத்திற்கும் ஆதரவளிப்பதில் முனைப்பாகச் செயல்பட்டது.

6. கிரீஸ் மற்றும் ரோமானியர்களின் தொடக்க கால நூலக வளர்ச்சி

கிரீஸ் நூலகத்திற்கு கெலினிஷ்டிக் பண்பாட்டுக் காலமே (Hellenistic culture) இலக்கியச் செயல்பாடுகளுக்கு மிக உன்னத நிலையாக அமைந்தது. கெலினிஷ் மன்னனின் தீவிர ஆதரவினால் கல்வி அறிவின் தேவையினை விரிவுபடுத்துவதற்காக நூல்கள் அதிக அளவில் எழுதப்பட்டன. கி.மு. 6-ஆம் நூற்றாண்டு முதல் பபைரஸ் எழுதப்படு பொருளாகப் பயன்படுத்தப்பட்டது. பின்னர் பதப்படுத்தப்பட்ட ஆட்டுத்தோல் மற்றும் கன்றின் தோல் பயன்பாட்டுக்கு வந்தது. இலக்கியம், தத்துவம், வரலாறு, மதம், அரசியல், அறிவியல் மற்றும் கணிதம் தொடர்பான நூல்கள் பல இருந்தன. சுவடிகளைச் சேர்த்து வைப்பது மிகப்பெரிய கௌரவமாகக் கருதப்பட்டது. இதில் யூரிபிட்ஸ் நூலகம் முக்கியமானதாகும்.

அரிஸ்டாடில், பிளாட்டோ ஆகியோரின் செயல்பாடுகளால் கிரீக் நூலகத்தின் உண்மையான வளர்ச்சி துவங்கியது எனலாம். அரிஸ்டாட்டில் முறையாகச் சுவடிகளைச் சேகரித்தார். அவருடைய மாணவர் அலெக்சாண்டர் கிரீக் பண்பாட்டினை முழுவீச்சில் விரிவு படுத்தினார். அதுவே உலக நாகரிகத்தின் முக்கிய நூலகமாகவும், அருங்காட்சியகத்தின் மிக முக்கியமான பகுதியாகவும் அமைக்கப் பட்டது. ஏ தினியின் அகாடமி தற்கால நவீன பல்கலைக்கழக நூலகத்தினை நிறுவியது.

கிரேக்கர்களைப் போலவே உரோமானியர்களும் பபைரஸ், ஆட்டுத் தோல், கன்றின்தோல் ஆகியவற்றினை எழுதப்படு

பொருள்களாகப் பயன்படுத்தி நூல்களைத் தயாரித்தனர்.

பென் (Pen) என்ற ஆங்கில வார்த்தை இறகு (Feather) என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டது. பண்டைய ரோமானியர்களின் நூல் சுருள் வடிவில், அரக்குப்பலகை மற்றும் கோடக்ஸ் (Codex) வடிவங்களில் இருந்தன. ரோமானிய நூல்கள் எல்லா அறிவுத் துறைகளையும் உள்ளடக்கியதாக இருந்தன. கிரீஸின் ராணுவ முகாம்களிலிருந்து ரோமானிய இனத்தவர்கள் நூலகங்கள் முழுவதையும் தங்கள் இல்லங்களுக்குக் கொண்டு சென்றனர். இச்செயல் கி.மு.2-ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய காலத்தில் நிகழ்ந்தது. நூல்களை நேசித்த ரோமானியர்கள் அவைகளைச் சேகரித்து நூலகங்களை அமைத்தனர். இச்செயல் கௌரவமாகவும் கருதப்பட்டது.

'சிசெரோ' (Cicero) *(கி.மு. 106-43)* அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தனியார் நூலகத்தினை வைத்திருந்தார். கி.மு. 86-இல் ஏதென்சை சுல்லா (Scella) கைப்பற்றியபோது அரிஸ்டாட்டில் நூலகத்தைத் தம்வசமாக்கிக் கொண்டார். அக்காலத்தில் 'Plutarch's Lives of Illustrious Men' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளபடி லுகல்லஸ் நூலகம் (Lucullus, *114-57 கி.மு.)* மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. மேலும், ரோமில் பொதுநூலகம் இருந்ததாகவும் குறிப்பிடப் படுகின்றது. அது கி.மு. 39-இல் ஜுலியஸ் சீசரால் திட்டமிடப்பட்டு அசினியஸ் போலோ (Asinias Pollo) என்பவரால் செய்து முடிக்கப்பட்டு, ஏட்ரியம் லிபெர்டேடிஸ்ட் (Atrium Libertatis) என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்தது. இந்நூலகத்தில் கிரீக் மற்றும் இலத்தீன் இலக்கியப் படைப்புக்கள் இடம் பெற்றிருந்தன.[63]

கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் மத்தியில் ரோமின் தலைநகரில் 28 பொது நூலகங்கள் இருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. நூலகங்களின் நிர்வாகம் குறிப்பாகக் கோயில்களின் தொடர்புடைய மத குருமார்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

கிரேக்க மற்றும் உரோமானியர்களின் காலத்தில் நூலகமும் ஆவணக் காப்பகமும் பிரித்தறிய முடியாதவாறு இருந்தன. ஆனால் பிந்தைய காலத்தில் இவ்விரண்டுக்குமிடையேயுள்ள வேறுபாடுகள் கண்டறியப்பட்டு ஆவணங்களும் நூல்களும் தனித்தனியாகப் பாதுகாக்கப்பட்டன.

தேசிய நூலகம்

உலகிலுள்ள தேசிய நூலகங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது பிரிட்டிஷ் மியூசியம் ஆகும். இந்நூலகம் மாண்டேகு ஹவுஸ் என்னுமிடத்தில் 1759 சனவரி 15-இல் திறந்து வைக்கப்பட்டது. சுலோன் நூலகம், காட்டன் நூலகம் மற்றும் கார்லே சேகரிப்புக்களை ஒருங்கிணைத்து பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சட்டத்தால் பிரிட்டிஷ் மியூசியம் அமைக்கப்பட்டது.

இந்நூலகத்தினைப் பற்றி ஆல்பர்ட் பிரதீக்கின் குறிப்புகள் இவண் குறிப்பிடத்தக்கன.[64]

பிரிட்டிஷ் மியூசியம் நாட்டின் பண்பாடும் உலக இலக்கியமும் சேர்ந்து இருக்கக்கூடிய இடமாக இருக்க வேண்டும் என்பது 1837-இல் இந்நூலகக் காப்பாளராக இருந்த பானிஸ்ஸியின் (Panizzi) உயரிய நோக்கமாகும். மேலும் எல்லா நாடுகளிலுமுள்ள மிகச் சிறந்த, விலையுயர்ந்த நூல்களைச் சேர்த்து வைக்குமிடமாகவும் இது இருக்க வேண்டும் என்றும் விரும்பினார். பிரெத்கியின் பிரிட்டிஷ் மியூசியம் நூல்பட்டியின் (Catalogue) அச்சடிப்புப்பணி 1881 இல் தொடங்கி 1905-இல் முழுமை பெற்றது. 19-ஆம் நூற்றாண்டிலிருந்து பிரிட்டிஷ் மியூசியம் நூலகத்தினைப் பல்வேறு பகுதிகளிலுமுள்ள நூலகர்களும் அறிஞர்களும் நூல்களின் மெக்கா என்று போற்றிப் புனிதப் பயணமாக இங்கு வந்து செல்கின்றனர்.

இந்திய நூலக இயக்கம்

இந்தியாவில் பழங்காலத்திலிருந்தே நூலக இயக்கம் இருந்துள்ளமைக்குச் சான்றுகள் உள்ளன. நூலக இயக்கம் என்பது மேலைநாட்டினரின் அறிவில் உருவானதாகப் பலர் எண்ணுகின்றனர். ஆயின், நமது நூல்கள் எழுதும் மரபும் அவற்றினை வகைப்படுத்தி பாதுகாப்பதும் மிகவும் தொன்மையானது என்பதும் இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய நூலக வரலாற்றை முழுமையாக உணர, பின்வரும் ஐந்து பகுதிகளாகப் பிரித்துக் காணலாம்.

சங்க காலத்தில் நூலகம்

சங்க காலத்தில் கற்றோர்கள் அனைவரும் நடமாடும் நூலகமாகத் திகழ்ந்தனர். அவர்களின் மனப்பாடக் கல்வி பல நூல்களைக் கற்றுத் தம் மனதுக்குள்ளே அடக்கி வைத்துக் கொள்ள வழிவகுத்து நின்றது. பழங்காலத்திலேயே தமிழகத்தில் நூலகங்கள்

இருந்ததற்கான இலக்கியச் சான்றுகளும் நமக்குக் கிடைக்கின்றன.

புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள்தெரியார்
உய்த்தகம் எல்லாம் நிறைப்பினும் மற்றவற்றை
போற்றும் புலவரும் வேறே பொருள் தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு[65]

இதனால் பண்டுதொட்டே தமிழ்மக்கள் நூலறிவும் நூலக அறிவும் கொண்டு சிறந்திருந்தமையை அறியலாம். இவ்வாறு சிறந்த நூலறிவு பெற்று அவர்கள் விளங்கியமையால் எண்ணற்ற நூல்கள் இருந்தமையும் தெளிவாகின்றது.

நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள் மிகவும் காலத்தால் முந்தியது தொல்காப்பியமாகும். இந்நூலின் காலம் சுமார் கி.மு. ஏழாம் நூற்றாண்டு எனக் கருதப்படுகின்றது.[66] இதுவே உலகின் முதல் நூல் ஆகும். இந்நூல் ஒரு இலக்கண நூலாக இருந்தாலும் பழந்தமிழரின் மொழி மரபு, மொழிவளம், இலக்கண வளம், மரபு, இலக்கிய வளம், மக்களின் காதல் வாழ்க்கை, போர் பற்றி விளக்கமாகத் தெரிவிக்கும் நூலாக உள்ளது.

தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் பல நூல்கள் நமக்குக் கிடைக்கவில்லை. அத்தகைய நூல்களில் பெரும்பகுதி கடல் கோளாலும் பிற இயற்கைச் சீற்றங்களாலும் அழிந்து ஒழிந்தன. அதில் மிஞ்சியதே நமக்குக் கிடைத்துள்ள தொல்காப்பியம், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகும்.

இத்தகைய நூல்களை, நூல் கருத்துக்களை அறிவியல் அடிப்படையில் பகுத்துத் தொகுத்து, பலரும் பயன்படுத்தும் வகையில் தந்ததோடு அவைகளை வேண்டியபோது குறிப்பிடவும், தேடவும், தேடி எடுத்துப் பயன்படுத்தவும் பட்டியல் முறைகளைப் பயன்படுத்தியுள்ளனர் என்பர்.[67]

சமய காலத்தில் நூலகம்

தொடக்கக் காலத்தில் சமயம் தொடர்பான கொள்கைகள் அனைத்தும் வாய்மொழியாகவே துறவிகளால் பரப்பப்பட்டு வந்தன. அவர்களின் கருத்துக்கள் புனிதமானவை. அவற்றை எழுதி வைப்பது தவறு என்ற எண்ணம் மேலோங்கி நின்றது. அவை பெரும்பாலும் எழுதப்படாமல் போயின. எழுத முற்பட்ட நிலையில் இலை, துணி, மரப்பட்டை, பலகை, ஓலைகளில் எழுதப்பட்டன. அவையும் காலத்தால் அழிந்தன.

1. சமணர்களின் நூலகத் தொண்டு

காலத்தின் தேவையால் மறைந்துபோன நூல்களைத் தேடித் தொகுத்து எழுதும் புத்தகஆரோகணம் முயற்சி திட்டமிட்டே தொடங்கப்பெற்றது. இம்முயற்சி தனிப்பட்டவர்களின் பணியாக இல்லாமல் ஒரு கூட்டுமுயற்சியாக (சங்க முயற்சியாக) எழுந்தது. இது மகாவீரர் முக்தியடைந்து 160 ஆண்டுகள் கழித்து பாடலிபுத்திரத்தில் நடந்தது. இது முதற் சமணச் சங்கமாகும். பின்னர் 825 ஆண்டுகள் கழித்து இரண்டாம் சங்கம், 980 ஆண்டுகள் கழித்து மூன்றாம் சங்கம் என்ற நிலையில் அமைந்தது. இதன்படி சமணநூல்கள் தொகுக்கப்பட்டு, பட்டியலிடப்பட்டு, திட்ட வட்டமான திருமுறைகளாக, ஆறுபெரும் பிரிவுகளில் அமைக்கப் பட்டன. இவ்வாறான நூல்கள் சேர்த்து வைக்கப்பட்ட இடங்கள் 'ஞானபண்டாரங்கள்' எனப்பட்டன. இத்தகு ஞானப்பண்டாரங்கள் சசல்மேர், பத்தான், சூரத், காம்பே, வல்லபி, அகமதாபாத், தோல்கர், கர்ணவதி, பிஜப்பூர் ஆகியவிடங்களில் அமைந்திருந்தன.[68]

ஞானப்பண்டாரங்களில் சேர்க்கப்பட்ட நூல்களை மக்களிடையே பரவச் செய்வதற்கு 'ஞான பூசை விழா'வினை ஆண்டுக்கு ஒருமுறை நடத்தினர். இதன் தொடர்பாக நாம் இப்பொழுது சரசுவதிபூசை எனக் கொண்டாடுகின்றோம். இவ்விழாச் சமயத்தில் நூல்கள் பல்லாயிரக் கணக்கில் படியெடுக்கப்பட்டு தானமாக வழங்கப்பட்டன. இது 'புத்தக தானம்' எனப்பட்டது. இவ்வாறே சமணத் துறவிகள் ஒவ்வொருவரும் தினம் மூன்று மணி நேரம் படிக்க வேண்டும் என்பது கட்டளையாகும்.

சாளுக்கிய அரசர்களில் குறிப்பிடத்தக்கவராக விளங்கியவர் சித்தராசா செயசிம்மதேவன் (கி.பி. 1094-1143). சமண நூலகவியக்கத்தில் குறிப்பிடத்தக்கவரான இவர் மாளவத்தை வென்று போசன் (கி.பி.1000-1055) வைத்திருந்த நூலகத்தைக் கொள்ளையடித்து அன்கில்வாதா நூலகத்தோடு சேர்த்தார்.

சாளுக்கிய பரம்பரையில் சிறப்பான மற்றொரு சமணர் குமாரதேவ பாலன் (கி.பி.1143-1172). இவர் 21 நூலகங்களைப் பல்வேறு இடங்களில் நிறுவினார். அவை சிறப்புடன் செயல்பட நெறியான பணியாளர்களை நியமித்து அவர்களுக்கு மானியம் வழங்கினார். இவரின் நூலகப் பணியைக் குமாரபாலபிரபந்தமும்

உபதேசதரங்கணியும் விரிவாக எடுத்துரைக்கின்றது

சாளுக்கிய வம்சத்தில் விசாலதேவன் என்ற விசுவகர்மா (கி.பி. 1242-1262) குறிப்பிடத்தக்க நூலகப் பணியாற்றியவர். இவர் பழைய நூல்களுக்குப் புதிய உரை எழுதச்செய்து தம் நூலகத்தில் சேர்த்து வைத்தார். இவரது நூலகத்தில் இருந்த இராமாயணக் கையெழுத்துப் பிரதியொன்று இப்பொழுது செர்மானிய நாட்டிலுள்ள பான் பல்கலைக்கழகத்தில் உள்ளது.[69]

மன்னர்களைப் போலவே சமண அமைச்சர்களும் நூலகப் பணியாற்றினர். வஸ்துபாலன் என்ற சமண அமைச்சர் பதினெட்டு கோடி செலவில் மூன்று பெரிய நூலகங்களை நிறுவினார். இவரைப் போலவே பாதாடஷா, விமலஷா, சுரமஷா, மதன்மந்திரி, அமரபட்டர், வாசுபட்டர் போன்றவர்கள் இப்பணியில் குறிப்பிடத்தக்கவர்களாகத் திகழ்ந்தவர்கள் ஆவர்.

விஜயபாலன் என்ற சமண வெறுப்பாள மன்னன் சமண நூல்களைச் சூறையாடி எரியூட்டினான். இந்நிலையில் மன்னனுக்குத் தெரியாமலேயே உதயணன் என்ற அமைச்சர் பல நூல்களைச் சசல்மருக்குக் கடத்திச்சென்று காப்பாற்றியது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

பரமாரர் மன்னர்களுள் குறிப்பிடத்தகவர் போசமகாராசா (கி.பி. 1018-1060). இவர் தலைநகர் தாராவில் ஒரு கல்லூரியை நிறுவி அதில் ஒரு நூலகத்தினையும் இணைத்தார்.

உதயாதித்தன் என்பார் கி.பி. 1059 இல் உதயப்பூரில் பழைய நிலையினை மாற்றாமல் நீலகண்டகேசுவரர் கோயில் ஒன்றினை அமைத்தார். கோவிலின் நான்கு மூலைகளிலும் நான்கு சிறு கோவில்களை அமைத்து அவற்றின் அருகில் நான்கு நூலகங்களை அமைத்து, அவற்றில் படிப்பதற்கான இடங்களையும் அமைத்தார். சுவர்களின் ஓரங்களில் நூல்களை அடுக்கி வைப்பதற்கான அமைப்புக்களும் ஏற்படுத்தப்பட்டன. படிக்க வருபவர்கள் உட்கார நடுவில் கல்தளம் அமைக்கப் பட்டிருந்தன.[70] இந்நூலகத்தினை முகமதுபின் துக்ளக் அழித்து அவ்விடத்தில் மசூதி கட்டினான்.

16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிந்தராசர்யாவின் 2197 நூல்கள் 32 தலைப்புக்களில் பகுத்துப் பட்டியலிடப்பட்டு இருந்தனவாகக் குறிப்புக்கள் உள்ளன. சுவடிகளைப் பித்தளைப்பட்டை போட்ட மரப்பெட்டிகளில் பத்திரப்படுத்தினர். இவைகளை எடுத்து மாற்றும்

சிரமத்தினைத் தவிர்க்கும் வண்ணம் சுவரிலேயே மரப்பலகைகளை இணைத்து பண்டகியம் உருவாக்கியிருந்தனர்.

புழுப்பூச்சிகளால் ஏற்படும் சிதைவினைப் போக்கக் கர்ப்பூரம், துளசி, வேப்பிலை முதலியவைகளைச் சுவடிகளுக்கு இடையில் பரப்பி வைத்தனர். மக்கிப்போன மற்றும் சிதைந்துபோன நூல்களைப் புதுப்பித்து எழுத தனியாக எழுத்து எழுதுநர்கள் இருந்தனர் என்று சித்த ஏமாவியாகரணம் விவரிக்கின்றது.

நூலகத்தில் வாசகர்கள் நூல்களைப் படிக்கும்போது வாயையும் கையையும் வெள்ளைத் துணியால் மூடிக் கொண்டனர். படிக்கும் சுவடிகளைத் தாங்கிக் கொள்ள சிக்குப்பலகையைப் பயன்படுத்தினர். வசதியுள்ளவர்கள் இதனைச் சந்தனப்பலகையில் சித்திர வேலைப் பாடுடன் செய்து வைத்துக்கொண்டனர். நூலின் கடைசியில் நூலைக் கெடுப்பவருக்கும் திருடுபவருக்கும் கண்கள் குருடாகி, கைகள் ஊனப்பட்டு, காலங்காலமாக கடுநரகில் கஷ்டப்படுவர் என்று எழுதி வைக்கப்பட்டிருந்தது.[71]

சமணர்களின் காலத்தில் நூல்கள் படியெடுக்கப்பட்டு கிரந்த தானமாகக் கொடுக்கப்பட்டமையையும், அவர்கள் நூலகத்தினைப் பாதுகாத்த முறையையும் அறியும்போது அவர்கள் இந்திய நூலகவியக்கத்திற்கு அளித்திட்ட நன்கொடை நன்றிக்குரியதாகும்.

2. பௌத்தர்களின் நூலகத்தொண்டு

சமணர்களைப் போலவே பௌத்தர்களும் நூலறிவும் நூலக அறிவும் கொண்டு திகழ்ந்தனர். பௌத்தர்கள் நூலகங்களைச் 'செழுங்கலை நியமம்' என்று குறித்தனர். இத்தகு செழுங்கலை நியமம் மதுரையில் அமைந்திருந்தமையை மணிமேகலை ஆசிரியர் சாத்தனார்,

> **தென் தமிழ் மதுரைச் சலப்பாவாய்**[72]
>
> **சிந்தாதேவி செழுங்கலை நியமித்து**
> **நந்தா விளக்கே நாவிசை பாவாய்**
> **வானோர் தலைவி மண்ணோர் முதல்வி**[73]
>
> **தக்கண மதுரை தான்சென்று எய்திச்**
> **சிந்தா விளக்கின் செழுங்கலை நியமத்து**
> **அந்தின் மூன்றில் அம்பலப் பீடிகை**[74]

எனக் குறிப்பிடுகின்றார்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சிறந்து விளங்கிய பௌத்த சமயச்சாரியார் நாகார்ச்சுனன் ஆந்திர குண்டூர் மாவட்டத்தில் ஐந்து மாடங்கள் கொண்ட கட்டிடம் ஒன்றைக் கட்டி அதில் ஐந்தாவது மாடத்தில் நூலகம் ஒன்றினை வைத்திருந்தார். மாடத்தின் மையத்தில் பொன்னால் செய்யப்பட்ட புத்தர் உருவம் ஒன்றினை அமைத்து அதனைச் சுற்றியிருந்த அறைகளில் நூல்கள் வைக்கப்பட்டிருந்தன.

இந்நூலகத்தில் எண்பத்துநான்காயிரம் உரையாடல்கள் கொண்ட திரிபிடகம் இருந்தது. மேலும், நிலவியல், தாவரவியல், இயைபுவியல், மருத்துவவியல், உலோகவியல் பற்றிய ஏராளமான நூல்களை வைத்திருந்தார். கி.பி. 399-414 வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்த சீன யாத்திரிகர் பாகியான் இதைப் பற்றி விளக்கமாக எடுத்துரைப்பதோடு பௌத்த மடங்கள் பலவற்றிலும் நூலகங்கள் இயங்கி வந்த நிலையையும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் வடபகுதியில் காந்தாரத்தைத் தலைநகராகக் கொண்டு கி.பி.78 முதல் 123 வரை ஆட்சி செய்தவர் கனிஷ்கர். நல்ல நூலுணர்வுடைய இவர் நூல்களைச் சேர்ப்பதிலும் பயன்படுத்துவதிலும் தீவிரமுனைப்புடன் செயலாற்றினார். நூலகத்தை நடத்த நல்லதொரு அமைப்பையும் நிறுவினார். அம்முறையில் பௌத்த சமயத் தொடர்பான நூல்களையெல்லாம் தொகுக்க ஏற்பாடு செய்தார்.

சமய வல்லுநர்களை விவாதிக்கச்செய்து தேர்ந்தெடுத்த கருத்துக்களை மூன்று இலட்சம் சூத்திரங்களாகத் தொகுத்து வகைப்படுத்தி, செப்பேடுகளில் எழுதச் செய்து, கல்பெட்டிகளில் அடுக்கி, நந்தவனத்தில் பாதுகாப்பாகப் புதைத்து வைத்தார். அவை இன்று மிகுந்த பயன்பாட்டிற்குரியதாக அமைகின்றன. இதனை, கி.பி. 629 முதல் 645 வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்த சின யாத்திரிகர் யுவான்சுவாங் விவரித்து எழுதியுள்ளார்.[75]

முதலாம் குமாரகுப்தர் (கி.பி. 414 - 455) நாளந்தா கல்விநிலையம் வளர்ந்திட பெரிதும் வழிவகுத்தவராவார். இங்கு நூலகம் தர்மகஞ்சா சமய மன்றம் பகுதியில் இருந்தது. இது இரத்தினசாகரம், இரத்தினததி, இரத்தின ரஞ்சகம் என்ற மூன்று மாளிகையில் அமைந்திருந்தது. இந்த நூலகத்திற்குச் சாவக அரசன் (Java) பாடலிபுத்திரதேவன் ஒரு மடம் கட்டி அதற்கு நூல்கள் வாங்க

இறையிலியாக ஐந்து கிராமங்களைத் தந்தான் என அறிவதால் இந்நூலகம் கடல்கடந்தும் புகழ்பெற்று விளங்கியதை அறிய முடிகின்றது. இந்நூலகத்திற்கு இறந்தோரின் நூல்களும், அன்பளிப்பு நூல்களும் பெருமளவு வரப்பெற்றன. இந்நூலகத்தினைப் பற்றி யுவான்சுவாங், இத்சிங் (I-Tsing), கொரிய நாட்டிலிருந்து வந்த ஆரியவர்மன், ஊய்நிச் (Hwui-Nich), தாவோ கி (Tauo Hi) ஆகியோரும் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

வடஇந்திய அரசர்களில் சிறப்புக்குரியவர் ஹர்ஷர் (கி.பி.606-647). இவரின் அவையில் சிறந்த நூலகம் ஒன்றிருந்தது. ஏழாம் நூற்றாண்டில் பாசுகரவர்மன் (அசாம்) ஹர்ஷருக்குச் அகர் மரப் பட்டையில் சிவந்த வெள்ளரிச்சாறு கொண்டு அழகாக எழுதப் பெற்ற சுவடிகளை அன்பளிப்பாகக் கொடுத்தமையை ஹர்ஷசரிதம் குறிப்பிடுகின்றது.

பீகாரில் பாசுல்பூர் அருகிலமைந்த விக்ரமசீலத்தில் தர்மபாலரால் பல வடமொழி நூல்களைக் கொண்ட நூலகம் அமைக்கப் பெற்றிருந்தது. அந்நூல்கள் பல திபெத்திய மொழியில் மொழி பெயர்க்கப் பெற்றிருந்தன. அந்நூலகம் கில்ஜி காலத்தில் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டது. பீகார் சரீப் நகருக்கருகே ஓதாந்தபுரி பல்கலைக் கழகத்திலும் நூலகம் அமைக்கப்பட்டிருந்தது. வடவங்க பொகல்பூருக்கு அருகாமையில் உள்ள சோமபுரியில் இருந்த நூலகமொன்று தீவிபத்தில் அழிந்து போயிற்று.[76]

பாகியான், யுவான்சுவாங் போன்றவர்களின் குறிப்புக்களால் பாடலிபுத்திரம், தம்லக், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் நூலகங்கள் இருந்ததற்கான விவரங்களை அறிய முடிகின்றது. பௌத்தர்கள் கால நூலகங்களில் பெரும்பாலும் சமய நூல்களே அதிகம் இடம் பெற்றிருந்தன. அவை சமய தத்துவ அடிப்படையில் பிரித்து வைக்கப் பட்டன.

ஆரம்பகாலங்களில் நூல்கள் பொருடளக்கம் கொண்டும் அவற்றில் சொல்லிய முறை கொண்டும் பகுக்கப்பட்டன. பாலி மொழியில் அமைந்த நூல்கள் ஒன்பது பிரிவுகளாகவும், பிற்காலப் பௌத்த நூல்களான திரிபிடகம் விநயம், அபிதம்மம், சுத்தம் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்துவைக்கப்பட்டன. இவை முறையே 3, 5, 7 பிரிவுகளாகப் பகுக்கப்பட்டன. இவர்களின் நூலக நிருவாகம் சிறப்பான முறையில் அமைந்திருந்தது.

3. வைணவர்களின் நூலகத்தொண்டு

வைணவ நூல்களில் சிறப்பானதான பௌஷ்கரசம்ஹிதை பிரம்மாவும் நாராயணனும் உரையாடும் வண்ணம் அமைந்திருக்கும். இந்நூலில் நூலகம் அமைப்பது குறித்த விளக்கம் காணப்படுகின்றது. இந்நூலின் ஞானப்பிரதிட்டைப் பகுதியில் 41ஆவது அத்தியாயத்தில் 21 சூத்திரங்களில் இதுகுறித்த விளக்கம் அமைகின்றது. அவ்விளக்கத்தில் நூலக அமைப்பு, நூல்கள் சேர்ப்பு, நூல்கள் பாதுகாப்பு, நூல்களைப் போற்றுதல், நூல்களின் பயன் ஆகியவை சிறப்பாகப் பேசப்படுகின்றன. அவை, "நூலகம் ஈரம் படியாதபடி கல்லால் கட்டப்பட வேண்டும். கதவு இரும்பு முதலிய உலோகங்களால் செய்யப்பட வேண்டும். சுவர்கள் வெள்ளை பூசப்பட்டு புனிதமாகவும், எல்லோரும் வந்து படிக்க ஏதுவாக ஊருக்கு மத்தியில் கோயிலில் அமைக்கப்பட வேண்டும். ஆண்டவனின் அருள்நாடும் நூல்களான நான்கு வேதங்கள், ஆறு சாத்திரங்கள், சுமிருதிகள், புராணங்கள், இயற்கைத் தத்துவ விளக்கங்கள், அரசியல் போன்ற துறைநூல்கள் சேர்த்து வைத்து உதவ வேண்டும்.

நூல்களைப் புழுப்பூச்சி அரிக்காமல் பார்த்துக் கொள்ள ஆற்றின் கரையில் கிடைக்கும் சில தாவரங்களின் இலைகளைப் போட்டுப் பாதுகாக்க வேண்டும். ஏடுகள் கறுப்புநிறம் கொண்ட இழைகளைக் கொண்டு கட்டப்பட்டு பத்திரமான இடத்தில் பாதுகாக்கப்பட வேண்டும். ஒவ்வொரு நூலினையும் குழந்தையைப் போல அலங்கரித்தும், கொண்ட மனைவியைப் போலக் காக்க வேண்டும். நல்ல நண்பர்களைப் போல தினசரி பார்க்க வேண்டும். அரியை நினைப்பதுபோல அதனைப் பற்றிய நினைவாகவே இருக்க வேண்டும். அப்போதுதான் அழிவுவராமல் அழியாவரம் பெற்றதாக அறிவு நிலைக்கும்.

நூல்களைப் பயன்படுத்தும் வாசகர்களும், நூலகரும் தூய ஆடை அணிந்து வரவேண்டும். தூயமனம் கொண்டவராக இருக்க வேண்டும். ஆண்டவனை வணங்கி தீப, தூப ஆராதனை செய்ய வேண்டும். அறிவு வளர வேண்டிக்கொள்ள வேண்டும். அதற்கு நூலகர் உதவ வேண்டும். இப்படி முறையாகப் படித்தால் அறியாமை அகலும். அறிவு வளரும். அதனைக் கண்டு ஆண்டவர் மகிழ்வார்; அருள்பாலிப்பார்" என்பதாக அமைகின்றது.[77] இத்தகு சீரிய நிலையிலேயே சீரங்கம், காஞ்சிபுரம் மற்றும்

பிறவிடங்களிலும் நூலகங்கள் இருந்தன என்பதால் மற்ற சமயத்தாரைப் போலவே வைணவரும் நல்ல நூலறிவும், நூலக அறிவும் கொண்டு சிறந்து விளங்கியதோடு நல்ல நூலகச் சேவையாற்றினர் என்பதும் புலனாகின்றது.

4. சைவர்களின் நூலகத் தொண்டு

சைவத் திருக்கோயில்களின் திருச்சுற்று மாளிகையில் அறிவு வளர்ச்சிக்குரிய சரசுவதி பண்டாரங்கள் அமைந்திருந்தன. இத்தகைய சரசுவதி பண்டாரங்களுள் சிறப்பானது ஆதிசங்கரர் வாழ்ந்த மடத்தில் அமைந்திருந்த நூலகமாகும். அதில் பல்வேறு சமய, மொழிநூல்கள் இருந்தன. கி.மு. இரண்டாம் நூற்றாண்டினைச் சேர்ந்த பதஞ்சலி மாபாடியம் பதஞ்சலி முனிவரால் காஞ்சியில் இயற்றப்பட்டது.[78] இதனைப் போன்றே தில்லையில் திருமுறைகள் சேர்த்து வைக்கப்பட்டிருந்த இடமும் குறிப்பிடத்தக்கதாகும். பிற்காலத்தில் படியெடுக்கப்பட்ட நூல்கள் பாதுகாப்பாக வைக்கப் பட்டிருந்தன. அவைகளுக்குக் குகைகள் என்று பெயர்.

இத்தகைய குகைகள் குறுங்கை, சதுர்வேதிமங்கலம், சிதம்பரம், சீர்காழி, திருத்துறைப்பூண்டி, திருப்புகலூர், திருமணஞ்சேரி, திருமாகாளம் போன்றவிடங்களில் அமைக்கப்பட்டிருந்தன. சமயத்தை வளர்க்கத் தோன்றிய பல்வேறு மடங்களிலும் நூல்கள் பாதுகாப்பு செய்யப்பட்டிருந்தன. இத்தகைய மடங்கள் திருவாவடுதுறை, சீர்காழி, விசயமங்கை, கழுக்குன்றம், ஆடுதுறை, வலிவலம், நொடியூர், வெண்ணைநல்லூர், திருவொற்றியூர், கும்பகோணம் ஆகியவிடங்களில் அமைந்திருந்தன. கோயில்களில் சிறந்த பலவகை நூல்கள் படித்துக் காட்டப்பட்டன. சமயத்தை வளர்க்கும் நோக்கோடு பல நூல்கள் எழுதப் பட்டன. அவை நூலக வளர்ச்சிக்குத் துணைநின்றன. இவ்வாறு சைவ சமயத்தவரும் நூலறிவு, நூலக அறிவோடு தொண்டாற்றியமையை அறிய முடிகின்றது.

கல்வெட்டுக்களால் அறியப்படும் செய்திகள்

கல்வெட்டுக்களின் வாயிலாக அக்காலத்தே பல நூலகங்கள் இருந்ததற்கான செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. அவ்வகையில் சேரன்மாதேவி, சீரங்கம், சிதம்பரம், காஞ்சிபுரம், சிருங்கேரி, நகாய் ஆகிய இடங்களில் காணப்படும் கல்வெட்டுக்கள் சிறந்த ஆதாரங்களாகும்.

சேரன்மாதேவி

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் அரசி சேரன்மாதேவியின் நினைவாக நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் அருகில் சேரன்மாதேவிச் சதுர்வேதிமங்கலம் என்னும் ஊர் தோற்றுவிக்கப்பட்டது. அது இப்பொழுது சேரன்மாதேவி என்று அழைக்கப்படுகின்றது. இங்குள்ள திரௌபதி அம்மன் கோயிலில் உள்ள பாண்டியக் கல்வெட்டில் பண்டைய நூலகம் பற்றிய குறிப்பு ஒன்று காணப்படுகின்றது. அதில், “தங்களூர் துவராபதி அம்மன் கோயிலில் காய்ச்சிக்கு வச்ச பாண்டிய பிரம்மாதிராயர் தன்மமான சரஸ்வதி பண்டாரத்துக்கு” என்றுள்ளதால் இவ்வூரில் நூலகம் இருந்ததும், நூலகம் நன்முறையில் நடைபெற இரண்டு மா நிலம் இறையிலியாக வழங்கப்பட்டதையும் அறிய முடிகின்றது.[79]

திருவரங்கம்

திருச்சி மாவட்டத்தில் காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடையில் அமைந்துள்ள திருவரங்கம் வைணவத்தலமாகும். இத்தலத்திற்குச் சீரங்கம், அரங்கம், பூலோக வைகுண்டம் என்ற பெயர்களும் உண்டு. இக்கோயிலின் திருப்பணியார அறையை அடுத்த அறையின் கிழக்குப் பக்கத்தில் நீலகண்ட நாயக்கரின் சமகாலத்தவரான வீரராம நாயக்கரின் பதினான்காம் ஆட்சியாண்டு (கி.பி.1269) தமிழ்க் கல்வெட்டு ஒன்றுள்ளது. அதில் சரசுவதி பண்டாரம் இருந்ததென்றும், அதனருகில் பலபள்ளி நீலகண்ட நாயக்கரால் கட்டப்பட்ட ஒரு மண்டபத்தில் கல்வித் தெய்வமான சரசுவதி, பகவான்வேதவியாசர், அயக்கிரீவன் ஆகியோரது உருவங்கள் அமைக்கப்பட்ட செய்தியும் இக்கல்வெட்டின்வழி அறியமுடிகின்றது.[80]

சிதம்பரம்

கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள சைவத் தலங்களுள் சிறப்புமிக்கது சிதம்பரம் நடராசர் கோயிலாகும். இது பாடல்பெற்ற தலமாகும். இத்தலம் பழங்காலம் முதலே தலைசிறந்த கல்விக் கூடமாகவும் விளங்கியது. இந்நகருக்குச் சிற்றம்பலம், புலியூர், தில்லை, சித்ரகூடம் போன்ற பல பெயர்கள் உள்ளன. இக்கோயில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் புகழ்பெற்று விளங்கியது. தஞ்சையை ஆண்ட சோழ மன்னர்கள் இந்நடராசரைத் தம் குலதெய்வமாக வணங்கினர். இக்கோயில் சிறந்த கலைக்கூடமாகவும்,

கருவூலமாகவும், ஆவணக் களரியாகவும் பல நற்செயல்களுக்கும் பயன்பட்டதாகக் கூறும் கல்வெட்டுக்கள் பல உள்ளன.

இக்கோயிலின் முதல் பிரகாரத்தின் மதிலில் ஒரு கல்வெட்டும், மூன்றாம் பிரகாரத்தில் சுப்பிரமணியர் சன்னதிக்கு வடக்கிலுள்ள மண்டபத்தில் இரு கல்வெட்டுக்களும் உள்ளன. தமிழில் அமைந்துள்ள இக்கல்வெட்டுக்கள் முதலாம் சடாவர்ம சுந்தரபாண்டியன் (கி.பி. 1251-1270) காலத்தவையாகும்.[81] இக்கல்வெட்டின் மூலம் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு வடக்குப்புறத்தில் ஒரு நூலகம் அமைந்திருந்தமையை அறிய முடிகின்றது. அதனை நிர்வகிக்கும் பொருட்டு பல்லவதரையர் ஆணை பிறப்பித்தார்.[82] அங்கு இருபது அறிஞர்கள் பணியாற்றி வடமொழி மற்றும் தமிழ்மொழி நூல்களை ஒப்பிடும் பணியையும் ஏடு எடுக்கும் பணியையும் செய்தனர். அவர்களில் ஒருவர் காஞ்சி நிருத்யராய ஆழ்வார் ஆவார்.

இந்நூலகத்தில் பல்வேறு பாடங்கள் போதிக்கப்பட்டன. இங்கு பிரதிகளை மீண்டும் படியெடுக்குமாறு பட்டர்கள் பணிக்கப் பட்டனர் என்பது,

> **முன்பாட்டை சரஸ்வதி பண்டாரத்தில் எழுதிக் கிடக்கிற கிரந்தங்கள் . . .**

என்ற கல்வெட்டு வரிகளால் அறியமுடிகின்றது.

தமிழிலும் கிரந்தத்திலும் எழுதவும் ஒத்துப்பார்க்கவும் வழிவகை செய்யப்பட்டிருந்தது என்பது,

> **கிரந்தங்களிலும் தமிழ்களிலும் எழுது வேண்டுவன . . . எழுதி ஒக்கப் பார்த்து**

என்னும் கல்வெட்டு வரிகளாலும் அறியமுடிகின்றது.[83]

முதலாம் சடாவர்மன் சுந்தரபாண்டியன் அங்குப் பணிபுரிந்த 108 அந்தணர்களுக்கு விக்கிரமபாண்டிய சதுர்வேதிமங்கலம் என்ற அக்ரகாரத்தை ஏற்படுத்தி தானமாகத் தந்தான். தானம் பெற்றவர்களில் சரசுவதி பண்டாரத்தை நிர்வகித்த சரசுவதி பண்டாரத்தாரும் ஒருவர்.[84]

காஞ்சிபுரம்

இயேசுகிறித்து பிறப்பதற்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே பழமைமிக்க வரலாறு படைத்த நகரம் காஞ்சி மாநகரமாகும். இது பல தலைமுறையாகப் பல மன்னர்களின் தலைநகரமாக விளங்கி

வருகின்றது. கல்விக்கும் கலைக்கும் இறையாண்மைக்கும் இந்நகரம் நிலைக்களமாக இருந்து வருகின்றது. காஞ்சிபுரம் புகழ்மிக்க பல்கலைக்கழகமாக விளங்கிய செய்தி யுவாங் சுவாங் அவர்களின் குறிப்புகளால் அறியமுடிகின்றது. பல்லவர் காலத்தில் விந்தியப் புகழ்பெற்ற பெரியதொரு வடமொழிக் கல்லூரி காஞ்சிக்கடிகை என்ற பெயரில் சிறந்து விளங்கியதாகச் செப்புப் பட்டயங்களும் கல்வெட்டுக்களும் கூறுகின்றன.[85]

கல்விப்பணியில் ஏற்றம் பெற்றிருந்த காஞ்சிபுரத்தில் கல்விச் சாலையின் அங்கமான நூலக அமைப்பு, நூலகக் கருவூலங்கள், சுவடிச் சாலைகள் இல்லாமல் இருந்திருக்க வாய்ப்பில்லை. பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று காஞ்சி வரதராசப்பெருமாள் கோயிலின் இரண்டாவது பிரகாரத்தின் வடக்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு தமிழ் கிரந்த எழுத்துக்களில் வடசொற்கள் கலந்த தமிழில் உள்ளது. இக்கல்வெட்டின்படி அங்கு இருந்த ஒரு வைணவபக்தர், மடம் ஒன்றை நிறுவி அதில் வைத்திருந்த புத்தகங்களைப் பாதுகாக்க ஏற்பாடுகள் செய்திருந்தார் என்ற செய்தி குறிப்பிடப் பட்டுள்ளது. அங்கு இருந்த புத்தகங்கள் பற்றிய செய்தி,

இவன் தேடின பொஸ்தகங்களும்
இதுக்கு வேண்டும் உபகரணங்களும்[86]

என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் புத்தகங்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கு வேண்டிய வசதிகளும் அரசனால் தானமாக வழங்கப்பட்ட செய்தியையும் அறியமுடிகின்றது.[87]

சிருங்கேரி மடம்

இது, கர்நாடக மாநிலம் சிருங்கேரியில் ஆதிசங்கரரால் நிறுவப்பட்ட மடங்களில் ஒன்றாகும். 'சாரதா பீடம்' எனப்படும் இம்மடத்தில் நூலகம் இருந்த செய்தியை தென்கன்னட மாவட்ட பண்ட்யாலா என்ற கிராமத்தில் காராடிகும்ளகட்டா என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது. கன்னடத்தில் அமைந்த இக்கல்வெட்டு விஜயநகரத்தினை ஆட்சி செய்த அரிகரன் மகன் புக்கமகாராசன் (கி.பி. 1406) காலத்தினைச் சார்ந்தது.[88] இங்கிருந்த நூலகம் 'புஸ்தகப் பண்டாரம்' எனப்பட்டது. இந்நூலகத்தைச் சீர்திருத்தம் செய்து விரிவுபடுத்தப்பட்ட விபரங்களை இரண்டாவது புக்கரின் ஆவணங்களின் வழி

அறியமுடிகின்றது. மேலும், இந்நூலகத்தினை நிர்வகிக்க கிருஷ்ண பட்டர் எனப்பட்ட பௌராணீகர் நியமிக்கப்பட்டு அவருக்கு நிலம் தானமாக வழங்கப்பட்ட செய்தி இரண்டாம் தேவராயரின் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.[89]

நகாய்

கர்நாடக மாநிலம் வாடி இரயில்நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள ஊர் நகாய். இங்கு அறுபதுகால் கோயில் உள்ளது. இக்கோயிலில் இராயநாராயணன் (கி.பி.1058) என்ற சாளுக்கிய மன்னன் காலத்துக் கன்னடமொழிக் கல்வெட்டு ஒன்று காணப்படுகின்றது. அக்கல்வெட்டில் இவ்வரசனின் படைத் தலைவனும் மந்திரியுமான மதுசூதனன் கடிகசாலா என்னும் குடியிருப்புக் கல்லூரியை நிறுவி அதில் நூலகமும் அமைத்திருந்தார். அந்நூலகத்தினை நிர்வகிக்க ஆறு சரசுவதி பண்டாரிகள் நியமிக்கப் பட்டிருந்தனர். மேலும், அக்கல்லூரியில் 200 மாணவர்கள் வேதமும் 52 மாணவர்கள் சாத்திரமும் பயின்றதாகவும், இவர்களைப் பயிற்றுவிக்க மூன்று வேத ஆசிரியர்களும் மூன்று சாத்திர ஆசிரியர்களும் இருந்தனரென்றும், அவர்கள் ஒவ்வொருவருக்கும் 30 மட்டர் அளவு நிலம் மானியமாக அளிக்கப்பட்டமையையும் அறிகின்றோம்.[90]

இவ்வாறு பல சமயங்கள் வளர்ச்சியுற்றிருந்த காலகட்டத்தில் பல நூலகங்கள் அமைந்திருந்தன. இருப்பினும் அவை சமயப் பூசல்களால் அழிக்கப் பெற்றமையும், யாத்திரிகர்களால் கொண்டு செல்லப்பட்டன என்பதும் மறுக்கவியலாத உண்மைகளாகும்.

இசுலாமியர்கள் காலத்தில் நூலகம்

இந்தியாவை ஆட்சிசெய்த இசுலாமிய மன்னர்கள் சிறந்த ஆட்சியாளர்களாகவும் கல்விமான்களாகவும் விளங்கினர். அவர்கள் தங்கள் அரண்மனையிலேயே சொந்த நூலகம் வைத்திருந்தனர். அரசவையில் இருந்த பெருமக்கள் பலரும் மன்னர்களைப் போலவே தங்கள் இல்லங்களிலேயே நூலகங்களை ஏற்படுத்திப் பாதுகாத்தனர். மேலும், கல்விநிலையங்கள், மசூதிகள் போன்றவற்றிலும் நூலகங்கள் அமைக்கப்பட்டுப் பாதுகாக்கப் பட்டன.

இசுலாமிய வரலாற்றில் அடிமை வம்சத்தின் பால்பன் (1266-1286), அவரது மகன் முகம்மது, அமீர்குஸ்ரு, முகம்மதுபின் துக்ளக்,

பிரோஸ்ஷா, இப்ராஹீம் லோடி, காஜிகான் ஆகியோர் சிறந்த நூலகங்களைத் தங்கள் அரண்மனையில் வைத்திருந்ததை அறியமுடிகின்றது.[91]

முகலாய வம்சத்தை நிறுவிய பாபர் (1526-1530) நல்ல இலக்கிய விருப்பம் உடையவராக இருந்ததோடு அராபியம், பாரசீகம், துருக்கியம் முதலிய பல மொழிகளையும் அறிந்த அறிஞராகவும் விளங்கினார். இவர் தம் அரண்மனையில் வைத்திருந்த நூலகத்தினைத் தினம் பயன்படுத்தத் தவறவில்லை. கி.பி. 1525-இல் பாபர் ஆப்கானிஸ்தானுக்குச் சென்றபோது அங்கிருந்த நூலகத்தினை பார்வையிட்டார். அந்நூலகத்தின் சில அரிய நூல்களைப் பெற்று, தமது மகன் உமாயூனின் பயன்பாட்டிற்காக அனுப்பி வைத்தார் என அறியமுடிகிறது.[92] தாம் போரில் வென்ற நாடுகளிலிருந்து சூறையாடிக் கொண்டு வந்த நூல்களையும் தமது நூலகத்தில் இவர் சேர்த்து வைத்திருந்தார்.

பாபரின் மகள் குல்பதன்பேகம் தனக்கென ஒரு தனியிடம் வைத்திருந்தாள். பாபருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர் உமாயூன் (1530-1556). சிறந்த நூல்பிரியரான இவர் வானவியல் மற்றும் கவிதையில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். எப்போதும் தம்முடன் சில நூல்களை வைத்துக் கொண்டேயிருப்பார். ஷெர்ஷாவிடம் தோற்று அனாதையாக அலைந்த நேரத்தில்கூட தைமூர்நாமா போன்ற சில நூல்களைத் தம்முடன் வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் ஷெர்ஷாவை வென்று டில்லியைக் கைப்பற்றிய உமாயூன் ஷெர்ஷாவின் மாளிகையையே நூலகமாக மாற்றினார். தாம் மிகவும் நேசித்த அந்த நூலகத்தின் மாடிப்படியில் தவறி வீழ்ந்து உயிர்துறந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.[93]

உமாயூனுக்குப் பின் அரசரான அக்பர் (1556-1605) தம் முன்னோர்களின் நூலகத்தினை நன்கு விரிவுபடுத்தினார். தாம் வென்ற நாடுகளிலிருந்து நூல்களைக் கொண்டுவந்து இந்நூலகத்தில் சேர்த்து வைத்தார். இந்நூலகம் இப்பொழுது ஆக்ரா கோட்டையின் எண்கோணக் கோபுரத்திற்கு அருகில் உள்ளது. கவிஞர் பைசியுடன் நீண்ட பொழுதுகளை அக்பர் இங்கே கழித்திருக்கின்றார். வட மொழியிலிருந்து பாரசீகத்திலும், பாரசீகத்திலிருந்து வடமொழியிலும் பல நூல்களை மொழிபெயர்க்கச் செய்து அவற்றைத் தம் நூலகத்திலேயே சேர்த்திருந்தார். நூலகத்தில்

மொழிபெயர்ப்பிற்காகத் தனித்துறையே செயல்பட்டது.[94] அக்பர், கவிஞர் பைசி என்பவரின் உதவியால் நூல்களைப் படிக்கச் சொல்லி கேட்டு இன்புறுவார்.

இந்நூலகத்தில் இருபத்துநான்காயிரம் நூல்கள் முதலில் பொருள் வாரியாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவை பின்னர் மொழிவாரியாக அடுக்கப் பெற்றிருந்தன. அனைத்துக்கும் பட்டியல் தயாரிக்கப் பட்டிருந்தது. இதனை முறையாகப் பராமரிக்க ஒரு துறையையே உருவாக்கி அதில் பதினாறு படிநிலைகளை உருவாக்கியிருந்தார் அக்பர்.

அக்பர் தமது ஆதரவுபெற்ற பர்சிய அறிஞர் பைசியை (Faizi) தமது இம்பீரியல் நூலகத்தின் நூலகராக நியமித்திருந்தார். பைசியின் இறப்புக்குப்பின் அவரின் தனிப்பட்ட தொகுப்பான 4600 நூல்களும் அரசின் நூலகத்திற்கு மாற்றப்பட்டன. இதில் பைசி எழுதிய 101 நூல்களும் அடங்கும். இவரின் தொகுப்புக்கள் கணக்கியல், வானியல், இலக்கியம், இசை, மருத்துவம், தத்துவம், சமயம், கட்டிடம் போன்ற தலைப்புகளில் அடங்கும்.[95]

அக்பருக்குப் பின் பட்டத்திற்கு வந்த ஜஹாங்கீர் (1605-1627) அரசு நூலகத்தோடு தமக்கென ஒரு தனி நூலகத்தினையும் வைத்திருந்தார். அவர் எங்குச் சென்றாலும் தம்முடன் சில நூல்களை எடுத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பிறருக்குப் பரிசாக நூல்களை வழங்குவதும், பெரும் பொருள் கொடுத்து நூல்களை வாங்குவதும் இவரது விருப்பமாகும். இவரின் காலத்தில் அரண்மனை நூலகராக இருந்தவர் மக்தாப்கான் ஆவார்.

ஜஹாங்கீரின் மனைவி நூர்ஜஹான் சிறந்த நூல்பிரியர். இவர் சிறுவயது முதலே இத்தகு பழக்கத்தினைக் கொண்டவராயிருந்தார். பணம் கொடுத்து நூல்கள் வாங்கிச் சேர்ப்பதிலும் ஆர்வம் காட்டினார். தாம் அரசியானதும் தனி நூலகம் ஒன்றையே உருவாக்கிப் பயன்படுத்தினார். இலாகூர், அகமதாபாத் முதலிய பகுதிகளுக்குக் கவர்னராகப் பதவிவகித்த ஷெய்க் பரீத் தமக்கும் மற்றும் அறிஞர்களுக்கும் பயன்படும் வகையில் சொந்த நூலத்தினை உருவாக்கியிருந்தார்.

ஷாஜஹான் (1627-1658) ஆட்சிக்காலத்தில் நாட்டில் அமைதி நிலவியது. எனவே கல்வி, கலை, இலக்கியம் வளர்ச்சியடைந்தன. தமது நூலகத்தில் ஏராளமான கலைக்களஞ்சியங்கள், வானியல்

நூல்கள், பயண நூல்கள் மற்றும் சமயநூல்களையும் வாங்கி நூலகத்தினை விரிவுபடுத்தியிருந்தார். நூலகத்திலுள்ள நூல்களைப் படித்துக் காட்டுவதற்காகச் சிலரை பணியமர்த்தியிருந்தார். இவரது மூத்த மகள் தாரா டில்லி கோட்டையில் நூலகம் ஒன்றை வைத்திருந்தார். இப்பொழுது அதில் பொறியியல் கல்லூரி நடைபெற்று வருகின்றது. அதில் இருந்த நூல்கள் பற்றிய விவரம் நமக்குக் கிடைக்கவில்லை.

இவ்வம்சத்தின் கடைசி மன்னர் ஔரங்கசீப் *(1650-1707)* சிறந்த கல்வியாளராகவும் சமயஞானியாகவும் சட்டப்பிரியராகவும் திகழ்ந்தார். இவர் தமது நூலகத்தில் ஏராளமான நூல்களைச் சேர்த்து வைத்திருந்தார். தென்னாட்டின் படையெடுப்பின்போது பாமினி சுல்தான் மகமதுஷாவின் மந்திரி முகம்மது காவான் சேர்த்து வைத்திருந்த சுமார் *3,000*க்கும் மேற்பட்ட கையெழுத்துச் சுவடிகளைக் கொள்ளையிட்டுத் தமது நூலகத்தில் சேர்த்து வைத்திருந்தார்.

முகலாய மன்னர்களைப் போலவே பிரபுக்களும் கவர்னர்களும் தனவந்தர்களும் பெரிய நூலகங்களை வைத்திருந்தனர். இத்தகு நூலகங்கள் லக்னோ, பாட்னா, இராம்பூர், பில்கிராம், ஜான்பூர், வங்காளம், சூரத், புரோச், காண்டேஷ், கத்தியவார், அகமதாபாத், ரோகில்கண்ட் முதலிய நகரங்களில் செயல்பட்டிருக்கின்றன.[96] காலப்போக்கில் அவை கவனிப்பாரற்றுப் போயின. அதே போன்று மதரசா கல்விநிலையங்களும் மறைந்து போயின.

வடக்கில் இருந்த முகலாயப் பேரரசுகளைப் போலவே தென்நாட்டில் பாமினி அரசு சிறந்து விளங்கியது. பாமினி அரசர்களில் புகழ்வாய்ந்தவர் மகமதுஷா *(1463 - 1482)*. இவரின் மந்திரி மகமதுகாவான் பீடாரில் ஒரு பெரிய கல்லூரியை நிறுவியதுடன் சிறந்த பெரிய நூலகம் ஒன்றையும் அதனுடன் உருவாக்கினார். பல ஆயிரம் நூல்கள் அதில் இடம்பெற்றிருந்தன. ஔரங்கசீப் இந்நூலகத்தைக் கொள்ளையடித்தே தமது நூலகத்தை விரிவுபடுத்தினார். பாமினி அரசர்களில் அடில்சாகி, அடில்சா போன்றோரும் சிறந்த நூல்பிரியர்கள். இவர்கள் பயணத்தின் போதும் உடன் நூல்களைக் கொண்டு சென்று படித்தனர்.

ஆங்கிலேயர் காலத்தில் நூலகம்

கி.பி.*1696* முதல் *1743* வரை ஜெய்ப்பூரில் சிறப்பாக

ஆட்சிபுரிந்தவர் செய்சிங் ஆவார். இவரின் நூலகத்தில் பெரும்பான்மையான நூல்கள் வானியல் பற்றியதாக இருந்தன. இவற்றில் தாலமி, உலுபெக், லாகிரே, பிலிம்சுடட், யூக்லிடு, கோபர்நிகஸ் ஆகியோரின் நூல்களும் இடம்பெற்றிருந்தன.

கி.பி.1672 முதல் 1704 வரை மைசூர் மகாராஜாவாக விளங்கியவர் சிக்கதேவராயர். பல நல்ல நூல்களைத் தொகுத்து வைத்திருந்த இவரின் நூலகத்தைக் கொள்ளையிட்ட ஐதர்அலி தமது நூலகத் தொகுப்புடன் இவற்றைச் சேர்த்து வைத்திருந்தார்.[97]

கி.பி. 1782-1798 இல் சிறந்துவிளங்கிய மன்னர் திப்புசூல்தான் ஆவார். இவர் தம் தந்தை சேகரித்த நூல்களோடு தாமும் பல அரிய நூல்களைச் சேகரித்து கட்டுசெய்து (Binding) பாதுகாத்தார். இவரது சீரங்கத் தோல்விக்குப்பின் இவரது நூல்கள் எல்லாம் ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களுக்கும், வங்கத்திலிருந்த ஆசிய சங்கத்திற்கும் மார்க்விஸ் வெல்லஸ்லி என்பவரால் அனுப்பி வைக்கப்பட்டது. தஞ்சையில் சோழர்களைத் தொடர்ந்து நாயக்கர்களும் பின்னர் மராட்டிய மன்னர்களும் நூலகப் பணியாற்றினர்.

மேற்குறிப்பிட்ட நூலகங்கள் அனைத்தும் மன்னர்களுக்கும் பிரபுகளுக்கும் அவரைச் சார்ந்தோர்களுக்கு மட்டுமே பயன்பட்டு வந்தன. கி.பி. 1784க்குப்பின் பொதுமக்களுக்கும் பயன்படும் வகையில் கல்கத்தா, சென்னை, பம்பாய் முதலிய இடங்களில் நூலகங்கள் திறக்கப் பட்டன. 1808-இல் கல்கத்தாவிலும் 1804-இல் பம்பாயிலும் (பம்பாய் இலக்கியச் சங்கம்), 1818 மார்ச் 27 இல் சென்னையிலும் (சென்னை இலக்கியச் சங்கம்) இத்தகைய நூலகங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றில் பல சொற்பொழிவுகள் நடத்தப்பட்டு, பின்னர் அவை நூலாக வெளியிடப்பட்டன. ஆனால், இந்நூலகங்களை வெள்ளையர்களும் ஒருசில இந்தியர்கள் மட்டுமே பயன்படுத்த முடியும் என்ற நிலை இருந்தது. இந்நிலையை வெறுத்த இந்தியர்கள் தங்களுக்கென குழு வரி (subcription) ஏற்படுத்தித் தமக்குரிய பொது நூலகத்தினை உருவாக்குவதற்கான முயற்சியை மேற்கொண்டனர். இம்முறையில் 1830 நவம்பர் 15-இல் ஸ்டாக்யுலர் (J.H.Stocqueler) என்பவரின் துணையுடன் பம்பாய் பொதுநூலகம் செயல்படத் தொடங்கியது.

கன்னிமரா நூலகம்

பொதுமக்கள் அனைவரின் பயன்பாட்டிற்கு உதவும் வகையில் 1890 மார்ச் 22 இல் அப்போதைய சென்னை மாகாணத்தின் கவர்னராய் இருந்த கன்னிமரா பிரபுவால் சென்னை எழும்பூரில் கன்னிமரா நூலகத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, 1896 டிசம்பர் 5 ஆம் நாள் அந்நாளைய கவர்னர் ஆவ்லக் எல்லிசு பிரபுவால் பொது மக்களுக்குத் திறந்து வைக்கப்பட்டது.

நூலகத்துறை

பரோடா மன்னர் கெய்க்வாடு தமது மேலைநாட்டுச் சுற்றுப்பயணத்தின் அனுபவமாகக் கிராமப்புற மக்களுக்குப் பயன்படும் வகையிலான நூலகத்துறை ஒன்றை நிறுவ முயன்றார். அம்முயற்சியின் தொடர்பாக 1910இல் அமெரிக்காவில் நூலகவியல் முன்னோடியாக விளங்கிய மெல்வில்கு டுயியின் மாணவரான வில்லியம் அலன்சன் போர்டன் என்பவரைப் பரோடாவில் பொறுப்போற்கச் செய்து நூலகத் துறையைத் தொடங்கினார்.

மாநில மைய நூலகம்

சென்னையில் 1877இல் தொடங்கப்பெற்ற அரண்மனை நூலகத்துடன் புதியதாக 24,000 நூல்கள் சேர்க்கப்பெற்று மாநில மைய நூலகமாகத் திருத்தி அமைக்கப்பெற்றது. அதில் வாசகர்கள் நேரடியாக நூல்களைத் தேடி எடுக்கும் முறையுடன் சிறுவர்களுக்கும் மகளிருக்கும் தனிப்பகுதி அமைக்கப்பட்டது.

கிளை நூலகங்கள் - நடமாடும் நூலகங்கள்

மாநில மைய நூலகத்தின் வளர்ச்சிக்காக மாவட்ட மைய நூலகங்கள், வட்ட நூலகங்கள், கிராமிய நூலகங்கள் நிறுவப்பட்டன. இந்நூலகங்கள் நிறுவமுடியாத இடங்களில் 1911 இல் நடமாடும் நூலகங்கள் ஏற்படுத்தப் பட்டன. அதன்படி நூல்கள் தனித்தனிப் பெட்டிகளில் அடுக்கப்பெற்று அரசு செலவிலேயே சமஸ்தானங்களுக்கு அனுப்பப்பெற்றன. நூலகப் பணியாளர்கள் மேல்நாட்டிலும் உள்நாட்டிலும் அரசின் செலவிலேயே பயிற்சிபெற்றனர்.

நூலகச் சங்கங்கள்

1914 ஏப்ரல் 10 ஆம் நாள் ஆந்திர நூலகச் சங்கம் தொடங்கப்பட்டது. திவான்பகதூர் மொச்சேரலா

இராமச்சந்திரராவ் இதன் முதல் தலைவரானார். அய்யங்கி வெங்கடரமணய்யா பிந்துலுவும், நலம் கிருஷ்ணாராவும் செயலாளர்களாகப் பொறுப்பேற்றனர். இச்சங்கம் இன்று பல இலட்சம் மதிப்புள்ள ஆந்திர கிரந்தாலய டிரஸ்ட் ஒன்றை நிறுவி சிறப்புடன் செயல்படுகின்றது.

1919 நவம்பர் 14-இல் சென்னை கோகலே மண்டபத்தில் கூடிய பொது நூலக மாநாட்டின் பயனாகச் சென்னை கவர்னர் வெல்லிங்டன் பிரபு பரோடா நூலகத் தலைவர் சனார்த்தனன் கூடால்கர் முயற்சியாலும் வள்ளல் ஆண்ட்ரு கார்னிகி உதவியாலும் அகில இந்திய பொது நூலகச் சங்கம் (All India Public Library Association) விஜயவாடாவைத் தலைமையிடமாகக் கொண்டு துவங்கியது. இச்சங்கம் பல மாநாடு களையும் பல சொற்பொழிவுகளையும் நடத்தி சிறந்து விளங்குகின்றது.

ஆந்திர நூலகச் சங்கத்தின் வெற்றியின் விரைவுகண்டு 1921-இல் மராட்டிய நூலகச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. கேசரி இதழின் ஆசிரியர் என்.சி.கேல்கர் தலைமையில் பணிகள் தொடங்கப்பட்டு நூலகப்பணி சிறப்புடன் நடந்தது. 1925 டிசம்பர் 20இல் வங்க நூலகச் சங்கம் உருவாக்கப்பட்டது.

1927-இல் சென்னையில் கூட்டப்பெற்ற அகில இந்திய பொது நூலக மாநாட்டின் விளைவாகச் சென்னைப் புத்தகாலயப் பிரச்சார சங்கம் 1928 சனவரி 30ஆம் தேதி தொடங்கப்பெற்றது. கிருஷ்ணசாமி ஐயர் இதன் தலைவரானார். சென்னைப் பல்கலைக்கழக நூலகர் எஸ்.ஆர். அரங்கநாதன், எஸ். எம்.பாசில், வழக்கறிஞர் கே.பாலசுப்பிரமணிய ஐயர் ஆகியோர் செயலாளராயினர். இதற்கு 35 பேர்கள் ஆட்சிமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். இச்சங்கத்தின் செயலர் எஸ்.ஆர்.அரங்கநாதனின் முனைப்பால் நூலகத்துறையில் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது.

மேற்கண்ட சங்கங்களைப் போலவே 1929 இல் பஞ்சாப் நூலகச் சங்கம், 1933 செப்டம்பர் 13-இல் இந்திய நூலகச் சங்கம், 1936-இல் பீகார் இராச்சிய புஸ்தகாலயச் சங்கம், 1945-இல் திருவனந்தபுரத்தில் கேரள நூலகச் சங்கம் ஆகியவை தோற்றுவிக்கப்பட்டு நூலகப் பணியாற்றின.

இரட்டையர் ஆட்சியில் நூலகப்பணி

1920 முதல் 1935 வரை கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளை

ஆங்கில அரசு இந்தியரிடம் ஒப்படைத்தது. இதன் பயனாக நூலகப்பணி தொடங்கியது. நகரச்சபைகள், மாவட்டக் கழகங்கள், பஞ்சாயத்து மன்றங்கள், கூட்டுறவு நிலையங்கள் நூலகங்களை நிறுவ முடுக்கிவிடப் பட்டன. 1920-இல் சென்னை நகராட்சி சட்டத்தில் இதற்கு வழிசெய்யப் பட்டது. 1924-இல் ஐக்கிய மாகாண அரசாங்கம் உந்து நூலகப்பணியைத் தொடங்கியது.

1935-இல் புதிய அரசியல் திட்டத்தின் பயனாக திருச்சிராப்பள்ளி மாவட்ட கழக ஆதரவில் 1935 மே 8 இல் மாட்சிமிகு மன்னர் தம்பதிகள் வெள்ளிவிழா பொது நூலகம் திருச்சி நகரில் தொடங்கப்பட்டது. இதனால் 471 கிராமங்கள் பயனடைந்தன.

1937-இல் மக்களாட்சி ஏற்பட்டதன் பயனாகக் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது. இதனால் அசாம், ஆந்திரா, ஒரிசா, சென்னை, பீகார், பஞ்சாப், பம்பாய் ஆகிய மாகாணங்களில் நூலகப்பணியின் விரிவாக்கம் துவங்கியது. சென்னை மாகாணத்தின் நூலகப் பணிக்குச் சட்டப் பூர்வமாக்கும் முயற்சிக்குப் போதிய பயன் தராததால் பள்ளி நூலகங்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து விடப்பட்டன. இதன் தொடர்பான ஆணை 1939 சூன்மாதம் 2-ஆம் தேதி பிறப்பிக்கப்பட்டது.

'ஞானரதம்' என்னும் உந்துநூலகம் மதுரை மாவட்ட நூலகக் கழக ஆதரவில் 1939 அக்டோபர் மாதம் துவக்கப்பட்டது. இதன் பயனாகப் பல்வேறு ஊர்களில் வாகனங்களின் மூலம் நூலகப்பணி நடைபெற்றது.

தனியார் முயற்சியில் நூலகப்பணி

அரசாங்கம், பொதுநல அமைப்புக்கள் மட்டுமன்றிச் சில தனியாரும் நூலகப்பணியில் ஈடுபட்டனர். அவர்களுள் மன்னார்குடியைச் சேர்ந்த பொறியாளர் எஸ்.வி.கனகசபைபிள்ளை குறிப்பிடத்தக்கவர். இவர் முயற்சியால் 1931 அக்டோபர் 21 ஆம் நாள் புதன்கிழமை மாலை 5 மணிக்கு மன்னார்குடி மேலவாசலில் நடமாடும் நூலகவண்டி (மாட்டு வண்டி) பணியைச் சென்னைப் பல்கலைக்கழக நூலகர் எஸ்.ஆர். அரங்கநாதன், ரா.பி.சேதுப் பிள்ளை அவர்கள் தலைமையில் தொடங்கி வைத்தார்.[98] இந்நூலக வண்டி மன்னார்குடியைச் சுற்றி 12 மைல் அளவிலுள்ள ஊர் மக்களுக்கு பயன்பட்டது. இப்பணி கனகசபை பிள்ளையின் மறைவுக்குப் பின் நின்றுபோனது.

கடலூர் வழக்கறிஞர் டி.ஆர்.சக்கரபாணி ஐயங்கார் அவர்கள் தென்னார்க்காடு மாவட்டம் வில்வராயநத்தத்தில் நடமாடும் நூலகத்தைத் தொடங்கிவைத்தார். இவ்வண்டி 1933-இல் கும்பகோணம் மகாமகத் திருவிழாவுக்கு வந்துபோனது குறிப்பிடத் தக்கதாகும்.[99] மேலும், ஆந்திராவில் நடந்த நூலக மாநாட்டிற்குச் சென்று நடமாடும் நூலகப்பணியின் மேன்மையைப் பரப்பியது.

மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டியைச் சேர்ந்த திருமதி பாலசுப்பிரமணிய ஐயர் இப்பகுதி மக்களுக்காக நடமாடும் நூலகப் பணியாற்ற எண்ணி 1936 மே 17-இல் மதுரைக் கல்லூரி கணிதப் பேராசிரியரும் சென்னைப் புத்தகாலய பிரச்சாரச் சங்க உறுப்பினருமான கே.எஸ். ஸ்ரீகண்டன் அவர்களைக் கொண்டு தொடங்கி வைத்தார். 787 நூல்களைக் கொண்ட இந்நூலகத்தால் 25 கிராம மக்கள் பயன்பெற்றனர்.

ஆந்திரமாநில குண்டூரில் பெத்தபாலத்தில் உள்ள சேவாசிரம வாணிமந்திர நூலகம் படகு மூலம் நடமாடும் நூலகப்பணியைச் செய்ய எண்ணியது. குண்டூர் மாவட்டம் பெத்தவட்லபுடியில் இருந்து கொல்லுவரையான 24 மைல் கரையோரக் கால்வாயில் படகு நூலகத்தினை 1935 அக்டோபர் 25 ஆம் நாள் துவக்கியது.

சென்னை கவர்னர் ஆவ்லக்கின் (A.E.Havlock) திருநெல்வேலி வருகைக்காக விழா நடத்த வசூலித்த தொகையில் எஞ்சியதைக் கொண்டு திருநெல்வேலி பொது நூலகச்சங்கம் உருவாக்கப்பட்டது. இந்நூலகம் பின்னாளில் பெருவளர்ச்சி பெற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உரியதாயிற்று.

சேலம் மாவட்டம் துளசம்பட்டி கூட்டுறவுச் சங்கத்தினரால் துளசம்பட்டி கிராமிய நூலகப்பணி 1931 செப்டம்பர் 27 இல் தொடங்கி வைக்கப்பட்டது. பின்னர் இதன் கிளைகள் ஓமலூர், மேச்சேரி, தாரமங்கலம், சின்னம்பட்டி ஆகியவிடங்களில் விரிவுபடுத்தப்பட்டது. படிப்பறிவு இல்லாதவர்களுக்காக இரவு நேரங்களில் இராமாயணம், பாகவதம், பக்தவிஜயம் போன்ற நூல்கள் படித்துக் காட்டப்பெற்றன.

நூலகப்பணியின் வளர்ச்சி காரணமாக முதியோர்களும் கல்வி கற்க வேண்டும் என்ற எண்ணம் எழத்தொடங்கியது. இந்நோக்கின் காரணமாகத்தான் ஓய்வுநேரப் பள்ளிகள், முதியோர் கல்வி நிலையங்களில் சிறிய அளவிலான நூலகங்கள் இணைக்கப்பெற்றன.

மக்களுக்குத் தங்களது இருப்பிடத்திலேயே நூலகப்பயன் கிட்டியது. இம்முறையில் 1942-ஆம் ஆண்டில் 13,000 நூலகங்கள் இருந்ததாகத் தெரிகின்றது.[100]

இந்திய விடுதலைக் காலத்தில் நூலகம்

1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாள் இந்தியா விடுதலை அடைந்த பின்னர் மக்களாட்சி மலர்ந்தது. மக்கள் அனைவருக்கும் உரிமைகள் பல கிடைத்ததுடன் பல கடமைகளும் தோன்றின. மக்கள் ஒவ்வொருவரும் கல்வி அறிவு பெறவேண்டிய கட்டாயத்தேவை ஏற்பட்டது. பல வகையான கல்வித் திட்டங்களுடன் மக்களுக்கான வாழ்வியல், அறிவியல் கல்வியையும் அளிக்க வேண்டியதாயிற்று. இதற்காக நாடு தழுவிய நூலக இயக்கம் - நூலகக் கல்வி இயக்கம் தோற்றுவிக்கப் பெற்றது.

விடுதலைக் காலக்கட்டத்தில் நூலக இயக்கம் செயல்பட்ட முறையை 1. நன்முறை முயற்சிகள், 2. நூலகச் சட்ட முயற்சிகள், 3. ஆதரவுச் சட்ட முயற்சிகள், 4. பல்கலைக்கழக முயற்சிகள், 5. நிறுவன முயற்சிகள், 6. ஆராய்ச்சி முயற்சிகள், 7. அரசு முயற்சிகள் என ஏழு நிலைகளில் பகுத்துரைப்பர்.[101]

தற்போது எல்லா மாநிலங்களிலும் மாவட்ட மைய நூலகங்களையும் ஊரக நூலகங்களையும் பலப்படுத்த வேண்டிய முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டில் 1972 ஆகஸ்டு முதல் நூலகத்துறை தனித் துறையாக்கப்பட்டு நூலகப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

பொதுநிலையில், நூலகம் என்பது 'எல்லாரும் நூல்களைப் பயன்படுத்தத்தக்க அளவில் அமைந்த மையம்' என்ற நிலை சுமார் 350 ஆண்டுகளுக்கு முன்பு சில மேலைநாடுகளில் தோன்றியது. இந்நிலை, நம் நாட்டில் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியுள்ளது. அதற்கு முன்னர், அவ்வப்போது இருந்த ஆட்சி அமைப்புகளுக்கேற்பவே நூலக அமைப்புகளும் இருந்தன என்பதை வரலாறு சுட்டுகின்றது. இந்திய நூலக வரலாற்றில் சங்க காலம், சமய காலம், இசுலாமியர் காலம், ஆங்கிலேயர் காலம், இந்திய விடுதலைக் காலம் எனப் பிரித்துக் காணுமிடத்துப் பல செய்திகள் ஆய்வுக்குரியனவாகின்றன. மேற்குறித்த செய்திகள் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி நிலைகளை ஆராய்வதற்கு இத்தகைய நூலக வரலாறுகள் பின்புலங்களாக அமைகின்றன.

மேற்கோள் சான்றுகள்

1. திருவாசகம், 11:23.
2. இரா.இளங்குமரன், தேவநேயப்பாவாணரின் சொல்லாய்வுகள், பக். 107.
3. பெருங்கதை, 3:1:120-121.
4. பூ.சுப்பிரமணியம், சுவடியியல், பக். 1-8.
5. Oxford English Dictionary, (2nd Ed.), Vol. IX, p. 344.
6. தொல்காப்பியம், 9:88.
7. சிலப்பதிகாரம், 15:58.
8. திருவிளையாடல் புராணம்-கிழியறுத்த. 11.
9. பூ.சுப்பிரமணியம், சுவடியியல், பக். 12.
10. தமிழ்விடுதூது, 3.
11. நன்னூல், 15.
12. மேலது, 53.
13. பெரியபுராணம், தொகுதி 4, பக். 16.
14. தொல்காப்பியம், சிறப்புப் பாயிரம்.
15. நன்னூல்-54.
16. இரா.இளங்குமரன், தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வுகள், பக். 107.
17. கம்பராமாயணம்-பாலகாண்டம், காப்புப் பாடல் 32.
18. திருவிளையாடல் புராணம், கலைமகள் வணக்கம்.
19. பெருங்கதை, 118.
20. மேலது, 1, 36:225, 6.
21. தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon), பக்.2326.
22. தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், 164.
23. நன்னூல், 24.
24. மேலது, 25.
25. தொல்காப்பியம், பொருளதிகாரம், 649.
26. வே.இரா.மாதவன், சுவடிப் பதிப்பியல், பக். 54-68.
27. வே.தில்லைநாயகம், இந்திய நூலக இயக்கம், பக். 70.
28. Encyclopaedia Britannica, 11th Edition, Vol. XVIII, pp. 618-619.
29. பூ.சுப்பிரமணியம், சுவடியியல், பக். 27.
30. எஸ்.வையாபுரிப்பிள்ளை, இலக்கிய உதயம், பக். 18-19.

31. Encyclopaedia Britannica, 11th Edition, Vol. XVIII, pp. 618-19.

32. மூதுரை, 2.

33. South Indian Inscription, Vol. 2, part 3, No. 65.

34. பெருங்கதை, 140

35. சீவகசிந்தாமணி, 369.

36. வில்லிபாரதம், சூதுபோர். 51.

37. தளவாய்புரச் செப்பேடுகள், பத்தி 7.

38. பாண்டியர் செப்பேடு பத்து, பக். 127.

39. கே.கே.பிள்ளை, தென்னிந்திய வரலாறு, முதற்பாகம், பக். 26.

40. இரா.இளங்குமரன், சுவடிக்கலை, பக். 1.

41. உ.வே.சாமிநாதையர், என் சரித்திரம், பக். 873.

42. கலித்தொகை, 94:42; சிலப்பதிகாரம், 13:76.

43. சிலப்பதிகாரம், 13:93-95.

44. சீவகசிந்தாமணி, 1653, 2147.

45. நன்னூல், 53.

46. இளங்குமரன், சுவடிக்கலை, பக். 10.

47. மேலது, பக். 10.

48. வாக்குண்டாம். 13.

49. நாலடியார், 253.

50. பூ.சுப்பிரமணியம், சுவடியியல், பக்.36.

51. நல்லுரைக்கோவை, பாகம் I, *பக். 143.*

52. பெரியபுராணம், மெய்ப்பொருள் நாயனார் புராணம், 7.

53. உ.வே.சாமிநாதையர், என் சரித்திரம், பக். 81-82.

54. ப.பெருமாள், 'சுவடி நூலகங்களும் பாதுகாப்பு முறைகளும்', JTMSSML, Vol. XLIII, *பக். 4.*

55. M.Muller, Historyof Ancient Sanskrit Literature, p. 513.

56. "After Alexander's invasion of India in 327 B.C., Nearchus, the ambassador of Alexander the Great, was in Punjab for some years. He states that Indians used to make paper by beating cotton fabrics. Magasthenes represented Saleucus Nicator from 306-311 B.C. in Chandragupta's court at Palimbotra (Patna). In his report on his mission, he indicated that Indians used paper for writing horoscopes and almanacs. This shows that the paper was quite

durable, because those documents were to be preserved for a long period". P.G.Gosavi, Did India Invent Paper?, Tappi Journal of Atlanta, Feb. 1984, p. 42.

57. வே.தில்லைநாயகம், இந்திய நூலக இயக்கம், பக். 295.
58. A.K.Mukherjee, Librarianship, p. 73.
59. Ibid, p. 73.
60. A.K. Mukerjee, Librarianship, p. 75.
61. ப. பெருமாள், 'சுவடி நூலகங்களும் பாதுகாப்பு முறைகளும்', JTMSSML, Vol. VLIII, p. 7.
62. A.K. Mukherjee, Librarianship, p . 76.
63. A.K. Mukherjee, Librarianship, p. 81.
64. "In 1752, the curators of the Cotton Library petitioned parliament for the erection of a suitable building to insure its future availability to the public. In 1753, parliament approved the purchase of the famous manuscripts collections of Robert and Edward Harlay on condition that it be united with Cotton Library. Sir Hans Sloane offered in 1748 his house, museum of art and natural history and library of 40,000 printed books and 3,500 manuscripts to the public; and the Sloane, Cotton and Harlay collections were united to form the British Museum by an Act of Parliament". - A.K.Mukherjee, Librarianship, pp.121-122.
65. நாலடியார், 318.
66. வே.தில்லைநாயகம், இந்திய நூலக இயக்கம், பக். 138.
67. மேலது, பக். 164.
68. மேலது, பக். 184.
69. மேலது, பக். 186.
70. மேலது, பக். 188.
71. மேலது, பக். 185.
72. மணிமேகலை, 25:139.
73. மேலது, 14:17-19.
74. மேலது, 13:105-108.
75. வே. தில்லைநாயகம், இந்திய நூலக இயக்கம், பக். 199-200.
76. மேலது, பக். 202-203.
77. மேலது, பக். 208-209.

78. சி.எம்.கணபதி, தமிழக வரலாறும் பண்பாடும், பக். 56.
79. மேலது, பக். 67-69; G.Gurumurthy, Education in South India, p. 162.
80. சி.எம். கணபதி, தமிழக வரலாறும் பண்பாடும், பக். 59-60.
81. ARE. Sl. No. 168-169, 1961-62.
82. சி.எம்.கணபதி, தமிழக வரலாறும் பண்பாடும், பக். 63.
83. சி.எம்.கணபதி, தமிழக வரலாறும் பண்பாடும், பக். 65.
84. வே.தில்லைநாயகம், இந்திய நூலக இயக்கம், பக். 221.
85. சி.எம். கணபதி, தமிழக வரலாறும் பண்பாடும், பக். 55.
86. Epigraphica Indica, Vol. XXV, No. 34, p. 324.
87. S.Gurumurthy, Education in South India, p. 164.
88. வே. தில்லைநாயகம், இந்திய நூலக இயக்கம், பக். 223.
89. S.Gurumurthy, Education in South India, p. 164.
90. வே.தில்லைநாயகம், இந்திய நூலக இயக்கம், பக். 224.
91. வே.தில்லைநாயகம், இந்திய நூலக இயக்கம், பக். 232-233.
92. A.K.Mukherjee, Librarianship, p. 100.
93. வே.தில்லைநாயகம், இந்திய நூலக இயக்கம், பக். 236-37.
94. Abdul Aziz, The Imperial Library of the Mughuls, p. 45.
95. A.K.Mukherjee, Librarianship, p. 101.
96. வே. தில்லைநாயகம், இந்திய நூலக இயக்கம், பக். 242.
97. வே. தில்லைநாயகம், இந்திய நூலக இயக்கம், பக். 267.
98. ஆர்.இராமசாமி, தென்னிந்திய நூலக இயக்கம், பக். 103.
99. மேலது, பக். 104.
100. வே.தில்லைநாயகம், இந்திய நூலக இயக்கம், பக். 292.
101. வே.தில்லைநாயகம், இந்திய நூலக இயக்கம், பக். 315.

2. சரசுவதி மகால் நூலகம் - தோற்றமும் வளர்ச்சியும்

வரலாற்றுப் பெருமை கொண்ட தஞ்சை சரசுவதிமகால் நூலகம் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான பழமை வாய்ந்ததாகும். உலகின் பழமை வாய்ந்த நூலகங்களில் இந்நூலகம் இரண்டாவது இடத்தினைப் பெற்றுள்ளது. வாடிகன் நூலகம் முதலாவதாகப் போற்றப்பெறுகின்றது. இந்திய நாட்டில் தோன்றிய நூலகங்களுக்கெல்லாம் தொன்மையானது தஞ்சை சரசுவதிமகால் நூலகம் என்பது இவண் குறிப்பிடத்தக்கது. முத்தரையர் காலத்திலேயே காலூன்றிய தஞ்சையில் ஒன்பதாம் நூற்றாண்டினனான விசயாலயச்சோழன் புதல்வன் ஆதித்த சோழன் காலத்தில் நிலைபெற்று, பராந்தகச் சோழன் காலத்தில் வளர்ந்து, பல கிளைகளோடு விளங்கியது என்பதை வரலாறு காட்டுகின்றது. தஞ்சையில் கி.பி. 850 முதல் 1535 வரையில் ஆட்சிசெய்த பிற்காலச் சோழர்களும், கி.பி. 1535 முதல் 1673 வரை ஆட்சிசெய்த தஞ்சை நாயக்க மன்னர்களும், கி.பி. 1676 முதல் ஆட்சிப் பொறுப்பேற்ற தஞ்சை மராட்டிய மன்னர்களும் இந்நூலக வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றுள்ளனர்.

தொன்னூலகம்

இந்திய நாட்டை ஆங்கிலேயர் ஆக்கிரமிக்கும் முன்பு இருந்த மன்னர் காலத்து நூலகங்களைத் தொன்னூலகங்கள் என்பர். காகிதமும் அச்செழுத்தும் தோன்றாத காலத்துக்கு முன்பிருந்து பதினெட்டாம் நூற்றாண்டுக்கு முன் விளங்கிய, நூலகங்களை யெல்லாம் தொன்னூலகங்கள் என்பர். மேலும், ஓலைச் சுவடிகளைக் கொண்ட நூலகம் தொன்னூலகம் எனப்பெறும். ஓலைச்சுவடிகளில் உள்ளனவற்றைப் பழமையான, கையால் செய்த காகிதங்களில் எழுதி வைத்தவையும் இந்தத் தொன்னூலகங்களில் இணைக்கப்பெற்றுள்ளன. இவ்வாறு, கைப்பிரதிகள் பல கொண்ட தஞ்சை சரசுவதிமகால் நூலகம் ஒரு தொன்னூலகமாகும்.

கலாசார ஒற்றுமைக்கும் கல்வி வளர்ச்சிக்கும் உரிய சிறப்பான படைப்புக்கள் பலவற்றை ஆயிரம் ஆண்டுக்கால எல்லையில்

தொடர்ந்து உருவாக்கிப் பாதுகாத்து வந்துள்ள தனிப் பெருமையைப் பெற்றுள்ள தொன்னூலகம் இந்நூலகம் ஒன்றேயாகும்.

சரசுவதி பண்டாரகம்

நமக்குக் கிடைத்துள்ள கல்வெட்டு ஆதாரங்களின்படி பண்டைக்கால நூலகங்கள் 'சரசுவதிபண்டாரகம்', 'புத்தகப் பண்டாரம்'[1] என்றும், இந்நூலகங்களில் பணிபுரிந்தோர் 'சரசுவதி பண்டாரிகள்' என்றும் அழைக்கப் பெற்றுள்ளனர். பண்டாரகம் அல்லது 'பண்டாரம்' என்ற சொல் 'கருவூலம்', 'பொக்கிஷம்' என்ற பொருள் கொண்டதாகும். சரசுவதிபண்டாரம் என்பதற்குக் கல்விக் கடவுளான கலைமகளின் உறைவிடம் அல்லது சுவடிகளின் பொக்கிஷம் எனப் பெயர்க்காரணம் குறிப்பிடப்படுகின்றது. புத்தகப்பண்டாரம் என்பது இன்று வழக்கிலுள்ள நூலகம் மற்றும் நூல்நிலையங்கள் என்ற பொருள்படவும் உள்ளது.[2] தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திலுள்ள வடமொழி மற்றும் தெலுங்குச் சுவடிகளில் இந்நூலகம் ஸத்பாரதி ஸத்மம் என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.[3]

சோழர்கால சரசுவதி பண்டாரம்

தஞ்சை சரசுவதி பண்டாரம் கி.பி. 1122 முதல் இருந்ததாக ஜே.எம்.சோமசுந்தரம் குறிப்பிடுகின்றார்.[4] சோழர் காலத்தில் தமிழகக் கோயில்களைச் சார்ந்தே சரசுவதி பண்டாரங்கள் அமைந்திருந்ததைக் கல்வெட்டுக்களால் அறியமுடிகின்றது. கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் இந்நூலகம் தஞ்சையில் விளங்கியது என்று சோமலெ குறிப்பிடுகின்றார்.[5] இந்நூலகம் 14 ஆம் நூற்றாண்டில் சிறந்து விளங்கியது என்று வரலாற்றறிஞர் விருத்தகிரீசன் கூறுகின்றார்.[6] இந்நூலகம் தஞ்சையில் நாயக்க மன்னர்களின் ஆட்சி துவங்குவதற்கு முன்பு இருந்ததாக கே.ஆர்.சுப்பிரமணியம் குறிப்பிடுகின்றார்.[7]

சோழர் காலப் பழமை கொண்ட இந்நூலகத்தினை, 'தஞ்சை மகாராசா சரபோசி சரசுவதிமகால் நூலகம்' என்று 1918 இல் அறக்கட்டளை நிறுவனமாக்கி நிர்வாகத்தினை ஏற்றுக்கொண்ட நிர்வாகக் குழு, இந்நூலகத்தினைப் போற்றி வளர்த்த இரண்டாம் சரபோஜி மன்னரின் நினைவாக அவருடைய பெயரை இந்நூலகத்திற்குச் சூட்டியது. மகால் என்று அழைக்கும் வழக்கம் மராட்டிய மன்னர்களின் காலத்தில் ஏற்பட்டதாகும்.[8] மேலும்,

இந்நூலகத்தின் சுவடிகளுக்கு அட்டவணை செய்த ஏ.சி.பர்னல், பி.பி.எஸ்.சாஸ்திரி ஆகியோர் இந்நூலகத்தில் நாயக்கரின் காலத்திற்கு முற்பட்ட மிகவும் பழமை வாய்ந்த சுவடிகள் பல உள்ளன என்று குறிப்பிடுகின்றனர்.

தஞ்சைச் சோழ மன்னர்கள்

தஞ்சை நகருக்கு கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதிக்காலம் முதல் வரலாறு உள்ளது. நமக்குக் கிடைத்திருக்கும் கல்வெட்டுச் சான்றுகள் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் உள்ளதாகத் தெரிவிக்கின்றன. இக்காலகட்டத்தில் தஞ்சையை ஆட்சி புரிந்தவர்கள் முத்தரையர்கள் ஆவர்.[9] கி.பி. 846 முதல் பிற்காலச் சோழர்கள் ஆட்சிபுரிந்தனர். இதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. கி.பி. 846 இல் விசயாலய சோழனின் ஆட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து கி.பி. 1279 வரை தஞ்சையில் சோழ மன்னர்களே ஆட்சிபுரிந்தனர்.[10] கி.பி. 1256 இல் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்து வந்த மூன்றாம் இராஜராஜ சோழன் ஆட்சிக் காலத்தில் பாண்டியர்கள் படையெடுத்து தஞ்சையைத் தாக்கினர். பின்னர், மூன்றாம் இராஜேந்திரன் ஆந்திரமாவட்டம் நெல்லூர் வரையில் ஆட்சி செய்தான். இவனது ஆட்சிக்காலம் கி.பி. 1279 வரையில் நீடித்தது. இக்காலத்தில்தான் கன்னட மன்னரான ஒய்சால போசளர் உறவு தஞ்சைக்கு ஏற்பட்டது. ஒய்சாலரின் உதவியாலேயே சோழராட்சி தஞ்சையில் நிலைத்தது.[11] கி.பி. 1279 முதல் கி.பி. 1535 வரையில் தஞ்சைச் சோழர் வரலாறு முறையாக எழுதப்படவில்லை என்று வரலாற்றாளர்கள் கருதுகின்றனர்.

ஒய்சாள போசளர் ஆதிக்கம்

கி.பி.1427 இல் சோழநாடு காவிரியின் வடபுறம் இராசராச வளநாடு என்றும், காவிரிக்குத் தென்புறம் இராசகம்பிர வளநாடு என்றும் விளங்கியது.[12] கி.பி. 1429 இல் தஞ்சை ஒய்சால போசளர் ஆட்சியாதிக்கம் பெற்றிருந்தனர். அப்போது தஞ்சையை மல்லிகார்ச்சுனன் என்ற போசள மன்னன் சோழர்களின் உறவுடன் ஆதிக்கம் செலுத்தினான். இக்கால கட்டத்தில் விஜயநகரில் பிரதாப தேவராயர் ஆட்சி நடைபெற்றது.[13] கி.பி. 1482 இல் சோழ நாராயணனும் 1496-இல் கோனேட்டிராசனும், பின்னர் கி.பி. 1535 இல் சோழபாலமகிபதி என்பவரும் வீரசேகர சோழனும் ஆட்சி புரிந்தனர். பின்னர் விசயநகர நாயக்க மன்னன் நரசா நாயக்கன் வீரசேகர சோழனைத் தோற்கடித்து தஞ்சையைவென்று விசயநகர

மன்னருக்குத் திறைகட்டுமாறு செய்தான்.[14]

ஒய்சால போசளர் ஆட்சிக்காலத்தில் தஞ்சை சரசுவதி நூலகத்தில் கன்னடமொழிச் சுவடிகள் சில இடம்பெற்றன எனத் தெரிகிறது.

சோழர்காலத் தொகுப்புக்கள்

கி.பி. 871 முதல் 907 வரையில் தஞ்சையில் ஆதித்தசோழன் ஆட்சி புரிந்தான். இவன் காலத்தில் தஞ்சையில் வேதநெறி சிறப்பாக இருந்தது. பிரபாகரரின் 'மீமாம்சா' நூல்களின் ஆய்வுக்காக இவன் அறக்கட்டளை ஏற்படுத்தினான்.[15] இம்மன்னன் காலத்திய மீமாம்சா நூல்களின் தொகுப்பு சரசுவதி நூலகத்தில் இடம்பெற்றிருந்தன.[16]

பராந்தகச் சோழன்

பராந்தகச் சோழன் தஞ்சையில் ஆட்சிபுரிந்த காலம் கி.பி. 907-952 ஆகும். இக்காலத்தில் மாதவர் என்ற அந்தணர் 'ருக்வேத பாஷ்யம்' என்ற நூலினை எழுதினார். இந்நூலில் பராந்தகனை 'ஜகதேகவீரன்' என்று குறிப்பிடுகின்றார். இந்த ஓலைச்சுவடி கிரந்த எழுத்தில் நல்லநிலையில் இந்நூலகத்தில் உள்ளது.[17] இதன் மூலம் பராந்தகன் ஆட்சிக்காலத்தில் சரசுவதி நூலகத்தில் வேதநூல்கள் பல சேர்க்கப்பட்டன என்பது தெளிவாகின்றது. திருவொற்றியூர் கோயில் கல்வெட்டுக்களின் மூலம், இவன் காலத்தில் தேவாரம், திருவெம்பாவைப் பாடல்களைக் கோயில்களில் பாட அறக்கட்டளை ஏற்படுத்தியிருந்தான் என அறிய முடிகின்றது.

இராஜராஜன்

கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் தர்மகீர்த்தி என்பவரால் வடமொழி இலக்கண நூலான 'ரூபாவதாரம்' எழுதப்பட்டது. இது சோழ மன்னர்கள் காலத்தில் படியெடுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டது.[18] இந்நூல் சுவடி மிகவும் பழமை வாய்ந்தது. யாப்பருங்கலக் காரிகையின் ஆசிரியர், ரூபாவதாரத்திற்கு நீதகச் சுலோகமே போலவும் என்று குறிப்பிடுவதாகவும் கூறப்படுகின்றது.[19] கி.பி. 970-985 வரையில் தஞ்சையில் ஆட்சிபுரிந்தவன் உத்தமசோழன். இவன் காலத்தில்தான் கம்பர் இராமாயணக் காவியத்தினை இயற்றினார். பழமையான இராமாயணச் சுவடிகள் பல இந்நூலகத்தில் உள்ளன. கி.பி. 985-1014 வரை ஆட்சிபுரிந்த இராஜராஜன் தஞ்சையில் மகுடாகமம் என்ற ஆகம நூலின்படி பெரிய கோயிலைக் கட்டினான். இந்நூல் சுவடி கிரந்த எழுத்தில் இந்நூலகத்தில் உள்ளது.[20]

இராஜராஜன் காலத்திய புலவர் கருவூர்த்தேவரின் இசைப் பாடல்கள் சைவத் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. இவன் அவைக்களத்தில் இருந்த வடமொழிப் புலவர் சவர்ணன் நாரண பட்டாதித்தன் எழுதிய வடமொழி நூல் இராஜராஜ விஜயம் ஆகும். வரலாற்றுச் சிறப்பு கொண்ட இந்நூல் இப்பொழுது கிடைக்கவில்லை.[21] இராஜ ராஜேஸ்வரம் என்ற தமிழ் நாடகம் அரண்மனையில் நடித்துக் காட்டப் பட்டது.[22] இச்சுவடியும் நமக்குக் கிடைக்காமல் போயிற்று. இதன் மூலம் இராசராசனின் நாடகக் கலையார்வத்தினை அறியமுடிகின்றது.

முதலாம் இராஜேந்திரன்

கி.பி. 1012-1044 இல் முதலாம் இராஜேந்திரன் ஆட்சி செய்தான். இவன் தமிழ், வடமொழி ஆகியவற்றில் மிகவும் புலமை பெற்றவன். சர்வசிவ பண்டிதர் என்ற வடமொழிப் புலவரிடம் பாடம்பயின்ற இம்மன்னன் இப்பண்டிதருக்கு ஆண்டு ஒன்றுக்கு 2000 கலம் நெல் வருவாயுள்ள நிலத்தினை ஆசாரியபோகமாக அளித்துள்ளான்.[23] இம்மன்னன் ஆட்சிக்காலத்தில் கல்விவளர்ச்சி சிறப்புற்றிருந்து. இம்மன்னன் அறக்கட்டளை ஏற்படுத்தி மீமாம்சை வேதத்திற்கு 20 பகுதியாகவும், சாஸ்திரம், விருத்தி, பாணிணீய வியாகரணம், அலங்காரம் முதலிய நூல்களை ஆய்வு செய்யவும், அவற்றைத் தொகுக்கவும், பயிற்றுவிக்கவும் செய்தான்.[24] இவர்கள் காலத்தைச் சேர்ந்த தமிழ்ச் சுவடிகள் அனைத்தும் இப்பொழுது கிடைக்கா விட்டாலும் ஒரு சில தமிழ்ச் சுவடிகளின் தொகுப்புக்கள் சோழர்கள் காலத்தவையாகவே கருதப்படுகின்றன என்பர்.[25]

முதலாம் இராஜேந்திரன் காலத்து அவைக்களப் புலவர் திரிலோசன சிவாச்சாரியார், சித்தாந்த சாராவளி என்னும் வடமொழி நூலினை இயற்றினார். இச்சுவடி இப்பொழுதும் இந்நூலகத்தில் உள்ளது.[26] இம்மன்னன் கங்கை வரை படையெடுத்து வெற்றி பெற்று வந்தபோது அங்கிருந்த புகழ்பெற்ற சைவச்சாரியர்களான ஈசான சிவபண்டிதர், சர்வசிவ பண்டிதர் ஆகியோரைச் சைவசமய வளர்ச்சிக்காகத் தஞ்சைக்கு அழைத்து வந்தான் என்று சித்தாந்த சாராவளி உரை குறிப்பிடுகின்றது.[27] இந்நூலகத்தில் உள்ள வடமொழிச் சுவடிகளில் பல இவன் ஆட்சிக் காலத்தில் தொகுக்கப்பட்டதாக அறிய வாய்ப்புள்ளது. இம்மன்னன் காலத்தில் கல்வெட்டுக்களைப் புதுப்பித்தல், படியெடுத்தல், அவற்றினைப் பனையோலைகளில் எழுதுவித்து

மீண்டும் கல்லில் பொறித்தல் போன்ற செயல்கள் செய்யப் பெற்றதைச் சாசனக் குறிப்புக்களால் அறிகின்றோம்.[28]

முதலாம் குலோத்துங்கன்

கி.பி. 1071-1120 வரை தஞ்சையை முதலாம் குலோத்துங்கன் ஆட்சிபுரிந்தான். இவன் ஆட்சிக்காலத்தில் தஞ்சையில் கல்விவளம் பெற்றது. இவன் தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகியவற்றினை நன்கறிந்தவன். இவன் ஆட்சிக்காலத்தில் சரசுவதி பண்டாரத்தில் தமிழ், வடமொழி மற்றும் தெலுங்குமொழிச் சுவடிகள் இடம் பெற்றதை அறியமுடிகின்றது.

ஆந்திர நாட்டில் ஆட்சிசெய்த பெத்தப்பிச் சோழ மரபில் வந்த நன்னசோழன் தெலுங்கு மொழியில் எழுதிய குமாரசம்பவம் என்னும் காவியச்சுவடி இவன் ஆட்சிக்காலத்தில் சேர்க்கப் பட்டதாகும். நன்னயப்பட்டர் என்ற தெலுங்கு மொழிக் கவிஞர் இயற்றிய மகாபாரதம் என்ற காவியம் இவன் காலத்தில் எழுதப்பட்டதாகும்.

சாளுக்கிய மன்னன் இரண்டாம் ஜயசிம்மனுக்கு ஜயசேனாபதி என்ற பெயரும் உண்டு. இவன் எழுதிய நிருத்திய ரத்னாவளி என்ற நாட்டிய நூல் முதற்குலோத்துங்கன் ஆட்சிக்காலத்தில் இயற்றப்பட்ட தெலுங்கு மொழி நூலாகும். இச்சுவடி சரசுவதிமகால் நூலகத்தில் உள்ளது. இந்நூலில் 108 கரணங்களைப் பற்றிச் சிறப்பாக விவரிக்கப் படுகின்றது. இம்மன்னன் தமிழ் மொழியில் இசையாராய்ச்சி நூல் ஒன்றினை இயற்றித் தமது அவையில் இசைப் புலவர்களுடன் அந்நூலினைப் பற்றித் திறனாய்வு செய்ததாகக் கலிங்கத்துப்பரணி மூலம் அறியமுடிகின்றது.[29]

இம்மன்னன் வாழ்க்கை வரலாற்றினை இவரின் அவைக்களப் புலவர் நாரணபட்டாதித்தன் என்பவர் 'குலோத்துங்க சோழ சரிதை' என்ற நூலாக எழுதினார். இந்நூல் இப்போது கிடைக்கவில்லை.[30] மன்னனின் வேண்டுகோளின்படி சிற்றரசன் கண்டமாதவன், அமுதசாகரர் என்ற புலவரைக் கொண்டு 'யாப்பருங்கலக்காரிகை' என்ற நூலினை இயற்றச் செய்தான். அவைக்களப்புலவர் ஜெயங்கொண்டார் மன்னனின் கலிங்க வெற்றியைப் போற்றி 'கலிங்கத்துப்பரணி' என்ற நூலினை இயற்றினார். நெற்குன்றம் கிழார், களப்பாளராயர் திருப்புகலூர் அந்தாதியைப் பாடினார். வீரைப்பரசமயகோளரி என்ற புலவர் பெரும்புலியூர் நாடகம்,

கன்னிவனப்புராணம் ஆகிய நூல்களை இயற்றினார். இவற்றுள் யாப்பருங்கலக்காரிகை, கலிங்கத்துப்பரணி ஆகிய சுவடிகள் மட்டுமே இப்போது இந்நூலகத்தில் உள்ளன.

விக்ரமசோழன்

கி.பி. *1118* முதல் *1135* வரை தஞ்சையை விக்ரம சோழன் ஆட்சி புரிந்தான். இவன் காலத்தில் புலவர் ஒட்டக்கூத்தர் இம்மன்னன் மீது விக்ரமசோழன் உலா, விக்ரமசோழன் பரணி ஆகிய நூல்களை இயற்றினார். இரண்டாம் குலோத்துங்கன் அவையிலும் ஒட்டக்கூத்தர் வீற்றிருந்தார். இவர் இரண்டாம் குலோத்துங்கன் மீது குலோத்துங்கன் உலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் ஆகிய இரு நூல்களை இயற்றினார். இம்மன்னன் காலத்துப் புலவரான தண்டி, தண்டியலங்காரம் என்ற அலங்கார நூலினை எழுதினார். இம்மன்னன் அசுவசாஸ்திரம், தனுஸ்சாஸ்திரம், நாட்டிய சாஸ்திரம் ஆகிய நூல்களை நன்கு அறிந்தவன் என்பதால் இவன் காலத்தில்தான் இந்நூல்கள் இந்நூலகத்தில் சேர்க்கப்பட்டிருக்கலாம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இரண்டாம் இராஜராஜன்

இரண்டாம் குலோத்துங்கனுக்குப் பின்னர் தஞ்சையை ஆண்ட இரண்டாம் இராஜராஜன் தமிழ், வடமொழி இரண்டிலும் புலமை மிக்கவன். ஒட்டக்கூத்தர் இம்மன்னன் மீது உலா பாடியுள்ளார். இம்மன்னன் அவைக்களத்திலிருந்த வடமொழிப்புலவர் கேசவஸ்வாமி, மன்னனின் வேண்டுகோளின்படி நானார்த்தார்ணவ சம்சேஷபம் என்ற வடமொழி நிகண்டு நூலினை இயற்றினார். இந்நூல் இப்போது இந்நூலகத்தில் உள்ளது.[32] இராஜபண்டிதர், பண்டிதசோழன் என மெய்க்கீர்த்தியில் கூறப்படும் இம்மன்னன் அவைக்களத்தில்தான் தக்கயாகப்பரணி அரங்கேற்றப்பட்டது.

மூன்றாம் குலோத்துங்கன்

இரண்டாம் இராஜராஜனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தவன் மூன்றாம் குலோத்துங்கன். இவன் சைவநெறியில் சிறந்த ஈடுபாடு கொண்டவன். இம்மன்னனின் விருப்பத்திற்கு ஏற்பப் புகழ்பெற்ற சைவ ஆச்சாரியார் சீகண்ட சம்புவின் மகன் ஈசுவரசிவனார் சித்தாந்த ரத்னாகரம் என்னும் நூலினை இயற்றினார்.

இம்மன்னன் காலத்தில் தமிழ்மொழிக்கு வளம் சேர்க்கப்பட்டது. புகழ்பெற்ற அவைக்களப் புலவர் குணவீரபண்டிதர் என்பவர் நேமிநாதம், வச்சந்திமாலை, வெண்பாப்பாட்டியல் ஆகிய நூல்களை இயற்றினார். அரும்பாக்கிழான், அறநிலைவிசாகன் என்னும் புலவர் மகாபாரதத்தினைத் தமிழ்மொழியில் செய்யுள் வடிவில் எழுதினார்.[33] இம்மன்னன் காலத்தில் நன்னூல் என்னும் தமிழ்மொழிக்கு ஏற்றம் தரும் இலக்கண நூலினைக் கங்க மன்னன் சீயகங்கன் ஆதரவுடன் சைனப்புலவர் பவணந்தி முனிவர் இயற்றினார்.[34] நாயன்மார்களின் வரலாற்றினைக் கூறும் பெரியபுராணம் சேக்கிழாரால் இம்மன்னன் காலத்தில்தான் எழுதப்பட்டு அரங்கேற்றப்பட்டது. இதனைப் போன்று பல தமிழ் நூல்கள் படைக்கப்பட்டு சரசுவதி பண்டாரத்தில் சேர்க்கப் பட்டிருக்கலாம். இம்மன்னனின் ஆட்சிக்காலம் தமிழுக்கு ஏற்றம்மிக்க காலமாகும்.

மூன்றாம் இராஜராஜன்

மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக்குப்பின் மூன்றாம் இராஜராஜ சோழன் (கி.பி.1216-1256) ஆட்சிப்பொறுப்பேற்றான். இம்மன்னன் சைவ நெறி வளர்ப்பதில் மிகுந்த ஈடுபாடு கொண்டவன். இவனது ஆட்சிக் காலத்தில் திருவெண்ணைநல்லூர் மெய்கண்டதேவர் சிவஞானபோதம் என்ற சைவசித்தாந்த நூலினை இயற்றினார். இம்மன்னனின் அவைக்களப் புலவர் ருத்திரபட்டர் வரலாற்றுத் தொடர்புடைய சகநாதவிஜயம் என்ற காவியத்தை இயற்றினார். மூன்றாம் இராஜேந்திரன் ஆட்சிக்காலத்தில் திக்கண்ண சோமயாஜி என்னும் தெலுங்கு மொழிப் புலவர் நிர்வசனோத்தர ராமாயணம் என்னும் காவியத்தினை எழுதினார்.[35] இந்நூலினைச் சான்றாகக் கொண்டு பார்க்கும்போது தெலுங்குமொழியின் வளர்ச்சி சோழர் காலத்தில் தஞ்சையில் சிறப்பாக இருந்ததை அறியமுடிகின்றது.[36] இம்மன்னன் காலத்தில்தான் பொய்யாமொழிப்புலவர் தஞ்சைவாணன் கோவையையும், புகழேந்திப் புலவர் நளவெண்பாவையும் இயற்றினர். இம்மன்னனின் மரணத்திற்குப் பின் அவன் மகன் அரசுகண்டராமன் என்ற சேமப்பிள்ளை ஆட்சிப் பொறுப்பேற்றான்.[37] இவனுக்குப் பின் வீரபிரதாப சோழனும் அவனுக்குப் பின் வீரசோழன் மகன் வீரசம்பன் என்பவனும் பின்னர் 1482 இல் சோழ நாராயணனும் ஆட்சிபுரிந்தனர்.[38]

சோழ நாராயணனுக்குப்பின் கோனேட்டிராஜசோழன் என்பவன் ஆட்சிபுரிந்தான்.[39] இவனுக்குப் பின் ஆட்சிக்கு வந்தவன் மகிபதி சோழன் ஆவான்.[40] பின்னர் வீரசேகரனும் அவனைத் தொடர்ந்து உருத்திரசோழ தேவனும் ஆட்சிக்கு வந்தனர். வீரசேகரனுடன் (கி.பி. 1535) சோழராட்சி தஞ்சையில் முடிவுற்றது.[41] பின்னர் விஜயநகர நாயக்கர்கள் ஆட்சி ஏற்பட்டது. இக்காலம் வரையில் தஞ்சை சரசுவதி நூலகம் சோழர்களால் பாதுகாக்கப் பட்டது என்பது சிறப்புக்குரியதாகும்.

சோழர்களால் சரசுவதிநூலகத்தில் பாதுகாக்கப்பட்ட சுவடிகளில் கிரந்த எழுத்துச் சுவடிகள் மிகவும் முக்கியமானவை யாகும். தமிழக வரலாற்றினை அறிவதற்கு இச்சுவடிகள் உறுதுணையாக இருக்கின்றன. இதனைப் போன்றே வடமொழிச் சுவடிகளும் இன்றியமையாதனவாகக் கருதப்படுகின்றன.

நிலைபெற்ற நூலகம்

கி.பி.1218-இல் சுந்தரபாண்டியன் தஞ்சை மீது படையெடுத்து சோழர் அரண்மனையை அழித்தான். எஞ்சியவற்றை கி.பி. 1311-இல் மாலிக்காபூர் நாசம் செய்தான். தரைமட்டமான தஞ்சையில் கி.பி. 1343-இல் மாறவர்மனின் தளபதி நாராயணதொண்டமான் குடியிருப்புப் பகுதியை ஏற்படுத்தினான். அதுவே சாமந்த நாராயண சதுர்வேதி மங்கலமாகும்.[42] கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கொங்கணேஸ்வரர் ஆலயம், கரந்தை வசிட்டேசுவரர் ஆலயம், தஞ்சைப் பெரிய கோயில் ஆகியவற்றை இந்துமதத்தினைச் சார்ந்த பாண்டிய மன்னர்கள் அழிக்கவில்லை. எனவே, தெய்வக் கோயில்களும் அவற்றில் இடம்பெற்றிருந்த அறிவுக்கோயில்களான நூலகங்களும் அழிக்கப்பட வில்லை எனக் கருத வாய்ப்புகள் அதிகமாகவுள்ளன.

கி.பி. 1535க்கு முந்தைய சுவடிகள்

பின்னாளில் இந்நூலகத்திலிருந்த வடமொழி மற்றும் தெலுங்கு மொழி ஓலைச்சுவடிகளுக்குப் பட்டியல் தயாரித்த ஏ.சி.பர்னல் மற்றும் பி.பி.எஸ். சாஸ்திரிகள் சுவடிகளில் உள்ள காலக்குறிப்புக்களின் அடிப்படையில் கீழ்க்கண்டவற்றினைக் கி.பி.1535-க்கு முந்தையதாகக் குறிப்பிடுகின்றனர்.

வடமொழிச் சுவடிகள்

சுவடி எண்	சுவடியின் பெயர்	படியெடுக்கப்பட்ட காலம்
11878	குண்டலினி சத்தி	கி.பி.*1430*
12000, 12010	சிரத்தாபத்ததி	*1444*
7081	பிரம்மசூத்திர பாஷ்யம்	*1468*
18509	ஸ்மிருதி ஸாரேததாரம்	*1472*
2140	புவனேசுவரிதுதி	*1482*
5964	ஸாரஸ்வத பிரக்கரியா	*1508*
748	ருக்வேதப் பிராஹ்மணம்	*1518*
11831	உத்ஸர்ஜனோபாகரண பிரயோகம்	*1524*

தெலுங்குச் சுவடிகள்

149-151	காளஹஸ்தி மகாத்மியம்	*1449*
3-57	ஆந்திரபாகவதம்	*1455*
58-129	ஆந்திரபாரதம்	*1458*
1039-41	ஹயலக்ஷணவிலாசம்	*1465*
572	கிரீடாபிராமம்	*1450*
120	பாரதம்	*1513*

மேற்கண்டவை சோழர் காலத்தவையாகக் கருதப்படுகின்றன.[43]

தஞ்சையில் நாயக்கர்கள் ஆட்சியும் சரசுவதி நூலகமும்

மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் சந்திரசேகரனுக்கும் தஞ்சையை ஆட்சி செய்த சோழமன்னன் வீரசேகரனுக்கும் ஏற்பட்ட போரில் பாண்டிய மன்னன் கேட்டுக் கொண்டதற்கேற்ப விசயநகர மன்னன், நாகமநாயக்கரின் தலைமையின் கீழ் ஒரு படையைத் தஞ்சைக்கு அனுப்பினான்.[44]

அச்சுதராயரால் தஞ்சைக்கு அனுப்பப்பட்ட நாகமநாயக்கன் தானே ஆட்சி செலுத்த முற்பட்டான். இதையறிந்த அச்சுதராயர் விசுவநாதன் என்பவனை அனுப்பி அமைதியை நிலைநாட்டச் செய்தார். சோழ நாடும் பாண்டியநாடும் விசயநகர மன்னர் அச்சுதராயரின் ஆட்சியின்கீழ் வந்தது. பின்னர் வீரசேகரசோழன் மீண்டும் தஞ்சையின் அரசனாக அமர்த்தப்பட்டான். சில காலம் தஞ்சையில் இருந்த விசவநாதனை மதுரைக்கு அனுப்பிவிட்டு, சேவப்ப நாயக்கர் என்பவரை அச்சுதராயர் தஞ்சையின் பாதுகாவலராக நியமித்தார்.[45] பின்னர், சேவப்ப நாயக்கரே தஞ்சையின் ஆட்சிப் பொறுப்பேற்றார்.

சேவப்பநாயக்கர் (கி.பி. 1532-1561)

தஞ்சையில் சேவப்ப நாயக்கரின் ஆட்சி கி.பி. 1532-இல் ஏற்பட்டது.[46] அச்சுதராயர், சேவப்பநாயக்கரைத் தஞ்சைக்கு அனுப்பும்போது அவருடன் மதிநுட்பம் வாய்ந்த கோவிந்ததீட்சிதர் என்பவரையும் அனுப்பிவைத்தார். கோவிந்த தீட்சிதர் சோதிடம், கணிதம், வியாகரணம், வேதாந்தம் ஆகியவற்றில் சிறந்த அறிவு பெற்றவர். சேவப்ப நாயக்கர் தஞ்சையின் மன்னரானதும் கோவிந்த தீட்சிதர் அமைச்சராகவும் ராஜகுருவாகவும் நியமிக்கப்பட்டார். நாயக்கர் காலத் தஞ்சை அரண்மனை மிகவும் குறிப்பிடத்தக்கது.

கோவிந்ததீட்சிதர் வடமொழி, தெலுங்கு, தமிழ் ஆகியவற்றில் உள்ள சிறந்த இலக்கியக் கருவூலங்களைச் சரசுவதி நூலகத்தில் தொகுக்கவும் பாதுகாக்கவும் பெருமுயற்சி மேற்கொண்டார். இந்நாயக்கர் ஆட்சியில் தஞ்சை சமய வளர்ச்சியிலும், கல்வி வளர்ச்சியிலும் புகழ்பெற்று விளங்கியது. நூலகத்தில் இருந்த ஆயிரக்கணக்கான வடமொழி வேதசாஸ்திரம், புராணம், காவியம், வைத்தியச் சுவடிகளைக் கண்ணுற்ற தீட்சிதர் அவற்றினைப் பாதுகாக்கப் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். இம்மன்னர் காலத்தில் சரசுவதி நூலகம் சிறந்த வளர்ச்சியை எட்டியது.

இம்மன்னர் காலத்தில் தமிழ், வடமொழி, தெலுங்கு ஆகிய மொழிகளில் உள்ள சுவடிகளையும் பழைய சுவடிகளையும் படியெடுத்துப் பாதுகாக்கத் தேர்ந்த எழுத்தர்கள் நியமிக்கப் பட்டனர். வடமொழி, தமிழ் நூல்கள் தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டவைகளையும் இந்நூலகத்தில் காணமுடிகின்றது. இவர்கள் காலத் தெலுங்கு மொழிப் படைப்புக்கள் பாமர மக்களுக்கான இலக்கியங்களாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அச்சுதப்ப நாயக்கர் (கி.பி.1561-1614)

சேவப்ப நாயக்கருக்குப் பின் அவர் மகன் அச்சுதப்ப நாயக்கர் ஆட்சிக்கு வந்தார். இவர் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆட்சிசெய்தது குறிப்பிடத்தக்கதாகும். இவ்விரு மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட அமைதிச் சூழல் காரணமாகத் தஞ்சையில் இலக்கியம், இசை, நாட்டியம், கட்டிடக்கலை ஆகியவை வளர்ச்சி அடைந்தன. இவருக்குப்பின் இவர்தம் புதல்வர் ரகுநாதநாயக்கர் ஆட்சிக்கு வந்தார்.

இரகுநாதநாயக்கர் (கி.பி.1614-1638)

அச்சுதப்பநாயக்கருக்கும் மூர்த்தியாம்பாவுக்கும் மகனாக இரகுநாத நாயக்கர் பிறந்தார். இம்மன்னரும் பன்மொழிப் புலமை பெற்றவராக இருந்ததால் பல அரிய வடமொழி, தெலுங்கு நூல்கள் உருவாக்கவும், அவற்றினைப் பாதுகாக்கவும் துணைசெய்தார்.

இரகுநாத நாயக்கர் சங்கீதசுதா என்ற வடமொழி இசை நூலினை எழுதினார்.[47] இந்நூலுக்கு, கோவிந்ததீட்சிதர் அரிய பல இசைக் குறிப்புக்களையும் வரலாற்றுச் செய்திகளையும் தரக்கூடிய முன்னுரை ஒன்றையும் எழுதியுள்ளார். இந்நூலின் ஓலைச்சுவடி இந்நூலகத்தில் இப்போது இல்லை. பிற்காலத்தில் காகிதத்தில் படியெடுக்கப்பட்ட சுவடி மட்டும் உள்ளது.[48] இந்நூலின் மூலச் சுவடி சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ளது. இந்நூல் மெட்ராஸ் மியுசிக் அகாதமியால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

'சங்கீதா சுதாநிதி' எனப்படும் நூல் கோவிந்த தீட்சிதரின் படைப்பாக இருக்கலாம் என்று சரசுவதிமகால் தெலுங்குப் பண்டிதர் குறிப்பிடுகின்றார். கோவிந்ததீட்சிதரின் புதல்வர் யக்ஞநாராயண தீட்சிதர் ஆவார். இவர் அச்சுதப்பநாயக்கர், இரகுநாதநாயக்கர் காலத்தில் அவைக்களப் புலவராக விளங்கியவர். இவர் எழுதிய வடமொழி நூல் சாகித்யரத்னாகரம் என்பதாகும். இந்த ஓலைச்சுவடி சரசுவதிமகால் நூலகத்தினரால் அச்சிடப்பட்டுள்ளது. அந்தச் சுவடியும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

இராஜசூடாமணி தீட்சிதர் என்பவர் ருக்மணி பரிணயம்[49] என்ற வடமொழி நூலினை இயற்றினார். இச்சுவடி இந்நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு அச்சிடப் பட்டுள்ளது. யக்ஞநாராயண தீட்சிதர் இயற்றிய வடமொழி நூல் ரகுநாதவிலாசம் என்ற காவியமாகும்.[50] இந்நூலில் ரகுநாதநாயக்கரின் வரலாற்றுக் குறிப்புக்கள் பல உள்ளன. இச்சுவடியும் அச்சுருவம் பெற்றுள்ளது.

அச்சுதப்ப நாயக்கரின் மனைவி திருமலாம்பா அரசியாவார். இவர் எழுதியது 'வரதாம்பிகா பரிணயம்' என்ற வடமொழி நாடக நூலாகும்.[51] அச்சுதப்ப நாயக்கரின் அவைக்களப்புலவர் ராசநாத டிண்டிமகவி எழுதிய 'அச்சுதராயப்யுதயம்'[52] என்ற நூல் வடமொழி வரலாற்றுக் காவியமாகும். இச்சுவடி நூலகத்தில் பாதுகாக்கப் பட்டுள்ளது. மேலும், அச்சுநூலாகவும் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இரகுநாதநாயக்கர் இலக்கியத்தில் பெரும்புலமை பெற்றவர். இம்மன்னர் பாரிஜாதா பஹரணம்,[53] கஜேந்திரமோக்ஷம்,[54] ரகுநாதநாயகாப் தயமு,[55] வால்மிகி சரித்திரம்,[56] சாவித்ரீ கல்யாணம்,[57] ரகுநாதராமாயணமு,[58] நளசரித்திரம்[59] போன்ற காவியங்களை இயற்றினார். இதில் யக்ஷகானம் தவிர மற்ற சுவடிகள் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.[60]

இரகுநாத நாயக்கரின் அவைக்களப் பெண்பாற்புலவர் இராம-பத்திராம்பா. இவர் வடமொழி, தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் புலமைமிக்கவர். இவர் 'ரகுநாதநாயகாப்யுதயமு'[61] என்ற வடமொழிக் காவியத்தினை இயற்றினார்.

இம்மன்னன் அவைக்களத்தில் சுகவாணி எனும் பட்டம் பெற்றவள் மதுரவாணியாவாள். இவர் வடமொழியில் இராமாயணம், நைஷதம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். சேமகூரா வேங்கடகவி என்ற அவைக்களப்புலவர் இரகுநாத மன்னனைப் பற்றி விஜயவிலாசம்[62] என்ற தெலுங்குமொழிக் காவியத்தினை வரலாற்றுச் சிறப்புடன் புனைந்தார். ஓலைச் சுவடியாகவுள்ள இந்நூல் இந்நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது. இப்புலவர் எழுதிய மற்றொரு காவியம் சாரங்கதாரா[63] என்ற வரலாற்றுக் காவியமாகும். இத்தெலுங்குச் சுவடி பாதுகாக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது.

இம்மன்னரின் காலத்தில் சிறப்புடன் விளங்கிய புலவர்களில் கிருஷ்ணாத்வரியும் ஒருவர். இவர் தெலுங்குமொழியில் நைஷத பாரிஜாதீயம்[64] என்ற சிலேடை காவியத்தினையும் ரகுநாத பூபாலியம் மற்றும் பல வடமொழி இலக்கியங்களையும் இயற்றியுள்ளார். இவ்வடமொழிச்சுவடி இப்போது சரசுவதி மகால் நூலகத்தில் இல்லை. இவரின் இரண்டு நூல்களுமே அச்சிடப் பட்டுள்ளன.

இரகுநாத நாயக்கர் காலத்தில் வடமொழி, தெலுங்கு மொழியில் புலமை பெற்றுத் திகழ்ந்தவர் நாராயண தீர்த்தகுரு ஆவார். இவர் வடமொழியில் கிருஷ்ணலீலா தரங்கிணி[65] என்ற அரிய படைப்பை இயற்றினார். பாரிஜாதா-பஹரணம்[66] என்ற தெலுங்கு நாடக நூலும் இவரால் இயற்றப்பட்டு இப்போது அச்சிடப்பட்டுள்ளது.

இம்மன்னர் தஞ்சைக்கு அருகிலுள்ள மெலட்டூரில் தங்கியிருந்த போது 'தரங்கிணி' என்ற புதிய அமைப்பில் பல தெலுங்கு இசைப்

பாடல்களை உருவாக்கினார். இங்கு பாகவதர்கள் கூட்டமாகக் கூடிப் பாடி மகிழ்ந்தனர். அதுவே பின்னாளில் 'பாகவதமேளா' எனப்பட்டது. இச்சுவடிகள் இந்நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருவதுடன் அச்சிலும் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

விஜயராகவ நாயக்கர் (1638-1673)

இரகுநாதநாயக்கருக்குப் பின் தஞ்சையில் ஆட்சிப் பொறுப்பேற்றவர் விஜயராகவ நாயக்கர் ஆவார். இவர்தம் ஆட்சிக் காலத்தில் இசை, நாட்டியம், நாடகம் போன்ற பல கலைகள் வளர்ச்சியடைந்தன. இசைப்புலவர்கள் பலர் இரகுநாதநாயக்கரின் அவையைப் போன்றே அலங்கரித்தனர். இம்மன்னர் வடமொழி, தெலுங்கில் நல்லபுலமை பெற்றிருந்தார். செங்கல்வகாளகவி இவர் காலப் புலவர்களில் முக்கியமானவர்.

செங்கல்வகாளகவி, மன்னார்குடி இராசகோபாலசுவாமி மீது 'இராஜகோபால விலாசம்' என்னும் தெலுங்கு நூலினை இயற்றினார். இந்நூல் வரலாற்றுக் குறிப்புகள் பல கொண்டது. இராஜகோபால விலாசம் இப்போது அச்சிடப்பட்டுள்ளது. இம்மன்னர் காலத்தில் வடமொழி, தெலுங்கு மொழியில் எழுதப்பட்ட பல நூல்கள் சரசுவதி நூலகத்தில் இடம்பெற்றன. அம்மன்னர் காலத்தில் இந்நூலகம் பல்கலைக்கழகம் போல் விளங்கியதாகக் குறிப்பிடப்படுகின்றது.[67]

இம்மன்னர் இயற்றிய நூல்கள் முப்பதுக்கும் மேல் இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இவற்றில் இன்று நமக்கு கிடைப்பவை 1) ரகுநாதநாயகாப்யுதயம், 2) ரகுநாதாப்யுதயம், 3) பிரஹலாத சரிதம், 4) பூதனா ஹரணமு, 5. காளியமர்தனமு, 6) விப்ரநாராயண சரித்திரம், 7) கிருஷ்ணவிலாசம் என்பவை மட்டுமேயாகும். தெலுங்குமொழியில் இயற்றப்பட்ட இந்நூல்கள் அனைத்தும் அச்சிடப்பட்டுள்ளன.

இம்மன்னர் அவையிலிருந்த மற்றுமொரு புலவர் வேங்கடமகி ஆவார். இவர் கோவிந்ததீட்சிதரின் புதல்வர். இவரின் புகழ்பெற்ற படைப்பான சதுர்த்தண்டிப்பிரகாசிகா[68] என்ற வடமொழி நூலில் 72 மேளகர்த்தா ராகக் குறிப்புக்கள் உள்ளன. இசை உலகின் முக்கியமான நூலாக இன்றும் கருதப்படும் இந்நூல் அச்சிடப் பட்டுள்ளது. இந்நூலின் ஓலைச்சுவடி இந்நூலகத்தில் பாதுகாக்கப் பட்டுள்ளது.

ஷேத்ரக்ஞர் என்பவர் விஜயராகவ நாயக்க மன்னர்மீது சிருங்கார பதங்கள் பலவற்றினைத் தெலுங்கு மொழியில் பாடினார்.[69] இவை கிரந்த எழுத்துக்களில் உள்ளன. இச்சுவடி பதிப்பிக்கப்பட்டுள்ளது. இம்மன்னர் காலத்து இசைப்புலவர் நரசிம்ம உபாசகர் பெத்ததாசரி பாடிய நூல் பதஸாஹித்யங்கள் ஆகும்.[70] இப்பாடல்கள் வழிவழியாகவே பாடப்பட்டு வந்தன. அச்சிடப்பட்ட நூல் மட்டுமே இந்நூலகத்தில் உள்ளது.

இம்மன்னர் காலத்துப் பெண்பாற் புலவர் ரங்கஜம்மா. தெலுங்கு, பிராகிருத மொழியில் இவர் எழுதிய பல நூல்கள் நமக்குக் கிடைக்க வில்லை. உஷாபரிணயம்,[71] மன்னாருதாச விலாசம்[72] என்ற காவிய நாடகச் சுவடிகள் மட்டுமே இந்நூலகத்தில் உள்ளன.

விஜயராகவ மன்னனின் புதல்வன் மன்னாருதாசநாயக்கன் பெரும்புலவன் ஆவான். இவன் வாழ்நாள் முழுவதும் தந்தையால் சிறைவாசம் செய்யப்பட்டான். இவன் தெலுங்குமொழியில் எழுதிய விஜயராகவாப்யுதயம் என்ற நூல் கிடைக்கப் பெறவில்லை. ஆனால் 'ஹேமாப்ஜநாயிகா சுயம்வரம்' என்ற தெலுங்கு நூல் அச்சில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

கி.பி. 1673-இல் விஜயராகவ மன்னருடன் தஞ்சையில் நாயக்க மன்னராட்சி முடிவுற்றது. இம்மன்னனின் பேரனே செங்கமலதாசன் ஆவான். இவன் 1675 வரை ஓராண்டுக்காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தான். கி.பி. 1675 இல் ஏகோஜி தஞ்சையில் முடிசூட்டிக் கொண்டான் என வரலாறு கூறுகின்றது.

தஞ்சை நாயக்க மன்னர்களால் 'நாடகசாலை' எனப்பட்ட இடமே (அரங்கே) மராட்டியர்கள் காலத்தில் 'சங்கீதமகால்' எனப்பட்டது. சரசுவதிமகாலிலுள்ள பல சுவடிகளின் மூலம் சங்கித மகாலில் பல இசை மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகளும், பாகவத மேளா நாடகமும் நடந்ததாக அறிய முடிகின்றது.[73]

தஞ்சை அரண்மனை வளாகத்தில், "இந்நூலகம் நாயக்கர் கால விஜய விலாசம் என்ற கட்டடத்தின் பெரும் பகுதியிலும் இந்திர மந்திரத்தின் ஒரு பகுதியிலும் தொடர்ந்து திகழ்ந்து வருகிறது" என்பதை ஆய்வாளர் குறிக்கின்றனர்.[74]

இந்தியாவின் தொன்னூலகமாக விளங்கும் தஞ்சை சரசுவதிமகால் நூலகம் சோழர் காலத்தில் தோன்றி வழிவழியே

வளர்ச்சி பெற்று, நாயக்க மன்னர் காலத்தில் நிலைபெற்று விளங்கியது என்பதை வரலாறு காட்டுகின்றது. தொடர்ந்து ஆட்சி புரிந்த மன்னர்கள் பலர் பல நூல்களை உருவாக்கியும், படியெடுத்தும் பாதுகாத்தும் வந்துள்ளனர். இன்றுள்ள சரசுவதி மகால் நூலகம் அமைந்துள்ள அரண்மனையைக் கட்டிய நாயக்க மன்னர்களின் பணிகள் பல வரலாற்றில் குறிக்கத் தக்கனவாம். அடுத்துவந்த மராட்டிய மன்னர்களின் கலை, பண்பாட்டுத் தொடர்பான பணிகளுக்கும் இவர்களுடைய பணிகள் பல அடித்தளமாக விளங்கின.

மேற்கோள் சான்றுகள்

1. ARE 168, 169, 1961-62.
2. வே.கணபதி, தமிழக வரலாறும் பண்பாடும், பக். 51.
3. வ.வேணுகோபாலன், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், பக்.5.
4. ஜே.எம். சோமசுந்தரம், சோழர் கோயிற் பணிகள், பக். 127.
5. சோமலெ, தஞ்சைமாவட்டம், ப. 137.
6. V.Vriddhagirisan, The Nayaks of Tanjore, p. 235.
7. K.R.Subramanian, The Maratha Rajas of Tanjore, p. 73.
8. வ.வேணுகோபாலன், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், பக்.7.
9. மேலது, பக். 2.
10. K.A.N.Sastri, The Colas, p. 437-438.
11. வ.வேணுகோபாலன், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், பக்.6.
12. Epigraphica Indica Vol. XVII, No. 8, pp. 110-111.
13. வ.வேணுகோபாலன், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், பக்.8.
14. K.A.N.Sastri, History of South India, p. 275.
15. எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம், சோழர் கலைப்பணி, பக். 133.
16. வ.வேணுகோபாலன், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், ப.19.
17. சுவடி எண் D. 1700, 1701.
18. சுவடி எண் B. 9987; D. 5817.
19. வ.வேணுகோபாலன், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும்,

ப.19.

20. சுவடி எண் 11428.
21. SII, Vol. II, Part 3, No. 67.
22. Ibid. Vol. II, part 3, No. 67.
23. Ibid, Vol. II, part I, No. 26.
24. ARE, 1930-34, p. 235.
25. வ.வேணுகோபாலன், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், ப.22.
26. சுவடி எண்: 15308.
27. சதாசிவபண்டாரத்தார், சோழர் வரலாறு, பகுதி 1, பக். 161.
28. எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம், சோழர் கலைப்பணி, பக். 25-27.
29. கலிங்கத்துப்பரணி, தாழிசை, 10-54.
30. வ.வேணுகோபாலன், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், ப.35.
31. மேலது, ப. 38.
32. Oriental Research Journal, Vol. XI, p. 27.
33. ARE 482 of 1905; வ.வேணுகோபாலன், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், ப. 41.
34. S.I.I., Vol. III, No. 62, p. 122.
35. K.A.N.Sastri, The Colas, p. 433-434.
36. சதாசிவ பண்டாரத்தார், சோழர் வரலாறு, பாகம் 2, பக். 209-10.
37. ARE. 515 of 1922; Part II, para 45.
38. Epigraphica Indica, Vol. III 12c.
39. K.A.N.Sastri, History of South India, p. 275.
40. S.I.I. Vol. IV, No. 503; Caldwell, History of Tirunelveli, p. 55.
41. வ. வேணுகோபாலன், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், ப.54.
42. குடவாயில் பாலசுப்பிரமணியம், தஞ்சை நாயக்க வரலாறு, ப. 312.
43. வ.வேணுகோபாலன், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், ப.24.
44. T.Vengasamy Rao, Tajore Manual, Part V, Chap III, pp. 747-750.
45. V.Vriddhagirisan, The Nayaks of Tanjore. p. 9.
46. N. Subrahmanian, History of Tamilnadu 1565-1956, p. 37.
47. சுவடி எண் TC 1037, 1064.

48. என்.விசுவநாதன், தெலுங்குமொழிப் பண்டிதர், பேட்டி.
49. சுவடி எண் D 4493.
50. சுவடி எண் D 4487
51. சுவடி எண் D 4220
52. சுவடி எண் T.C. No. 3244.
53. ச.ம. நூலக எண் 4026.
54. ச.ம. நூலக எண் S. 5475.
55. சுவடி எண் D.334.
56. சுவடி எண் D.247, 248.
57. சுவடி எண் D.283.
58. சுவடி எண் D.821.
59. சுவடி எண் D 4368 (வடமொழி), D 301, 302 (தெலுங்கு)
60. என்.விசுவநாதன், தெலுங்குமொழிப் பண்டிதர், பேட்டி.
61. சுவடி எண் D. 559-560.
62. சுவடி எண் D.251-55.
63. சுவடி எண் D.278-82.
64. சுவடி எண் D. 172.
65. ச.ம. நூலக எண் ஞ. 909.
66. சுவடி எண் னு. 544.
67. வ.வேணுகோபாலன், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், பக் 104.
68. ச.ம. நூலக எண் S. 1506.
69. சுவடி எண் D.429.
70. வ. வேணுகோபாலன், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், பக் 106.
71. சுவடி எண் D. 140.
72. சுவடி எண் D.213-214.
73. குடவாயில் பாலசுப்பிரமணியன், தஞ்சாவூர், பக். 355.
74. மேலது, பக். 356.

3. மராட்டியர்களின் நூலகப் பணிகள்

தமிழகத்தை முழுவதுமாகவும் எண்ணற்ற சிறுசிறு பகுதிகளாகவும் தமிழ்ப்பேரரசர்கள், சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள், டச்சுக்காரர்கள், போர்த்துக்கீசியர்கள், ஆங்கிலேயர்கள் போன்றோர் ஒவ்வொரு காலகட்டத்தில் ஆட்சி செய்தமையை நாம் வரலாற்றால் அறியமுடிகின்றது. அவ்வகையில் தமிழகத்தின் தென்பகுதியான தஞ்சையைத் தலைமையிடமாகக் கொண்டு திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய பகுதிகளை கி.பி. 1676 முதல் 1855 வரையில் ஏறத்தாழ 180 ஆண்டுகள் ஆட்சி செய்தவர்கள் மராட்டிய மன்னர்கள் ஆவர். இவ்வியலில், தஞ்சை மராட்டிய மன்னர்களின் வரலாற்றினைப் பற்றியும் அவர்கள் நூலக வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளைப் பற்றியும் ஆராயப்பெறுகின்றன.

தஞ்சை மராட்டிய மன்னர்களின் ஆட்சிப்பரப்பு

தஞ்சை மராட்டிய மன்னர்களின் ஆட்சிப் பரப்பளவு தற்போதைய தஞ்சை, நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருந்தது. கொள்ளிடம் வடக்கெல்லையாகவும், கிழக்கே வங்காள விரிகுடா கடல் பகுதியும் வடக்கே தேவிகோட்டை முதல் தெற்கே பாம்பாறு கடலில் கலக்கும் இடம் வரையில் உள்ள கடற்கரைப் பகுதியும், மேற்கே திருச்சி மற்றும் புதுக்கோட்டை அரசுகளும் தெற்கே இராமநாதபுரம் அரசும் எல்லைகளாக அமைந்தன.

இப்பகுதியில் காவேரி ஆறு பல கிளைகளாக ஓடி வளம் பல சேர்த்தது. நெல், கரும்பு, பருத்தி, தென்னை ஆகியன விளைந்து குறைவில்லா செல்வம் கொழித்தது. சோழர்கள் மற்றும் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்ட கோயில்கள் மூலம் பக்தி நெறியும் கலைச்செழிப்பும் செழித்தோங்கின. கடலோரப்பகுதியில் மீன்பிடித்தல் மற்றும் முத்துக்குளித்தல் முக்கிய தொழில்களாக நடைபெற்றன.

வளம் பொருந்திய இந்நிலப்பகுதியைத் தஞ்சை மராட்டிய மன்னர்கள் ஐந்து பிரிவுகளாக (சுபா) பிரித்து ஆட்சிபுரிந்தனர். அவை பட்டுக்கோட்டை, மன்னார்குடி, கும்பகோணம், மாயூரம், திருவையாறு என்பனவாம்.[1]

தஞ்சையில் மராட்டியர்கள் ஆட்சி ஏற்பட்டதன் சூழல்

நாயக்கர்கள் தஞ்சையையும் மதுரையையும் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சிசெய்து வந்தனர். கி.பி. 1633 முதல் 1673 வரை தஞ்சையை ஆட்சி செய்துவந்த விஜயராகவநாயக்கருக்கும், மதுரையை ஆட்சிசெய்து வந்த சொக்கநாத நாயக்கருக்கும் பகைமை ஏற்பட்டது. மதுரை நாயக்கர் தஞ்சை நாயக்க மன்னரின் மகளை மணமுடிக்க விரும்பினார். பெண்கொடுக்க மறுத்த தஞ்சை நாயக்கர் மீது மதுரை நாயக்கர் படையெடுத்தபோது விஜயராகவ நாயக்கர் போர்க்களத்தில் மாண்டார். விஜயராகவ நாயக்கர் தாம் போர்க்களம் செல்லுமுன்னரே தம் அரச குடும்பத்தினரைப் பார்த்து, "தாம் வெற்றிபெற்றுத் திரும்பாவிடில் அனைவரும் இறந்து விடுங்கள்" என்று கூறி அதற்கான ஏற்பாடுகளையும் செய்துவிட்டுப் போருக்குச் சென்றார். போரில் தோற்றுவிடவே அந்தப்புர மகளிர் மன்னரின் விருப்பப்படி மாண்டனர். மேலும், விஜயராகவரின் மனைவியருள் ஒருவர் தமது நான்கு வயது சிறுவனைத் தாதி ஒருவரிடம் ஒப்படைத்து, நாகப்பட்டினத்திற்குத் தப்பியோடுமாறு செய்தார்.

மதுரை சொக்கநாத நாயக்கர் தமது தம்பி அழகிரியைத் தஞ்சையில் பட்டம் சூட்டி ஆட்சிப் பொறுப்பேற்கச் செய்தார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் அழகிரி அவரது அமைச்சர் இராயசம் வெங்கண்ணா என்பவரின் தூண்டுதலின்பேரில் மதுரை நாயக்க மன்னரின் ஆட்சிக்குக் கட்டுப்படாமல் சுயேட்சையாக ஆட்சிபுரிய விரும்பினார்.[2]

நாகப்பட்டினத்தில் வளர்ந்துவந்த விஜயராகவ நாயக்கரின் மகன் செங்கமலதாசுவை மன்னராக்க விரும்பிய வெங்கண்ணா, அழகிரியைப் பதவியிலிருந்து நீக்க உதவி வேண்டி செங்கமல தாசுவுடன் பீஜப்பூருக்குச் சென்றார். பீஜப்பூர் சுல்தான் தம் தானைத் தளபதி ஏகோஜியுடன் ஒரு படையை அனுப்பினார். தஞ்சைக்கு அருகில் அய்யம்பேட்டை என்னுமிடத்தில் நடந்த போரில் ஏகோஜி அழகிரியைத் தோல்வியுறச் செய்தார். பின்னர் செங்கமலதாசுவைத்

தஞ்சைக்கு மன்னராக்கினார். பெரும் பரிசுகளுடன் திரும்பிய ஏகோஜி குடந்தையில் தங்கியிருந்தார்.

தஞ்சைக்கு மன்னரான செங்கமலதாசு தமக்கு ஆட்சிக் கட்டிலேற உதவிய வெங்கண்ணாவிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்காமல், தம்மை வளர்த்த நாகப்பட்டினத்தாருக்கு அமைச்சர், தளபதி பதவியை வழங்கினார். இதனை விரும்பாத வெங்கண்ணா குடந்தையில் தங்கியிருந்த ஏகோஜியைத் தஞ்சைமீது மீண்டும் படையெடுக்கச் செய்து செங்கமலதாசுவைத் தோல்வியுறச் செய்தார். பின்னர் ஏகோஜியே தஞ்சையின் முதலாம் மராட்டிய மன்னராக கி.பி. 1676-இல் முடிசூட்டிக் கொண்டார்.

போசள வம்ச மரபு

கி.பி. 871 முதல் 907 வரை தஞ்சையை ஆண்ட முதலாம் ஆதித்தியனின் மனைவி ராட்டிரகூட மன்னன் இரண்டாம் கிருட்டிணனின் மகள் இளங்கோ பிச்சியாவாள். முதலாம் பராந்தக சோழன் தனது மகள் வீரமாதேவியை ராட்டிரகூட மன்னன் நான்காம் கோவிந்தனுக்கு மணமுடித்தான். தஞ்சையில் சோழர்களின் ஆட்சிக்குப் பின்னர் நாயக்க மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டது. ராட்டிரகூடர்களுடன் ஏற்பட்ட உறவு காரணமாகவே மராட்டிய மன்னர்களின் ஆட்சி தஞ்சையில் ஏற்பட்டதாக அறியலாம்.[3]

மராட்டியர் என்றழைக்கப்படும் ராட்டிரகூடர் மரபினர் மகாராஷ்டிரர்களே ஆவார். இவர்களின் மரபு போசள வம்சம் எனப்படுகின்றது. மூன்றாம் இராஜராஜன், மூன்றாம் இராஜேந்திரன் ஆகிய இருவரின் ஆட்சியின்போதும் ஏற்பட்ட நெருக்கடியைத் தீர்த்து சோழ அரசினைப் பாதுகாத்தவர்கள் போசள வீரநரசிம்மன் மற்றும் போசள வீரராமநாதன் ஆவர்.[4] கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் மைசூர், பங்களூர், கனககிரியிலும் ஆட்சிபுரிந்தவர் போசள வம்சத்து மராட்டிய அரசர் முதலாம் ஷஹிஜி ஆவார். இவருடைய புதல்வர் வெங்கோஜி என்கின்ற ஏகோஜியும் மைசூரிலிருந்து தஞ்சைக்கு வந்தவரே.[5] இவ்வாறு மராட்டிய போசள வம்ச மரபினரின் ஆட்சி தஞ்சையில் ஏற்பட்டது.

முதலாம் ஏகோஜி (1676-1682)

தஞ்சையில் மராட்டியர் ஆட்சியை ஏற்படுத்திய முதலாம் அரசர் ஏகோஜியை 'ஏகராஜ மகாராஜ' எனச் செப்பேடுகள்

குறிப்பிடுகின்றன.[6] மேலும், இவர் 'யோகோஜி', 'வ்வயங்கோஜி' என்றெல்லாம் குறிப்பிடப்படுகின்றார்.[7]

முதலாம் ஏகோஜிக்கு தீபாபாய், அன்னுபாய் என்ற இரண்டு மனைவியர் இருந்தனர். மேலும், கங்காபாய் என்ற மனைவியும் உண்டு என்று போன்ஸ்லே வம்ச சரித்திரம் குறிப்பிடுகின்றது.[8] இம்மன்னர் தமது விருப்பத்தின் பேரில் சேர்த்துக் கொண்ட மனைவியர்கள் ஒன்பது பேர் ஆவர். இவருக்கு சகஜி, சரபோஜி, துளஜா என்ற மூன்று புதல்வர்கள் இருந்தனர்.

தென்னாட்டில் இந்து சாம்ராச்சியம் சிதறாமல் பாதுகாத்த பெருமை சத்திரபதி சிவாஜிக்கும், அவரது சகோதரன் ஏகோஜிக்குமே சாரும். சிவாஜிக்கு இராஜகுருவாக இருந்த சமர்த்த ராமதாசர் என்பவரே ஏகோஜிக்கும் இராஜகுருவாக இருந்து நல்வழிப்படுத்தினார். சோழ நாட்டில், சோழ மன்னர்கள் பாதுகாத்த மரபுகள் அழியாவண்ணம் பாதுகாத்தவர் மன்னர் ஏகோஜி. இம்மன்னர் காலம் முதல் தமிழகத்தில் தமிழ், வடமொழி, தெலுங்கு மொழிகளுடன் மராட்டியும் வளம்பெறத் தொடங்கியது. ஏகோஜியும் வடமொழி, தெலுங்கு, தமிழ், மராட்டி ஆகிய மொழிகளில் ஆற்றல் பெற்றிருந்தார்.

இவரது ஆட்சிக்காலத்தில் சத்திரபதி சிவாஜியுடன் (கி.பி.1676-77) ஏற்பட்ட போரில் முதலில் ஏகோஜி வென்றபோதிலும் பின்னர் சிவாஜியின் படை ஏகோஜியைத் தோல்வியுறச் செய்தது. ஏகோஜி தம் மனைவி தீபாம்பாளின் உதவியால் மதுரை சொக்கநாத நாயக்கருடன் உடன்படிக்கை செய்து கொண்டு தஞ்சைப் பகுதியை மட்டுமே ஆட்சிசெய்து வந்தார். சிவாஜி பீஜப்பூர் சுல்தானிடம் தஞ்சை உட்பட தாம் வெற்றி பெற்ற பகுதிகளுக்கு ஆட்சி உரிமையைப் பெற்றார். இந்நிகழ்ச்சியால் வெறுப்புற்ற ஏகோஜி துறவிபோல் வாழத் தொடங்கினார். இவ்வாறு வெறுப்புற்றிருப்பதை அறிந்த சிவாஜி, இவ்வாறு வெறுப்பு இருத்தல் கூடாது எனக் கடிதம் எழுதினார்.[9] கி.பி. 1680 இல் சிவாஜியின் மறைவுக்குப் பின்தான் ஏகோஜி சுதந்திரமாகச் செயல்பட முடிந்தது. கி.பி. 1682-இல் இம்மன்னர் காலமானார்.

ஏகோஜியின் நூலகப்பணி

தஞ்சை நாயக்க மன்னர்கள் கட்டிக்காத்த 'சரசுவதி நூலகம்' என்ற அரண்மனை நூலகம் ஏகோஜி மன்னர் ஆட்சிக்காலத்திலும் தனிச்

சிறப்புற்றது. பழுதடைந்த பல ஓலைச்சுவடிகளைப் புதியதாகப் படியெடுக்கச் செய்து இவர் பாதுகாக்கச் செய்தார். இவர் காலத்தில் ஏற்பட்ட காகிதத்தின் புழக்கத்தால் ஆயிரக்கணக்கான காகிதச் சுவடிகள் உருவாக்கப்பட்டு இந்நூலகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

ஏகோஜியின் அமைச்சராக இருந்த ரகுநாதபண்டிதர் வட மொழியிலும் மராட்டியிலும் புலமை பெற்றவர். இவர் எழுதிய 'நள சரித்திரம்' என்ற மராட்டி மொழிச் சுவடி இந்நூலகத்தில் உள்ளது. மேலும், ஸ்ரீபகவத்கீதைக்கு வியாக்கியான நூலான 'ஞானேச்வரி' மராட்டி மொழியில் எழுதப்பட்டது. இது ஒரு அரிய படைப்பாகக் கருதப்படுகின்றது.

ஸ்ரீமத் பகவத்கீதைக்கு 15-ஆம் நூற்றாண்டில் செஞ்சியில் வாழ்ந்த முகம்மதியத் துறவி அம்பர்ஹுசைன் மராட்டிய மொழியில் உரை எழுதியுள்ளார். இந்நூல் 'அம்பர்ஹுசைனி' என்பதாகும். இச்சுவடி இந்நூலகத்தில் உள்ளது.[10]

தஞ்சையில் இம்மன்னர் ஆட்சிக்காலத்தில் முகம்மதியர்கள் ஒருபுறமும் டேனிஷ் பாதிரியார்கள் ஒருபுறமும் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். தரங்கம்பாடியைத் தலைமையிடமாகக் கொண்டு டேனிஷ் பாதிரியார்கள் தங்கள் மதத்தினைப் பரப்பவும் ஆதிக்கம் செலுத்தவும் பல திட்டங்களை உருவாக்கினர். இந்நிலையில் அமைதியை நிலைநாட்டி கல்வி, மொழி, நூலக வளர்ச்சிக்கு இவர் செய்த பணி மிகச் சிறப்பானது.

தெலுங்கு எழுத்தின் தாக்கம்

நாயக்கர் காலத்தில் தமிழ்நாட்டுக்குரிய கிரந்த எழுத்தில் பிறமொழி நூல்கள் எழுதப்பட்டன. மேலும், நாயக்கர் ஆட்சியில் தெலுங்கு எழுத்தில் வடமொழி நூல்களின் நகல்கள் எடுக்கப்பட்டன. மராட்டியர்கள் காலத்தில் கையினால் செய்த காகிதத்தின் வரவால் நாகரி எழுத்தில் பிறமொழிச் சுவடிகள் படியெடுக்கப்பட்டன.[11]

1855 வரையில் ஓலையில் தெலுங்கு மொழி மட்டுமே அல்லாமல் பிறமொழி நூல்களையும் தெலுங்கு எழுத்தில் ஓலைச்சுவடிகளில் எழுதி உருவாக்கியவரும் மராட்டிய மன்னர்களேயாவர்.[12]

தெலுங்கு எழுத்தில் சமஸ்கிருதம், மராட்டி, தமிழ், விரஜ மொழியான இந்தி மொழிகளில் படியெடுக்கப்பட்டுள்ளன. சகஜி எழுதிய 'காவேரி கல்யாணம்' என்னும் தமிழ்நாடகம், சகஜிராஜன் குறவஞ்சி, பூலோகதேவேந்திர விலாசம், சந்திரகாசை விலாசம், அதிரூபவதி கல்யாணம் எனும் தமிழ் நாடகங்கள் தெலுங்கு எழுத்தில் ஓலைச்சுவடிகளாக உள்ளன. நாடக நடிகர்கள் தெலுங்கர்களாக இருந்ததால் எழுத்துமாற்றம் செய்யப்பட்டது என்பர்.[13] பிரதாபசிம்மன் காலத்தில் மராட்டிய இசை நாட்டிய நாடகங்கள் பெரும்பாலானவை தெலுங்கு எழுத்தில் படியெடுக்கப்பட்டுள்ளன. இவை மராட்டி மொழியைத் தெலுங்கு எழுத்தில் பதிப்பித்த ஓலைச்சுவடிகளாகும். பொதுவாக மராட்டியர் காலத்தில் வடமொழி நூல்களைத் தெலுங்கு எழுத்தில் எழுதித் தயாரிக்கப்பட்ட சுவடிகள் ஏராளமாக இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.[14] சகஜி மன்னர் இயற்றிய விசுவாதித விலாசம், ராதாவம்சீத விலாசம் போன்ற இந்தி மொழி நூல்கள் தெலுங்கு எழுத்தில் சுவடிகளாக இந்நூலகத்தில் இடம்பெற்றுள்ளன.[15]

'சஸஜீஉத்தௌலாகே நாடக்' என்ற உருதுமொழி நாடகம் தெலுங்கு எழுத்தில் படி எடுக்கப்பட்ட சுவடியாக இங்கு உள்ளது. இதன் காலம் தெரியவில்லை. தெலுங்கு மொழி நாடகங்கள் தேவநாகரி எழுத்தில் காகிதச் சுவடிகளாக இடம்பெற்றுள்ளன.

இரண்டாம் சகஜி (1684-1712)

ஏகோஜியின் மறைவுக்குப்பின் அவரது மூத்த மகனான சகஜி அரசராகப் பொறுப்பேற்றார். ஆனால், ஏகோஜியின் மறைவுக்குப் பின் சகோதரர்கள் மூவரும் ஒன்றாக ஆண்டதாகத் துளஜா குறிப்பிட்டுள்ளார்.[16] சகஜி மன்னர் ஆட்சிப் பொறுப்பேற்கும் போது சாக்கோட்டையில் முதலாம் சரபோஜியும், மகாதேவப்பட்டினத்தில் துளஜாவும் இருந்து சுபாக்களை நிர்வாகம் செய்து வந்தனர். மொகலாயர்கள், நாயக்கர்கள், இராமநாதபுரச் சேதுபதிகள் ஆகியோர்களின் தொல்லைகளுக்-கிடையேயும் இவர் நாட்டினைச் சிறந்தமுறையில் நிர்வகித்தார். கி.பி. 1712-இல் சகஜி மன்னர் ஆன்மீகத்தில் ஈடுபட்டு தஞ்சைக்கு அருகேயுள்ள வல்லத்தில் இறந்தார்.

இவர், தஞ்சை நகரைக் கல்வியில் சிறந்த நகரமாக்கும் முயற்சியில் அயராது பாடுபட்டார். பன்மொழிவித்தகராக

விளங்கிய இம்மன்னர் தமிழ் மரபில் நின்று நாயன்மார்களின் நெறியில் வாழ்ந்து, பெரும்புலவராகவும் திகழ்ந்தார்.

இரண்டாம் சகஜி மன்னரின் நூலகப்பணி

சகஜி மன்னரின் ஆட்சிக்காலத்தில் தஞ்சையில் வேதநெறி தழைத்து அவருடைய அவைக்களம் பல்கலைக்கழகமாக விளங்கியதால் நூலாக்கப் பணியிலும், நூல்களைத் தொகுக்கும் பணியிலும் அவர் மிகுந்த ஆர்வம் காட்டினார். சரசுவதி நூலகத் தொகுப்புக்கள் இம்மன்னர் காலத்தில் பெருகின.

மன்னார்குடி மேருசுவாமிகளும், திருவழுந்தூர் மாதவ சுவாமிகளும் இவர் காலத்தவரே. மேருசுவாமிகள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்திப்பாடல்களை மராட்டிய மொழியில் இயற்றினார். 'இராமாயண வியாக்யானம்', 'ஆனந்த வால்மீகி இராமாயணம்', 'பீமோபதேசம்' ஆகிய நூல்கள் மேருசுவாமிகள் இயற்றியவையே. இந்நூல்கள் சரசுவதி மகால் நூலகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

மாதவ சுவாமிகள் சகஜி காலத்திலும், முதலாம் சரபோஜி காலத்திலும் வாழ்ந்தவர். இவர் மராட்டிமொழியில் பாரதம், இராமாயணம், கணேசபுராணம், விஷ்ணுபுராணம், பிரபோத சந்திரோதயம், மல்லாரி மகாத்மியம், யோகவாசிஷ்டம், கீதை வியாக்யானம் ஆகிய பல நூல்களை இயற்றினார். இவையாவும் இந்நூலகத்தில் தொகுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுள்ளன.

தமிழ், தெலுங்கு, மராட்டி, வடமொழி, இந்தி ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்த சகஜி மன்னர் இந்திமொழியில் ராதாவம்சிதா, விசுவாதீச விலாசம் என்ற நாடகங்களை எழுதியுள்ளார்.[17] இவற்றோடு முப்பதுக்கும் மேலான நாடகங்களை இயற்றியுள்ளார்.

சகஜி இசைக்கலையில் வல்லவராகத் திகழ்ந்தமையால் ஐநூறுக்கும் மேலான இசைப்பாடல்களை இயற்றியுள்ளார். இவை யாவும் நாயன்மார்களின் பாடல்களின் போக்கை ஒத்தனவாக உள்ளன. தமிழிலக்கிய மரபிலுள்ள சிற்றிலக்கியங்களான தூது, உலா அமைப்புக்களையும் இவர் எடுத்தாண்டுள்ளார்.

இவர் காலத்தில் பெரும் புலவர்களாகவும், அமைச்சர்களாகவும் திகழ்ந்த திரயம்பகராயமகி, பகவந்தராயர் ஆகியோரால் இவர் பெரும்புலமை பெற்றார் என்பது தெளிவு.

கர்நாடக இசைக்குத் தமிழ் மரபைப் பின்பற்றி நூற்றுக்கணக்கான இசைப்பாக்களைப் பல ஜன்யாராகங்களில் பாடி வழிகாட்டியவர் இவரே ஆவார்.[18] இம்மன்னரின் கிருதிகள் நாடகங்கள் இந்நூலகத்தில் இடம்பெற்றுள்ளன. இவரது அவையில் வேதம், சாஸ்திரம், காவியம், நாடகம், மற்றும் இசைப் பேரறிஞர்கள் இடம் பெற்றிருந்தனர். இதனால் சங்கீத சாகித்தியங்கள் மிகச் சிறப்புடன் வளர்ச்சியுற்றன.

சகஜியின் புகழ்பெற்ற படைப்பு 'சங்கரபல்லகி சேவா பிரபந்தம்' என்னும் இசை நாடகமாகும். இது திருவாரூர் கோயிலில் நடிக்கப்பெற்றது. மேலும் விஷ்ணு பல்லகி சேவாபிரபந்தம் என்ற இசை நாடகம் மன்னார்குடி கோயிலில் நடிக்கப்பட்டதாக அறியமுடிகின்றது. இவரது நாடக நூல்களாக அறியப்படுவன ரதிகல்யாணம், கங்கா காவேரி சம்வாதம், கங்காபார்வதி சம்வாதம் ஆகும். இவரால் இயற்றப்பட்ட இசைக் கீர்த்தனைகளில் அத்வைத கீர்த்தனை என்ற தொகுப்பு உள்ளதாக அறிய முடிகின்றது.[19]

தமது தந்தையைப் போலவே இவரும் சரசுவதி நூலகத்தில் இருந்த பழமையான புராண, இதிகாசச் சுவடிகளை எழுத்தர்களைக் கொண்டு படியெடுக்கச் செய்தார். இச்சுவடிகள் இந்நூலகத்தில் உள்ளன.

அப்பைய தீஷதரால் இயற்றப்பட்ட 'குவலயானந்தம்' என்ற நூலுக்கு ரஸிகரஞ்சனி என்ற பெயரில் கங்காதரமகி வியாக்யானம் எழுதினார். இவரின் மற்றொரு நூல் போசள வம்சாவளியாகும். இதில் பல வரலாற்றுக் குறிப்புக்கள் உள்ளன. இந்நூலும் இந்நூலகத்தில் உள்ளது.

நிருசிம்மராயமகி என்ற மற்றொரு அமைச்சர் 'திரிபுரவிஜயசம்பு' என்ற காவியத்தைச் சகஜியின் அவையில் இயற்றிப் புகழ்பெற்றார்.[20] இம்மன்னரின் சிறப்புமிக்க அவைப்புலவர் கங்காதரமகியின் புதல்வர் திரியம்பகராயமகி ஆவார். இவர் 'தர்மாகூதம்' என்னும் இராமாயணச் சிறப்புக்களை விளக்கும் நூலினை இயற்றினார். கங்காதரமகியின் மற்றொரு புதல்வரான அவைக்களப் புலவர் பகவந்தராட்சி 'முகுந்த விலாஸம்', 'உத்தரராமாயண சம்பு', 'ராகவாப்யுதயம்' ஆகிய நூல்களை இயற்றினார்.

கங்காதரமகியின் மூன்றாம் புதல்வர் ஆனந்தராயமகி, அற்புத ராமாயணம், சுகசந்தேசம் ஆகிய இரு நூல்களை எழுதினார்.

இந்நூல்கள் சரசுவதிமகாலில் உள்ளன. சகஜியால் போற்றப்பட்ட ஜீவன்முக்தரான சதாசிவப்பிரம்மம், போதேந்திரர், பரமசிவேந்திரர், பாஸ்கரராயர் போன்ற முனிவர்களும், உபாசகர்களும் இயற்றிய நூல்களும் இந்நூலகத்தில் சேர்க்கப் பட்டுள்ளன.

இம்மன்னர் கும்பகோணத்திற்கு அருகில் ஷாஜிராஜபுரம் (திருவிசை நல்லூர்) என்னும் ஊரை நாற்பத்தைந்திற்கும் மேற்பட்ட புலவர்களுக்கு அளித்து சோழ மன்னர்களைப் போல் அழியாப்புகழ் பெற்றார்.[21]

சகஜி காலத்துப் படைப்புக்கள் பொதுவாக அத்வைத வளர்ச்சி, நாமசங்கீர்த்தனம், பஜனபத்ததி, இசை நாடகம் மற்றும் நாட்டியம் சார்ந்தவையாகப் பல உள்ளன. இம்மன்னரின் அவையில் புகழுடன் விளங்கிய திருவிசைநல்லூர் ஸ்ரீதர வேங்கடேசர் மன்னரைப் பற்றி சாஹேந்திரவிலாஸம் என்ற வரலாற்றுக் குறிப்புக்கள் கொண்ட நூலினை எழுதினார்.

பாஸ்கரராயரும் கங்காதர வாஜபேயரும் சேர்ந்து இயற்றிய நூல் வைதீகதர்சன சங்கிரகம்,[22] சதாசிவபிரம்மம் எழுதியது ஆத்மவித்யா விலாஸம் ஆகும். இந்நூல் முதலாம் சிவாஜிக்கு அறிவுரை கூறுவதாக அமைந்துள்ளது.[23] ஆனந்தராயமகி என்னும் புலவர் இயற்றியது ஆசாரநவநீதம். துண்டிராஜகவி என்பவரால் சகஜி மன்னரைச் சிறப்பித்து எழுதப்பெற்றது ஷாஹராஜவிலாஸம் ஆகும். மேலும், ஸ்ரீதரர், வேங்கட சாஸ்திரி, நல்லா சாஸ்திரி ஆகிய மூவரும் சேர்ந்து இயற்றியது பதமணி மஞ்சரி[24] ஆகும். இராமபத்திர தீட்ஷிதருடன் ஏழு புலவர்கள் சேர்ந்து எழுதிய நூல் ஸத்தர்சன சித்தாந்த சங்கிரகம். இது ஒரு வேதாந்த விளக்க நூலாகும். இராமபத்திர தீட்சிதருடன் நாராயணகவி, வேங்கட கிருஷ்ண கவி ஆகிய மூவரும் சேர்ந்து இயற்றிய 'சப்தபேத நிரூபணம்' என்னும் சுவடிநூலின் பல பிரதிகள் சரசுவதிமகால் நூலகத்தில் உள்ளன.[25] சதாசிவ தீட்ஷிதர் கீதசுந்தரம் எனும் நூலையும், ஆனந்தமகி என்பவர் வித்யாபரிணயம்,[26] ஆசவலாயன கிருஹ்ய சூத்திரவிருத்தி[27] நூலினையும் இயற்றினர். போதேந்திர சுவாமிகள் சகஜி மன்னரின் வேண்டுகோளின் படி எழுதிய அரியநூல் 'ஹரிஹரபேததி காரம்' ஆகும். இம்மன்னர் காலத்தில் ஸ்ரீபாஸ்கரராயர் வரிவஸ்யார கஸ்யம், லலிதாசங்கரநாம பாஷ்யம் ஆகிய நூல்களை அருளினார். துறவி கிருஷ்ணானந்த சரஸ்வதி,

சித்தாந்த சித்தாஞ்சனா என்ற வேதநூலினை இயற்றினார். சதாசிவ பிரம்மத்தின் குரு பரமசிவேந்திர சரஸ்வதி ஸ்வரூபானு ஸந்தானம்,[28] சிவகீதை,[29] தகரவித்யாபிரகாசிகை[30] ஆகிய நூல்களை இயற்றினார். சிருங்கார சமஞ்சரிஷாஹ ராஜீயம்[31] என்ற வடமொழி நாடக நூலினைப் பெரியப்பா கவி இயற்றினார். இந்நாடகம் சகஜி மன்னரின் அவையில் நடித்துக் காட்டப்பட்டது. மேலும், திருவிசைநல்லூர் பண்டிதர் வீரராகவகவியின் ராமராஜ்யா பிஷேகம், வள்ளி பரிணயம், பார்வதி ஸ்தோத்திரம் ஆகிய ஆறு நாடக நூல்கள் மன்னரது அவையில் நடித்துக் காட்டப்பட்டன. கண்டர-மாணிக்கம் என்ற ஊரைச் சேர்ந்த நல்லாகவி என்பவர் சுபத்ராபரிணயம் என்னும் நாடக நூலினை எழுதினார்.[32]

வேங்கடகிருஷ்ணகவி என்ற வடமொழிப் புலவர் நடேச விஜயம், இராமசந்திரோதயம் ஆகிய நூல்களை வட மொழியிலும், குசலவ விஜயமு என்ற நூலினைத் தெலுங்கு மொழியிலும் எழுதினார். அப்பாகவி என்னும் பூர்ணானந்த யோகியவர்கள் பிராயச்சித்ததீபிகை, உபகிரந்ததீபம் எனும் நூலினை எழுதினார்.

சேஷாசலபதி புலவர் 'போஸ்ல கோஸலீயம்' என்னும் மராட்டிய மன்னர்களின் வம்ச வரலாற்றினை விளக்கும் நூலை மராட்டி மொழியில் எழுதினார். சகஜி இந்நூலினைத் தெலுங்கில் மொழி பெயர்த்து எழுதச் செய்தார்.[33] ஆந்திர நாட்டில் வடமொழியில் எழுதப்பட்ட 'நன்னசோழ குமார சம்பவம்' நூலினை இம்மன்னர் தெலுங்குமொழியில் மொழிபெயர்க்கச் செய்து நூலகத்தில் சேர்த்தார்.

தமிழ் இலக்கியம்

இம்மன்னர் காலத்தில் வடமொழி, தெலுங்கு, மராட்டி இலக்கியங்கள் வளம்பெற்றது போலத் தமிழிலக்கியங்கள் பல உருவாக்கப்பட்டு, தமிழ்மொழிக்கு வளமும் சரசுவதிமகால் நூலகத்திற்கு மேலும் பல இலக்கியங்களும் சேர்க்கப்பட்டன. தியாகேசர் குறவஞ்சி, செண்டலங்காரன் விறலிவிடுதூது, தஞ்சை நாயக்கவண்ணம், வீரராகவமுதலி வண்ணம், கும்பகோணப் புராணம் ஆகிய நூல்கள் இவர் காலத்தில் இயற்றப்பட்டு நூலகத்தில் சேர்க்கப்பட்டன.[34]

இம்மன்னர் அவைக்களத்திலிருந்த புலவர்களில் குறிப்பிடத்

தக்கவர்கள் வாசுதேவராயர், முத்துக்கவிராயர், திருச்சிற்றம்பலக் கவிராயர், சொக்கப்புலவர் ஆவர். சொக்கப்புலவர் கும்பகோணப் புராணத்தினையும், முத்துக்கவிராயர் ஷாஜி குறவஞ்சி[35] என்னும் இசை நாடக நூலினையும் எழுதினர். இதில் 'ஷாஜி குறவஞ்சி' தெலுங்கு எழுத்தில் தமிழ்ப் படைப்பாக எழுதப்பட்டதாகும். மேலும், காவேரிக் கல்யாணம், விஷ்ணுசாராஜ விலாசம், சந்திரிகா ஹாஸவிலாசம், பூலோக தேவேந்திர விலாசம், அதிரூபாவதி கல்யாணம், சங்கர நாராயண விலாசம் ஆகிய இசை நாட்டிய நாடகங்கள் இம்மன்னரின் காலத்துப் படைப்புக்களாகும். சகஜி மன்னர், ஔரங்கசீப்பின் படைத் தலைவனான ஜீல்பீர்கான் என்பவனைத் தஞ்சையில் தோற்கடித்த வெற்றிச் சிறப்பைப் புகழ்ந்து திருச்சிற்றம்பலக் கவிராயரும், ராமகவிராயரும் பரணி, பிரபந்தம் போன்று தாழிசை, வண்ணம், சிந்து பாக்களின் வடிவில் நூற்றுக்கணக்கான பாடல்களை இயற்றினார்.[36]

இம்மன்னர் திருவையாறு, குடந்தை, திருவிசைநல்லூர், அம்பாபுரம், கண்டராமாணிக்கம் ஆகிய ஊர்களிலிருந்த பண்டிதர்களையும், ஆந்திர நாட்டுப் பண்டிதர்களையும் வரவழைத்து ஆதரித்தார். இவர்களைக் கொண்டு பல நூல்கள் இயற்றப்பட்டு அந்நூல்களைத் தொகுத்து சரசுவதி மகாலின் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டுள்ளார்.

முதலாம் சரபோஜி (1712-1728)

இரண்டாம் சகஜிக்குப் பின் அவரது சகோதரர் முதலாம் சரபோஜி 1712-இல் ஆட்சிக்கு வந்தார். ஒருசில ஆண்டுகள் வரை தமது சகோதரர் துளஜாவுடன் இணைந்து ஆட்சிப் பொறுப்பேற்றார். இடையில் ஏற்பட்ட பிரிவினையால் துளஜா மகாதேவப் பட்டினத்திற்குச் சென்று தங்கினார் என்று கூறப்படுகின்றது.[37]

முதலாம் சரபோஜியின் பிறப்பும் தஞ்சை மராட்டியர் ஆட்சியும்

மன்னர் ஏகோஜிக்கும் அரசி தீபாம்பாளுக்கும் முதல் மகனாக இரண்டாம் சகஜி கி.பி. 1671-இல் பிறந்தார். இச்சமயத்தில்தான் சத்திரபதி சிவாஜி தென்னாட்டினைக் கைப்பற்றுவார் என்றும் அவருக்கு அவரது தம்பி முதலாம் ஏகோஜி துணையாக இருப்பார் என்றும் பீஜப்பூர் சுல்தான் அல்லியதில்சா எண்ணினார். அக்காலக்கட்டத்தில் மதுரை நாயக்கர் சார்பில் அழகிரி தஞ்சையை ஆண்டுவந்தார். இச்சமயத்தில் தான் பீஜப்பூர் சுல்தான் தமது

படையுடன் ஏகோஜியைத் தஞ்சைக்கு அனுப்பினார். இவர் செங்கமலதாசை 1675-இல் தஞ்சையின் மன்னராக அரியணையில் அமர்த்தினார். ஏகோஜி பெங்களூருக்குத் திரும்பும் வழியில் தமது மனைவி, மகன் சகஜியுடன் திருமழப்பாடியில் தங்கியிருந்தபோது (சகம் 1596 ராட்சச ஆண்டு) இரண்டாவது ஆண் குழந்தை பிறந்தது. இக்குழந்தைக்கு சரபோஜி என்று பெயரிடப்பட்டது. இக்குழந்தையின் முகப்பொலிவைக் கண்ட பெற்றோர், போரில் இவனை எதிர்க்கவந்த எதிரிகள் விட்டில் பூச்சிகளைப் போல் தானே அழிந்து போகும் அளவில் சிறந்த பொலிவை இக்குழந்தை பெற்றிருப்பதால் சரபோஜி என்னும் பெயரை வைத்தனர்.[38]

முதலாம் சரபோஜியின் இளமைப் பருவம்

இளமையில் சரபோஜி தமது தமையன் துக்கோஜியுடன் அரசனாவதற்கான அனைத்துக் கலைகளையும் கற்றுணர்ந்தார். சகுணம், கணிதம், ரத்னப்பரிட்சை, தர்மசாத்திரம், ஓவியம் வரைதல் போன்ற துறைகளில் வல்லவரானார்.

பதின்மூன்று வயதில் அரசுப் பொறுப்பேற்ற சகஜிக்கு அறிவுரை கூறி ஆட்சி செய்தவள் தீபாம்பாள் ஆவாள். சேது மன்னன் கிழவன் சேதுபதி மதுரையை எதிர்த்துப் போரிடத் தஞ்சையின் உதவியைக் கேட்டான். இதற்குப் படையளித்து சகஜி உதவினான். இப்போரில் கிடைத்த வெற்றிக்காகச் சேதுபதி சகஜி மன்னனுக்குப் பாம்பாற்றுக்கு வடக்குப் புறமும் பட்டுக்கோட்டைக்குத் தெற்குப் புறமும் உள்ள நிலப்பகுதிகளை அன்பளிப்பாக அளித்தான். இந்நிலையில் சகஜி தஞ்சையிலும் சரபோஜி சாக்கோட்டையிலும் மகாதேவபட்டினத்தில் துளஜாவும் ஆட்சிசெய்து மூவரும் இணைந்தே தஞ்சையைக் காத்தனர் எனச் செப்பேடு கூறுகின்றது.[39]

கி.பி. 1709-இல் திருச்சி நாயக்கமன்னன் மதுரையின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தான். தஞ்சை மராட்டியரின் வளர்ச்சியை விரும்பாத திருச்சி மன்னன் ராணிமங்கம்மாவிடம் தஞ்சைமீது படையெடுக்கக் கேட்டுக் கொண்டான். தளவாய் நரசப்பையன் திருச்சி மற்றும் புதுக்கோட்டைப் படைகளைச் சேர்த்துக் கொண்டு ஒரேநேரத்தில் அறந்தாங்கிக் கோட்டையையும் திருக்காட்டுப்பள்ளியையும் தாக்கினர். மராட்டியருக்குப் பேரிழப்பு ஏற்பட்டது. இத்தோல்வியால் திருக்காட்டுப்பள்ளி மற்றும் கல்லணை திருச்சி நாயக்கரின் கீழ்வந்தது.[40] அதன்பின் அத்வைத சந்நியாசிகளின்

தொடர்பால் அமைதிகொண்ட சகஜி மன்னர் சரபோஜியை இளவரசனாக்கி, பெயரளவிற்கே மன்னராக இருந்தார். இவரின் மறைவுக்குப் பின் முதலாம் சரபோஜி ஆட்சிக்கு வந்தார். சரபோஜி தமது கடைசிகாலம் வரையில் துளஜாவுடன் இணைந்தே ஆட்சிசெய்தார்.[41]

சரபோஜிக்கு காட்கே வம்ச சுலஷணாபாயி, அபரூபாபாயி, கிர்கே வம்சராஜஸ்பாயி என மூன்று மனைவியர்கள் இருந்தனர். இவருக்குப் பிள்ளைகள் எதுவும் பிறக்கவில்லை. இம்மன்னரது ஆட்சிக்காலத்தில் சில போர்கள் நடந்ததாக அறியமுடிகின்றது.[42]

முதலாம் சரபோஜியின் மறைவு

முதலாம் சரபோஜி தமது 50-வது வயதில் மறைந்தார். இவருடன் மூத்த மனைவி, மூன்றாவது மனைவி மட்டுமே உடன்கட்டை ஏறியதாக அறிய முடிகின்றது.[43] இவருக்குப் பின் இவர் தம்பி துளஜா ஆட்சிக்கு வந்தார்.

இம்மன்னர் காலத்தில் திருக்கடையூரில் அபிராமிபட்டர் என்பவர் வாழ்ந்து வந்தார். இவர் மன்னரின் வேண்டுகோளின்படி அபிராமி அந்தாதி என்னும் நூலினை முழுமை செய்து அளித்தார்.

முதலாம் சரபோஜி இயற்றிய நூல்கள்

முதலாம் சரபோஜி பன்மொழிப்புலமை கொண்டவராகத் திகழ்ந்தார். இசைப்புலமை பெற்றிருந்த இவர் மராட்டியில் பல பதங்களுடன் இயற்றியது 'கோர்வையாஞ்சே சாகித்யாஞ்சே ஜினஸ்' என்னும் நூலாகும்.[44] இந்நூலில் இடம்பெற்றுள்ள சாகித்தியங்களில் 'சரபோந்திர', 'இந்திர' என்ற பட்டப்பெயர்கள் வருகின்றன. இதன் மூலம் இந்திர என்ற பட்டப்பெயர் சரபோஜிக்கே உரியதாகும் எனத் தெரிகிறது.

இராகவசரிதம் என்ற நூலினைச் சரபோஜி எழுதியதாகக் கூறப்படுகின்றது. ஆனால், இந்நூலின் இறுதிப்பகுதியில் சரபோஜி சரித்திரம் இயற்றிய அனந்தநாராயண சாஸ்திரி என்பவர் எழுதியதாகக் குறிப்பு உள்ளது. இவர் காலத்தில் வடமொழி மற்றும் தெலுங்கில் பல நூல்கள் எழுதப்பட்டு நூலகத்தில் சேர்க்கப்பட்டன.

வடமொழி நூல்கள்

ஜெகன்னாத பண்டிதர் என்பவர் இம்மன்னரது அவைக்களப் புலவர்களில் மிகவும் போற்றத்தக்கவர். இவருடைய தீட்சைப் பெயர் உமாநந்தநாதர்[45] என்பதாகும். இவர் தீட்சை பெறுவதற்கு

முன் எழுதிய நூல்கள் 1) ரதிமன்மத நாடகம், 2) சரபராஜ விலாசம், 3) வசுமதி பரிணயம், 4) ஜனன விலாசம்

'இரதிமன்மத நாடகம்'[46] என்ற நூல் தஞ்சை வெண்ணாற்றங் கரையில் அமைந்துள்ள தஞ்சைபுரீசுவரர் ஆலயத்தில் நடைபெற்ற வசந்த விழாவின்போது நடத்தப்பட்டதாக இந்நூலில் குறிப்பிடப் படுகின்றது. இந்நூல் 21.11.1755 இல் பிரதி செய்யப்பட்டதாக இச்சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்புலவரே 'சரபராசவிலாசம்'[47] என்ற இந்நூலினை கி.பி. 1722-இல் எழுதியதாகக் குறிப்பிடுகின்றார். நித்யோத்ஸவ நிபந்தம், பாசுகர விலாசம், ஹ்ருதயாமிருதம் என்பவை இப்புலவரின் மற்றைய நூல்களாகும்.

ஜெகன்னாத பண்டிதர்-2, இப்புலவர் மராட்டிய அந்தணர் வகுப்பில் 'காவலே' வம்சத்தில் தோன்றியவர். ரகுநாத பண்டிதர் இப்புலவரின் பெரிய தந்தையாவார். 'அனங்கவிஜய பாணம்', 'சிருங்கார தரங்கிணீ' என்பவை இவர் இயற்றிய நூல்கள்.

தெலுங்குமொழி நூல்கள்

கிரிராஜகவி

இப்புலவர் மராட்டிய மன்னரான இரண்டாம் சகஜி காலத்திலும் முதலாம் துளஜா காலத்திலும் அவைக்களப் புலவராக இருந்தவர். இவரின் பெண்வழித் தோன்றலே ஸத்குரு ஸ்ரீதியாகராஜ ஸ்வாமிகள். இப்புலவர் இம்மன்னர் காலத்தில் 'லீலாவதி கல்யாணம்'[48] என்னும் நூலினை இயற்றினார்.

இந்நூலில்,

> **கிரிராஜ நுத லீல**
> **சரபோஜி பூபால**
> **சுரதகேலி நன்னு**
> **சொக்க ஜேஸி திவி**

என்னும் முத்திரை இப்பாடலில் காணப்படுகின்றது. எனவே இந்நூல் முதலாம் சரபோஜி அவையில் இயற்றப்பட்டது எனக் கொள்ளலாம்.[49]

இம்மன்னரின் காலத்தவரான சீர்காழி அருணாசலக் கவிராயர் இராமநாடகம் போன்ற தமிழ் இலக்கியங்களை இயற்றினார். ஒப்பிலாமணிப்புலவர் 'சிவரகசியம்'[50] என்னும் நூலினை இயற்றினார்.

முதலாம் துளஜா என்ற துக்கோஜி (1729-1736)

முதலாம் துளஜா துக்கோஜி என்றும் அழைக்கப்பட்டார். சகஜி மன்னரின் கடைசி சகோதரரான துக்கோஜி முதலாம் சரபோஜியின் ஆட்சியின் காலத்தில் மகாதேவபட்டினத்தில் இருந்து வந்தார். இவர் கி.பி.1729-இல் ஆட்சிப் பொறுப்பேற்றார். இவரது ஆட்சிக்காலத்தில் அண்டை நாடுகளுடன் போர் நிகழ்ந்தது. கி.பி. 1734-இல் மதுரையைச் சந்தாசாகிப் தாக்கியபோது ராணி மீனாட்சிக்குத் துக்கோஜி உதவினார்.[51] ஆனால், இப்போரில் திருச்சியைச் சந்தாசாகிப் கைப்பற்றினார். இதனால் தஞ்சையைச் சுற்றி முகலாயர்களின் ஆதிக்கம் அதிகரித்தது. துக்கோஜியின் இறுதிக் காலத்தில் தஞ்சையில் குழப்பமே அதிகரித்தது. கி.பி.1736-இல் துக்கோஜி காலமானார்.[52]

நூலாக்கப் பணிகள்

சிறந்த புலமையும் மருத்துவ அறிவும் கொண்ட இம்மன்னர் மகாதேவப் பட்டினத்தில் இருந்தபோது பல நூல்களை எழுதினார். இம்மன்னர் இந்துஸ்தானி இசையில் 'க்யாஸ்' சங்கீதமுறையில் ஈடுபாடு கொண்டவர். இவர் 'சங்கீத சாராம்ருதம்' என்னும் இசை நூலை உருவாக்கினார்.

இம்மன்னர் அவையில் இருந்த இசைமேதை ஆலூரிகுப்பண்ணா தெலுங்கு மொழியில் 'ஆசார்யவிஜயமு' என்னும் நூலினை இயற்றினார். துளஜா எழுதியதாக ஒன்பது சுவடிகள் சரசுவதி மகாலில் இடம் பெற்றுள்ளன.[53] அவற்றில் 1.நாட்டிய வேதாகம்,[54] 2. சங்கீத சாராமிர்தம்,[55] 3. தன்வந்திரி விலாசம்,[56] 4. தன்வந்தரி சாரநிதி[57] முதலிய வடமொழி நூல்கள் குறிப்பிடும்படியாக உள்ளன.[58]

பாவாசாகிப் என்னும் இரண்டாம் ஏகோஜி (1736-1737)

துக்கோஜியின் மரணத்திற்குப்பின் அவரது மூத்த மகன் பாவாசாகிப் என்ற ஏகோஜி பதவிக்கு வந்தார். இவர் திருமணம் செய்து கொண்ட பெண்கள் ஆறுபேர். இவரின் மூத்தமனைவி சுசான்பாய் ஆவார். இவர் இம்மன்னரின் மறைவுக்குப்பின் இரண்டாண்டுகள் ஆட்சிபுரிந்தார்.

ஏகோஜி தம் தந்தையை மகிழ்விப்பதற்காக வடமொழியில் இருந்த பதிவிரதாதர்மம்,[59] ராஜநீதி[60] போன்ற நூல்களையும் ராஜநீதி பற்றிக் கூறும் ராஜபுத்ரநீதி,[61] அவிசாரரமணீயம் போன்ற

கதைநூல்களையும் மராட்டி மொழியில் எழுதினார். இவையாவும் நூலகத்தில் பாதுகாக்கப் பட்டுள்ளன.

ஏகோஜி ஆட்சிப்பொறுப்பேற்ற நேரத்தில் நாட்டில் பலர் சூழ்ச்சிகளால் அரசைக் கைப்பற்ற முயற்சி செய்தனர். இதனை முறியடிக்க மன்னன் போராட வேண்டியதாகியது. அப்போது இவர் ஒருவரையும் நம்பாமல் பயந்தே வாழ்ந்தார்.

கி.பி.1736-இல் சந்தாசாகிப் திருச்சிக்குச் செல்லும் வழியில் தஞ்சையின்மீது படையெடுத்தான். உடல்நலமில்லாதபோதும் ஏகோஜி தக்கவரைக் கொண்டு உடனிருந்து போரிட்டு தஞ்சையைக் காத்தார். பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதால் ஒரு மந்திரி சபையை ஏற்படுத்தி அதன் அறிவுரைப்படி ஆட்சியை நடத்தச் செய்தார். இவர் தமது 41-வது வயதில் கி.பி.1737-இல் காலமானார்.[62]

இரண்டாம் ஏகோஜியின் நூலாக்கப் பணிகள்

இம்மன்னர் வடமொழி, தெலுங்கு, மராட்டி ஆகிய மொழிகளில் புலமை கொண்டு பல நூல்களை இயற்றி நூலகத்தில் இடம்பெறச் செய்தார். இவர் தமது தந்தையின் அனுமதியுடன் வடமொழியில் 'பிரபஞ்சாம்ருதரசார' என்ற ராஜ தர்மத்தினை விளக்கும் சுமார் இருபது தலைப்புகள் கொண்ட நூலினை இயற்றினார். இந்நூலினை இம்மன்னர் எழுதவில்லை என்றும் இவரது அவைப் புலவர் மகாதேவர் என்பவரே எழுதினார் என்னும் கருத்து உள்ளது என பி.பி.எஸ். சாஸ்திரிகள் தனது வடமொழி அட்டவணையில் கூறுகிறார்.[63]

இதன்படி இந்நூலினை மகாதேவர் வடமொழியில் செய்ததை மராட்டி மொழியில் இம்மன்னர் மொழிபெயர்த்திருக்கின்றார் என்றே அறியமுடிகின்றது. இவர் ஜீவசிவசம்வாதம், அவிசாரர மணியகதை, பதிவிரதாதர்மம் போன்ற நூல்களையும் ஸ்ரீகமலாம்பா தியாகேச பரிணயம், சாகுந்தலம் என்னும் நாடக நூல்களையும் மராட்டி மொழியில் எழுதினர்.[64]

இம்மன்னர் தெலுங்குமொழியில் வால்மீகி இராமாயணத்தினை ஈரடிச் செய்யுள் வடிவில் சுருக்கமாக எழுதினார். இந்நூலே 'த்துவிபதை ராமாயணம்'[65] என்பதாகும். மேலும், இவர் விக்னேஸ்வர் கல்யாணம்[66] என்ற நூலையும், மராட்டி, தெலுங்கு மொழியில் பக்தி நீதி பதங்களையும்[67] இயற்றினார்.

சுசான்பாய் (1737-1739)

இரண்டாம் ஏகோஜிக்கு வாரிசு இல்லாமையால் அவரின் மூத்த மனைவி சுசான்பாய் அரசுப் பொறுப்பை ஏற்றார். மராட்டியர்களின் ஆட்சியில் தஞ்சையை ஆண்ட ஒரே பெண் என்ற பெருமை இவருக்கு உண்டு. மன்னர் இறந்ததால் காட்டுராசா எனப்பட்ட சாகுஜி தானே முறையான வாரிசு எனக் கூறிக்கொண்டு கலகம் ஏற்படுத்தினான். சித்தோஜி, துளஜி, துக்காஜி, சுப்பாரெட்டி ஆகிய அதிகாரிகள் இவருக்கு மறைமுக உதவி செய்தனர்.

இராணுவத் தலைவனும் கில்லேதார் பதவி வகித்தனுமாகிய சையத் இராணுவத்தைச் சாதகமாக்கிக் கொண்டு சுசான்பாயைக் கைதுசெய்ய ஏற்பாடு செய்தான். இந்நிலையில் சுசான்பாய் தானே நேரில் சென்று போரிட்டு மாண்டாள். பின்னர் ஆட்சிக்கு வந்த காட்டு ராசா பிரஞ்சுக்காரர்களுக்குத் தான் வாக்களித்தபடி காரைக்கால் பகுதியை அவர்களுக்கு விட்டுக்கொடுத்தான். காட்டுராசா தஞ்சையின் அரியணைக்கு முறையான வாரிசு இல்லை என்றறிந்த திருச்சி சந்தா சாகிப் அவனைத் தாக்கி கைது செய்தான்.[68] தஞ்சை மக்களின் விருப்பப்படி பிரதாபசிம்மன் கி.பி.1739-இல் அரசரானார்.[69]

பிரதாபசிம்மன் (1739-1763)

இவர் முதலாம் துளஜாவினால் கத்திக்கல்யாணம் செய்து கொண்ட அன்னபூர்ணாபாய்க்குப் பிறந்தவர். இவர் அரியணை ஏறுவதற்கு முன்னிகழ்ந்த அரசியல் குழப்பம் இவரது அரியணை ஏற்றத்தால் முடிவுக்கு வந்தது. இவர் பட்டமேற்றபோது பெரும் செல்வாக்குடன் திகழ்ந்தார். கிழக்கிந்திய கம்பெனியின் இராபர்ட் கிளைவும் மற்றவர்களும் பிரதாபசிம்மரை 'His Majesty' என்றே தங்கள் கடிதங்களில் குறிப்பிடுகின்றனர். ஆங்கிலேயர்கள் தஞ்சை பிரச்சனையில் முதன்முதலாகத் தலையிட்டது இவரின் ஆட்சிக் காலத்தில்தான். கி.பி. 1759-இல் காரைக்கால் பிரஞ்சுக்காரர்களின் உரிமையாயிற்று.

பிரதாமசிம்மருக்கு முன் ஆட்சி செய்தவர்கள் போர் நிகழ்ச்சியின்றி அமைதியாகவும் பின்னர் வந்தவர்கள் ஆங்கிலேயர்களுக்குப் பணிந்தே ஆட்சி செய்தும் வந்தனர். இம்மன்னர் கர்நாடக நவாப்புகள், நிஜாம்கள், கிழக்கிந்திய கம்பெனியார்கள், பிரஞ்சுக்காரர்கள் ஆகியோரின் தாக்குதல்களை

மானோஜியப்பா என்ற தளபதியின் வீரத்தாலும் திறமையாலும் முறியடித்தார்.

இம்மன்னர் சிறந்த பன்மொழிப் புலமை கொண்டவர். இவரின் ஆட்சிக்காலத்தில் சரசுவதிமகால் நன்கு வளர்ச்சியுற்றது. இவர் பதினைந்து நாடக நூல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் குறிப்பிடத் தக்கவையாவன: முத்ராராக்ஷஸம், உமாசம்ஹிதை ஆகியவை வடமொழியிலும் மற்றவை மராட்டியிலும் எழுதப்பட்டவை.[70]

இம்மன்னரின் அவைக்களப் புலவராகச் சிறப்புடன் திகழ்ந்தவர் ரமா பண்டிதர் ஆவார். இவர் இராமாமிருத தரங்கம், ஆத்மவித்யா விலாஸம் டீகா, ஹரிவம்சம், தஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம், விநாயக மகாத்மியம், தியாகராஜ மகாத்மியம், பிரஹ்லாத சரித்திரம், உஷாபரிணயம், ஹரிச்சந்திர கதை, சிவராத்திரி நாடகம், சீதா கல்யாணம் ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

இவருடைய அவையில் இருந்த நாட்டிய மங்கை முத்துப்பழனி என்பவளாவாள். இவள் சிறந்த கவிஞராகவும் விளங்கினாள். இவள் மன்னரின் வேண்டுகோளிற்கேற்ப 'ராதிகா ஸ்வாந்தமு' என்ற நூலினை எழுதி மன்னருக்குரியதாக்கினாள். இந்நூல் தற்போது சரசுவதிமகாலில் இடம்பெறவில்லை.[71]

இரண்டாம் துளஜா (கி.பி. 1763-1787)

பிரதாபசிம்மருக்குப்பின் அவரது மகன் இரண்டாம் துளஜா 18.12.1763-இல் மன்னரானார்.[72] இவருடைய ஆட்சிக்காலத்தில் மூன்று பெரும் போர்களைச் சந்திக்க வேண்டியதாயிற்று. அதன் விளைவாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியுடன் இவர் மூன்று முறை ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டியதாயிற்று.

இவர் பட்டத்துக்கு வந்தவுடன் தமது தந்தை இழந்த இராமநாதபுரம் பகுதிகளைத் திரும்பப்பெறும் எண்ணத்துடன் மறவர்களிடையே நடந்த வாரிசுப் போட்டியில் தலையிட்டார். மறவர்கள் கர்நாடக நவாப்பின் ஆளுகையில் இருந்ததால் துளஜாவின் இச்செயலை விரும்பாத நவாப்பின் படைகள் தஞ்சையைத் தாக்கின. இந்நிலையில் துளஜா ஆங்கிலேயர்களுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டியதாயிற்று. ஒப்பந்தப்படி நவாபுக்கு இருபது இலட்சம் கப்பம் கட்டவும் ஆங்கிலேயருக்கு

அனுமந்தக்குடி, ஆரணி ஆகிய பகுதிகளை விட்டுக்கொடுக்கவும் நேர்ந்தது.

கப்பத்தொகையின் தவணை தவறியதால் நவாப் ஆங்கிலேயரின் உதவியுடன் 1773-இல் தஞ்சையைத் தாக்கி துளஜாவைச் சிறைபிடித்தனர். தஞ்சை 1773-இல் இருந்து 1776 வரையில் நவாப்பின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது.[73]

ஆங்கிலேயருடன் துளஜா 1776-இல் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். இதற்கு நாகூர் உடன்படிக்கை என்று பெயர்.[74] அதன்படி கம்பெனியாருக்கு 277 கிராமங்களை எழுதிக் கொடுத்தார். தஞ்சைக் கோட்டையில் ஆங்கிலேயப் படைகள் அமர்த்தப்பட்டன.

துளஜா மீண்டும் மன்னரானாலும் ஆங்கிலேயரின் உதவியுடனேயே ஆட்சி நடத்த வேண்டிய சூழல் ஏற்பட்டது. இவர் கப்பத்தொகையைப் பணமாகச் செலுத்த முடியாத போது அதற்குப் பதில் தானியமாக குடந்தை, மன்னார்குடி பகுதியிலிருந்து கொடுத்தார். 1782 இல் திப்பு சுல்தான் படை ஆங்கிலேயப் படையைத் தோல்வியுறச் செய்து மாயூரம், சீர்காழிப் பகுதிகளைக் கைப்பற்றினர். துளஜா ஆங்கிலேயருடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி ஆங்கிலேயப்படை தஞ்சையில் நிறுத்தப்பட்டது. இவரின் காலத்தில் நூலாக்கப்பணியும் நூலகப்பணியும் நடைபெற்றதற்கான சான்றுகள் எதுவும் இல்லை. மேலும், மன்னரின் உடல்நிலையும் நாட்டின் அரசியல் நிலையும் அதற்கு இடம் தரவில்லை. இவரின் காலத்தில் ஏற்பட்ட போரில் சரசுவதி மகாலினைப் பகைவரின் தாக்குதலிலிருந்து நூலகராகப் பணியாற்றிய தாதாராவ் என்பவர் காத்ததாகப் பின்னாளில் ஒரு கதை எழுதப்பட்டுள்ளது.[75]

1787-இல் துளஜா மன்னரின் இறப்புக்குப்பின்னர் அவரின் வளர்ப்பு மகன் இரண்டாம் சரபோஜி அரியணை ஏறுவதை விரும்பாத அமரசிம்மர் பாதுகாவலர் என்ற நிலையில் அரியணை ஏறினார்.

அமரசிம்மர் (1787-1798)

அமரசிம்மர் 7.4.1787-இல் பட்டம் எய்தினார். இரண்டாம் சரபோஜிக்குப் பாதுகாவலராய்ப் பொறுப்பேற்றுப் பட்டமேற்றவர் நாளடைவில் தாமே அரசரானார்.[76] தமது அரசுரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள அந்நாளைய கவர்னர் லார்ட்

காரன்வாலிசுக்குக் கடிதம் அனுப்பினார். அதன்படி காரன்வாலிசு தஞ்சைக்கு வந்து 12 பண்டிதர்களின் கருத்தினைக் கேட்டறிந்தார். அவர்களின் கருத்துப்படி இரண்டாம் சரபோஜியைத் துளஜா மன்னர் தத்து எடுத்தது செல்லாது என அறிவிக்கப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனியாருக்குக் கொடுக்க வேண்டிய தொகை பாக்கி இருந்ததால் அவர்கள் அமரசிம்மரிடம் 1790-இல் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஒப்பந்தப்படி கம்பெனியாரே நிலவரி வசூலை ஏற்றுக் கொண்டனர்.

துளஜா தமது காலத்திலேயே சுவாட்ஸ் பாதிரியாரைச் சரபோஜியின் பாதுகாவலராக நியமிக்க எண்ணினார்.[77] ஆனால் அமரசிம்மர் தாமே பாதுகாவலர் என்ற நிலையில் ஆட்சிப் பொறுப்பேற்றார். சுவாட்சு பாதிரியாரின் பாதுகாப்பில் வளர்ந்த இரண்டாம் சரபோஜி ஆங்கிலம், பிரஞ்சு மொழிகளில் மிகவும் புலமை பெற்றார். இவர் தாமும் தம்முடைய இராணிகளும் அமரசிம்மரால் கொடுமைக்குள்ளாவதாகவும் 1793-இல் நடந்த விசாரணை முறையாக நடத்தப்படவில்லை என்றும் சுவார்ட்சு பாதிரியாரின் உதவியால் காரன்வாலிசு பிரபுக்குக் கடிதம் எழுதினார். 1798-இல் மீண்டும் விசாரணை செய்யப்பட்டு அமரசிம்மர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு இரண்டாம் சரபோஜிக்கு முடிசூட்டப்பட்டது.

பின்னர், அமரசிம்மர் திருவிடைமருதூரிலேயே வாழ்ந்து 1802-இல் அங்கேயே மரணமடைந்தார். இவருக்கு கிருஷ்ணம்மா, பார்வதிபாய், பவானிபாய் என்ற மூன்று மனைவியர்கள் இருந்தனர்.[78] இம்மன்னரின் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்தவர். கவிஞர் மாத்ருபூத கவி. இவர் பாரிஜாத பஹரணம், திரிசிராகமுத்ரா ஆகிய நூல்களை இயற்றினார். இவரின் ஆட்சிக் காலத்தில் குறிப்பிடும் படியாக நூலகப்பணி அமையா விட்டாலும் முந்தைய மன்னர்கள் சேர்த்து வைத்த நூல்கள் அழிந்து போகாமலும் ஒருசில இலக்கியங்களை உருவாக்கக் காரணமாகவும் இருந்தார் என்பது தெளிவு.

தஞ்சையில் நாயக்கர் ஆட்சி முடிவுற்ற பின்னர் ஏற்பட்ட மராட்டிய போசள வம்ச மரபினரின் ஆட்சி குறிப்பிடத்தக்க ஒன்றாகும். 'ஏகராஜ மகாராஜ' என அழைக்கப்பெற்ற ஏகோஜி கி.பி.1676-ஆம் ஆண்டு ஆட்சிப்பொறுப்பை ஏற்றது முதல் இயல், இசை, நாடகக் கலைகளை வளர்ப்பதில் பெரிதும் ஆர்வம் கொண்டு

விளங்கினார். கலை இலக்கிய நூலாக்கத்திலும் இவர் பெரும் பணிகளைச் செய்துள்ளார். இவருக்குப் பின் கி.பி. 1684-இல் ஆட்சிப் பொறுப்பேற்ற இவருடைய மூத்த மகன் இரண்டாம் சகஜியின் நூலகப்பணிகளும் குறிப்பிடத்தக்கனவாம். கி.பி. 1712-இல் ஆட்சிக்கு வந்த முதலாம் சரபோஜி நூல்களை இயற்றுவதிலும், புலவர்களை ஆதரிப்பதிலும், பல நூல்களை உருவாக்கி நூலகத்தில் சேர்ப்பதிலும் மிகுந்த ஆர்வங் கொண்டு பணியாற்றியுள்ளார். இவரை அடுத்து ஆட்சிக்கு வந்த முதலாம் துளஜாவும் *(1729-1736)* சிறந்த புலமையும் மருத்துவ அறிவும் கொண்டு பல நூல்களை இயற்றியும் பல நூல்களைப் பாதுகாத்தும் நூலகத்தினை வளர்த்துள்ளார். இவ்வாறே இரண்டாம் ஏகோஜி, இரண்டாம் துளஜா ஆகிய மராட்டிய ஆட்சியாளர்களின் நூலகப்பணிகளும் மிகவும் குறிப்பிடத்தக்கன.

மேற்கோள் சான்றுகள்

1. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 12.
2. மேலது, பக். 1.
3. வ. வேணுகோபாலன், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், ப.113.
4. மேலது, ப. 114.
5. வ. வேணுகோபாலன், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், ப.115.
6. செ.இராசு, மராட்டியர் செப்பேடு 50, பக். 7, 121, 135, 140.
7. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டியர் வரலாறு, ப. 11.
8. போன்ஸ்லே வம்ச சரித்திரம், ப. 79.
9. ஆ.மீனாட்சி, தஞ்சை மராட்டியர் ஆட்சியில் மேலைநாட்டினர் தாக்கம், ப. 9.
10. சுவடி எண். D 50.
11. என்.விஸ்வநாதன், பேட்டி.
12. என்.விஸ்வநாதன், பேட்டி.
13. என்.விஸ்வநாதன், பேட்டி.
14. N. Viswanathan, The Five Marathi Dance Dramas, p. 14.
15. சுவடிஎண் D 589; 590.
16. சுவடி எண் D 591.

17. வ. வேணுகோபாலன், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், ப.120.
18. மேலது, பக். 121.
19. வ. வேணுகோபாலன், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், ப.122.
20. Indian Antiquary, 1904, p. 184.
21. வ.வேணுகோபாலன், தஞ்சை மன்னரும் சரசுவதி நூலகமும், ப. 125;
O.A. நாராயணசாமி, சரசுவதிமகாலும் தஞ்சை வரலாறும், ப.35.
22. சுவடி எண் 8244.
23. சுவடி எண் 7295.
24. சுவடி எண் 5011.
25. சுவடி எண் 5301, 5303, 5324, 5325.
26. சுவடி எண் 4511.
27. சுவடி எண் 11763.
28. சுவடி எண் 7592.
29. சுவடி எண் 7593.
30. சுவடி எண் 7594.
31. சுவடி எண் 11001.
32. வ. வேணுகோபால், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், ப.129.
33. சுவடி எண் 4239.
34. வ. வேணுகோபால், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், ப. 133.
35. சுவடி எண் D 528 (a).
36. வ. வேணுகோபால், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், ப.134.
37. போன்சலே வம்ச சரித்திரம், ப. 88.
38. என்.சீனிவாசன், 'முதலாம் சரபோஜியும் அவர்காலத்து நூல்களும்', JTMSSML, Vol. 35, No. 1-3, p.2.
39. செ. இராசு, மராட்டியர் செப்பேடுகள் 50, ப. 31.
40. S. Radhakrishna Aiyar, A General History of Pudukkottai State, p.147; K.R. Subramanian, The Maratha Rajas of Tanjore, p. 26.
41. ந. சுப்ரமணியன், தமிழக வரலாறு (1565-1982), ப. 66.

42. மேலது, ப. 68.
43. என்.சீனிவாசன், 'முதலாம் சரபோசியும் அவர்காலத்து நூல்களும்', JTMSSML, Vol. 36, No. 1-3, p. 23.
44. என்.சீனிவாசன், 'முதலாம் சரபோசியும் அவர்காலத்து நூல்களும்', JTMSSML, Vol. 36, No. 1-3, p. 23.12.
45. இவர் ஸ்ரீவிட்யா என்னும் சக்திவழிபாட்டு நெறியைப் பின்பற்றியதால் தீட்சாநாமமாக உமாநந்தநாதர் என்று வைத்துக் கொண்டார்.
46. சுவடி எண் D.4188, J.L.646.
47. சுவடி எண் D 4241.
48. சுவடி எண். 630, D. 587.
49. என்.ஸ்ரீநிவாசன், 'முதலாம் சரபோஜியும் அவர்காலத்து நூல்களும்', JTMSSML, Vol. 136, No. 1-3, p. 1-24.
50. சுவடி எண் 970.
51. ஓ.ஏ.நாராயணசாமி, சரஸ்வதிமகாலும் தஞ்சை வரலாறும், ப.38.
52. ந.சுப்ரமணியன், தமிழக வரலாறு (1565-1982), ப. 66.
53. சரசுவதிமகால் வழிகாட்டி நூல், ப. 37.
54. சுவடி எண்: D 10671.
55. சுவடி எண்: D 10786.
56. மேலது, D 11066.
57. மேலது, D 11069.
58. Descriptive Catalogue of Sanscrit Manuscripts in TMSSML, Vol. 19, p. XXXIX.
59. சுவடி எண். 3050, D 3294.
60. சுவடி எண் 3048, D 3296
61. சுவடி எண் 2932, D 3351.
62. K.R.Subramanian, The Maratha Rajas of Tanjore, p. 43.
63. This author was the son of Tukkoji I, Maharaja of Tanjore and Kumaramba (Raja Kumaramba) and ruled the kingdom of Tanjore for one year between 1735-1736. He is otherwise known as Bava sahib. A work by name Parapancanrthasara both Marathi and Sanskrit is attributed him. The work is a compendium of many small chapters dealing with various topics. One of the colophans to one of the many mss of this work given below contains the

name of the Mahadeva as the author". - D.No. *18909/7655* பிரபஞ்சாம்ருதா பரபிர்மநிரூபணம்.

64. டி.ஆர்.பீமாராவ், 'மன்னர் ஏகோசி', JTMSSML, Vol. 36, No.1-3,p.8.
65. சுவடி எண் 352.
66. சுவடி எண் 606.
67. சுவடி எண் 440, 411, 458.
68. ஒ.ஏ.நாராயணசாமி, சரஸ்வதிமகாலும் தஞ்சை வரலாறும், பக். 41.
69. K.R.Subramanian, The Maratha Rajas of Tanjore, p. 45.
70. வ.வேணுகோபாலன், தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும், ப.138.
71. மேலது, ப. 139.
72. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், ப. 23.
73. K.R.Subramanian, The Maratha Rajas of Tanjore, p. 61.
74. ந.சுப்ரமணியன், தமிழக வரலாறு (1565-1982), ப. 75,
75. S.Gopalan,'Who is the Victor?:An Episode in Tanjore History in the year 1773 relating to Saraswathi Mahal', JTMSSML, Vol. 6, No. I pp. 18-27.
76. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 27.
77. ஜெ.துரைராசு, 'சரபோசியும் மேநாட்டவரும்', மாமன்னன் சரபோசியின் 221-ஆம் பிறந்த நாள் விழாக் கருத்தரங்கம், பக். 2.
78. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 27.

4. இரண்டாம் சரபோஜியின் நூலகப் பணிகள்

தஞ்சை மராட்டிய மன்னர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர் இரண்டாம் சரபோஜி ஆவர். முந்தைய மராட்டிய மன்னர்கள் பலரும் நூலகப் பணிகளில் ஈடுபாடு கொண்டவர்களேயாயினும், 'தஞ்சை நூலகம்' என்றாலே முதலில் நினைவுக்கு வருபவர் இரண்டாம் சரபோஜியே ஆவார். மராட்டிய மன்னர்களின் கலை, பண்பாட்டு ஆர்வங்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர் இவர். இவ்வியலில் உலகப் புகழ்பெற்ற இரண்டாம் சரபோஜியின் நூலகப்பணிகள் பற்றி ஆராயப் பெறுகின்றன.

இரண்டாம் சரபோஜி (1798-1832)

ஆங்கிலேயரின் தலையீட்டால் *1798*-இல் அமரசிம்மருக்குப் பதிலாக ஆட்சிப் பொறுப்பேற்ற சரபோஜியின் ஆட்சி ஓராண்டு மட்டுமே நீடித்தது. *25.10.1799* இல் தஞ்சையின் ஆட்சியுரிமையைக் கிழக்கிந்திய கம்பெனியார் எடுத்துக் கொண்டனர்.[1] அதற்குப் பதிலாக மன்னருக்கு ஓய்வூதியமாக ஆண்டுக்கு மூன்று இலட்சமும், அரசின் வருவாயில் ஐந்தில் ஒரு பங்கும் அளிக்கப்பட்டன. சரபோஜி பெயரளவிலேயே மன்னராக நியமிக்கப்பட்டார்.[2] அரசின் நிர்வாகப் பொறுப்பு இல்லாததால் தாம் பெற்ற ஆங்கில அறிவின் காரணமாகப் பல நூல்களைப் படித்து மேலைநாட்டு முறையில் கலைகளை வளர்ப்பதிலும் நூலகத்தினைப் போற்றிக் காப்பதிலும் இவர் தமது வாழ்நாளினைக் கழித்தார்.

சரபோஜியின் இளமைக்காலம்

செர்மனியரான சுவார்ட்ஸ் பாதிரியார் தரங்கம்பாடியில் *11* ஆண்டுகளும் பின்னர் திருச்சியிலிருந்தும் சமயப்பணி புரிந்தார். *1769*-இல் தஞ்சைக்கு வந்து தமது பணியை மேற்கொண்டார். மன்னர் துளஜாவிடம் மிக நெருக்கமான நட்புக்கொண்ட இவர், பாரசீகம், உருது, மராட்டி ஆகிய மொழிகளில் வல்லவர்.[3] சுவார்ட்ஸ், மன்னரின் ஆதரவுடன் *1784*-இல் சுலுவியன் (Sullivan, The British Resident) என்ற ஆங்கிலேயரின் வேண்டுகோளினை ஏற்று

தஞ்சையில் ஒரு ஆங்கிலப் பள்ளியைத் தொடங்கினார். இது இந்தியாவில் இந்தியர்களுக்கு ஆங்கிலக் கல்வியைக் கற்பித்த பள்ளியாகும்.

சரபோஜியை சுவீகாரம் எடுத்துக்கொண்ட துளஜா 1787-இல் இறக்கும் தருவாயில் "பாதிரியாரே, உம்மிடத்தில் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. காரணம் காசு பணத்தினால் உங்களிடத்தில் ஒன்றும் செய்ய முடியாது. இவன் உங்களது மகன், இவனை உமது கையில் ஒப்படைக்கின்றேன்" என்றார். இவரது ஆதரவில் வளர்ந்த சரபோஜிக்கு அப்போது வயது 10. 1793 முதல் 1797 வரையில் சென்னையில் ஹாலே கல்வியை (Halle curriculam) வில்லியம் கிரிக் (William Gericke) அவர்களின் மூலமாகப் பெற்றார். (Madras Civilian Orphan Asylum). சுவார்ட்சிடம் ஆங்கிலம், செர்மன், பிரஞ்சு போன்ற மொழிகளையும் மேலைநாட்டுப் பண்பாடு மற்றும் நாகரிகத்தினையும் கற்றுக் கொண்டார்.

1790-இல் சரபோஜி பள்ளிக்குச் செல்லும்போது மேலைநாட்டு ஆங்கிலக் கல்வி இந்திய மேட்டுக்குடியினருக்கு எளிதாகக் கிடைக்கும் நிலையில் இல்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை ஐரோப்பியக் கல்வி பெறுவது பெருமையாகவும் கருதப்படவில்லை. எனவே, 1800-1826 இல் தென்னிந்தியாவுக்கு வருகை தந்த மேனாட்டினர் தஞ்சை மன்னரைச் சந்தித்து அவர்களின் குறிப்புக்களைப் பதிவு செய்தனர்.

சரபோஜியின் சுவீகாரம் பற்றித் தஞ்சையில் 12 பண்டிதர்களிடம் விசாரிக்கப்பட்டபோது சுவார்ட்ஸ் தஞ்சையில் இருந்தார். பல பண்டிதர்கள் இவரிடம் தங்களின் செயலுக்காக வருத்தம் தெரிவித்தனர். மேலும், ஆட்சிப் பொறுப்பேற்க சரபோஜி தஞ்சைக்குப் புறப்பட்டு வருகின்றார் என்பதனைத் தெரிவித்தவர் சுவார்ட்ஸ் ஆவார்.[4]

மேனாட்டினர் வருகை

சரபோஜி மன்னரின் ஆட்சிக்காலத்தில் பல மேனாட்டினர் தஞ்சைக்கும் அவர் நடத்திய பள்ளிகளுக்கும் வருகைபுரிந்து தங்களின் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர். அவற்றின் வாயிலாக மன்னரின் கல்விப்பணி, இலக்கியப்பணியுடன் இணைந்த நூலகப்பணி மற்றும் அவரின் ஆங்கிலப் புலமையையும் நாம் அறிய ஏதுவாகின்றது. அவ்வாறு வந்தவர்களில் லார்டு

வாலண்ஷியா (Lord Valentia), பிஷப் ஹீபர் (Bishop Heber), சென்னை கவர்னர் கேப்டன் சால்மினார் (Chalminar), கமாண்டர் ஹிசி (Hessie), கேப்டன் ஜான் பிபியி (Fife), ஜான் பிளாக் பர்ன் (John Block Burn), ஆர்ச்டிகான் ராபின்சன் (Archdeacon Robinson), கோல்காப் (Kolhoff) போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

சரபோஜியின் ஆட்சி

இவரது ஆட்சி போரின்றி அமைதியானதாகவும், அண்டை நாடுகளோடு நல்லுறவுடனும் அமைந்தது. நாட்டின் நிர்வாகத்தினையும் பாதுகாப்பினையும் ஆங்கிலேயர்களே பார்த்துக் கொண்டதால் மன்னர் தமது முழு நேரத்தினையும் கல்விப்பணி, இலக்கியப்பணி, கலைப்பணி, நூலகப்பணி ஆகியவற்றில் கழித்தார்.

சரபோஜியின் ஆங்கிலப் புலமை

இளமையில் மதப்போதகர் சுவாட்ஸ் பாதிரியாரின் ஆதரவில் வளர்ந்த மன்னர் ஆங்கிலம் கற்பதில் அதிக ஆர்வம் காட்டினார். ஐரோப்பிய இலக்கிய அறிவைப் பெருக்கிக்கொள்ள பெருமுயற்சி மேற்கொண்டார். அரண்மனைக்கு வருகை தந்த வாலண்ஷியா, மன்னர் பேசிய ஆங்கிலம் தமக்குத் திருப்திகரமாக இருந்ததாகவும், இந்தியாவில் முதன்முறையாக மொழிபெயர்ப்பாளர் இல்லாமல் இந்த மன்னரிடம் பேசியதாகவும், அவர் தன்னிடம் நடந்துகொண்ட விதமே மிகவும் போற்றும்படியாக இருந்ததாகவும் குறிப்பிடுகின்றார்.[5]

இவருக்குப் பின் வருகைபுரிந்த பிஷப் ஹீபர், ஷேக்ஸ்பியரின் கவிதை மதிப்பினைக் கணிப்பதில் பைரனைவிட இவர் மிகச் சிறந்தவராக விளங்கினார் என்றும் பல இடையூறுகளுக்குள்ளும் தமது படித்தல் என்னும் பழக்கத்தினை கைவிடவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.[6] மேலும், அவர் ஐரோப்பிய இலக்கியங்களைப் படிப்பதில் நாட்டம் கொண்டதால் தமது புகழினை மக்களிடையே பரப்புவதற்கு வாய்ப்பாகத் தமது இலக்கிய அறிவினைப் பயன்படுத்திக் கொண்டார் என்றும் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய இலக்கியப் புலமை கொண்ட மன்னர் பலவகை இலக்கிய நூல்களைச் சேகரித்து நூலகத்தினை வளர்த்தார்.

சரபோஜியின் கல்விப்பணி

மராட்டியர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் தஞ்சையில் அனைவருக்கும் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றே கூறலாம். அப்படியும் படித்தவர்கள் இருந்தால் அவர்கள் வேதங்களைக் கற்ற அந்தணர்களாயிருந்தனர். அவர்களுக்கு வேதம் படிக்க அக்கிரகாரத்தில் வசதிகள் இருந்தன.

தஞ்சையில் நாயக்க மன்னர்கள் ஆட்சிக்கு வருமுன்னர் முகமதியர்கள் ஆட்சி செய்ததால் இந்துஸ்தானி, அரபுமொழி வழக்கத்திற்கு வந்தது. நாயக்கர் காலத்தில் தெலுங்கும், மராட்டியர் காலத்தில் மராட்டியும் ஆட்சிமொழியாக்கப்பட்டன. இம்மொழிகள் தமிழுடன் சேர்ந்து வளர்ச்சியடைந்தன.

பள்ளிகள்

சரபோஜி மன்னர் ஆட்சிக்கு வரும்போது ஆங்கிலப்பள்ளிகள் மிகவும் அரிதாக இருந்தன. அவை வெவ்வேறு நாட்டினைச் சேர்ந்த கிறித்துவ மடங்களின் கட்டுப்பாட்டில் நடத்தப்பட்டன. கிழக்கிந்திய கம்பெனியாரின் கல்விமுறையும் முறையாக வளர்க்கப்படவில்லை. இந்தியாவில் முறையான கல்லூரி எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை என்றே கூறலாம்.[7]

மன்னர் சரபோஜியின் முக்கிய சாதனைகளுள் ஒன்று கல்விநிலையங்களைத் தஞ்சையிலும் அதன் சுற்றுவட்டாரங்களிலும் அமைத்ததாகும். அவ்வாறு அவர் மூன்று விதமான கல்லூரிகளை அமைத்தார். 1)மேற்கத்திய கல்வி அளிப்பதற்காக, 2) கீழ்த்திசைக் கல்விக்காக, 3)அறிவியல் மற்றும் மருத்துவக் கல்விக்காக என கல்வி நிறுவனங்களை ஆரம்பித்தார்.[8]

நவவித்யா கலாநிதிசாலா

தஞ்சை நகரில் மராட்டிய மன்னர்களால் ஆரம்பிக்கப்பட்ட சர்வ வித்யா சாலா என்ற கல்விநிலையம் மன்னர் சரபோஜியினால் நவவித்யா கலாநிதிசாலா எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு வளர்ச்சியுற்றது. கி.பி.1785-இல் இப்பள்ளியில் 85 பேர் வேதம் கற்றனர். இங்கு ஆறு மொழிகளில் 385 மாணவர்கள் படித்தனர் என அறியமுடிகின்றது.[9]

இப்பள்ளியில் பெண்களும் ஆசிரியர்களாக இருந்து பாடம் சொல்லித் தந்தனர் என்பதனை,

> **நவவித்யா கலாநிதி பள்ளிக்கூடத்தில் சித்திரக்காரி செங்கம்மாளுக்கு மாதத்திற்கு 4 சக்கரம் சம்பளம்**[10]

என்று கூறும் மோடி ஆவணக்குறிப்பால் அறியமுடிகின்றது.

இந்த வித்யாசாலா என்ற கல்விக்கூடம் சரசுவதி பண்டாரத்தில் தான் இருந்தது என்பது,

> **சரஸ்வதி பண்டாரத்தில் நவவித்யா கலாநிதி சாலைக்கு இங்கிலீஷ் பள்ளிக்கூடத்துக்கு . . .**
>
> **சரஸ்வதிபண்டாரம் திம்மதி சேனாதுரந்தர ராமையா வராஹப்பையா சகம் 1771 கொடுத்த சீட்டு, மேற்கண்ட மகால் நவவித்யா கலாநிதிசாலைக்கு மாத நிஷ்பத்தி 18ஆம் பெருக்காக . . .**[11]

என்ற மோடி ஆவணச் சான்றுகளால் உறுதி செய்யப்படுகின்றது. இக்கல்வி நிலையத்திலேயே ஒரு அச்சகமும் நிறுவப்பட்டுப் பாட நூல்களும் அச்சிடப்பட்டன. கல்விநிலையங்கள் தொடர்பாக அனைத்துப் பணிகளையும் சரசுவதி பண்டாரம் வரகப்பையரே கவனித்தார் என்பதும் புலனாகின்றது.

> **சரஸ்வதி பண்டார் நாலு வீதிகளிலுள்ள தமிழ்ப் பள்ளிக் கூடங்களுக்கு பொங்கலுக்காக வழக்கப்படி தேங்காய் 150, வாழைப்பழம் 300, கரும்பு 25, பரங்கிக்காய் 6, பூசணிக்காய் 6 இவைகளைக் கொடுக்கிறது**[12]

போன்ற குறிப்புகளாலும் இந்நூலகச் செயல்பாடுகளை அறியலாம்.

முக்தாம்பாள் சத்திரப்பள்ளி

ஒரத்தநாட்டில் மன்னர் சரபோஜியால் அமைக்கப்பட்டிருந்த சத்திரத்தில் ஒரு பள்ளியும் நடத்தப்பட்டது. இப்பள்ளியைப் பற்றி, "முக்தாம்பாள் சத்திரத்தில் இருந்த பள்ளியில் 4 வேதங்களும், தர்க்கம், வியாகரணம், மீமாஞ்சை, வேதாந்தம், காவியம், ஆங்கிலம், மராட்டி, பார்சி, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளும் கற்பிக்கப்பட்டன. இச்சத்திரத்தில் 435 பேர் படித்தார்கள். அதில் தமிழ் கற்றவர்கள் 193 பேர்"[13] என்று கே.எம்.வேங்கடராமையா மோடி ஆவணக் குறிப்பினைக் கொண்டு குறிப்பிடுகின்றார். இப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குப் படிப்பதற்காகச் சுவடிகள் சரசுவதி பண்டாரத்திலிருந்தே பெறப்பட்டன.

"முத்தாம்மாபுரம் மன்ன சத்திரத்தில் வித்யார்த்திக்கும் பாடம் சொல்ல மணிசப்தகாண்டம் அதன் வியாக்னமும் மதுரா நாதீய புத்தகம் ஸரஸ்வதி பண்டாரிலிருந்து கொடுத்து வாங்க உத்திரவு செய்ய வேணும்"[14] என்ற மோடி ஆவணக்குறிப்பால் இது உறுதி செய்யப் படுகின்றது. இதனைப் போன்றே பிற பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் ஆசிரியர்கள் பயன்படுத்துவதற்காகப் பல சுவடிகளில் இருந்து பல படிகள் எடுக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்க வேண்டும்.

கல்வி மான்யங்கள்

மன்னர் சரபோஜி அரசின் நேரடிப்பார்வை இல்லாமல் பல அமைப்புக்கள் நடத்திய பள்ளிகளுக்கும் மானியங்களை வழங்கி இலவசக் கல்வியை அனைவரும் பெறச்செய்தார். அவ்வகையில் பெண்களுக்காகக் கிறித்தவ மடத்தினரால் கருந்தட்டான்குடியில் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிக்கு மான்யம் வழங்கினார்.[15] சத்திரங்களுடன் பாடசாலைகளையும் இணைத்து கிராமக் குழந்தைகளுக்கு இலவசக் கல்வியை வழங்கினார்.

1808-இல் தரங்கம்பாடி டேனிஷ்காரர்களின் கோட்டையை ஆங்கிலேயர்கள் எடுத்துக்கொண்டபோது அங்கிருந்த டேனிஷ் மிஷின் பள்ளி பராமரிப்பில்லாமல் அழியும் நிலை ஏற்பட்டது. மன்னர் அய்யாபடி என்ற கிராமத்தினை அன்பளிப்பாக அளித்து அப்பள்ளியை நடத்தச் செய்தார்.

நீடாமங்கலம், திருவாரூர், முக்தாம்பாள்புரம் போன்ற இடங்களில் மத்தியஸ்தார்என்ற கண்காணிப்பாளர்களின் கட்டுப்பாட்டில் சத்திரங்கள் இயங்கின. திம்மதியர் என்ற கீழ்நிலையில் உள்ள அலுவலர்கள் பள்ளி மற்றும் மாணவர்களின் விடுதிகளைப் பார்த்துக் கொண்டனர்.

பாடநூல்கள் தயாரிப்பு

மன்னர் பள்ளிக் குழந்தைகளுக்காக ஆங்கிலத்தில் அச்சிடப்பட்ட 'Aesop's Fables' என்ற நூலினை இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கச் செய்தார். மேலும், பூகோளத்தினை எளிமையாக மாணவர்கள் அறிந்துகொள்ள, 'தேவேந்திர குறவஞ்சி' என்ற நூலைப் பாடச்செய்தார்.

சென்னை கவர்னரின் வேண்டுகோளின்படி கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரைத் தமிழ்ப் பேராசிரியராகச் சென்னையில் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிக்கு அனுப்பி வைத்தார்.

தஞ்சை வடக்குவீதியில் உள்ள 'மாஸ்டர் ராம்' என்ற பள்ளிக்கட்டிடம் சரபோஜி மன்னரால் கட்டப்பட்டதாகும்.

மன்னரின் கல்வி நிலையங்களைப் பார்வையிட்ட பல மேனாட்டினர் "Rajahs Several Colleges" என்று குறிப்பிடுவதால் பல கல்லூரிகள் இருந்தமை விளங்குகின்றது.

இவ்வாறு சரபோஜி தமது ஆட்சிக்காலத்தில் கல்வி நிலையங்களோடு நூலகங்களையும் இணைத்துக் கல்விப் பணியையும் நூலகப் பணியினையும் மேற்கொண்டார்.

சென்னைப் பல்கலைக்கழகம் சரபோஜி மன்னர் இறந்து 26 ஆண்டுகள் கழித்து 1857-இல் ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இம்மராட்டிய மன்னர்களுக்குப் பின்னர் வந்த ஆங்கிலேயர்களால் ஆங்கிலம் முழுமையாகப் பழக்கத்திற்கு வந்தது. எனவே, வடமொழி, தெலுங்கு, உருது, மராட்டி, ஆங்கிலம், தமிழ் ஆகியன தமிழ்நாட்டில் உறவாடி வளர்ந்தன என்பது தெளிவு. மராட்டியர்களின் காலத்தில் தஞ்சை தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஓர் உதாரணமாக விளங்கியது.

சரபோஜியின் கல்வெட்டு

மன்னர் சரபோஜி முதல்முறையாகத் தஞ்சை மராட்டிய மன்னர்களின் வரலாற்றினையும், தங்களின் மூதாதையர்களான மராட்டிய மாமன்னன் வீரசிவாஜி மற்றும் முக்கியமானவர்களின் வரலாற்றினையும் சேர்த்து தஞ்சை பெரியகோயிலின் சுவர்களில் பதிக்கச் செய்தார்.[16] மராட்டி மொழியில் உள்ள இவ்வரலாற்றினையும் அதன் தமிழ் மொழிபெயர்ப்பினையும் ஆங்கிலமொழிச் சுருக்கத்துடன் சரசுவதி மகால் நூலகம் அச்சுநூலாக வெளியிட்டுள்ளது. இக்கல்வெட்டுச் செய்திகளினால் தென்னிந்திய வரலாற்றினை மாற்றியமைக்க இயலும்.

சரபோஜி மன்னரின் இசையார்வம்

சரபோஜி மன்னர் பல கலைகளைக் கற்றவர் என்பதால் இசையிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். மன்னரின் அரண்மனைக்கு வருகை புரிந்த வாலண்ஷியா, மன்னரின் அரண்மனையில் பல வண்ண ஓவியங்கள் மாட்டப்பட்டிருந்த இடத்திற்கு அருகில் சுவரில் பல இசைக் கருவிகள் மாட்டப் பட்டிருந்தன; கிடார் என்ற இசைக்கருவியைப் போலவிருந்த இசைக்

கருவி, வைரம், முத்துக்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது; மன்னர் தம் மக்களுக்காகப் பல இசை வடிவங்களை இயற்றியிருக்கிறார்; அவர் மிகவும் நேசித்த "English Pedal Harp" என்ற இசைக் கருவியும் இடம்பெற்றிருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.[17]

தஞ்சாவூர் பாண்டு

மேலைநாட்டு இசைக்கருவிகளை நம்நாட்டு இசை வல்லுநர்களைக் கையாளச் செய்து தஞ்சாவூர் பாண்டு என்ற ஒரு புதுக்கலையை உருவாக்கினார். இவர் பாண்டுக்காக "God Save the King and Marlbrook"[18] போன்ற ஆங்கிலப் பாடல்களை இயற்றியுள்ளார். கிளாரினட் என்ற மேற்கத்திய இசைக்கருவியை இந்தியாவில் அறிமுகம் செய்தவர் சரபோஜியாவார். வரகப்பையர் என்பவர் இவரது பாண்டு மாஸ்டராக விளங்கினார். பொய்க்கால் குதிரை நாட்டியம் சம்மேள வாத்தியங்களுடன் இவர் காலத்தில் தஞ்சாவூரில் அறிமுகம் செய்யப்பட்டது.

திருவாங்கூர் மன்னர்

திருவாங்கூர் மன்னர் சுவாதித் திருநாள் மகாராசா சிறந்த மொழி வல்லுநராகவும் இசை மேதையாகவும் திகழ்ந்தார். இவருடன் நல்ல நட்பு கொண்டிருந்த சரபோஜி மன்னர் பல அறிஞர்களையும் இசை வல்லுநர்களையும் பரிவர்த்தனை செய்துகொண்டார். திருவாங்கூர் மன்னர் தாம் எழுதிய இசை தொடர்பான நூல்களை வெல்வெட்டால் கட்டடம் செய்து தங்கத்தால் அலங்கரித்து அன்பளிப்பாக அளித்தார்.[19] இவ்வாறு மன்னர் கொண்ட இசையார்வத்தில் பல நூல்கள் சரசுவதிமகால் நூலகத்தில் சேர்த்து வைக்கப் பெற்றன.

திருவையாறு தியாகராஜர்

மேற்கத்திய இசை, இந்திய இசையான கர்நாடக இசை, இந்துஸ்தானி இசையில் புலமை கொண்ட மன்னர் சரபோஜி காலத்தில் வாழ்ந்தவர் திருவையாறு தியாகராஜர் ஆவார். மன்னர் தியாகராஜரைத் தமது அவைக்கு அழைத்தும் தாம் பலமுறை திருவையாறு சென்றும் தியாகராஜரின் இசையைக் கேட்டறிந்தார்கள்.[20]

இலண்டன் ஆசியவியல் கழக உறுப்பினர்

மன்னர் சரபோஜி பல கல்விக்கழகங்கள், இலக்கியக் கழகங்களில் உறுப்பினராக இருந்துள்ளார். இதன் மூலமாகவும் பல

ஆங்கில நூல்களைத் தமது நூலகத்தில் சேர்த்துள்ளார். 1827-இல் இலண்டன் "Asiatic Society" வெளியிட்டுள்ள சிறு வெளியீட்டில், (Booklet),

"The list of the members of Royal Asiatic Society of Great Britan and Ireland, In this society only four kings had been honorary members.

They are follows:

1. His Royal Highness the Duke Oroleans.
2. His majesty the King of Oude.
3. His Royal Highness Abhas Mirza, Prince of Royal Persia
4. His Highness the Rajah of Tanjore".[21]

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மன்னர் அயல்நாட்டு அரசர்களுடன் உயர்நிலையில் வைத்துப் போற்றப்பட்டமையும், அவரின் இலக்கிய ஈடுபாட்டினையும் அறியமுடிகின்றது.

சரபோஜி மன்னரின் அவைக்களத் தமிழ்ப் புலவர்கள்

மன்னர் சரபோஜியின் அவையில் பல தமிழ்ப் புலவர்கள் சிறந்து விளங்கினர். அவர்களில் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், வேலாயுத வாத்தியார், திருவேங்கடாத்தாபிள்ளை, வேங்கடாசலம் பிள்ளை, சுப்பராயக்கவிராயர் ஆகியோர் முக்கியமானவர்கள்.[22]

கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய பிரபந்தங்களைப் பதிப்பித்த உ.வே.சாமிநாதையர் தேசிகரின் வரலாறாக இந்நூலின் முன்னுரையில் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகின்றார்.

"அக்காலத்தில் தஞ்சையில் இருந்த சரபோஜி மன்னர் புதியதாக ஒரு புத்தக சாலையை அமைத்து அதிற் பல பாஷைகளிலுள்ள பலவகை நூல்களைத் தொகுத்தும் பல வித்வான்களை வருவித்துத் தக்க பொருளுதவி செய்து ஆதரித்துப் பல நூல்களை செய்வித்தும் வந்தனர். அம்மன்னர் இவருடைய முத்தமிழ்ப் புலமைத் திறத்தையும் செய்யுள் செய்யும் வன்மையையும் தக்கவர்களால் கேள்வியுற்று இவரையும் வருவித்துத் தம் அரண்மனை வித்துவானாக அமர்த்திக் கொண்டார். அவருடைய விருப்பத்திற்கிணங்க பலவகை தமிழ் ஏட்டுப்பிரதிகளைத் தக்க விலைகொடுத்து வருவித்துக் தொகுத்ததன்றி சரபேந்திர

வைத்தியமுறைகள், சரபேந்திரர் சன்னிரோக சிகிச்சைகள், சரபேந்திரர் வைத்தியம் என்னும் மூன்று நூல்களை இயற்றினார். அவை இச்சரபோஜி மன்னரின் விருப்பப்படி அனுபவ வைத்திய முறைகளை அறிந்து தமிழ்ச் செய்யுள் உருவத்தில் அமைக்கப் பெற்றன்".[23]

இதன் மூலம் மன்னர் தமிழ்ப்புலவர்களை ஆதரித்தமையும் அவர்களைக் கொண்டு நூல்கள் எழுதச்செய்து நூலகத்தில் சேகரித்தமையும் நன்கு விளங்குகின்றது.

சரபோஜியும் வேதநாயக சாஸ்திரியாரும்

திருநெல்வேலியில் 1774-இல் சைவக்குடும்பத்தில் பிறந்த வேதநாயகம் தமது 12-வது வயதில் பிரிடரிக் சுவாட்சுடன் தஞ்சைக்கு வந்தார்.[24] பின்னர் துளஜாவால் தத்து எடுக்கப்பட்ட சரபோஜிக்குக் கல்வி புகட்டும் பொறுப்பினை ஏற்ற சுவாட்சு வேதநாயகத்திற்கும் சரபோஜிக்கும் ஒன்றாகவே கல்வி போதித்தார். இதனால் இருவரும் கடைசிவரை நட்புடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது.

மன்னரின் அவைக்களப் புலவராகச் சிலகாலம் இருந்த சாஸ்திரியார் மன்னருக்கு இணையாகத் தர்பாரில் அமரும் வாய்ப்பினைப் பெற்றார். இவருக்கு மாதம் 10 வராகன் சம்பளமாக வழங்கப்பட்டது.

மன்னர் சரபோஜி 1803-இல் மராட்டியரின் வரலாற்றினைத் தமிழ் மற்றும் மராட்டியில் எழுதச் செய்து, மராட்டிப்படியினைத் தஞ்சை பெரிய கோயில் சுவர்களில் பொறிக்கச் செய்தார். இக்கல்வெட்டினை மெக்கன்சிக்கு கொடுத்தவர் வேதநாயக சாஸ்திரியார் ஆவார்.[25] இவ்வரலாற்றினைக் காவியமாகப் பாடும் முயற்சியில் சில பாடல்களைப் பாடி மன்னரிடம் சால்வை ஒன்றினைப் பரிசாகப் பெற்றார் சாஸ்திரியார்.

இவர் 'நோவாவின் கப்பல்' என்னும் நூலினை இயற்றி மன்னரிடம் சன்மானம் பெற்றார். அண்ணாவியார், தமிழ் வாத்தியார், கவிச் சக்கரவர்த்தி என்றழைக்கப்பட்ட சாஸ்திரியார் இரண்டாம் சிவாஜிக்குத் தமிழ்ப் பாடம் சொல்லித்தரத் தமிழ்ப் பாடப்புத்தகம் ஒன்றினையும் தயார் செய்தார். மன்னர் சரபோஜி மரணமடைந்த போது,

அன்னையும் பிதாவோ மன்னவா நீயோ
அதிகமார் என்பதை அறியேன் . . .

என்ற இரங்கற்பாடலைப் பாடினார். மன்னருக்குப்பின் 32 ஆண்டுகள் உயிர்வாழ்ந்த சாஸ்திரியாரின் நூல்கள், நாள் குறிப்புக்களால் இவர்களுடைய நட்பை நாம் அறியமுடிகின்றது.

சரபோஜி காலத் தமிழிலக்கிய நூல்கள்

மன்னர் சரபோஜி வல்லுநர்களைக் கொண்டு, தமிழ் மொழியில் எழுதப்பட்ட ஓலைச்சுவடிகளைப் படியெடுத்தும், புதிய இலக்கியம் மற்றும் மருத்துவ நூல்களைச் சுவடிகளில் எழுதவும் செய்தார். இவருக்கு முந்தைய மன்னர்கள் காலத்தில் சேகரிக்கப்பட்ட தமிழ்ச் சுவடிகளையும் அழிந்துபடாமல் பேணிக் காத்தார்.

இவர் காலத்தில் அந்தாதி, உலா, கோவை, குறவஞ்சி, தூது போன்ற இலக்கிய வகைகளில் பல நூல்கள் இயற்றப்பட்டன.

வேதநாயக சாஸ்திரியாரின் ஞானஅந்தாதி, ஞானஉலா, கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய தஞ்சைப் பெருவுடையாருலா, கொட்டையூர் உலா போன்ற சிற்றிலக்கிய நூல்கள் சிறப்பானவையாகும்.

மேலும், இம்மன்னர் காலத்தில் சிவக்கொழுந்து தேசிகரால் சரபேந்திர பூபாலக்குறவஞ்சி, கோடீஸ்வரக்கோவை போன்ற நூல்களும் இயற்றப்பட்டன. வேதநாயகரின் பெத்தலகேம் குறவஞ்சி தமிழில் பாடப்பட்டு சரபோஜியின் அவையில் அரங்கேற்றப்பட்டது. இவையன்றி வேதநாயகர் நூற்றுக்கும் மேற்பட்ட இலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.[26]

தமிழில் மருத்துவ நூல்கள்

இம்மன்னர் காலத்தில் பல கலைகள் வளர்ந்ததுபோல் மருத்துவக் கலையும் மிகவும் சிறப்புடன் வளர்ந்தது. சரஸ்வதி மகாலுடன் தன்வந்திரி மஹால் எனும் மருத்துவ ஆராய்ச்சிக்கூடம் இணைந்தே வளர்ந்தது. இவை தவிர பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ஆரோக்கியச்சாலையும் பல இடங்களில் அமைக்கப்பட்டிருந்ததைப் பல மோடி ஆவணங்களின் மூலம் அறியமுடிகின்றது. ஆரோக்கியச் சாலையில் கற்பித்தலும் நோயாளிகளைக் குணப்படுத்தலும் மேலும் அவற்றிற்கான நூல்களை உருவாக்குதலுமாகிய மூன்று பணிகளும் ஒருங்கே நடைபெற்றன.[27]

இம்மருத்துவமனைகளுக்காகப் பல இடங்களிலிருந்து மருத்துவ நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு அந்நிபுணர்களைக் கொண்டு ஔடத ஆராய்ச்சியை இவர் செய்வித்தார். அம்மருத்துவ நிபுணர்கள் ஆயுர் வேதம், சித்தமருத்துவம், யுனானி ஆகியவற்றின் குணங்களை ஒன்றோடு ஒன்றினை ஒப்பிட்டு அனைவரின் கருத்துக்களைக் கேட்டறிந்த பின்னர் எட்டப்பட்ட முடிவினை அட்டவணையில் எழுதிவைத்தனர்.[28]

சரபோஜி, தன்வந்திரி மகாலில் தயாரித்த மருந்துகளின் அட்டணைகளைச் செய்யுள் வடிவில் ஓலை மற்றும் காகிதச் சுவடிகளில் எழுதச் செய்தார். அவற்றினை மராட்டிய மக்களும் அறிந்து பயன்பெற மராட்டியில் மொழிபெயர்க்கச் செய்தார். அந்நூல்கள் 'அனுபோக வைத்திய பாகங்கள்' எனப்பட்டன.

தன்வந்திரி மகாலில் கட்டுமுறைப்படி தயாரித்த மாத்திரைகளின்மீது அதன் பெயரும் செய்யப்பட்ட தேதியும் குறிப்பிடப்பட்டன. இவ்வகை மாத்திரைகள் தஞ்சையில் சிலரிடம் இன்றும் காணக்கிடைக்கின்றன. இம்மருத்துவர்கள் முக்கியமான பச்சிலைகளின் படங்களை இயற்கையான வண்ணத்தில் வரைந்து புத்தகமாக ஆக்கியுள்ளனர். இருநூறு ஆண்டுகளுக்கு மேலாகியும் இவ்வோவியங்களின் வண்ணங்கள் இன்றும் மாறாமல் உள்ளன.

மராட்டி, தெலுங்கு, வடமொழி நூல்களில் இருந்து பல தமிழ் நூல்கள் இயற்றப்பட்டன. இந்நூல்களில் எழுதியவரின் பெயர், எழுதத் தொடங்கிய நாள் மற்றும் நூல் முடிக்கப்பட்ட நாள் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

1827-ஆம் ஆண்டுக்கான மோடி ஆவணக்குறிப்பில், "சரஸ்வதி மகாலில் தமிழ் எழுத்து தமிழ் பாஷையில் வைத்திய விஷயம் ஸாஹித்தியஞ் செய்து கொடுத்ததற்காக திருவேங்கடம் ஏடுகள் சுமார் 145க்கு சக். 4-3$^{1}/_{2}$"[29] என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மன்னர் பணம் கொடுத்து மருத்துவ நூல்களைத் தமிழில் எழுதச்செய்து நூலகத்தில் சேர்த்தார் என்பது புலனாகின்றது.

இந்நூல்கள் தவிர 500க்கும் மேலான ஆங்கிலம், பிரஞ்சு மற்றும் இலத்தீன் மொழியில் வந்த மருத்துவநூல்களை விலைகொடுத்துப் பெற்று தமது நூலகத்தில் வைத்தார். இவற்றில் மருத்துவ அகராதி, மருந்தியல், அறுவை மருத்துவம், உடற்கூறு தொடர்பான நூல்களும் அடங்கும்.

அகத்தியர், போகர், மச்சமுனி, தன்வந்திரி போன்ற சித்தர்கள் பாடிய பாடல்களை ஓலைச்சுவடிகளில் பெயர்த்தெழுதும்படி 1800 முதல் 1828 வரையிலான இடைப்பட்ட காலத்தில் செய்துள்ளார்.

"சரபோஜியின் ஆணைப்படி கி.பி.1800 இல் துபாசி கிஷ்ணம நாயக்கர் குமாரர் ரெங்கப்பநாயக்கரால் 'அகத்தியர் செந்தூரம் 300', 'அகத்தியர் கரிசல் 300', 'அகத்தியர் பற்பமுறை 205', 'வைத்திய அட்டவணை' ஆகிய சுவடிகளும், கி.பி.1800 இல் வேங்கடேசன் பிள்ளையின் குமாரர் சுப்பராயனால் 'தன்வந்திரி வாகடம் 1110' எனும் சுவடியும், கி.பி.1801-இல் அவராலேயே 'போகநாயனார் 'அருளிய கற்பவிதி 300' எனும் சுவடியும், கி.பி.1824-இல் சிதம்பரம்பிள்ளையின் குமாரர் பஞ்சநதத்தால் 'மச்சமுனி 800' எனும் சுவடியும் படியெடுக்கப்பட்டன என்பதைச் சரசுவதிமகால் நூலகத்திலுள்ள அச்சுவடிகளின் ஈற்றுக்குறிப்புக்கள் எடுத்துரைக்கின்றன".[30]

"சகாப்தம் 1722ஷு ரவுத்திரி ஷு பங்குனிமீ 24உ ஆதித்த வாரமும் சத்தமி திதியும் மூலநட்சத்திரமுங்கூடின சுபதினத்தில் ராசமானிய ஸ்ரீசரபோஜி மகாராசா சாயபு அவர்கள் ஆக்ஞாபித்த பிரகாரம் துபாசி கிஷ்ணம் நாயகர் குமாரர் ரெங்கப்ப நாயக்கர் அகஸ்திய சுவாமிகள் செந்தூர முந்நூறு எழுதி நிறைந்தது முற்றும். சிவமயம் பரபிரம்ம சொரூபானந்த மூர்த்தி துணை".[31]

"சாலியவாகன சகாப்தம் 1746 தாருண ஷுமார்கழி மீ 7உ சனிவாரமும் கூடிய புண்ணியதினத்தில் மகாராச ஸ்ரீ சரபோசி மகாராச சத்திரபதி சாயபு அவர்களுக்கு வைத்தியம் கோபால பிள்ளை குமாரனாகிய கொட்டிய மத்தியஸ்தம் அய்யாக் கண்ணுப்பிள்ளை தன்னுடைய பேர் நிமித்த மாத்திரம் ரெத்தினச் சுருக்கமென்னும் வைத்திய சாஸ்திரத்தை அரண்மனை லேக்கி காளைக்கொண்டு (எழுதுகிறவர்கள்) எழுதி நிறைவேறினதைச் செலுத்தி சாஷ்டாங்க விண்ணப்பம் ஸ்ரீ யாதவ கோபால அரிபிரசன்னம்."[32]

"சாலிவாகன சகாத்தம் 1746 தாரணஷு தைமீ 20யில் ஸ்ரீமகா ஸ்ரீ சரபேந்திர மகாராசா சாயேபு அவர்கள் ஊழியன் சிதம்பர பிள்ளை குமாரன் பஞ்சனதம் எழுதிய மச்சமுனி யெண்ணூறு பாடல்."[33]

"சகாப்தம் 1722ஷு ரவுத்திரி ஷு கார்த்திகைமீ 2உ சனிக்கிழமை

சதுர்த்தசியும் சுவாதி நட்சத்திரமும் கூடின சுபதினத்தில் ராசமானிய ராசஸ்ரீ சரபோஜி மகாராசா சாயேபு அவர்கள் ஆக்ஞாபிச்சபடிக்கு வேங்கடேசம் பிள்ளை குமாரன் சுப்பராயன் தன்வந்திரி வாகடம் எழுதி நிறைந்தது. முத்தும்". சற்குருபாதந்துணை[34]

"சகாப்தம் 1722க்கு ரவுத்திரிஞு தைமீ 30உ சோமவாரமும் திதி ஏகாதசியும் மூல நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் ராசமானிய ராசஸ்ரீ சரபோஜி மகாராசா சாயபு அவர்கள் ஆக்ஞாபிச்சபடிக்குத் துபாசி கிஷ்ணப்ப நாயக்கர் குமாரன் ரெங்கய்யன் வைத்திய வாகடம் அட்டவணை எழுதி முகிந்தது முற்றும்".[35]

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சில சான்றுகளின் மூலம் மன்னர் சரபோஜியின் ஆட்சிக்காலத்தில் தமிழிலக்கியமும், தமிழ்மருத்துவ நூல்களும் எழுதப்பட்டு நூலகத்தில் சேர்க்கப்பட்டது பற்றி அறிகிறோம். இதனால் நூலகத்தின் பயன்பாடும் வளர்ச்சியும் மேலும் பெருகியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சரபோஜி மன்னரும் மராட்டிய இலக்கியமும்

மன்னர் இரண்டாம் சரபோஜி மற்றைய மராட்டிய மன்னர்களைப் போல் நூல்கள் பல எழுதச்செய்து நூலகத்தில் சேர்த்து வைத்துப் பாதுகாக்கச் செய்தார். இவர் காலத்தில் வாழ்ந்த மராட்டியப் புலவர்கள் விருபாட்ச கவி, ரங்கநாதகவி, கோவிந்தகவி, உட்கே கோவிந்தாச்சாரியார், துண்டிசுரசிவா, ராமாசகா முதலானவர்கள் ஆவர்.

விருபாட்சகவி

விருபாட்சகவி என்பவர் மன்னரிடத்தில் மிகவும் மதிப்பு கொண்டவராக இருந்தார். இவர் சரசுவதிமகாலில் இருந்த பல வடமொழி நூல்களை ஆதாரமாகக் கொண்டு மராட்டிய மொழியில் பல நூல்களை இயற்றினார்.

பவிஷ்யோத்திச புராணத்தினை அடிப்படையாகக் கொண்டு அக்னீஸ்வர மகாத்மியம்; பத்மபுராணத்தினை அடிப்படையாகக் கொண்டு மகாமகாத்மியம்; பிர்மகைவர்த்த புராணத்தினை அடிப்படையாகக் கொண்டு திருவையாற்றில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் வரலாற்றினையும் எழுதினார். இவர் மேலும் ஸ்காந்தம் சனத்குமார சம்ஹிதா சிவரகஸ்யஸ்தோத்திர காண்டத்தினை மூல நூலாகக் கொண்டு ஆதிகைலாச மகாத்மியத்தையும், காவிரி நதியின் ஐந்து பிரிவுகளை விளக்கி

பஞ்சநத மகாத்மியம் என்னும் ஒரு நூலினையும் எழுதினார்.

அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாற்றினைக் கூறும் வடமொழிப் பண்டிதர் ஹரிதாசர் இயற்றிய சிவபக்தமகாத்மியம் நூலினை அடிப்படையாகக் கொண்டு 'பக்தவிலாசம்' என்னும் மராட்டி நூலினை இயற்றினார்.[36]

இவர், வடமொழியில் எழுதப்பட்டிருந்த பல புராணங்களைப் பாமர மக்களும் அறியவேண்டும் என்னும் எண்ணங்கொண்டு மராட்டி மொழியில் மொழிபெயர்ப்பும் செய்துள்ளார். மொழி வேறுபாடு பாராட்டாமல் இப்புலவர் செய்த இலக்கியப்பணி போற்றுதற்குரியது. இவர் இயற்றிய நூல்களில், தாம் மன்னர் சரபோஜியின் வேண்டுகோளின் படி வடமொழியிலிருந்து மராட்டிக்கு மொழிபெயர்த்ததாகவும் குறிப்பிடுகின்றார்.[37] இவர், மன்னர் காசியாத்திரை மேற்கொண்டமையையும் நவவித்யா கலாநிதிசாலா கல்விக்கூடத்தினை நிறுவியதையும் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளார். கி.பி. 1826 முதல் 1828 வரையிலான காலங்களில் இந்நூல்களை எழுதியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரங்கநாத கவி

ரங்கநாத கவி என்னும் புலவர் சரசுவதிமகாலில் இருந்த நூல்களை ஆதாரமாகக் கொண்டு 'கார்திக மகாத்மியம்', 'துலாமகாத்மியம்' என்னும் மராட்டிமொழி நூல்களை இயற்றினார். மராட்டிமொழி இலக்கியத்திற்கு முதல் நாடக நூல் தஞ்சை மராட்டியர்களின் காலத்தில் தான் படைக்கப்பட்டது. இப்பெருமை ஏகோசியின் மூத்த மைந்தர் சகஜியையே சாரும். இவரைத் தொடர்ந்து ரங்கநாதகவி, 'கணேச விஜயம்', 'கணேசலீலார்ணவம்' ஆகிய நாடகங்களை இயற்றினார். இதுதவிர தமிழில் காணும் திருநீலகண்டநாயனார், கண்ணப்ப நாயனார் வரலாற்றினை ஹரிகதாகாலட்சேபம் செய்யும் விதத்தில் மராட்டியில் வடிவமைத்தார்.

இவை மட்டுமன்றி சரபோஜி மன்னர் பெயரில் உள்ள நாடகங்களான 'சிவராத்திரி உபாக்கியானம்', 'மோகினிமகேச பரிணயம்', 'கங்கா விஸ்வேஸ்வர பரிணயம்', 'ராதாகிருஷ்ண விலாசம்' முதலிய நாடகங்களின் அமைப்பு ரங்கநாதகவியின் படைப்புகளையே ஒத்துள்ளதால் இவர் இயற்றி மன்னருக்குச் சமர்ப்பணம் செய்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.[38]

இப்பண்டிதர் இயற்றிய நாடகங்கள் பிருகதீஸ்வரர் கோயிலின் வசந்த உற்சவ விழாவிலும், நவராத்திரி, விநாயகர் சதுர்த்தி விழாக்களிலும் நடத்தப்பட்டதாக நாடகக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. இவரின் 'சிவராத்திரி உபாக்கியானம்' 'கங்கா விஸ்வேஸ்வர பரிணயம்', 'மோகினிமகேச பரிணயம்' போன்ற நாடகங்களில் துளஜா சரபோஜியைத் தத்து எடுத்துக்கொண்ட வரலாற்றினைக் குறிப்பிடுகின்றார். மேலும், 'தேவந்திரகுறவஞ்சி' எனும் நாடகத்தில் உலகின்கண் உள்ள பல கண்டங்கள், அவற்றின் பூகோள அமைப்பு ஆகியவற்றினை விளக்கும் வண்ணம் ஒரு குறப்பெண் பாடும் பாடல் மூலமாக விளக்குகின்றார். இவ்வாறு உலக அறிவுடன் இந்நாடகத்தினை இயற்ற மன்னர் சரபோஜி தொகுத்த பல ஐரோப்பிய நூல்களே இவருக்கு ஆதாரமாக அமைந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

ஸ்கந்தபுராணத்தில் காணும் கிராதார்ஜுனியம் உமாமகேஸ்வர விரதம் பஞ்சாட்சரி, விபூதி சிவராத்திரி பெருமையை விளக்கும் கதையும் பஞ்சப் பிரதோஷம், சனிப்பிரதோஷம் ஆகிய விரதங்களை விரிவாக விளக்கும் கதைகளும் இவரால் இயற்றப்பட்டு நூலகத்தில் சேர்க்கப்பட்டன.

பிற கவிகள்

கோவிந்தக்கவி'ஆக்நேயபுராணம்' எனும் வடமொழி நூலினை ஆதாரமாகக் கொண்டு தனுர்மாதமகாத்மியம், ஸ்கந்த புராணத்தினை அடிப்படையாகக் கொண்டு வைகாசமகாத்மியம், பிர்ம்மகைவர்த்த புராணத்தினை அடிப்படையாகக் கொண்டு 'பஞ்சநத மகாத்மியம்' ஆகிய மராட்டிய நூல்களை இயற்றினார்.

வெங்கடேச பட்டர் மன்னர் சரபோஜியின் விருப்பத்திற்கு ஏற்பத் தஞ்சை மராட்டிவம்ச வரலாற்றினைப் 'போசல வம்சாவளி' என்ற பெயரில் எழுதினார். இவ்வரலாற்றினைத் தஞ்சைப் பெரியகோயில் சுவரில் கல்வெட்டாக மன்னர் பொறிக்கச் செய்தார்.

உட்கே கோவிந்தாச்சாரியார் 'சிவலீலா', 'ஹரிலீலா', 'ராம-உமா சம்வாதம்' என்ற நூல்களை ஹரிகதை செய்யும் வடிவில் அமைத்து எழுதினார். 'தீர்த்த யாத்திரை லாவணி' என்ற நூலினைத் துண்டிசுதசிவா இயற்றியதாகக் கருதப்படுகின்றது. இவற்றினைப் போல் சோதிடம் மற்றும் வைத்திய நூல்களும் மராட்டியில் எழுதப்பட்டு நூலகத்தில் சேர்க்கப்பட்டன.

சரபோஜியும் வடமொழி நூல்களும்

தஞ்சை மராட்டிய மன்னர்கள் காலத்தில் தமிழ்மொழியுடன் வடமொழி இலக்கியங்கள் பல எழுதப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. சரபோஜி மன்னர் காலத்தில் வைதீகநெறி தவறாமல் வடமொழி இலக்கிய நூல்களுக்கு உரைநூல்கள் செய்யப்பட்டன. நவவித்யா கலாநிதி சாலா இந்நூலகத்தின் ஒரு பகுதியாக இருந்ததால் அதில் வடமொழி, தமிழ், தெலுங்கு, மராட்டி, உருது, ஆங்கிலம் ஆகிய ஆறு மொழிகள் சொல்லிக் கொடுக்கப்பட்டதாகவும் மோடி ஆவணக் குறிப்புகள் உள்ளன.[39]

இக்கல்விநிலையம் தற்போது அரசர் மேனிலைப்பள்ளி அமைந்திருக்கும் இடத்தில் அமைந்திருக்க வேண்டும் என்று இந்நூலகத்தின் வடமொழிப் பண்டிதர் என்.சீனிவாசன் கூறுகின்றார். இவ்வாறு நூலகத்துடன் கல்விக்கூடமும் இணைந்து வடமொழிக் கல்வி புகட்டப்பட்டதை நாம் அறியமுடிகின்றது.

வடமொழிச் சுவடிகள் சேகரிப்பு

இம்மன்னர் வடமொழியின் வளர்ச்சிக்காகப் பல சுவடிகளை விலை கொடுத்து வாங்கி இந்நூலகத்தில் சேர்த்துள்ளார். நமக்குக் கிடைத்துள்ள ஆவணக் குறிப்புப்படி,

"1. கி.பி. 1825 இல் திருப்பனந்தாள் காசிமடத்து தம்பிரான் வழியாக ரூ.1000 கொடுத்தனுப்பட்டுப் பல சுவடிகளை வாங்கி நூலகத்தில் சேர்த்துள்ளனர். இச்சுவடிகளின் மேல் "காசியிலிருந்து விலைக்கு வாங்கப்பட்ட சுவடி" என்று எழுதச் செய்துள்ளார்.

"பதஞ்சலி சூத்திரம் (வடமொழிநூல்) கிரந்தம் 600, இந்தப் புத்தகம் ஸ்ரீமந்த ராஜா சரபோஜி மகாராஜா அவர்களால் விலைக்கு வாங்கப்பட்டு காசி தேசத்தில் இருந்து அனுப்பப்பட்டது."[40]

2. அண்ணாசாமி சிரௌதி என்ற சாமவேத வாத்தியார் அவர்கள் மூலம் புனேயில் வாழ்ந்த மகாதேவபட் என்பவரிடமிருந்து 100 சக்கரத்துக்கு சாமவேத சுவடிகள் வாங்கப்பட்டன.

3. 1828-இல் பாலா தீட்சிதரிடமிருந்து சிரௌத புத்தகங்களும், 1835-இல் மேலும் இவரிடமிருந்து 4 சக்கரம் 5 பணம் கொடுத்து போதாயன சூத்திரபாஷ்யம், அபரபிரயோகம், கனகசபா கிருத ஷோடஸ சம்ஸ்காரம் ஆகிய ஓலைச்சுவடிகள் வாங்கப்பட்டன.

4. உடையார் பாளையத்தில் வாழ்ந்த அப்பையா தீட்சிதர் அவர்களிடமிருந்து விலைகொடுத்து சுவடிகள் வாங்கப் பட்டன.

5. ரானோசி, மகாலோசி காட்கே ஆகியோரிடம் ரூ.200 கொடுத்து அனுப்பப்பட்டு அவர்கள் ஊரிலிருந்து சோதிட நூல்களை வாங்கி அனுப்பச் செய்யப்பட்டது.

மேலும், அரண்மனைப் புரோகிதரான மானப்பட்டர் என்பவரை வடஇந்தியாவுக்கு அனுப்பி அங்கு வாழ்ந்த பல வடமொழிப் புலவர்கள் இல்லங்களில் இருந்த சுவடிகளைப் படியெடுக்கும் சிறந்த பணியினைச் செய்து நூலகத்தில் அந்நூல்களைச் சேர்த்தார்.[41]

வண்ண ஓவியங்கள்

இரண்டாம் சகஜி மன்னன் காலத்தில் தொகுக்கப்பட்ட மூல நூலான கஜசாத்திரத்தினை இரண்டாம் சரபோஜி மீண்டும் வரையச் செய்து வடமொழியின் மூலத்தினையும் அதற்கான மராட்டி மொழியாக்கத்தினையும் செய்யச் செய்தார். பின்னர் இதனையே மராட்டி மொழியில் மட்டும் 'ஆர்யா' என்னும் விருத்தப் பாக்களாக இயற்றச் செய்து படங்களுடன் மீண்டும் வரையச் செய்துள்ளார். இதன் முதல் பக்கத்தில் சரபோஜி பட்டத்துயானை மீது பவனிவரும் காட்சி ஓவியமாக வரையப் பட்டுள்ளது. மன்னர் சகஜி காலத்திலோ துளஜா காலத்திலோ விஜயநகர நாயக்க மன்னர் சுபனுகொண்ட வெங்கடபதிராயர் அவர்களின் சொந்த சுவடியான கஜசாஸ்திரம்-பாலகாப்பியம்[42] தெலுங்கு உரையுடன் கூடியதைப் பிரதி செய்து பெற்றுள்ளனர். இதனால் கஜசாஸ்திரம் பற்றிய ஆய்வு துளஜா காலம் முதல் துவங்கியது என அறியலாம். இம்மன்னருடைய சுவடிகளாகப் பல சுவடிகள் இந்நூலகத்தில் உள்ளன.[43] அசுவசாத்திரமும் அவ்வாறே மீண்டும் வரையப்பட்டது.

அலங்கார நூல்

இம்மன்னர் காலத்தில் வாழ்ந்த 'நிருசிம்மகவி' என்பவர், 'குணரத்னாகரம்' என்னும் அலங்கார சாஸ்திர நூலினை இயற்றியுள்ளார். இரண்டாம் சரபோஜியைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு 'பிரதாபருத்ரீயம்' என்னும் அலங்கார நூலினைப் பின்பற்றியே இந்நூலினைப் பாடியுள்ளார். சரசுவதி மகால் நூலகத்தில் காணப்படும் அண்மைக்காலத்து நூல் இதுவேயாகும்.[44]

வாஞ்சேசுவரர் II என்னும் புலவர் மஹிஷசதகம், ஹிரண்யகேசி ஸ்ரௌத சூத்ர வியாக்யானம் என்ற நூலினை இயற்றினார். மேலும், தருமசபை, நியாயசபை, முத்ரிதசபை என்ற மூன்று

சபைகளிலும் பல வடமொழிப் புலவர்கள் பங்கு கொண்டிருந்தனர்.[45]

சரபோஜி மன்னரின் அச்சகப்பணி

ஆங்கிலப்புலமையும் அதனால் பல்துறை அறிவும் கொண்ட மன்னர் சரபோஜி ஆங்கிலேயரின் துணையுடன் கி.பி.1805-இல் தமது அரண்மனையில் ஒரு அச்சகத்தினை நிறுவினார். கல்லெழுத்துக்-களாலான தேவநாகரி எழுத்துக்களைத் தயாரித்து வடமொழி நூல்களை அச்சிடச்செய்தார். இதுவே தென்னிந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட முதல் தேவநாகரி எழுத்து அச்சகமாகும்.[46]

வடமொழி மற்றும் மராத்திமொழி பயிலும் பள்ளி மாணவர்களுக்கான பாடநூல்களை அச்சிடுவதேயே முக்கிய நோக்கமாகக் கொண்டு இவ்வச்சகம் ஆரம்பிக்கப்பட்டது.[47] கையினால் இயக்கக்கூடிய இவ்வச்சுயந்திரம் சென்னையிலிருந்து பெறப்பட்டது. இவ்வச்சகம் 'நவவித்யா கலாநிதி' என்றும், 'நவவித்யா கலாநிதி யந்திரச்சாலை' என்றும் பெயரிட்டு வழங்கப் பட்டுள்ளது.

அச்செழுத்துக்கள்

மன்னர் தமது அச்சகத்திற்கான அச்செழுத்துக்களை இங்கிலாந்திலிருந்து வரவழைத்தார். இதனை 1807-ஆம் ஆண்டு மோடி ஆவணக் குறிப்பில், "அச்செழுத்துக்களின் கணக்கு இங்கிலாந்திலிருந்து சரபோஜி தன் அச்சகத்துக்காக அச்செழுத்துக்களை வாங்கினார்" என்பதினால் அறியமுடிகின்றது.

இந்த அச்சகத்திற்குக் குப்பாபட்டர் என்பவர் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். இந்த அச்சகத்தின் மூலம் 'இரகுவம்சம்' என்னும் வடமொழிநூல் 1808-இல் தேவநாகரி எழுத்தில் அச்சிடப் பட்டது. மேலும், அமரகோசம், அன்னம்பட்டி, த்மார சம்பவசம்பு, காரிகாவளி ஆகிய வடமொழி நூல்களையும், பாவார்த்தராமாயணம் என்னும் மராத்தி நூலினையும் அச்சிடச் செய்தார்.[48] மேற்கண்ட மராத்தி நூல்களில்,"தஞ்சை மாநகரில் அமைந்த நவவித்யா கலாநிதி சாலையில் சகம் 1731-இல் குப்பா பட்டரின் எந்திரத்தில் அச்சு செய்யப் பட்டது" என்று அச்சிடப் பட்டுள்ளது. இந்த அச்சகம் ஆரம்பிக்கப்பட்டு 30 ஆண்டுகளுக்குப் பின்னரே பம்பாயில் இதனைப் போன்ற அச்சகம் ஆரம்பிக்கப்பட்டு வடமொழி, மராட்டி மொழி நூல்கள் அச்சிடப்பட்டன.

பண்டிதர்களின் நூல்கள்

பல பண்டிதர்களின் நூல்கள் பெறப்பட்டு இங்கு அச்சிடப்பட்டன என்பதனைக் கி.பி. 1813 க்கான மோடி ஆவணக்குறிப்பில், "சுப்பிரமணிய சாஸ்திரி என்பவர் குமாரசம்பவம் என்ற நூலினை எழுதி அதனை ஹுஜூ மகாலில் அச்சிட வேண்டுகோள் விடுத்தார்" என்று கூறப்பட்டுள்ளது. மேலும், இந்நூல் பர்னல் அட்டவணையில் இடம் பெற்றுள்ளதால் இங்கு அச்சிடப்பட்டதை உறுதி செய்ய முடிகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட செய்திகளினால் மன்னர் சரபோஜி தமது வாழ்நாளிலேயே இவ்வரிய நூலகத்தில் சேர்த்துப் பாதுகாத்த சுவடிகளை மக்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் சுவடிகளை அச்சிடும் பணியையும் மேற்கொண்டார் எனக் கருத முடிகின்றது.

நூல்களை அன்பளிப்பாக அளிக்கும் வழக்கம்

மன்னர் சரபோஜி தம் பெண்ணின் திருமணத்தின்போது சீர்வரிசையுடன் சில மராட்டி நூல்களையும் தமது மாப்பிள்ளை 'ராமசாமி மோகிருதே'வுக்கு அளித்தார். மாதவஸ்வாமி மராட்டியில் எழுதிய பாரதத்தின் மொழிபெயர்ப்பின் ஓர் பிரதியினை கி.பி.1824-இல் செய்வித்து திருமண அன்பளிப்பாக வழங்கினார்.

ராமபண்டிதரின் பாகவதத்தில் உள்ள 'ஹரிவம்சம்', 'சேவுதர்மம்' (Sevu Dharmam) போன்ற பகுதிகளை 1819-இல் மகாதேவ மாட்டிக் என்பவர் பிரதி எடுத்து மன்னருக்குத் தீபாவளி நாளில் அன்பளிப்பாக அளித்துள்ளார். இப்பிரதிகள் மகால் நூலகத்தில் பாதுகாக்கப் பட்டுள்ளன.[49]

தலயாத்திரை

மன்னர் 1801-இல் முதல்முறையாக ஸ்ரீரங்கத்திற்குப் பயணம் மேற்கொண்டு தமது தலயாத்திரையைத் தொடங்கினார். இச்சோழ நாட்டுத் தலப்பயணத்தினை 'சரபேந்திர தீர்த்தாவளி' என்னும் நூல் குறிப்பிடுகின்றது.

காசிப் பயணமும் நூல்கள் சேகரிப்பும்

சரபோஜி 1820-22 ஆம் ஆண்டுகளில் காசிக்கும் இராமேசுவரத்துக்கும் தமது புனிதப் பயணத்தினை

மேற்கொண்டார். காசிக்குப் புனிதப்பயணம் செல்லும் இந்துக்கள் இராமேஸ்வரத்துக்கும் சென்று வருவது வழக்கமாகும். இவரின் காசிப்பயணம் பற்றிய குறிப்புக்கள் மோடி ஆவணம், மூட்டை எண் 188சி, 158சி ஆகியவற்றில் காணப்படுகின்றன.

இவரின் காசிப் பயணக்காலம் 18 மாதங்களாகும். மேலும் ஒரு மாதம் இராமேஸ்வரப் பயணத்தினையும் மேற்கொண்டார். இவரது பயணம் முறையாகத் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப் பட்டது என்பதனைச் சில மோடி ஆவணக் குறிப்புகள் சுட்டுகின்றன.

1820 முகாம் - கைர்ஹட்
குலியாப்பாடா
மேதினியூர்
ஸ்ரீ கயாஜி
1820 முகாம் - செர்சீ
ஸர்காடி
மதனபூர்
சிரிஸ்[50]

என்னும் குறிப்புக்களால் அவரது பயணம் திட்டமிடப்பட்டு மேற்கொண்டதை அறியமுடிகின்றது.

இம்மன்னர் ஒரு சிறந்த கல்விமான் என்பதால், தாம் செல்லும் இடங்களிலெல்லாம் நூல்களைத் தேடிச் சேகரித்து தமது நூலகத்தில் சேர்த்தார். சரசுவதிமகாலில் அச்சிட்ட நூல்களைப் பிறர் அறியவும் செய்தார். இதனை 26.1.1822 இல் மன்னர் அனுப்பிய கடிதத்தின் மூலம் அறியலாம்.

"நவ வித்யா கலாநிதி சாலையில் அச்சிடப்பட்ட மராட்டிய மொழியில் தேவநாகரி எழுத்தில் அச்சிடப்பட்ட ஆங்கிலக் கதையின் ஒரு புத்தகத்தினை சவாரிமுகாமுக்கு அனுப்பவும்" என்னும் மோடி குறிப்புள்ளது.

மன்னர் சரபோஜி தமது காசிப்பயணத்தின்போது வடமொழி, மராட்டி மொழி நூல்களை வாங்கிவந்து சேர்த்தார். அவர் கொண்டு வந்த நூல்கள் அனைத்துமே காகிதச் சுவடிகளாகும். காசிப் பயணத்தின்போது தொகுத்த மராட்டி மொழி நூல்களில் ஸ்ரீமுத்தலராமாயணம் மட்டுமே இப்பொழுது கிடைக்கின்றது. இந்நூலின் ஆசிரியர் கிருஷ்ணதாச முத்தல என்பவராவார். இதில் யுத்தகாண்டம் மட்டுமே உள்ளது. இதர காண்டங்கள் இதில்

இடம்பெறவில்லை. காசியிலிருந்து சரபோஜி இந்நூலின் இதர காண்டங்களையும் கொண்டு வந்திருப்பாரானால் மராட்டிய இலக்கிய வரலாற்றுக்கு பெரும் தொண்டாக அமைந்திருக்கும்.

வண்ணப்படக் காட்சி ஓவியங்கள்

மன்னர் காசிப்பயணம் சென்றபோது நூல்களுடன், தாம் கண்ட காட்சிகளையும் தக்க ஓவியர்களைக் கொண்டு படம் வரையச் செய்து இந்நூலகத்தில் சேர்த்தார். அவ்வகையில் காசியின் அறுபத்துநான்கு புண்ணியப் படித்துறைகளின் படம் மிகவும் சிறந்ததாகும். இது காசியின் படங்களுடன் அவற்றின் விவரக் குறிப்புக்கள் கொண்ட தொகுப்பு நூலாகும். இவ்வோவியங்களை மன்னர் தமது அரண்மனையில் வைத்துப் பாதுகாத்தார். இப்பொழுது இவ்வோவியத்தினைக் காணும் உள்நாட்டினரும் அயல் நாட்டினரும் வியப்பு அடைகின்றனர்.[51]

அச்சு நூல்கள்

8.3.1821 ஆம் நாளிட்ட மோடி ஆவணக் குறிப்பின்படி மன்னர் தமது பயணத்தின்போது கல்கத்தாவிலிருந்து புறப்பட்டு ராம்பூருக்குச் சென்றார் என்றும் அவர் அங்கு காகிதம் செய்யும் இடத்தினையும், ஆங்கிலம், பிரஞ்சு, பார்சி, குஜராத்தி, தெலுங்கு, தமிழ், பெங்காலி முதலிய எழுத்துக்களை அச்சுக்களாகத் தயாரிக்கும் இடத்தையும் அவற்றினைக் கொண்டு நூல்கள் அச்சிடும் இடத்தினையும் பார்த்தார் என்றும் உள்ளது.[52] இக்குறிப்புக்களால் நூல்களைச் சேகரிப்பதில் ஆர்வம் கொண்ட மன்னர் பல அச்சு நூல்களையும் கொண்டு வந்திருக்க வாய்ப்புள்ளது எனத் தோன்றுகின்றது.

சென்ற இடமெல்லாம் ஏடுகளைத் தொகுத்த மன்னர் திறனுடையவர்கள் சிலரையும் அழைத்து வந்தார்.[53] அவ்வகையில் ஒருவன் சித்திரம் வரைபவன், ஒருவன் கப்பல் கட்டுபவன், ஆங்கில இசைக்கருவியை வாசிப்பதில் சிறந்தவன் ஒருவன் எனப் பலரை அழைத்து வந்து தஞ்சையில் கலைவளர்ச்சிக்குத் தொண்டாற்றினார். மன்னர் தமது காசிப் பயணத்தின்போது 18.4.1821 இல் தஞ்சைக்கு ஹஸன் கஞ்ச் முகாமிலிருந்து எழுதிய கடிதத்தின்படி இயற்கைக் காட்சிகளை ஓவியன் தாமஸ் என்பவனைக் கொண்டு வரையச் செய்து அனுப்பியதாகத் தெரிகின்றது.[54] இவன் மன்னர் மசூலிபந்தர் என்ற ஊரில் இருந்தபோது பணிக்கு அமர்த்தப்பட்டதாகவும்

அவனுக்கு மாதச் சம்பளம் 10 புலி வராகன் அளிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. மேலும், புதுச்சேரியிலிருந்து கிருஷ்ணா என்னும் ஓவியர் தஞ்சையில் பணிக்கு அமர்த்தப்பட்டார்[55] என்ற ஆவணக் குறிப்பும் உள்ளது.

31.3.1821 இல் கதளகாவ் என்ற இடத்திலிருந்து வந்த ஆணையில், "கப்பல் வேலையை நன்கு பார்க்கிற தச்சன் வெள்ளைக்காரன் - யுஷ்டவிகஷ என்பவன் *190* ரூபா மாதச் சம்பளத்தில் நியமிக்கப் பெற்றான்"[56] என்று கூறப்படுகிறது.

கப்பல் கட்டுபவனைப் போலவே இசையில் சிறந்த ஒருவனைப் பற்றி *30.3.1822* முகாம் திரௌபதாம்பாபுரத்திலிருந்து வந்த கடிதத்தில், "காசி ஸ்வாரியிலிருந்து வேலைக்காரனாகி வந்தவன் தற்சமயம் தஞ்சாவூரிலிருக்கும் வாத்தியக்காரன் அக்னீஸ் புரூஸ் என்பவனுக்கு 'ஐரிஷ்பைப்' என்னும் வாத்தியத்தை அவனிடம் இருக்கிறது. அவனுக்குச் சம்பளம் ரூ. *45*"[57] என்று கூறப்படுகிறது. இதன் மூலம் 'ஐரீஸ்பைப்' எனப்படும் இசைக்கருவியை இயக்குபவனுக்கு மன்னர் சரபோஜி மாதம் ரூ. 45 அளித்து தஞ்சையில் மேற்கத்திய இசையைப் பரவச்செய்தார்[58] என அறிகிறோம்.

சரபோஜியின் நூலகம்

தஞ்சை நாயக்க மன்னர்களைத் தொடர்ந்து மராட்டிய மன்னர்களான ஏகோஜி முதல் அமரசிம்மர் வரையில் அனைத்து மன்னர்களும் பன்மொழி நூல்களை இயற்றியும், தக்கவர்களைக் கொண்டு நூல்களை எழுதச்செய்தும், மொழிபெயர்த்தும், படியெடுத்தும் நூலகத்தில் பாதுகாத்து இலக்கியப் பணியோடு நூலகப்பணியையும் செய்து வந்தனர். இவர்களின் காலத்தில் நூலகம் என்பது சுவடிகளைச் சேர்த்து வைத்து, பண்டிதர்களும் அரசக் குடும்பத்தினர்களும் பயன்படுத்தும் இடமாக மட்டுமே இருந்தது. இக்காலத்திலுள்ள நூலக முறைப்படி சுவடிகளை வகைப்படுத்தியதாகவோ, அட்டவணை செய்யப் பட்டதாகவோ அறிய இயலவில்லை.

மராட்டிய மன்னர்களின் சரசுவதிப் பண்டாரத்தினைப் பற்றி மோடி ஆவணக் குறிப்பாக (கி.பி.1776) இரண்டாம் துளஜா மன்னர் காலக் குறிப்பு மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளது. இதுவே நமக்குக் கிடைத்துள்ள முதல் சான்றாகும். இது சரசுவதி பண்டாரத்தில் புத்தகங்களுக்குப் பூசை செய்பவனைப் பற்றியதாகும்.

"சரஸ்வதி பண்டாரில் (மஹாலில்) புஸ்தகங்களின் பூசை செய்கிற இராமபட்டர் கொடுத்த மனு. தன்னுடைய தகப்பனாருக்கு 6 சக்கரம் கொடுக்கப்பட்டது. தற்போது 3 சக்கரம் கொடுக்கப்பட்டது. முன்மாதிரி 6 சக்கரம் கொடுக்க வேணும்."[59]

இந்த ஆவணத்தின்படி சுவடிகளைத் தெய்வமாகப் போற்றி வணங்கியமையும் தனது தகப்பனாருக்கு அளிக்கப்பட்டது போல் தனக்கும் ஊதியம் வேண்டும் என்று முறையிடுவதால் ஊதியங்கள் காலத்திற்கு ஏற்றவாறும் பணியனுபவத்திற்குத் தக்கவாறும் வழங்கப்பட்டிருக்கலாம் எனக் கருதலாம். தந்தைக்குப் பின் அவ்வேலை மகனுக்கு வழங்கப்பட்டமையையும் அறிய முடிகின்றது.

நூலக அமைப்பும் அழகும்

இரண்டாம் சரபோஜி தாம் பெற்ற ஆங்கிலக் கல்வியின் பயனாக ஐரோப்பிய மொழி நூல்கள் பல பயின்று, அவர்கள் பயன்படுத்திய நூலக முறைகளைப் பயன்படுத்தித் தமது நூலகத்தினை அமைத்தார். இவரது நூலகத்திற்கு வருகைதந்த வாலண்ஷியா, மன்னரின் நூலக அறை அழகாக இருந்ததாகவும், அழகிய கம்பளம் விரிக்கப்பட்டு ஆங்கிலேயக் கலைநுட்பத்துடன் வடிவமைக்கப்பட்ட நாற்காலிகள் போடப் பட்டிருந்ததாகவும், நான்கு அலமாரிகளில் ஆங்கில நூல்கள் அடுக்கப் பட்டிருந்ததாகவும் குறிப்பிடுகின்றார். வாலண்ஷியா மன்னரின் நூலகத்தில் தமது தாத்தா "Lord Lyttelton" எழுதிய "History of Henry the Second" என்னும் நூல் இடம் பெற்றிருந்ததை மன்னரிடம் சுட்டிக்காட்டி மகிழ்ந்ததாகவும் குறிப்பிடுகின்றார்.

இந்நூலக அறையின் ஒருபுறம் விசாலமான காற்றோட்டமுள்ள வராண்டாவும், எதிர்புறத்தில் மராட்டிய சாம்ராஜ்யத்தினை நிறுவிய சிவாஜியின் படம் முதல் அவரின் வழிவந்த மன்னர்களின் படங்கள் வரிசையாக மாட்டப்பட்டிருந்ததாகவும் குறிப்பிடுகின்றார்.[60]

மன்னர் ஐரோப்பிய நூலக முறைகளைப் பற்றி அறிந்திருந்ததால் இவர் காலத்தில்தான் இந்நூலகத்தில் சுவடிகள் முறையாகப் படியெடுக்கப்பட்டு அவற்றுக்கு அட்டவணையும் செய்யப்பட்டது என்பதும், அச்சுநூல்களும் வண்ணப் படங்களும் சேர்த்து வைக்கப் பட்டன என்பதும், முறையான பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கன.

உண்மையான மன்னர்

"நான் உண்மையான மன்னர் பலரை உலகெங்கும் அறிந்துள்ளேன். ஆனால் உண்மையான மன்னரை இப்போதுதான் கண்டேன்; அவரே சரபோஜி" என்று கூறுகிறார் பிஷப் ஹீபர்.

பிஷப் ஹீபரின் வருகை

மன்னரின் நூலகத்தினை வாலண்ஷியா பார்வையிட்டு சுமார் 22 ஆண்டுகளுக்குப் பின்னர் 30.3.1826 இல் பாதிரியார் பிஷப் ஹீபர் நூலகத்திற்கு வருகை புரிந்துள்ளார். அவரின் குறிப்புக்கள் மேலும் பல தகவல்களை அளிப்பனவாகவுள்ளன.

பன்மொழிச் சுவடிகள்

மன்னரின் நூலக அறை மூன்று வரிசைகளில் தூண்கள் நிறைந்ததாகவும், ஆங்கில முறையுடன் தளவாடங்கள் போடப்பட்டிருந்ததாகவும், ஒருபுறம் மராட்டிய மன்னர் ஹாஜி மற்றும் சிவாஜி வரை அனைவரின் படங்களும் மாட்டப்பட்டிருந்ததாகவும் குறிப்பிடுகின்றார். மேலும், நூலகத்தில் 10 அலமாரிகளில் பிரஞ்சு, இலத்தீன், ஆங்கிலம், கிரீக், செர்மன் ஆகிய மொழிகளிலுள்ள நூல்கள் இருந்ததாகவும் வடமொழி, மராட்டிமொழிச் சுவடிகள் இரண்டு அலமாரிகளில் இருந்தனவாகவும் குறிப்பிடுகின்றார். மன்னர் விரும்பிப் படித்த மருத்துவநூல்களும், மலர்கள், இயற்கை அறிவியல் ஓவியங்களும் இருந்தனவாகவும் குறிப்பிடுகின்றார்.[61]

நூல்கள் சேகரிப்புப் பணி

இம்மன்னர் காலத்தில் பன்மொழிப் பண்டிதர்கள் எழுதிச்சேர்த்த நூல்கள் அல்லாமல் பல ஏட்டுச்சுவடிகள் மற்றும் அச்சுநூல்கள் பணம்கொடுத்து விலைக்கு வாங்கி நூலகத்தில் சேர்க்கப்பட்டன. கிடைக்காத நூல்களுக்குத் தக்கவரை அனுப்பி படியெடுக்கச் செய்து அவற்றை நூலகத்தில் சேர்த்தார். இவற்றினைப் பல மோடி ஆவணங்கள்வழி நாம் காணமுடிகின்றது.

"காசியிலிருக்கும் கிரந்தங்களை எழுதி ஸர்க்காருக்கு அனுப்புவதற்கு திருப்பனந்தாளில் காசி தம்பிரானிடம் 1000 ரூபாய் அனுப்பினதற்கு ரூபாய் சேர்ந்ததற்குத் தம்பிரான் பதில் எழுதிய கடிதம்"[62] இது கி.பி. 1805-ஆம் ஆண்டு எழுதப்பட்ட ஆவணக்குறிப்பு ஆகும்.

"திருப்பனந்தாள் மடத்து பண்டாரச் சன்னதி (காசிப் பண்டாரம்)

அவர்கள் அனுப்பிய ஆள் காசி மற்றும் வடபாகங்களிலிருந்து சுவடிப் பிரதிகளைக் கொண்டு வந்ததற்காக இராஜாவின் கருவூலத்திலிருந்து ரூ. 100/- அளிக்குமாறு இசைவாணை வழங்கப் படுகின்றது. "[63]

இதுவும் கி.பி. 1805-ஆம் ஆண்டுக்கான குறிப்பு ஆகும். இவற்றின் மூலம் மன்னர் தமது காசிப்பயணத்திற்கு முன்பாகவே நாட்டின் வடபாகங்களிலிருந்து தக்கவர்களின் வழியாக அரிய பல சுவடிகளைப் படியெடுக்கச் செய்து தமது நூலகத்தில் சேர்த்துள்ளார் என்பது தெளிவு.

கி.பி. 1807க்கான மோடி ஆவணக் குறிப்பில் மன்னர் பாரா மீட்டர், இராயல் பேப்பர், மார்பில் பேப்பர் போன்றவற்றையும், வேதியல், கணக்கு, மருத்துவம், இயந்திரவியல் போன்ற ஆங்கில நூல்களைச் சென்னை Hops & Co கடையிலும் ஹிப்கரியின் கடையிலும் வாங்கியதாகக் கூறப்படுகின்றது.[64]

கி.பி. 1821-ஆம் ஆண்டு சூலை 12-ஆம் நாளிட்ட குறிப்பு:-

"முகாம் - காசி. மிஸ்டர் டூரின் சாஹேப்பிடமிருந்து சீமையிலிருந்து புத்தகங்கள் நிறைந்த பெட்டிகள் வந்திருக்கும் அல்லது வரும். அவை வந்ததும் வந்தபடியே தஞ்சாவூருக்கு அனுப்பி சி.ரா.சிவாஜிராஜா சாஹேப்பிடம் கொடுக்கிறது."[65]

கி.பி.1821 நவம்பர் 30க்கான குறிப்பு:

"முகாம் - ஹீராபூர் கல்கத்தாவிலிருந்து வந்த அந்த 24 பீரங்கிகளும் சீமையிலிருந்து வந்த புத்தகங்கள் வகையறா நீங்கள் வாங்கிய 4 கௌஷி குதிரைகளும் தஞ்சைக்கு அனுப்பித்தே னென்றும், சிவரஹஸ்யத்தின் புத்தகம் பாங்கி தபாலில் அனுப்பினீர்க ளென்பதையறிந்து ஹ~ஜ~ருக்கு அளவிலாச் சந்தோஷ மேற்பட்டது."[66]

இக்குறிப்பின் மூலம் மன்னர் காசிப்பயணத்தின்போது நூல்கள் வாங்கியதையும் தமக்குத் தேவைப்பட்ட சிவரகசியம் என்னும் நூலினைத் தபாலில் அனுப்பச் செய்து பெற்றார் என்பதையும் அறிய முடிகின்றது.

கி.பி.1827-ஆம் ஆண்டுக் குறிப்பு:-

"வேதசாலை சாமவேத ஆசிரியர் அண்ணாசாமி கிரௌதி பூனாவிலிருந்து மஹதேவபட் என்பவரிடம் இருந்து 100 சக்கரங்கள்

அளித்துச் சாமவேதச் சுவடிகள் பெறப்பட்டன".[67]

"ரானோஜி மகாலோஜி காட்கே என்பவர் தம் நாட்டுக்குச் சென்றவர் திரும்பி வருங்கால் சோதிட நூல்கள் வாங்கிவர ரூ. 200 கொடுக்கப் பெற்றார்."[68]

1827-ஆம் ஆண்டுக் குறிப்பு:-

"ஸரஸ்வதிமகாலில் தமிழ் எழுத்து தமிழ் பாஷையில் வைத்திய விஷயம் ஸாஹித்தியஞ் செய்து கொடுத்தற்காக திருவேங்கடம் ஏடுகள் சுமார் 145க்கு சக் 4-3"[69]

இதன் மூலம் ஏடுகளின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு சம்பளம் வழங்கப்பட்டு நூல்களை எழுதச்செய்து அவை நூலகத்தில் சேர்க்கப் பட்டன எனத் தெரிகின்றது.

1827க்கான குறிப்பு:-

"திருவேங்கடம்பிள்ளை ஸாகித்யஞ்செய்து கொடுத்த வைத்திய விஷயம் கர்ப்பிணியின் சிகித்ஸைப் பாடல் சுமார் 150க்கு சக். $4^1/_2$"[70]

இக்குறிப்பால் வைத்திய நூல்கள் தமிழ்மொழியில் பல எழுதப்பட்டு நூலகத்தில் சேர்க்கப்பட்டதை அறியமுடிகின்றது.

1829-ஆம் ஆண்டுக்கான மோடி ஆவணக் குறிப்பு:-

"ஸ்ரீ காசி சேஷத்திரத்திலிருந்து காசித்தம்பிரான் மூலமாய்க் கங்கையின் காவடிகளும், புத்தகங்களும் வாங்கிக் கொண்டு வந்ததற்குத் தம்பிரானுடைய வக்கீல் நகோஜி மல்ஹார் இடம் கொடுத்து கும்பினி ரூ புத்தகத்திற்கு 299, கங்கையை கொண்டுவர 113 ரூ".[71]

மற்றொரு குறிப்பு:-

"காசியிலிருந்து கங்கையின் காவடிகளும் புத்தகம் வகையறாக்களையும் கொண்டு வந்தவனுக்கு இனாம் ரூ. 30"[72]

1829-ஆம் ஆண்டுக் குறிப்பு:-

"ஸர்காருக்கு அப்பையதீக்ஷதருடைய புத்தகங்கள் கொண்டுவர ஒடையார்பாளையத்திற்குச் சென்றவனுக்கு நாளொன்றுக்குப் படிச் சிலவு-2 அணா."[73]

"ஸ்ரஸ்வதிமகாலில் தமிழ்ப் புத்தகங்கள் ஆறுமுகப் பிள்ளையிடம் ரூ. 20 வாங்கியது"[74]

"சரஸ்வதிமகாலில் தமிழ் எழுத்து பாஷையிலே வேதாந்த

விஷய வைஷ்ணவ மதம் புத்தகத்தைப் பரிசீலித்து எழுதுகிற திருவேங்கடப் பிள்ளைக்கு ரூ. 2-8-9"[75] என்ற 1829-ஆம் ஆண்டு ஆவணத்தின்வழி, நூலகத்தில் பலமொழி நூல்களை ஆராய்ந்து தமிழ்மொழியில் நூல்கள் எழுதிச் சேர்க்கப்பட்டதனையும் அறிய முடிகின்றது. இந்தக் குறிப்புக்கள் சரபோஜி மன்னரின் நூல்கள் தொகுக்கும் பணியினைப் பற்றி அறிய உதவுகின்றன.

பதஞ்சலி சூத்திரம்

மன்னர் காசிப்பயணம் மேற்கொண்டபோது பல வடமொழிச் சுவடிகளை விலைகொடுத்து வாங்கிவந்து தமது நூலகத்தில் சேர்த்தார் என்பதை அறிகிறோம். அவ்வகையில் நூலகத்தில் இப்போது உள்ள பதஞ்சலி சூத்திரம் என்னும் வடமொழி காகிதச் சுவடியின் பிற்குறிப்பாக, "பதஞ்சலி சூத்திரம், கிரந்தம் 600, இந்தப்புத்தகம் ஸ்ரீமந்த ராஜா சரபோந்திரர் ராஜாவால் விலைக்கு வாங்கப்பட்டு காசி தேசத்திலிருந்து அனுப்பப்பட்டது"[76]

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பல சுவடிகள் படியெடுக்கப்பட்டு நூலகத்தில் சேர்க்கப்பட்டமை விளங்குகின்றது.

நூல்கள் பாதுகாக்கும் பணி

நூல்களைச் சேர்த்தல், படியாக்கம் செய்தல், அட்டவணை செய்தல் ஆகிய பணிகளுடன் பழுதுபட்ட நூல்களை மன்னர் செப்பனிடவும் ஏற்பாடு செய்தார் என்பதற்குப் பல ஆவணச் சான்றுகள் உள்ளன.

1804-ஆம் ஆண்டுக் குறிப்பு:-

"சரஸ்வதிமகால் ஓலைப் புத்தகங்களுக்குக் கயிறு திரிப்பதற்கு உத்திரவாக வேணும், மகாலிலுள்ள 2 எழுத்தாணிகளைத் தீட்டிக் கொடுக்கிறது"[77] என்னும் குறிப்பால் ஓலைச்சுவடிகள் உரிய கயிறு கொண்டு கட்டிவைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டதை அறிய முடிகின்றது.

1828-ஆம் ஆண்டுக்கான குறிப்பு

"ஹாஜார்-தாவீத் பிள்ளையின் மூலம் ஆங்கிலேயம் புத்தகங்களைப் பழுதுபார்க்க ருஸ்தும்ஜீயின் கடையில் இராயல் பேப்பர் 2 தஸ்தா ரூபாய் 2க்கு கரீதி செய்யப்பட்டன.[78]

இதன் மூலம் அச்சிட்ட ஆங்கிலப் புத்தகங்களைப் பழுதுபார்க்க இராயல் பேப்பர் வாங்கப்பட்டுக் கட்டடம் செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட்டதனை அறிய முடிகின்றது.

மேலும், பழுதடைந்த ஓலைச்சுவடிகளை நீக்கி அவற்றிற்குப் பதிலாகப் புதிய சுவடிகள் எழுதப்பட்டு இடையில் சேர்க்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. இதனை, "மகாலில் இருக்கின்ற சமஸ்கிருத புத்தகங்களில் பழுதாய்ப் போன புத்தகங்களைப் புதியதாய் எழுதின கிரந்தவகை:

நெ: 1002 இல் பத்திரம் 1க்கு கிரந்த சங்கை	50
நெ: 1007 இல் பத்திரம் 10க்கு கிரந்த சங்கை	375
நெ: 949 இல் பத்திரம் 10க்கு கிரந்த சங்கை	375
ஆக	800

மேற்படி கிரந்த சங்கை 800க்கு ரூ. 2-8-0; கூடுதல் ரூ 2ம் புத்தகங்கள் எழுதிய ஏகநாதய்யருக்கு கொடுக்கும்படி உத்தரவாக வேணும். 26.2.77 குப்பாபட்லு" என்ற தமிழ் ஆவணத்தினால் அறியலாம்.[79] இதில், தெலுங்கில் கையொப்பமிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பழுதடைந்த ஓலைச்சுவடிகளை எழுதியவர்களுக்கு எழுத்துக்களின் எண்ணிக்கைக்கு ஏற்பக் கூலி வழங்கப்பட்டதையும் அறியமுடிகின்றது. இவ்வாறு ஓலைச்சுவடிகளைக் கயிறு கொண்டு கட்டியும், அச்சுநூல்கள் கட்டடம் செய்தும், பழுதான ஓலைகளுக்குப் பதிலாகப் புதிய ஓலைகளை எழுதிச் சேர்த்தும் இலக்கியம் அழியாமல் பாதுகாக்கப்பட்டதனையும் அறிய முடிகின்றது.

படியாக்கும் பணி

சரபோஜி மன்னர் சரசுவதிமகாலில் இருந்த சுவடிகளைப் படியெடுக்கச் செய்தும், பழுதுபட்ட சுவடிகளைப் புதுப்பிக்கச் செய்தும் நூலக வளர்ச்சிக்கான பணியினைச் செவ்வனே செய்தார். பலமொழி வல்லுநர்களை நியமித்து இடைவெளியில்லாமல் பல மொழிகளில் இருந்த சுவடிகளைப் படியெடுக்கச் செய்தார். இப்பணியினைச் செய்ய பலர் இருந்தனர் என்பதைக் கீழ்க்காணும் மோடி ஆவணக் குறிப்புக்களால் அறியலாம்.

1807-ஆம் ஆண்டு மோடி ஆவணக் குறிப்பு:-

"காகிதச்சுவடியைப் படியெடுப்பதற்காக வெங்கடகிருஷ்ண சாஸ்திரிக்கு மாதம் ஒன்றுக்கு 6 சக்கரமும், பாலசாஸ்திரிக்கு மற்றும்

இராம-சாஸ்திரி ஆகியோருக்கு மாதம் ஒன்றுக்கு 6 சக்கரமும் கொடுக்கப்பட்டது. மொத்த சக்கரம் 12."[80] இக்குறிப்பு மூலம் காகிதச் சுவடிகளுக்குப் பல படிகள் எடுக்கப்பட்டு நூலகத்தில் வைக்கப்பட்டன என அறிய முடிகின்றது.

கி.பி. 1826 ஆம் ஆண்டு மோடி ஆவணக்குறிப்பு:-

"சரஸ்வதி மகாலில் புத்தகம் எழுதுகிறவர்களுக்கு பானோபந்து (மராட்டியம்) புத்தகம்-ஆயிரத்திற்கு ஒன்று வீதம், சாமாசாரியார் குமாரன் ஸ்ரீநிவாஸாசாரிக்கு கிரந்தம் 1962க்கு $1^1/_2$ - $4^1/_2$ மொஸலி ரங்கநாதாச்சாரிக்கு 1-3 அனந்தா-சாரிக்கு ஓலைகிரந்தம் 4066க்கு ஆயிரத்திற்கு 4 வீதம் 1-5

மொத்தம் $4^1/_2$ - $3^1/_2$"[81]

நூலகத்தில் படியாக்கம் செய்தவர்களுக்கு எழுத்தின் (கிரந்தம்) எண்ணிக்கைக்கு ஏற்ப கூலி வழங்கப்பட்டதையும், "அனந்தாசாரிக்கு ஓலைகிரந்தம்" என்ற குறிப்பால் ஓலைச்சுவடிகளுக்கும் படியாக்கம் செய்யப்பட்டது என அறிய முடிகின்றது.

கி.பி.1827-ஆம் ஆண்டுக்கான மோடி ஆவணக்குறிப்பு:-

"மஹால் அன்னசத்திரம் இராஜஸாம்பாபுரத்திலிருந்து ஸரஸ்வதி மஹாலுக்கு 501 எழுத்தாணிகள் கொடுக்கப்பட்டன"[82]

"இராஜஸாம்பாபுரத்திலிருந்து மஹாலுக்கு 501 எழுத்தாணிகள் பெறப்பட்டன" என்ற குறிப்புகளால் நூலகத்தில் இருந்த ஓலைச் சுவடிகளைப் படியெடுக்கும் பணி தொடர்ந்து நடைபெற்றிருக்க வேண்டும் எனக் கருதலாம்.

கி.பி. 1828-ஆம் ஆண்டுக்கான குறிப்பு:-

"சரஸ்வதிமகாலில் தமிழ் எழுத்துப் புத்தகங்கள் கரீதி செய்தவகையில் ஓலை ஸ்கந்தபுராணம் பாடல் 14610, சிவதர்மபாடல் - 1228 = 15,838."[83]

1829-ஆம் வருடக் குறிப்பு:-

"வேதசாலையில் ருக்வேத புத்தகத்தை எழுதுகிற கிருஷ்ணாசாரே எழுதிய கிரந்தம் சுமார் - ஏழாம் அஷ்டகம் 1462, எட்டாம் அஷ்டகம் 1734 = 3196க்கு 4 - 10-6".[84]

1828, 1829 ஆம் ஆண்டுகளுக்கான இக்குறிப்புகளால் சரபோஜி மன்னரின் ஆட்சிக்காலம் முழுவதும் அனைத்துமொழிச் சுவடிகளும்

படியாக்கம் செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட்டதை அறிய முடிகின்றது.

நூல்கள் வழங்கும் பணி

சரபோஜி மன்னரின் ஆட்சிக்காலத்தில் சரசுவதிமகாலில் இருந்த நூல்களை அரச குடும்பத்தினரும் அதிகாரிகளும் குறிப்பாக அரச குடும்பத்து மகளிரும் எடுத்துச்சென்று படித்துவிட்டு, பின்னர் திருப்பி அளித்தல் என்பது நடைமுறையில் இருந்ததற்கான சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன.

கி.பி. 1804ஆம் ஆண்டுக்கான மோடி ஆவணக்குறிப்பின்படி, "ஸ்ரஸ்வதி மகாலில் இராமிருத தரங்கம் என்னும் கிரந்தத்தின் பிரதிகளை மாப்பிள்ளை ரா.நாகோஜி மொஷிதே இடம்கொடுத்து வாங்கிறது"[85]

1811-ஆம் வருடக் குறிப்பு:-

"சரசுவதிமகாலிலிருந்து அமரப்புத்தகத்தின் நகல்-1, சப்த புத்தகத்தின் நகல்-1, சமாச சக்ர நகல்-1, இவை 3ம் மாப்பிள்ளையிடம் கொடுத்து வாங்குவது"[86]

"ஜிஜாம்பாபாயி சாயேபு அரண்மனைக்கு ஒரு மாசக் கெடுவுக்கு வைசாக மகத்துவம்"

"சையம்பாபாயி சாயேபு அரண்மனைக்கு ஒரு மாசக் கெடுவுக்குச் சிராவண மகத்துவம்" போன்ற குறிப்புக்களால் இவற்றை அறிய முடிகின்றது.

மன்னர் காசி யாத்திரையில் இருந்தபோது நூல்வேண்டி 1822 சனவரி 26-ஆம் தேதி அனுப்பிய குறிப்பால் நூல்கள் மன்னரின் முகாமுக்கே வழங்கப்பட்டதையும் அறிய முடிகின்றது.

"ஆங்கிலக் கவிதைகளை மராட்டிய பாஷையில் தேவநாகரி எழுத்தில் அச்சிட்ட புத்தகம் நவவித்யா கலாநிதி பள்ளியிலிருக்கிறதில் ஒரு புத்தகத்தை ஸவாரி முகாமுக்கு அனுப்பவும்"[87] என்னும் குறிப்புக்களால் இன்றைய முறைப்படி நூல்கள் படிப்பதற்கு வழங்கப் பட்டதையும் அவற்றினை முறைப்படி பதிவு செய்யப்பட்டதையும் அறியமுடிகின்றது.

மொழிபெயர்ப்புப் பணி

மன்னர் 1831-இல் இந்தியாவில் இருந்த கிழக்கிந்திய கம்பெனியில் பணிபுரிந்த ஒருவரைப் பணிக்கு அமர்த்தி உடல்கூறு

தொடர்பான ஆங்கிலமொழி நூல்களை மராட்டி மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்யச் செய்தார்.

1827-இல் தமிழ்ப் புலவர் ஒருவரைப் பணிக்கு அமர்த்தி ஆங்கில மருத்துவரின் குறிப்புக்களைத் தமிழில் எழுதவும் செய்துள்ளார்.[88] இதுபோன்ற மொழிபெயர்ப்புப் பணிகள் சரசுவதிமகாலில் நடைபெற்றதற்குப் பல சான்றுகள் உள்ளன.

சரபோஜி தொகுத்த ஐரோப்பிய அச்சுநூல்கள்

மன்னர் சரபோஜி தாம் தொகுத்த இந்திய நூல்கள் மட்டும் தமது அறிவுப்பசியைத் தீர்க்காது என உணர்ந்து உலகம் முழுவதும் வெளியிடப்பட்ட நூல்களைப் பணம் கொடுத்து வாங்கியும் அன்பளிப்பாகப் பெற்றும் தமது அறிவுப் பசியினைத் தீர்த்துக் கொண்டார். அவ்வாறு நூல்கள் வாங்குவதற்குத் தம்மிடம் பணம் இல்லாதபோது தமது விலையுயர்ந்த பொருட்களைக் கொடுத்து நூல்களை வாங்கத் தயங்கியது இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

"ஒருமுறை அயல்நாட்டிலிருந்து சில விசேடச் சுவடிகள் விலைக்கு வந்தன. அவை மிகவும் அரியவை. சரபோஜியின் கையில் பணம் இல்லை. தம்முடைய விலை உயர்ந்த பதக்கத்தைக் கொடுத்து அச்சுவடிகளை வாங்கினார். சுவடிகள் பதக்கத்தைவிட விலை உயர்ந்தவை என்று சரபோஜி கருதினார்"[89] என்று ஆய்வாளர் குறிப்பிடுவதால் அவர் நூல்கள் மேல் வைத்திருந்த மதிப்பு நன்கு விளங்குகின்றது.

நூல்கள் சேகரித்தல்

பல ஐரோப்பிய மொழி நூல்களை மன்னர் சேகரிப்பதற்கு உதவியவர்கள் பெஞ்சமின்டூரின், கின்டர்சிலி (Kinder Sly), பிஷப் ஹீபர், ஆபிரகாம் பிள்ளை (இந்திய கிறித்தவர்), திருச்சிராப் பள்ளியிலிருந்து வந்த வியாபாரிகள் ஆகியோரின் மூலமாகவே பல நூல்களைப் பெற்றுள்ளார்.[90] மேலும், டூரினுடன் மன்னர் 1803-முதல் தொடர்ந்து தொடர்பு வைத்துக்கொண்டு நூல்கள் மற்றும் ஆய்வு உபகரணங்களையும் ஐரோப்பாவிலிருந்து பெற்றுச் சேகரித்தார்.

மன்னர் வாங்கிய நூல்களில் தமது கையொப்பத்துடன் அந்நூலினை வாங்கிய நாளினையும் தமது கைப்படக் குறிப்பிட்டுள்ளார். தாம் படித்த நூல்களில் சிறப்பான செய்திகள் இருப்பின் அவற்றின் பக்கத்தில் கோடிட்டுக் குறிப்பிடவும் செய்துள்ளார். இவ்வாறு மன்னர் தொகுத்த ஐரோப்பிய மொழி

நூல்கள் சுமார் 4500க்கு மேல் ஆகும். இத்தொகுப்பில் அந்நாளைய தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளரும், அரசு மேற்பார்வையாளருமாகிய பிளாக்பர்ன் அளித்த சில ஆங்கில நூல்களும் அடங்கும். இந்நூல்களுக்கான பட்டியல் 1830-இல் தயாரிக்கப்பட்டது. அதன்படி 3599 நூல்கள் இருந்தன. பின்னர் 1940-இல் முழுமையான பட்டியல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

1989-இல் சரபோஜியின் சொந்தத் தொகுப்பு மற்றும் பிற அரிய நூல்களுக்கான ஆங்கிலப் பட்டியல் (A Catalogue of Serfoji's Personal Collection and Other Rare Books, 1989) பொருள் வாரியாக வகை செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. அதில் மொத்தம் 3830 ஆங்கில நூல்களுக்கான விவரங்கள் (Bibliography) தரப்பட்டுள்ளன. இத்தலைப்புக்களால் அறிவுத்துறையில் வெளிவந்துள்ள அனைத்து நூல்களையும் மன்னர் படித்துள்ளார் என்பது தெளிவாகின்றது.

இவர் தொகுத்த நூல்களுள் வரலாறு தொடர்பானவை 498 ஆகும். மருத்துவம் தொடர்பான நூல்கள் 460. இது இரண்டாவது இடத்தினைப் பெறுகின்றது. மூன்றாவது 424 நூல்களைக் கொண்ட இயற்கை வரலாறு மற்றும் அறிவியல் விளக்கங்களுக்கான நூல்களாகும்.

இம்மன்னர் வாங்கித் தொகுத்த ஐரோப்பிய நூல்களுள் காலத்தால் மிகவும் முந்தியது "The Life of Theodore Agrippa" எனும் நூலாகும். இந்நூல் 1712-இல் அச்சிடப்பட்டதாகும்.[91]

புதிய நூல்களை உடன் சேகரித்தல்

மன்னர் தமது பொருளாதாரத்தின் பெரும்பகுதியை நூல்கள் வாங்குவதற்கே செலவு செய்தார். அயல்நாட்டில் வெளியான நூல்களையும் உடனுக்குடன் தக்கவர்களைக் கொண்டு வாங்கிச் சேகரித்தார்.

"Commentaries on the Life and Reign & Charles the First, King of England, by I.D.Israeli, Vol. I" என்ற நூல் இலண்டனில் 1828-இல் வெளியிடப்பட்டது. இதனை மன்னர் தமது நூலகத்திற்கு 1829-இல் வாங்கிச் சேகரித்துள்ளார். இதில், இவரின் கையொப்பத்துடன் பல பக்கங்களில் குறிப்புக்களையும் எழுதி வைத்துள்ளார்.

இலக்கண நூல்கள்

பல மொழிகளைக் கற்ற மன்னர் மொழிகளுக்கு அடிப்படையான இலக்கண நூல்கள் பலவற்றினைச்

சேகரித்துள்ளார். அவற்றில் தமிழ்,[92] ஆங்கிலம்,[93] இந்துஸ்தானி,[94] சீனம்,[95] செர்மனியம்,[96] இலத்தீன்,[97] சப்பானியம்,[98] போர்ச்சுகீசியம்,[99] பாரசீகம்[100] முதலிய நூல்கள் குறிப்பிடும் படியாக உள்ளன.

அகராதி நூல்கள்

இலக்கணத்துடன் மொழி கற்ற பின்னர் சொற்களுக்குப் பொருள் அறியத் தேவைப்படுவது அகராதிகள். பொருள் தெரியாத ஒருமொழிச் சொல்லுக்குத் தெரிந்த மொழியில் பொருள் காண்பது எளிது. இத்தகைய பல அகராதிகள் (Bilingual Dictionaries) மன்னரின் தொகுப்பில் உள்ளன.

பிரஞ்சு-ஆங்கிலம்[101], தமிழ்-ஆங்கிலம்,[102] மலையாளம்-ஆங்கிலம்,[103] இத்தாலி-பிரஞ்சு,[104] பாரசீகம்-அராபி-ஆங்கிலம்[105] ஆகியவை குறிப்பிடும் படியாக உள்ளன.

இவற்றிக்கும் மேலாகத் துறைசார்ந்த அகராதிகளான (Subject Dictionary) கலை, அறிவியல் அகராதி,[106] போர்க்கலை அகராதி,[107] கடற்கரை அகராதி,[108] கணக்கு அகராதி[109] ஆகியவையும் குறிப்பிடத் தக்கவையாகும்.

ஆண்டேடுகள், நெறிகாட்டிகள்

மன்னர் நாட்டு நடப்பையும் ஆட்சிமுறையையும் அறிந்து கொள்வதற்காக 78 ஆண்டேடுகளையும், நெறிகாட்டிகளையும் தொகுத்துள்ளார். இத்தொகுப்பில் கி.பி. 1807 முதல் சென்னை மாகாணத்தின் ஆட்சிமுறையை அறிய உதவும் மெட்ராசு அல்மனாக்கின் (Madras Almanac) 42 நூல்கள் இடம்பெற்றுள்ளன.

இத்தொகுப்பில் மேனாட்டு அறிஞர்கள் வரைந்த அரிய ஓவியங்களான டேனியல் படங்களும், சார்லஸ் லீ புரூன் என்ற ஓவியர் வரைந்த முகஒற்றுமைப் படங்களும், உலக வரைபடங்களும் இடம் பெற்றுள்ளன. இத்தொகுப்பில் ஆங்கில நூல்கள் தவிர பிரஞ்சு நூல்கள் 420, செர்மன் நூல்கள் 100, இசைவரைவு நூல்கள் 100, டேனிஸ், டச்சு மொழி நூல்கள் ஆகியன இடம் பெற்றுள்ளன.

வெளியீட்டாளர்கள்

மன்னர் தொகுத்த ஆங்கில நூல்களின் வெளியீட்டாளர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்: R.Walker, London; W.Strahan, London; Henry Colburn, London; Charles Dilly, London; Richard Phillips, London; John

Bell, London; T.Cadell, London; Robert Wilkinson, London; Darton, London; W.Blackwood, Edin; C.Robinson, London; J.Murrey, London; Samuel Watson, Dubline; Pinnock-Mainder, London; W.Balmer, London; S and E Ballard, London; J.Naurse, London; Thomas Davison, London; A.Domaldson, Edin போன்ற நிறுவனங்கள் முக்கியமானவை. இந்நூல்கள் இப்போதைய ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும் பயனுள்ளனவாக விளங்குகின்றன.

சரபோஜி மன்னர் கால நூல்கள் விவரப்பட்டியல் தயாரிக்கும் பணி

மேனாட்டுக் கல்விமுறையையும் நூல்களைப் பற்றிய அறிவினையும் பெற்றிருந்த மன்னர் சரபோஜி சரசுவதிமகாலில் சேர்த்து வைக்கப்பட்டிருந்த ஓலைச்சுவடிகள் மற்றும் காகிதச் சுவடிகளுக்கு முறையே ஓலைச்சுவடிகளுக்கு ஓலையிலும், காகிதச் சுவடிகளுக்குக் காகிதத்திலும் முதல்முறையாக அட்டவணை தயாரிக்கச் செய்தார்.

ஓலைச்சுவடிகளுக்கான அட்டவணை தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டியிருப்பதை அறிகின்றோம். இவ்வட்டவணையின் முதல் ஓலையில் கீழ்க்கண்டவாறு தெலுங்குமொழியில் எழுதப் பட்டுள்ளது. "சரபோஜி மகாராசா அவர்கள் பட்டத்திற்கு வருவதற்கு முன்பு இந்த சரசுவதிமகால் நூல்நிலையத்திற்கு விவரமான பட்டியல் இல்லை. 1720 காளயுக்தி ஆண்டு சரபோஜி மகாராசாவுக்கு பட்டயம் கட்டியபின் மான்யம்பட் என்கிற கங்காதரபட்,சதாசிவபட் ஆகியோருக்கு அதிகாரம் வழங்கியபின் இந்த சரசுவதிமகால் காகிதப்புத்தகங்களுக்கும், ஓலைச் சுவடிகளுக்கும் தகுந்தவர்களை நியமித்து புத்தகங்களைப் பரிசீலித்து பட்டியல் தயாரிக்கப்பட்டது. சக ஆண்டு 1722, ஆங்கில ஆண்டு 1801, இந்த அட்டவணை தயாரிக்கப்பட்டது ரௌத்திரி வருடம்."[110]

ஓலைச்சுவடிகளுக்கான அட்டவணை மூன்று சுவடிக் கட்டுகளாக உள்ளன. இதில் புராண தர்க்கம், வியாக்ரணம், தர்மசாஸ்திரம், சப்த சாஸ்திரம், ஆகம சாஸ்திரம், பாரதம், பாகவதம், நாடகம், சம்ஹிதை, தமிழ், தமிழ்வைத்தியம் போன்ற தலைப்புக்களில் நூல்கள் பிரிக்கப்பட்டு வரிசை எண், தலைப்பு, ஏடுகளின் எண்ணிக்கை, சுவடிகள் முடிவின் தன்மை ஆகிய தகவல்கள் தரப்பட்டுள்ளன.

காகிதச் சுவடிகளுக்கு 1807-ஆம் ஆண்டில் காகிதத்தில் அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் இப்போது நாம் பயன்படுத்தும் 'அகரவரிசை-பொருள் பட்டியல் முறை' பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வட்டவணையில் சுவடிகளின் தலைப்புக்கள் முதல்எழுத்து வகையாகப் பிரிக்கப்பட்டு, பின்னர் பொருள் வகையாகப் பட்டியலிடப் பட்டுள்ளன. இதில், ஒவ்வொரு நூலுக்குமான கிரந்த எண்ணிக்கை போன்ற விவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆங்கில நூல்களுக்கான அட்டவணை

இம்மன்னர் தமது காலத்திலிருந்த சுவடிகளுக்கு மட்டுமின்றி ஆங்கில அச்சு நூல்களுக்கும் அட்டவணைப் பட்டியலினைத் தயாரித்துள்ளார். இவ்வட்டவணையில் பொருள் தலைப்பு, பதிப்பின் விவரம், நூலின் அளவு போன்ற விவரங்கள் தரப்பட்டுள்ளன.

இவ்வட்டவணையின் முன்பக்கத்தில், "His Highness Raja Serfoji Maharaja's General Catalogue of an extensive valuable Collection of Books, 1830" என்ற விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை அனைத்தும் கையினால் எழுதப்பட்டு, அனைத்து நூல்களும் பாதுகாக்கப் பட்டுள்ளன.

சரபோஜி மன்னரின் அறிவியல் தொகுப்புக்கள்

மன்னர் சரபோஜி தமது நூலகத்தில் நூல்கள் சேர்த்தது மட்டுமன்றி அந்நூல்களைப் படித்து அறிவியல் தொடர்பான ஆராய்ச்சியினை மேற்கொள்ளும் பொருட்டு செடிகள், பறவைகள், விலங்குகள் போன்றவற்றினையும் வளர்த்தார். கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சிசெய்த மொகலாய மன்னர்களும் 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆராய்ச்சியினை மேற்கொண்ட ஐரோப்பிய இயற்கை அறிவியல் ஆராய்ச்சியாளர்களையும் போல இம்மன்னரும் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.

ஆராய்ச்சியின் பயனாகக் கண்டறிந்த முடிவுகளைப் படங்களாக வரையச் செய்து அவற்றிற்கான விளக்கங்களையும் எழுதச் செய்துள்ளார்.

தோட்டக்கலை

சரபோஜி தம் அரண்மனையிலேயே தோட்டத்தினை ஏற்படுத்தி,

தாம் செல்லுமிடமெல்லாம் புதியனவாகக் கண்ட தாவரங்களைக் கொண்டு வந்து வளர்க்கச் செய்தார். இதனைக் கீழ்க்கண்ட மோடி ஆவணத்தின் மூலம் அறியலாம்.

"20.2.1821 முகாம் மூவர் பட்டா . . . மஸுரா என்னும் தான்யம் இப்பிரதேசங்களில் ஏராளமாயுள்ளது. இது நம்முடைய ராஜ்யத்தில் இல்லை. விதைக்குத் தகுந்ததான கொஞ்சம் நெல் இக்கடிதத்தில் வைத்திருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் அபிவிருத்தி செய்கிறது".[111]

"8.3.1821 இல் கல்கத்தாவில் கவர்னர் ஜெனரலிடம் விடைபெற்றுக் கொண்டபொழுது தினுசுவாரி மரங்களின் விதைகளையும் மன்னருக்குக் கொடுத்தார்"[112]

"18.4.1821 முகாம்-முஸ்கேரா சமீபம் ஹஸன்கஞ்ச்... இப்பொழுது 'குலேகைரா' என்னும் பார்வைக்கு அழகாயிருக்கும் மலரின் படம் ஒன்று அனுப்பியிருக்கிறது. அதை ஹுஜுரின் ஸலாமுடன் ரெஸிடெண்டு சாயேபிடம் சேர்ப்பிக்கிறது. இப்பூவின் விதையும் வேறொரு பூவின் விதையும் தனித்தனி 2 பொட்டலங்களும், கத்தரிக்காயின் பொட்டலம் ஒன்றும் அனுப்பியிருக்கிறது. ரெஸிடெண்டு சாயேபு தோட்டத்தில் போடுவதற்கு அவருக்கு வேண்டிய அளவு கொடுத்து எஞ்சியவற்றைச் சர்க்காரின் தோட்டங்களிலெல்லாம் போட்டு அபிவிருத்தி செய்கிறது"[113]

மரம், பூக்கள் மட்டுமன்றி உணவுக்குத் தேவையான பல வகைச் செடிகளையும் பயிரிடச் செய்து தமது ஆய்வினைத் தொடர்ந்தார் என்பதனை மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் மூலம் அறிய முடிகின்றது. தாவரங்களை அழகுக்காக மட்டுமல்லாது மருந்துக்காகவும் வளர்க்கச் செய்து அவற்றினைத் தமது தன்வந்திரி மகால் மருத்துவ ஆய்வகத்தில் பயன்படுத்தியுள்ளார்.

உயிரியல் பூங்கா

பல பறவைகள், மீன்கள், குதிரை, யானை போன்றவைகளை வளர்க்க தனியாக ஒரு உயிரியல் பூங்காவினையும் நூலகத்துடன் ஏற்படுத்தியிருந்தார் என்பதனை ஒரு ஆவணம் குறிப்பிடுகின்றது.

"12.3.1821 முகாம் பிரஜாபூர்:

ஸாரஸ என்னும் பக்ஷி ஒரு ஜோடி தாஸ்தான் மஹால் தோட்டத்திலும் எஞ்சிய 4 சிவகங்கை தோட்டத்திலும் விட்டு

அவற்றிற்கு நாடோறும் உயிருள்ள மீன்களையும், அரிசி, நெல், சாதம் வைத்து விருப்பப்படி தனியாக விட்டிருக்கச் செய்ய வேண்டும் . . . சாமா என்னும் பக்ஷி 5உம் ஸர்க்காரில் வைத்துக் கொள்கிறது".[114]

உயிரியல் வண்ண ஓவியங்கள்

மன்னர் தமது அறிவியல் ஆய்வுக்கூடத்தில் ஆய்வு செய்து, முடிவுகளைத் தக்க ஓவியர்களைக் கொண்டு, தண்ணீர் வண்ணங்களால் வரையச் செய்து நூலகத்தில் சேர்த்துள்ளார். அவற்றில் இப்போது நூலகத்தில் மூன்று தொகுப்புக்கள் உள்ளன. அவற்றில் முறையே தொகுதி ஒன்றில் 19, தொகுதி இரண்டில் 61, தொகுதி மூன்றில் 11 மாக மொத்தம் 91 தலைப்புக்களில் 300 படங்கள் உள்ளன.[115]

இந்தியா ஆபீஸ் நூலகத்தில் ஓவியம்

தஞ்சையில் ஆங்கிலேயரின் குடியிருப்பு ஆட்சியராகப் பணியாற்றிய பெஞ்சமின் டூரின் என்பவர் 1803-இல் ஓய்வுபெற்றார். இவருடைய வழியனுப்பு விழாவில் மன்னர் 117 இயற்கை வரலாற்று ஓவியங்கள் வரையப்பட்ட புத்தகத்தினை அன்பளிப்பாக வழங்கினார். அப்புத்தகம் இப்போது இலண்டன் இந்தியா ஆபீஸ் நூலகத்தில் பாதுகாக்கப் பட்டுள்ளது.[116] அதில் பறவைகள், மீன்கள், விலங்குகளின் படமும், அவற்றிற்கான விளக்கமும், அவற்றின் மூலம் அறியப்பட்ட கருத்துக்களை மன்னர் தமது கைப்பட ஆங்கிலத்தில் எழுதிய குறிப்புகளும் உள்ளன. மன்னர் இயற்கை அறிவியல் ஆராய்ச்சிக்குத் தம் நூலகத்தினைப் பயன்படுத்துவதற்குப் பல அறிவியல் நூல்களை விலைகொடுத்துப் வாங்கிச் சேகரித்தார். நூலகத்திலுள்ள ஓவியத் தொகுப்புக்கள் இன்றளவும் வண்ணம் மாறாமல் பார்ப்பவரை வியக்கவைக்கும் வண்ணமாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.[117]

சரபோஜியின் அறக்கட்டளை வெளியீடு

பல இலக்கிய அமைப்புக்களில் அங்கத்தினராக இருந்த மன்னர் பல அறக்கட்டளைகளை ஏற்படுத்தியிருந்தார். அவ்வாறு இலண்டனில் 1828 இல் மன்னர் ஏற்படுத்திய "Oriental Translation Fund" என்ற அறக்கட்டளை மூலம் IBN Batuta's Travels" என்ற ஆங்கிலநூல் அச்சிடப்பட்டு 1829-இல் வெளியிடப்பட்டது. இதன் மூலம் மன்னருக்கு இலக்கியத்தின் மீதும் நூலகப்பணியின் மீதும்

இருந்த ஆர்வம் நன்கு விளங்குகின்றது.

ஆங்கிலேயர்களிடமிருந்து நூலகம் அழிக்கப்படாமல் பாதுகாத்தல்

தஞ்சையில் சரபோஜி மன்னர் ஆட்சிசெய்த காலத்தில் திப்புசுல்தான் மைசூரை ஆட்சிசெய்தார். திப்புவும் ஒரு நல்ல நூலகத்தினைத் தமது அரண்மனையில் ஏற்படுத்தியிருந்தார். ஆனால், ஆங்கிலேயருடன் இவருக்கு ஏற்பட்ட போரின் காரணமாக இவருடைய நூலகம் அழிக்கப்பட்டுவிட்டது. இந்நூலகம் இருந்ததற்கு ஆதாரமாக உள்ள அட்டவணை, "A Descriptive catalogue of the oriental Library of the late Tippoo Sultan of Mysore to which are pre fixed of Hyder Ali and his son Tippoo Sultan by Charles Stewart, Cambridge, 1809"[118] என்பதாகும். இந்த நூலினை மன்னர் சரபோஜி 1827 இல் தொகுத்து வைத்துப் பாதுகாத்தார். ஆனால் சரபோஜி மன்னர் ஆங்கிலேயருடன் சண்டை ஏதும் புரியாமல் பெயரளவில் மன்னராக இருந்து அவர்களுடன் நல்லுறவு கொண்டதனாலேயே இச்சரசுவதி மகால் நூலகத்தினை அழிவிலிருந்து காக்க முடிந்தது எனத் தெரிகின்றது.

சரபோஜியின் முழுஉருவச் சிலை

ப்ளாக்மன் என்ற அமெரிக்கர் இலண்டனில் இருந்தபோது அவரால் செய்து பெறப்பட்ட 'சுவார்ட்ஸ் பாதிரியாரின்' மரணப்படுக்கைக் காட்சியின் சலவைக்கல் சிற்பம் சரபோஜியைக் கவர்ந்தது. மன்னர், தம்முடைய முழுஉருவச் சிலையைச் செய்ய விரும்பி பின் அவரது காலத்திலேயே அது நிறுவப்பட்டது. 1823-ஆம் ஆண்டுக்கான மோடி ஆவணம் மூலம் இதனை அறிய முடிகின்றது.[119] பிஷப் ஹீபர் அரண்மனைக்கு வருகை புரிந்தபோது தாம் இச்சிலையைப் பார்த்ததாகவும் குறிப்பிடுகின்றார்.[120]

தஞ்சை மராட்டிய மன்னர் இரண்டாம் சரபோஜியின் காலத்திய நூலக நிலை மிகவும் குறிப்பிடத்தக்கது. இவருடைய இளமைக் காலம் சுவார்ட்ஸ் பாதிரியாரால் மேன்மையுற்றது. ஆங்கிலேயரின் அரவணைப்பால் இம்மன்னர் தமது முழு நேரத்தையும் இந்நூலக உருவாக்கத்திற்காகவே செலவிட முடிந்தது எனத் தெரிகின்றது. மன்னரின் ஆங்கிலப் புலமையால் பல்துறை அறிவு மேலும் பெருகியது. இதற்கான பல நூல்கள் நூலகத்தில் சேர்க்கப்பெற்றன. அத்துடன், கல்விப் பணிகள் பெருகியதன் காரணமாக நூல்களும் பெருகின. சத்திரப் பள்ளிகள், கல்வி மான்யங்கள், பாடநூல்

தயாரிப்பு இவற்றால் நூலாக்கங்கள் பல நிகழ்ந்தன. மன்னரின் அவைக்களத்தில் பன்மொழிப் புலவர்கள் நிறைந்து காணப்பட்டனர். இதனால் புதிய பல நூல் படைப்புகளும் கிடைத்தன. மருத்துவம் போன்ற அறிவியல் தொடர்பான நூல்களும், படங்களும், ஓவியங்களும் பன்முகநோக்கில் இந்நூலகத்தில் சேர்த்து வைக்கப்பெற்றன. இரண்டாம் சரபோஜியின் காலத்திலேயே அச்சகப்பணிகளும் தொடங்கப் பட்டன. பழமையைக் காப்பதிலும் புதுமையை நேசிப்பதிலும் பெரிதும் ஆர்வம் காட்டிய இம்மன்னர் 'ஓர் உண்மையான மன்னர்' என்ற நற்பெயரையும் பெற்றுள்ளார். இதற்குச் சான்றாகவே இன்றும் இவருடைய சரசுவதி மகால் நூலகம் உலகோர் வியக்கும் வண்ணம் சிறப்பாக இயங்கி வருகிறது.

மேற்கோள் சான்றுகள்

1.B.J.Baliga, Tanjore District Hand Book, pp. 82-83.

2. "Serfagee, in 1799, executed the treaty that had been proposed to his uncle, giving up the management of the country to the British, reserving to himself several palaces, the Tranquebar tribute of two thousand pagodas, a clear allowance of one lac of pagodas, and one-fifth of the overplus revenue after the expenses, military and civil, are paid, which amounts to nearly two lac more. These sums are fully adequate to his necessary expenses, and to keep up the dignity of an Asiatic prince" - G.V.Valentia, Voyages and Travels, Vol.I, p. 353.

3. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 71-72.

4. ச.ம.மோ.த., 3-6, 11, 14, 23.

5. "The facility and propriety with which he expressed himself in English was to me a great satisfaction. It was the first time I had been able to converse with a native prince, except through an interpreter. The Nawaub Vizier is the only man with whom I could have had as much pleasure in free conversation. The Rajah's manners are excellent, and good nature bcams from his countenance". - G.V.Valentia, Voyages and Travels, Vol. I, p. 358.

6. "I have been passing the last four days in the society of a Hindu Prince, the Raja of Thanjavur who quotes Fourcroy, Lavoiser,

Linnaeus, and Buffon fluently, has formed a more accurate judgement of the poetical merits of Shakespeare than those so felicitiously expressed by Lord Byron, and has actually emitted English poetry very superior to Rousseau's epitaph on Shenstone, at the same time that he is much respected by the English Officers in his neighbourhood as a real judge of a horse, and a cool, bold and deadly shot of a tiger. The truth is that he is an extraordinary man, who, having in early youth received such an education as old Schwartz, the celebrated missionary could give him, has ever since continued in the midst of many disadvantages to preserve his taste for, and extend his knowledge of European literture, while he has never neglected the active exercises and frank soldierly bearing which become, the descendant of the old Maharatta conquerors, and by which only, in the present state of things, he has it in his power to gratify the prejudices of his people and prolong his popularity among them". - Rabinson, Last Days of Bishop Heber, p. 168.

7. Rajaram Rajah Sahib Chattrapathy, 'Educational activities of H.H.Rajah Serfoji Chattrapathy of Tanjore', The Rajah Serfoji College Magazine, March 1956, p. nil.
8. S.Gopalan, 'Greatness of Serfoji', The Rajah Serfoji College Magazine, March 1956, p. nil
9. ச.ம.மோ.த. 5-40 V.
10. ச.ம.மோ.த. 2-39.
11. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சைமராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 244.
12. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி I, பக்.106.
13. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 243.
4. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி 1, பக். 92.
15. Rajaram Rajah Sahib Chattrapathy, 'Educational Activities of H.H.Rajah Serfoji Chattrapathy of Tanjore', Rajah Serfoji College Magazine, March 1956, p. nil.
16. S.Gopalan, 'Greatness of Serfoji', Rajah Serfoji College Magazine, March 1956, p.nil.

17. G.V.Valentia, Voyages and Travels, Vol. I, p. 360.
18. Ibid, p. 360.
19. M.Seeralan, 'Serfoji Maharaja', மாமன்னர் ஆய்வுக்கோவை, தொகுதி 2, பக். 118.
20. S.Gopalan, Greatness of Serfoji, Rajah Serfoji College Magazine, March 1956, p. nil.
21. M.Seeralan, 'Serfoji Maharaja', மாமன்னர் ஆய்வுக்கோவை-2, பக். 121.
22. ம.சா.அறிவுடைநம்பி, தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழிலக்கியம், பகுதி 1, பக்.13.
23. உ.வே.சாமிநாதையர் (ப.ஆ.), கொட்டையூர் சிவகொழுந்து தேசிகர் இயற்றிய பிரபந்தங்கள், பக். ஏ.
24. செ.இராசு, 'சரபோசியும் வேதநாயக சாஸ்திரியாரும்', JTMSSML, Vol. 38, No. 1-3, p. 17.
25. மேலது, p. 18.
26. ம.சா.அறிவுடைநம்பி, 'சரபோசி காலத் தமிழிலக்கியங்கள்', மாமன்னர் சரபோசியின் 221-ஆம் பிறந்தநாள் விழாக் கருத்தரங்கம், பக். 5.
27. வே. இரா. மாதவன், 'சரபோசியின் மருத்துவத் தொண்டு', மாமன்னர் சரபோஜியின் 221-ஆம் பிறந்தநாள் விழாக் கருத்தரங்கம், பக்.1.
28. ஆ.கிருஷ்ணசாமி மாடிக்ராவ், சரபேந்திர வைத்திய ரத்னாவளி, பக். VI.
29. த.ம.ம.மோ.ஆ.த..கு. தொகுதி I, பக். 369.
30. ய.மணிகண்டன், 'சரபோசி மன்னர் காத்த தமிழ்ச்சுவடிகள்', மாமன்னர் சரபோசியின் 221-வது பிறந்தநாள் விழாக் கருத்தரங்கம், பக்.2.
31. சுவடி எண் 15 (a) அகத்தியர் செந்தூரம் முந்நூறு.
32. சுவடி எண், 20, அகத்தியர் வைத்திய ரத்தினச்சுருக்கம் முந்நூறு.
33. சுவடி எண், 30, மச்சமுனி பெருநூல் எண்ணூறு ஜாலகண்டம்.
34. சுவடி எண் 41, தன்வந்திரி வாகடம் ஆயிரத்துநூற்றுப்பத்து.
35. சுவடி எண், 76, வைத்திய அட்டவணை.
36. டி.ஆர்.பீமாராவ், 'சரபோசி மன்னரும் மராத்தி இலக்கியமும்', மாமன்னர் சரபோசி ஆய்வுக் கோவை, தொகுதி-3, பக். 105.

37. மேலது, பக். 106.
38. டி.ஆர்.பீமாராவ், 'சரபோசி மன்னரும் மராத்தி இலக்கியமும்', மாமன்னர் சரபோசி ஆய்வுக் கோவை, தொகுதி-II, பக். 107-108.
39. என்.சீனிவாசன், 'சமஸ்கிருத மொழிவளர்ச்சிக்கு இரண்டாம் சரபோசி மன்னரின் பங்கு', மாமன்னர் சரபோசி 221ஆவது பிறந்தநாள் விழாமலர், தொகுதி I, பக். 34.
40. சரசுவதிமகால் வடமொழி சுவடிகள் அட்டவணை, தொகுதி II, D.6708, B.6379.
41. என்.சீனிவாசன், 'சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்கு இரண்டாம் சரபோஜி மன்னரின் பங்கு', மாமன்னர் சரபோசி 221 ஆவது பிறந்தநாள் விழா மலர், பக். 36.
42. சுவடி எண் B 10772 (d) D 11264.
43. சுவடி எண் B 12295, 10743.
44. என்.சீனிவாசன், 'சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்கு இரண்டாம் சரபோஜி மன்னரின் பங்கு', மாமன்னர் சரபோசி 221 ஆவது பிறந்தநாள் விழா மலர், பக். 39.
45. என்.சீனிவாசன், 'சரபோசி மன்னர்கால வடமொழி இலக்கியங்கள், மாமன்னன் சரபோசியின் 221-ஆம் பிறந்தநாள் விழாக் கருத்தரங்கம், பக். 3.
46. Indian Antiquary, 1872, June 7, p.194.
47. K.Manamalar, 'Raja Serfoji's Contribution to Technology' மாமன்னர் சரபோசி ஆய்வுக் கோவை, தொகுதி 3, பக்.223.
48. டி.ஆர்.பீமாராவ், சரபோசி மன்னரும் மராத்தி இலக்கியமும், மாமன்னர் சரபோசி ஆய்வுக்கோவை, தொகுதி-3, பக்.118; Rabinson, Last days of Bishop Heber, p. 167.
49. டி.ஆர்.பீமாராவ், 'சரபோஜி மன்னரும் மராத்தி இலக்கியமும்', மாமன்னர் சரபோசி ஆய்வுக்கோவை, தொகுதி 3, பக். 122; T.Padmanaban, Libraries and Library Services in Thanjavur District upto Independence, (Ph.D.Thesis), p. 101.
50. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 99.
51. டி.ஆர்.பீமாராவ், 'சரபோசி மன்னரும் மராத்தி இலக்கியமும்', மாமன்னர் சரபோசி ஆய்வுக் கோவை-3, பக். 117-118.
52. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 116.

53. கே.எம்.வேங்கடராமையா, 'இரண்டாம் சரபோஜி காசிப்பயணம்', தமிழ்க்கலை, தமிழ் 1, கலை 2, சூன் 1988, பக். 33.
54. த.ப.க.மோ.த. 5-108, 109; கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 419.
55. த.ப.க.மோ.த. 4-414.
56. த.ப.க.மோ.த. 5-63.
57. த.ப.க.மோ.த., 5-12.
58. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 124.
59. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி I, பக். 169.
60. "I assented with great pleasure to a proposal of his to show me some part of the palace, and was conducted by him to a very large and excellent room up stairs, where, he informed me, he generally lived. It was carpeted, and had English chairs. Opposite to each other were four bookcases, filled chiefly with English books, amongst which I was not a little pleased with discovering my grantfather Lord Lyttelton's, History of Henry the Second, which I immediately pointed out to his Excellency. One side of the room opened to a verandah; the poopsite side was covered with portraits of the Tanjore princes of the Mahratta dynasty, downwords in succession, from sevages its founder" - G.V.Valentia, Voyages and Travels, Vol. I, p. 359.
61. "The Bishop paid a private visit to the Rajah who received us in Library, a noble room with three rows of pillars, and handsomely furnished in the English style. On one side there are Portraits of the Mahratta dynasty from Shahjee and Sivajee; ten book cases containing a very fair collection of French, English, German, Greek and Latin Books, and two others of Mahratta and Sanscrit Manuscripts. In the adjoining room is an air-pump, an electrifying machine, an ivory skeleton, astronomical instruments, and several other cases of books, many of which are on the subject of medicine, which was for some years his favourite study. He shewed us his valuable collection of coins, paintings of flowers and natural history,

with each of which he seemed to have considerable acquaintance, particularly with the medicinal virtues of the plants in his hortus siccus". - Rabinson, Last days of Bishop Heber, p. 166.

62. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி I, பக். 164.
63. மேலது, பக். 350.
64. மேலது, பக். 166.
65. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி I, பக். 512-13.
66. மேலது, பக். 513.
67. மேலது, பக். 390.
68. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 252.
69. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி I, பக். 396.
70. மேலது, பக். 396. (ஸாகித்தியம் செய்தல் - பாடல் எழுதுதல்)
71. மேலது, பக். 401.
72. மேலது, பக். 410.
73. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி I, பக். 407.
74. மேலது, பக். 400.
75. மேலது, பக். 405.
76. சுவடி எண் னு.6708, B.6379.
77. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி I, பக். 226-227.
78. மேலது, பக். 472. (தஸ்தா - 24 தாள்கள் கொண்ட காகிதக்கட்டு) (கரீதி-வாங்குதல்).
79. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சைமராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 257.
80. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி I, பக். 351.
81. மேலது, பக். 469.
82. மேலது, பக். 467.
83. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி I, பக். 472.
84. மேலது, பக். 405.
85. மேலது, பக். 80.
86. மேலது, பக். 189.
87. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி ஐ, பக். 494.
88. Indira Viswanathan Peterson, 'The cabinet of King Serfoji of Tanjore', Journal of the History of Collections, No. 3, pp. 79-80.

89. எஸ்.கோபாலன், மன்னர் சரபோசி 221-வது பிறந்தநாள் விழாக் கருத்தரங்க மலர், பக். 4.
90. Indira Viswanathan Peterson, 'The cabinet of King Serfoji of Tanjore', Journal of the History of Collections, No. 3, p. 79.
91. மன்னர் தொகுப்பு நூ. எண் 225.
92. மன்னர் தொகுப்பு நூ. எண். 1883, (Anderson Robert, Rudiments of Tamil Grammar, J.M.Richardson, London, 1821.)
93. மன்னர் தொகுப்பு நூ.எண். 1890.
94. மேலது, நூ. எண் 1898.
95. மேலது, நூ. எண் 1917.
96. மேலது, நூ. எண். 1927.
97. மேலது, நூ. எண் 1924.
98. மேலது, நூ. எண் 1933.
99. மேலது, நூ. எண் 1935.
100. மேலது, நூ. எண் 1940.
101. மேலது, நூ. எண் 3386.
102. மேலது, நூ. எண் 3388.
103. மேலது, நூ.எண் 3389.
104. மேலது, நூ. எண் 3350.
105. மேலது, நூ. எண் 3416, 3417, 3434-37.
106. மன்னர் தொகுப்பு, நூ. எண் 3384-3387.
107. மேலது, நூ. எண் 3443, 3344.
108. மேலது, நூ. எண் 3392.
109. மேலது, நூ. எண் 3409.
110. ப.பெருமாள், 'சரபோசி மன்னரும் சரசுவதி மகாலும்', மாமன்னன் சரபோசியின் 221-ஆம் பிறந்தநாள் விழாக் கருத்தரங்கம், பக். 4
111. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 125.
112. மேலது, பக். 125; த.ப.க.மோ.த., 5-154.
113. த.ப.க.மோ.த., 5-110.
114. த.ப.க.மோ.த., 60, 5-203, 204.
115. James J.White, 'Three botanical albums in the Thanjavur Maharaja Serfoji's Saraswati Mahal Library in India', Hundia, Vol. 9, No. 2,

1996, pp. 161-163.

116. Indira Viswanathan Peterson, 'The Cabinet of King Serfoji of Tanjore', Journal of the History of Collections, No. 3, p. 76.

117. "The album of 117 Natural History Drawings that Serfoji presented to the British Resident Benjamin Torin on his retirement in 1803 eventually became part of the collection of natural History Drawings at the India Office Library in London. This impressive album contains illustrations of birds, animals, molluscs and fishes, with inscriptions for the pictures and notes from observation and study, in English, in what appears to be king's own hand". - Indira Viswanathan Peterson, 'The Cabinet of King Serfoji of Tanjore', Journal of the History of Collections, No. 3, p. 76.

118. மன்னர் தொகுப்பு நூ. எண் 2748.

119. த.ம.ம.மோ.ஆ.த., தொகுதி II, பக். VII.

120. Robinson, Last Days of Bishop Heber, p. 166; Tanjore District Gazzetter, p. 272.

5. இரண்டாம் சரபோஜி மன்னருக்குப் பின்னர் சரசுவதிமகால் நூலக வளர்ச்சி

இரண்டாம் சரபோஜி மன்னருக்குப் பிறகும் அவர்வழி வந்தவர்களால் சரசுவதிமகால் நூலகம் சிறப்பான வளர்ச்சி பெற்றுள்ளது. தொடர்ந்துவந்த இரண்டாம் சிவாஜி இதற்கான ஆக்கப்பணிகள் பலவற்றைச் செய்துள்ளார். இவர் காலத்திலும் நூலாக்கப் பணிகள் பல நடைபெற்றுள்ளன. நூல்கள் தொகுக்கும் பணியில் ஆர்வங்கொண்ட இவரால் பல நூல்கள் இந்நூலகத்தில் சேர்க்கப் பெற்றன. நூல்கள் படியெடுத்தல், நூல்கள் வழங்குதல், பாதுகாத்தல் எனப் பல நூலகப் பணிகள் செம்மையாக நிகழ்ந்துள்ளன. இவற்றைப் பற்றியும், இரண்டாம் சிவாஜிக்குப் பிறகு சரசுவதிகால் இயக்கம் பற்றியும், இது ஒரு பொதுநூலகமாக மாற்றம் பெற்றது பற்றியும், இன்றைய நிலையில் இந்நூலகத்தின் இயக்கம் பற்றியும் இவ்வியலில் ஆராயப்பெறுகின்றன.

இரண்டாம் சிவாஜி (1832-1855)

சரபோஜி மன்னரின் மறைவுக்குப் பின் அவரது மகன் இரண்டாம் சிவாஜி *21.3.1832* இல் பட்டமெய்தினார். இவர் சரபோஜிக்கும் அவரது இரண்டாவது மனைவி அகல்யாபாய்க்கும் கி.பி. *1808*-இல் பிறந்தார். மன்னர் சரபோஜி தமது மகனை இங்கிலாந்துக்கு அனுப்பி உயர்கல்வி படிக்கச் செய்ய கிழக்கிந்திய கம்பெனியாரின் விருப்பப்படி ஒப்புக் கொண்டார். ஆனால் மன்னரின் மனைவி மகனைப் பிரிய ஒப்புக் கொள்ளாததால் அயல்நாடு சென்று படிக்கும் வாய்ப்பு இல்லாமல் போனது.[1]

இளமைக் கல்வி

தமது தந்தையைப் போலவே கலையார்வம் கொண்ட சிவாஜிக்கு அரண்மனையிலேயே கல்வி கற்பிக்கப்பட்டது. டேனியல் கொலேப் என்பவர் ஆங்கிலம் கற்பித்தார். சிவாஜியின் படிப்பினைக் கவனிப்பதற்காகவே நாகலிங்கம் பிள்ளை என்பவர் நியமிக்கப் பட்டிருந்தார்.

மருத்துவம், இசை ஆகிய கலைகளில் ஈடுபாடு கொண்ட இம்மன்னரின் ஆட்சிக்காலத்தில் தன்வந்திரிமகால் நல்ல வளர்ச்சி நிலையை அடைந்தது. சரசுவதிமகாலும் நல்லமுறையில் பாதுகாக்கப் பட்டது.

சிவாஜியின் குடும்பம்

இவர் 1818 சூன் 30-இல் சைதம்பாபாயி என்பவரையும், 1829-இல் காமாட்சி பாயையும், மூன்றாவதாக பத்மாம்பாய் என்பவரையும் மணந்து கொண்டார். மூத்தராணிக்கு மட்டுமே ஒரு பெண்குழந்தை பிறந்தது. ஆண் வாரிசு எதுவும் இல்லை.

ஆங்கிலேயரின் கண்டிப்பு

இவர் பட்டத்துக்கு வந்த பின்னர் ஆங்கிலேயரின் கருத்துக்கு ஏற்ப நடக்கவில்லை. மிகுந்த கடன்களைப் பெற்று ஆடம்பரச் செலவுகளைச் செய்து வந்தார். இதனால் ரெசிடெண்ட் பார்பஸ் என்பவரால் சிவாஜி கண்டிக்கப் பட்டார். மேலும், மீறி நடந்தால் நாடு முழுவதும் கம்பெனியாரின் வசம் எடுத்துக்கொள்ளப்படும் என்று 1838-இல் அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதி தெரிவித்தார்.[2]

இராஜாராமின் சுவீகாரம்

தமக்கு ஆண் வாரிசு இல்லாததால் மன்னர் தமது சகோதரி சக்வார்பாய் சாகேபாவின் பேரரான இராஜாராம் என்பவரைச் சுவீகாரம் எடுத்துக்கொள்ள அனுமதி வேண்டி சென்னைக்கு லோகண்டராவ் என்பவரை அனுப்பினார். இந்நிலையில் மன்னர் இரத்தவாந்தி எடுத்து 1855 அக்டோபர் 25-ஆம் நாள் காலமானார்.[3]

மன்னரின் பட்டத்துராணியான காமாட்சிபாய் சாஸ்திர முறைப்படி இராஜாராமை சுவீகாரம் எடுத்துக்கொண்டு ஆங்கிலேய அரசுக்கு விவரத்தினைத் தெரியப்படுத்தினார். சுவீகாரத்தினை அங்கீகரிக்காத ஆங்கில அரசு தஞ்சை சமஸ்தானத்தினை ஆங்கிலேயரின் வசமுள்ள பகுதிகளோடு சேர்த்துக் கொண்டது. இவரோடு தஞ்சையில் மராட்டியரின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

சிவாஜி கால சரசுவதிமகால் நூலகம்

தந்தையைப் போலவே ஆங்கில அறிவும் நூல்கள் இயற்றும் திறனும் பெற்றிருந்த இம்மன்னர் நூல்களைத் தொகுத்தும் அவற்றினைப் படியெடுத்துப் பாதுகாத்தும் அவற்றிற்கு முறையான அட்டவணையைத் தயாரித்தும் சரசுவதி மகால் நூலகத்தினை மேலும் வளர்ச்சியுறச் செய்தார். இம்மன்னர் காலத்தில்

இந்நூலகத்தின் திம்மதிதாரராக (நூலகர்) இருந்தவர் ராமையா வரகப்பையர் ஆவார்.[4]

நூலாக்கப் பணி

பன்மொழிப் புலமை கொண்ட சிவாஜி தெலுங்கு மொழியில் அன்னபூர்ண பரிணயம்[5] என்னும் நாடகத்தினையும் மராட்டியில் நடேச விலாசம் எனும் நாடகத்தினையும் இயற்றினார். மேலும், சிவராத்திரி உபாக்யானம், மார்க்கண்டேய சரித்திரம் என்னும் நிருபனங்களும் இவர் இயற்றியவை ஆகும்.[6]

இம்மன்னரின் ஆதரவில் தமிழ்ப் புலவர்களான அருணாசலகவி, நாராயணக்கவி, கிருஷ்ணகவி ஆகியோரால் எழுதப்பட்ட தமிழ்ப் படைப்புக்கள் புரூரவ சக்கரவர்த்தி, பாண்டிகேளிவிலாசம், மதனசுந்தர சந்தானவிலாசம் என்னும் நாடக நூல்களாகும்.

இம்மன்னர் காலத்தினைச் சேர்ந்த வடமொழி நூல்கள் பல இந்நூலகத்தில் காணப்படுகின்றன. அதில் நல்வெங்கட கிருஷ்ண கவியால் எழுதப்பட்ட சிவபாரிஜாதமு[7] என்ற நூல் சிறப்பானதாகும்.

இவர் காலத்தில் இசையும் நாட்டியமும் சிறப்பான நிலையில் இருந்தன. இவரது அவையில் வித்துவான் சுப்பராமதீட்சிதர், ஆதமூர்த்தி அய்யர், மகாவைத்தியநாத அய்யர், கிருஷ்ணசாமி யாதவ், நாகசாமி மாட்டிக் முதலானோர் பல பாடல்களை இயற்றியும் பாடியும் புகழ் சேர்த்தனர். இம்மன்னர் இரண்டு யக்ஷகானங்களையும் இயற்றியுள்ளார்.

நாட்டியக்கலை வித்தர்களான அப்பாதுரை அய்யர், சிவானந்தம், தம்பியப்பன், சின்னையா, பொன்னையா போன்றவர்களின் முயற்சியால் பரதநாட்டியக்கலை தஞ்சையில் மேலும் வளர்ச்சியுற்றது.

நூல்கள் தொகுக்கும் பணி

சரசுவதிமகால் நூலகம் மராட்டிய மன்னர்களின் விலை மதிப்பில்லாத சொத்தாகக் கருதப்பட்டதால் இரண்டாம் சிவாஜியும் இந்நூலகத்தினை வளர்ப்பதில் முழுக்கவனம் செலுத்தினார். பல இலக்கியங்களை உருவாக்கி நூலகத்தில் சேர்த்ததுடன், பல இடங்களில் இருந்து நூல்கள் விலைக்கு வாங்கப்பட்டு நூலகத்தில் சேர்க்கப்பட்டன என்பதைப் பல ஆவணச் செய்திகளின்வழி அறியலாம்.

"பாலா தீக்ஷிதரிடமிருந்து 1828-இல் சிரௌத புத்தகங்கள் வாங்கப் பெற்றன. 1835-இல் இவரிடமிருந்த போதாயனக்கனி பாஷ்யம், கனகசபாகிருத சோடசசம்ஸ்காரம், அபரபிரயோகம் என்பவை உள்ள ஓலைச்சுவடிகள் 4 சக்கரம் 5 பணம் கொடுத்து வாங்கப்பெற்றன'.[8]

"1841-இல் தஞ்சைக்கு நியமிக்கப்பட்டிருந்த ரெசிடெண்ட் மூலமாக சென்னையிலிருந்து ஆப்பிரிக்கப் படப்புத்தகம் (Atlas) நான்கு பிரதிகள் வாங்கப்பட்டன".[9]

"1841-இல் சரசுவதிமகாலில் புதுச்சேரியிலிருக்கும் முத்துசாமி பிள்ளையிடம் தமிழ் அகராதி 11-வது நிகண்டு அச்சிட்ட வஹிகள் (காகிதச் சுவடிகள்) மூணுக் கரீதி செய்ததற்கு ரூ. 4-0-0"[10]

"கல்கத்தாவில் 1846-இல் வெளியிடப்பெற்ற லார்ட் பிஷப் பாதிரியின் சரித்திரம் 12 பிரதிகள் வாங்கப்பெற்றன"[11]

"வராஹப்பையாவிடம் வாத்தியங்கள் கற்றுக்கொள்பவர் வழி வாத்திய நூல்கள் ரூ.6க்கு வாங்கப்பெற்றன".[12]

இவற்றினைப் போன்று பல குறிப்புக்கள் கிடைக்கின்றன. இம்மன்னர் இவ்வாறு பல நூல்களைச் சேகரித்து நூல் தொகுப்பினை வளர்த்ததுடன் சில இதழ்களையும் வாங்கி நூலகத்தினை வளப்படுத்தினார் என்பது கீழ்க்காணும் குறிப்புக்களால் அறிய முடிகின்றது.

காலமுறை இதழ்கள்

"1836: சர்க்காருக்குச் சென்னைப் பட்டணத்திலிருந்து நியூஸ் பேப்பர் வந்து கொண்டிருப்பதற்கு $2^3/_4$ $^1/_8$"[13]

"கி.பி. 1837-இல் ஹைரால்டு, கன்ஸர்வேடிவ் என்ற இதழ்கள் வந்தன. அவற்றிற்குத் தபால் கட்டணம் ரூ 2-0-0"[14]

இத்துடன் எஷியாடிக் ஜர்னல் என்ற ஆங்கில ஏடும் வெளி நாட்டிலிருந்து பெறப்பட்டது.

"1842 மார்ச்சு மாதம் நியூஸ்பேப்பர் ரைடர் (Writer or Rider) வந்ததற்கு ரூ. 120 ஹுண்டி"[15]

"சென்னையிலிருந்து 1844-இல் ஈவினிங் மெயில் என்ற நாளிதழ் வெளியிடப்பட்டது. அதற்குத்திங்கள் கட்டணம் ரூ. 6"[16]

இவ்வாறு கிடைக்கும் குறிப்புகளால் பணம் அனுப்பப்பட்டு, ஆங்கில இதழ்கள் சென்னை நகரிலிருந்து தபால் மூலம்

பெற்றப்பட்டன எனத் தெரிகின்றது.

படியாக்கும் பணி

மன்னர் சரபோஜியைப் போலவே சிவாஜியும் பழைய சுவடிகளைப் படியெடுக்கச் செய்து பாதுகாத்தார். கி.பி. 1844-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட மோடி ஆவணக்குறிப்பில், "பாகவதம் தசமஸ்கந்தம் வியாக்கியானம் மட்டும் எழுதிய வகையில் கிரந்த எண்ணிக்கை 1862; 1000க்கு 2 வீதம் கொடுக்க உத்தரவு"[17] என்ற குறிப்பால் சுவடிகள் படியெடுக்கப்பட்டதையும் அவற்றிற்கு எழுத்துக்களின் எண்ணிக்கைக்கு ஏற்பக் கூலி வழங்கப்பட்டதையும் அறியமுடிகின்றது.

நூல்கள் வழங்கும் பணி

மன்னர் சிவாஜியின் ஆட்சிக்காலத்தில் சரசுவதிமகால் நூலகம் அரண்மனை நூலகமாக இருந்தாலும் அரசக் குடும்பத்தினருக்கும், மடாதிபதிகளுக்கும் நூல்கள் வழங்கப்பட்டுத் திரும்பப் பெறப்பட்டதற்குச் சில சான்றுகள் உள்ளன.

> "1834, சரஸ்வதி பண்டாரிலிருந்து புது பஞ்சாங்கமொன்றை ஸர்கேலின் வேலைபார்க்கும் நியாயாதீச ராத்ஹிரோஜி காளேராவுக்குக் கொடுக்கிறது".[18] (நியாயாதீச - தஞ்சையிலிருந்த 4 நீதிமன்றங்களில் நான்காவது)

காஞ்சி பீடாதிபதிக்கு நூல் வழங்கப்பட்டதை கே.எம். வேங்கடராமையா தம் நூலில் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகின்றார்.

> "காஞ்சி காமகோடி பீடாதிபதிகளிடத்தில் மராட்டிய மன்னர்கட்கு மிகுந்த மரியாதையுண்டு. கி.பி. 1841-இல் ஸ்ரீ சங்கராச்சாரியார்க்குத் தருமாமிருத மகோததி என்ற நூல் வேண்டிவந்தது. ஆகவே சங்கராச்சாரியாரின் அலுவலர் கணபதி சாஸ்திரிகள் அந்நூல் இரண்டு மாதங்களுக்குள் படித்துத் திருப்பிவிடுவதாகக் கூறிப் பெற்றுச் சென்றார்"[19] என்ற குறிப்புக்களால் நூல்கள் வழங்கப்பெற்று மீளப் பெறப் பட்டமையை அறியலாம்.

சுவடிகளுக்கான அட்டவணைப் பணி

மன்னர் சிவாஜி தமது தந்தையைப் போலவே சரசுவதிமகாலில் சேர்த்து வைக்கப்பட்டிருந்த சுவடிகளுக்கு அட்டவணை தயாரிக்கச் செய்தார். 1846-47 இல் நூலகராகப் பணியாற்றிய வரகப்பையர்

என்பவருக்கு அட்டவணை தயாரிக்க ஆணை பிறப்பித்தார்[20] இவ்வட்டவணை கையினால் தயாரிக்கப்பட்ட காகிதத்தில் தேவநாகரி மற்றும் மோடி எழுத்துக்களால் எழுதப்பட்டது. இதனை 'சிவாஜி கேட்டலாக்' என இப்பொழுதும் இந்நூலகத்தில் குறிப்பிட்டு பாதுகாத்து வருகின்றனர்.

தமிழ் ஏட்டுப்புத்தகத்தின் டைரி

தமிழ் ஓலைச்சுவடியில் உள்ள இலக்கியங்களுக்குக் காகிதத்தில் தமிழ் எழுத்துக்களில் அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வட்டவணையின் தலைப்பில் 'தமிழ் ஏட்டுப்புத்தகத்தின் டைரி' என்று எழுதப்பட்டுள்ளது. இந்த அட்டவணையில் 719 தமிழ் இலக்கியச் சுவடிகள், காவியம், புராணம், விரதம், தோத்திரம், நிகண்டு, வேதாந்தம், மந்திரம், நாடகம், லக்ஷணம், சோதிடம், நானாவிதம் என்ற பிரிவுகளாகப் பிரித்து தலைப்பு, ஆசிரியர், துறை, வரிசை எண், ஏடுகளின் எண்ணிக்கை என்று முறையாக வரிசைப்படுத்தி எழுதப்பட்டுள்ளன. தமிழ்ச் சுவடிகளின் காட்டலாக் தொகுதி (1960) சரசுவதிமகால் தமிழ்ச் சுவடிகளின் அட்டவணை என்ற பிரிவின்கீழ் 719 இலக்கியச் சுவடிகளையும் 119 வைத்தியச் சுவடிகளையும் காணலாம்.

1834-ஆம் ஆண்டுக்கான மோடி ஆவணக்குறிப்பில், "சரசுவதி மகாலில் புத்தகங்களின் கணக்குக்காக கோரா கடுதாசி 5 தஸ்தாவை யுத்தசாலையினின்று கொடுக்கிறது"[21] என்று குறிப்பதால் புத்தகங்களுக்கு 1834 முதல் அட்டவணை எழுதத் தொடங்கியிருக்கலாம் என்று தோன்றுகின்றது.

நூலக ஊழியர்கள்

சிவாஜி மன்னர் காலத்தில் நூலகராகப் பணியாற்றியவர் வரகப்பையர் ஆவார். மேலும், பல பணியாளர்களும் வேலை செய்தனர். 1849-ஆம் ஆண்டு மோடி ஆவணக்குறிப்பில், "சரசுவதி மகாலில் உள்ளவர்களுக்கு 11 பஞ்சாங்கங்களைக் கொடுக்க உத்தராக வேணுமென்று மனு"[22] என்று குறிப்பதால் அப்போது நூலகத்தில் 11 பேர் வேலைசெய்தனர் என அறிய முடிகின்றது.

1845-இல் இந்நூலகத்தில் ஓலைச்சுவடிகளை எடுத்துக் கொடுப்பதற்கு நால்வரும்[23] காகிதப் புத்தகம் எடுத்துக் கொடுக்க ஆறுபேரும் இருந்தனர்.[24] ஆனால் பின்னாளில் (1875) அனைத்து வேலைகளையும் ஒருவரே மேற்கொண்டதாகத் தெரிகின்றது.[25]

சிவாஜி மன்னர் காலத்தில் நூலகத்தில் இருந்த சுவடிகளை வகைப்படுத்தி எடுத்துப் பயன்படுத்திய சுவடிகளைப் பின்னர் அதே இடத்தில் வைப்பதற்காக ஓலைச்சுவடிகளுக்குத் தனியாகவும், காகிதச்சுவடிகளுக்குத் தனியாகவும் பணியாளர்கள் நியமிக்கப் பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் ஓலைச் சுவடிகளும் காகிதச் சுவடிகளும் தனித்தனியாக அடுக்கி வைக்கப் பட்டிருந்ததை அறிய முடிகின்றது.

நூலக விரிவாக்கப் பணி

மன்னர் சரபோஜி சேர்த்துப் பாதுகாத்த நூல்களுடன் மேலும் பல நூல்கள் சிவாஜி மன்னரால் நூலகத்தில் சேர்க்கப்பட்டதால் ஆங்கில நூல்கள் வைப்பதற்கு 14 அலமாரிகள் செய்யப்பட்டு நூலகம் விரிவாக்கப்பட்டது. இதனை 1853-க்கான மோடி ஆவணக்குறிப்பில் காணலாம்.

"1853-இல் சரஸ்வதி பண்டாரத்தில் ஆங்கில நூல்கள் வைப்பதற்கு ஜீரத்கானாவில் மூர்த்தி இருக்கும் மண்டபத்தில் தெற்குப்பக்கம் சுவரையடுத்து 6 அலமாரிகள்; வடக்குப்பக்கச் சுவரையடுத்து 6 அலமாரிகள்; கிழக்குப் பக்கச் சுவரையடுத்துத் தெற்குப்பகுதியில் அலமாரி 1; வடக்குப்பகுதியில் அலமாரி 1; மொத்தம் 14 புதிய அலமாரிகள் செய்து சேர்க்கப்பட்டன"[26] என்று குறிப்பிடுவதால் நூலகம் விரிவுபடுத்தப்பட்டு நூல்கள் பத்திரமாக அலமாரிகளில் அடுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டதை அறியமுடிகின்றது.

1855-க்குப் பின் சரசுவதிமகால் நூலகம்

மன்னர் இரண்டாம் சிவாஜிக்குப் பின்னர் தஞ்சையின் ஆட்சியுரிமை முழுவதையும் ஏற்றுக்கொண்ட ஆங்கிலேயர்கள் மன்னர்களின் சொத்துக்களையும் கைப்பற்றிக் கொண்டனர். இதில் சரசுவதிமகாலும் அடங்கும். கி.பி. 1855 முதல் 1863 வரையில் மராட்டிய அரசக் குடும்பத்தினர் எந்தவித உரிமையும் ஆதரவும் இல்லாமல் விடப்பட்டனர் என்பது தெளிவாகிறது.

இந்நிலையில் நூலகம் நாராயணராவ் சிந்தே என்ற அதிகாரியின் கீழ் இருந்தது. 1856-இல் அப்போதைய இந்திய அரசும், கிழக்கிந்திய கம்பெனியும் சரசுவதிமகால் நூலகத்தினையும் மதிப்புமிக்க கலைப் பொருட்களையும் தஞ்சையிலிருந்து அப்புறப்படுத்தப்போவதாக அறிவித்தனர்.

ஆங்கில அரசிடமிருந்து சரசுவதிமகால் நூலகத்தினைக் காப்பாற்றியதில் இராணி காமாட்சிபாயின் பங்கு

25.9.1856-இல் சரசுவதிமகால் நூலகம் ஆங்கில அரசுக்குச் சொந்தமானது என்று அறிவிக்கப்பட்டது.[27] 18.10.1856-இல் தஞ்சை அரண்மனையின் ஆணையர் எச்.பார்பஸ், நூலகம் மற்றும் அரசுடைமைச் சொத்துக்களைத் தமது பாதுகாப்பில் வைத்துக் கொள்வதாகவும் அவற்றிற்குப் பாதுகாப்பில்லை என்றும் சென்னை அரசு காரியதரிசிக்குக் கடிதம் எழுதினார். மேலும், இச்செய்தியை இராணி காமாட்சிபாய் அவர்களுக்கும் தெரிவித்தார். ஆனால், இம்முடிவினைக் கைவிடுமாறு இராணி அவர்கள், ஜே.பி. நார்ட்டன் எனும் தமது வழக்கறிஞர் மூலம் அரசுக்குத் தெரிவித்தார். 18.11.1856-இல் சென்னை சுப்ரீம்கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து தடையுத்தரவும் பெற்றார்.

11.2.1857-இல் தீர்ப்பளித்த சென்னை சுப்ரீம் கோர்ட், பட்டத்து ராணியே அரசின் வாரிசு என்றும் கம்பெனி அரசின் செயல் கண்டிக்கத்தக்கது என்றும் அறிவித்தது. இதனை எதிர்த்து ஆங்கில அரசு இலண்டன் மகாராணியின் உயர்நீதிமன்றத்தில் (Privy Council) மேல்முறையீடு செய்தது. 27.7.1859-இல் தீர்ப்பளித்த நீதிபதிகள் கம்பெனி அரசின் செயல் கண்டிக்கத்தக்கதே என்றும், இந்த வழக்கைப் பற்றி விசாரித்துத் தீர்ப்பளிக்க எந்த உள்நாட்டு நீதிமன்றத்துக்கும் அதிகாரம் இல்லை என்றும் மன்னரின் சொத்துக்களைச் சென்னை அரசிடம் சேர்க்கும்படியும் உத்தரவிட்டது. நார்ட்டன் அவர்களின் பெரு முயற்சியின் பயனாய் இங்கிலாந்து பாராளுமன்றம் இது தொடர்பாக விவாதித்து, சிவாஜி மன்னரின் சொந்த சொத்துக்கள் அனைத்தையும் மூத்த பட்டத்தரசி காமாட்சியம்பாய் மற்றும் மன்னரின் மகள் முக்தாம்பாள்பாய் அவர்களிடம் அளிக்கப்பட்டது. இது தொடர்பாக 21.8.1862 இல் சென்னை அரசினால் ஆணை பிறப்பிக்கப்பட்டது.[28]

ஆங்கில அரசு தமது 21.9.1862 மற்றும் கடித எண் 336/26.9.1862 ஆகிய நாளிட்ட கடிதங்களின்படி சரசுவதிமகால் நூலகத்தினைச் சென்னை நூலகச் சங்கத்துடன் இணைக்கும் எண்ணத்துடன் தமக்கு விலைக்குக் கொடுக்குமாறு வேண்டினர். இம்முடிவையும் இராணி நிராகரித்தார். இந்நிலையில் இவரது சுவீரகாரபுத்திரனால் நூலகம் நன்கு பராமரிக்கப்பட்டுச் செயல்பட்டு வந்தது.

இராணிகளுக்கிடையே கருத்து வேறுபாடு

மன்னரின் சொத்துக்களை நிர்வகிக்கும் விதத்தில் இராணிகளுக் கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு தஞ்சை நீதிமன்றத்தில் 1867-இல் வழக்கு தொடரப்பட்டது. நீதிபதி, மன்னரின் சொத்துக்களை நிர்வாகம் செய்யும் பொறுப்பினைத் தாமே ஏற்றுக் கொள்வதாகவும், அதற்கு மாவட்ட ஆட்சியர் ரிஸீவராக நியமிக்கப்படுவதாகவும் தீர்ப்பளித்தார். அதுமுதல் நூலக நிர்வாகம் மாவட்ட ஆட்சியரிடமிருந்து வருகின்றது.

மன்னர் குடும்பத்தினரின் மேற்பார்வையில் நூலகப் பணிகள்

இரண்டாம் சிவாஜிக்குப் பின்னர் நூலகம் அரண்மனைச் சொத்தாகக் கருதப்பட்டாலும் அதன் பணிகள் எதுவும் நிறுத்தப்படவில்லை. பழுதடைந்த காகிதச் சுவடிகளைப் படியெடுத்தல், ஓலையில் உள்ளதைக் காகிதத்தில் எழுதுதல் போன்ற பணிகளுடன் புத்தகங்களை அவ்வப்போது காயவைத்துப் பாதுகாத்த முறைகளையும் மராட்டிய மன்னர்களின் குடும்பத்தினரின் காலத்திலும் காண்கிறோம். பின்வரும் சில குறிப்புகளால் இவற்றை அறிகிறோம்.

பழுதாய்ப் போன காகிதச் சுவடிகளைப் படியெடுத்தல்

"ஷெ மகாலில் யிருக்கப்பட்ட ஸமஸ்கிருத ராமாயணம் காகித புஸ்தகங்களில் பளுதாய் போன பத்திரங்களை புதிதாய் யெளிதின தர்க்காக இருந்த சங்கை நம்பர் 965 பத்திரம் 8 கிருந்த சங்கை 210, நம்பர் 973 பத்திரம் 8 கிருந்த சங்கை 225, நம்பர் 1002 பத்திரம் 10க்கு கிருந்த சங்கை 350 ஆக கிருந்த சங்கை 1000, ரூ. 2-8-0. ஷெ புஸ்தகங்களை யெளிதிய யேகநாத பட்டருக்கு கொடுக்கும்படி உத்திரவாக வேணும்"[29]

"ஸரஸ்வதி மகாலில் இருக்கிற ஸம்ஸ்கிருத இராமாயண புஸ்தகங்களில் பழுதாய்ப் போன பத்திரங்களை புதிதாய் யெழுதின கிரந்த சங்கை நம்பர் 1002ல் பத்திரம் 2க்கு கிரந்த சங்கை 50 நம்பர் 1007-இல் பத்திரம் 10க்கு கிரந்த சங்கை 375 நம்பர் 949ல் பத்திரம் 10க்கு கிரந்த சங்கை 375 ஆக 800 ஷெ கிரந்த சங்கை 800க்கு 1000க்கு ரூ. 2-8-0 வீதம் கூடுதல் ரூ. 2ம் ஷெ புஸ்தகங்கள் யெழுதின யேகநாத அய்யருக்கு கொடுக்கும்படி உத்திரவாக வேணும். 26-2-77 குப்பா பட்லூ (தெலுங்கில்)"[30]

ஓலைகளில் உள்ளதைக் காகிதத்தில் எழுதுதல்

"ஷி மகாலில் ஓலை பழைமை-வசுசெரித்திற சம்பு காவியம் கடுதாசியில் பாளோபந்து லிபிஇல் முன்யெழுதினது. 2-3- ஆசுவாஸம் போக பாக்கி மீதில் பூர்த்தியாயெழுதி ஆயிற்று. 1-4-8-6 இ ஆசுவாசம் 4 இ கிறந்த சங்கை 1000 இதற்கு சார்ஜி ரூ 2 அ 8. இந்த இறண்டு ரூபா யெட்டணா ஷி மால் கண்டிஜண்டு அயிவேஜியில் யேகனாதய் யனிடத்தில் கொடுக்கும்படி கொட்டியதாருக்கு உத்திறவாக வேணும் 28-9-76"[31]

புத்தகம் காயப்போடுதல்

"சரஸ்வதிமகால் 1875 பிப்பறவறி மீ27 புஸ்தகங்களைக் காயப்போட வேண்டியதற்காக விசிப்பலகை-4 புஸ்தகங்களின் பேரில் போத்த செல்லா 2 ஆள் 1 ஷி குடுக்கும் படியாகவும் காயபோடவும் உத்திரவாக வேணும்". குப்பா பட்லு (தெலுங்கில்)"[32]

1875 இல் குப்பா பட்லு என்பவர் நூலகராகப் பணியாற்றினார் என்பதையும் அறிய முடிகிறது.

சுவடிகளைத் துணியில் கட்டிவைத்தல்

சுவடிகளைத் துணியைக்கொண்டு கட்டிவைத்துப் பாதுகாக்கும் வழக்கம் சமணர்களின் முறையாகும். அவ்வாறு கட்டிவைக்கும் துணியினை 'சுறுத பாவாடை' (Srutha Paavaadai) என்றனர்.[33] இப்பழக்கத்தினையே தஞ்சை மராட்டிய மன்னர்களும் மேற்கொண்டனர் என ஆய்வாளர் குறிக்கின்றனர்.

சுவடிகளைப் பாதுகாப்பாகக் கட்டிவைப்பதற்காகச் சிறப்பாக கருப்பூர் என்னும் ஊரிலிருந்து ஒருவகை துணியினை நெசவுசெய்து சரசுவதிமகாலில் பயன்படுத்தினர். கருப்பூரில் நெய்த துணியைப் பின்னாளில் கற்பூரத்துணி என்று திரித்துக் கூறுகின்றனர்.

நூல் வழங்கி வராமல் பாக்கி இருந்தது பற்றிய குறிப்பு

"76ஷு னவம்பர் மீ 30 வரைக்கும் பாக்கி மா காமாட்க்ஷயம் பாபாயி ஸாயேபு அவர்கள் அரண்மனைக்கியேப் மீ 5, 1 மாசக்கெடுவுக்கு கணேசபுரம் 1, ஆகஷ்டு மீ, 1 தீபாம்பா, றாமகுமறாம்பா பாயி ஸாயேபு அவர்கள் அரண்மனைக்கு 1 மாசகெடுவுக்கு ஸாலாகிருத புராணம் கிருஷ்ண ஜன்மகம் புஸ்தகம் 1 அக்டோபர் மீ 6 மா. ஸய்யாம்பா பாயி அவர்கள் அரண்மனைக்கி 1 மீ கெடுவுக்கு துலாகோவேரி மகத்துவ புஸ்தகம் 1 ஷெ மீ 32

அபுரூபம்பாபாயி ஸாயேபு அவர்கள் அரண்மனைக்கி 1 மீ கெடுவுக்கு ஸம்ஸ்கிருதபுராணம் சிவரகசியம் அஷ்டமர்சபன ஸமர்சம் புஸ்தகங்கள் உ. . ."[34]

இவ்வாறான குறிப்புகள் மூலம் இந்நூலகத்தில் நூல்கள் வழங்கல் முறை இருந்ததையும் அறிகிறோம். இவ்வாறே, "1874 (செப்ட)ம்பர் மீ10 யேஸி பர்னர் துரையவர்களுக்கு வேதம் ஜடாபடலம் புஸ்தகம்-1 சே ஸ்ரீசாரியர் அனுப்பும் ஸ்ரீ முகப்பத்திரிகை 2 ஷ 3 ஸமுகத்தில் சூடுபட்டிறிக்குறது ஷ மூணுமவருக்கு"[35] எனவரும் குறிப்புகளும் கிடைக்கின்றன.

நூலகருக்குப் பிற பணி - மாற்று ஏற்பாட்டிற்கான உத்தரவு

"சரஸ்வதிமகால் குப்பா பட்டர் யெளிதி கொண்டது. சூலை மீ 12 திங்கள்கிழமை யென்னுடைய தபுஹித்திரி நாகம்மாளுக்கு விவாகமுகூர்த்தம் னடக்க போகுறப் படியால் ஷ மாதம் 10 முதல் ஒரு வாறத்துக்கு யேகனாதய்யனை பதிலியாக வையித்துக் கொண்டு யெனக்கு கரூருக்கு போயிவற உத்திரவாகமெண்டு கேட்டுக் கொள்கிறேன், குப்பா பட்டர் 1876 ஜூலை மீ 5"[36] எனவரும் குறிப்புகளின் மூலம் அந்நாளைய நூலகர் விடுப்பில் சென்றால் மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலைமைகளையும் காண்கிறோம். எனவே, மன்னர் நூலகம் இடைவெளியின்றி தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வந்தது என அறிகிறோம்.

தஞ்சை மராட்டியர்கால நீதிமன்றம்

மராட்டிய மன்னர் கால நீதிமன்றங்களும், அவற்றில் நீதிவழங்க இந்நூலக நூல்கள் பயன்பட்ட செய்திகளும் குறிக்கத்தக்கன.

இரண்டாம் சரபோஜி மன்னர் பட்டத்திற்கு வருமுன்னர் நிலவிய நீதிவழங்கும் முறை பற்றிய செய்தி தெளிவாகத் தெரியவில்லை. அமரசிம்மர் ஆட்சிக்காலத்தில் நியாயாதிபதிகள் ஒழுங்கற்று இருந்தனர் என்றும் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு ஸ்வார்ஷ் பாதிரியார் அப்போதைய கவர்னர் ஆர்ச்சிபால்டு காம்பெல் அவர்களிடம் முறையிட்டார் என்றும் தெரிகிறது.[37]

சரபோஜி ஆட்சிக்காலத்தில் நான்கு நீதிமன்றங்கள் தோற்றி வைக்கப்பட்டன. அவை: 1. முத்திரித சபை, 2. தருமசபை, 3. நியாய சபை, 4. நியாயாதீச சபை.[38] நியாயாதீச சபை என்பது தற்போதைய உச்சநீதிமன்றம் போன்றது. அது சரசுவதிமகாலிலேயே இயங்கியது.[39] சரசுவதிமகாலில் இருந்த பண்டிதர்கள் பல நூல்களைப் பயின்று தீர்ப்பு அளித்தனர்.

இத்தகைய தீர்ப்புகள் வழங்குவதற்கு இந்நூலகத்திலிருந்து நூல்கள் சான்றாகப் பெறப்பட்டன என அறிகிறோம். சான்றாக, "7.18.34 ஸரஸ்வதி மஹாலின் தரும சாஸ்திரிகள் நிர்ணயஸிந்து முதலிய கிரந்தங்களைப் பார்த்து செய்த தீர்மானம். தூர தேசத்தின் ஒரு பிராமணனுடைய சம்சாரம் இறந்ததற்கு அவன் வருவதற்கு 10 நாழிகை செல்லுமாகையால் சேஷத்திரபுரம் அக்ராரத்தின் அண்ணாகுட்டி என்பவர் அவளை தகனம் செய்ததினால் 10 நாள் தீட்டு என்று ஊரார் சொன்னதற்கு சாஸ்திரப்படி 3 நாள்தான் என்று தீர்மானிக்கப்பட்டது"[40] என்ற குறிப்பு அமைகிறது.

மேலும், கமலாகரபட்டர் எழுதிய நிர்ணயசிந்து என்ற நூல், தீர்ப்பு கூறுவதற்குப் பயன்பட்ட சட்ட நூல்களில் ஒன்று எனவும் அறிகிறோம்.

ஆங்கிலேயரின் அட்டவணைப் பணி

1868-இல் சென்னை அரசாங்கத்தினர், சென்னை மாநிலக்கல்லூரியின் வடமொழிப் பேராசிரியர் பிக்போர்டு என்பவரை சரசுவதிமகால் நூலகத்தில் இருந்த வடமொழிச் சுவடிகளுக்கு அட்டவணை தயாரிக்க நியமித்தனர்.[41] அவருடைய உடல்நிலையின் காரணமாக இவ்வேலை தொடரப்படவில்லை. பின்னர் மாவட்ட ஆட்சியராக *1870*-இல் நியமிக்கப்பட்ட ஏ.சி.பர்னல் என்பவர் பிக்போர்டு செய்த பணியைத் தொடர்ந்து செய்து முடித்தார்.[42]

சுவடிகளைப் பரிசோதித்த பர்னல் இச்சுவடிகள் சாதாரணமாக *50,000* பவுன்கள் மதிப்புள்ளவை என்று மதிப்பீடு செய்தார். ஆனால், இச்சுவடிகளின் மேன்மைத் தன்மையைக் கொண்டு இதற்கு மூன்று அல்லது நான்கு மடங்காக மதிப்பிடலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.[43]

பின்னர், காமாட்சிபாய் தமது சொத்துக்களை மாவட்ட ஆட்சியர் சரிவர நிர்வகிக்கவில்லை என்று தஞ்சை நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். நீதிமன்றம் மாவட்ட ஆட்சியரிடமிருந்த ரிசீவர் அதிகாரத்தினை மாற்றி ஆங்கிலேய வழக்கறிஞர் ஜி.டி.ஆலிவர் என்பாரிடம் ஒப்படைத்தது. இவர் சிவாஜி மன்னரின் கடைசி ராணி ஜியாம்பாபாயின் காலம் வரையில் பணியாற்றினார்.

சரசுவதிமகால் பொதுநூலகமாக மாற்றம்

கடைசி பட்டத்து ராணி ஜியாம்பாபாய், 3.5.1912 இல் காலமானார். அவரது வாரிசுகளுக்கிடையே சொத்து சம்பந்தமாகத் தகராறு ஏற்பட்டு நீதிமன்றத்திற்குச் சென்றனர்.[44] இவ்வழக்கு பல ஆண்டுகளாக நடைபெற்றது.

மன்னர் சரபோஜியால் பாதுகாக்கப்பட்ட நூலகத்தினை மன்னர் குடும்பத்தினர் தங்களது சொத்தாக எண்ணாமல் பொதுமக்கள் அனைவருக்கும் பயன்படும் வண்ணம் அன்பளிப்பாக அளிக்க வேண்டும் என்று எண்ணிய பெரியவர்கள் வழக்கில் தொடர்புடையவர்களைச் சந்தித்து வேண்டினர்.

மாவட்ட நீதிபதி வாலசும் இதைப்பற்றி முக்கிய வாரிசுகளான சிவாஜி ராஜாவிடமும், அவரது இளைய சகோதரர் பிரதாபசிம்ம ராஜாவிடமும் கூற, அவர்களுடைய ஏற்பிற்கு மற்றைய வாரிசுகளையும் இணங்கச் செய்தனர். இரண்டாம் சிவாஜியின் பெயரர்களான இவர்களும் ஏனைய வாரிசுகளும் ஒன்றுபட்டு இந்நூலகத்தினைப் பொதுமக்களுக்கு நன்கொடையாக அளிக்க ஒப்பந்தம் செய்து கொண்டனர். மேலும் இந்நூலக மேம்பாட்டுக்காக ரூபாய் ஒரு இலட்சத்துக்கு அறக்கட்டளை ஏற்படுத்தவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.[45]

அனைத்து வாரிசுகளும் எழுதித்தந்த கூட்டு ஒப்பந்தப்படி நூலகம் பொது நூலகமாக மன்னர் சரபோஜியின் பெயருடன் சேர்த்து 'தஞ்சாவூர் மகாராசா சரபோசி சரசுவதிமகால் நூலகம்' எனப் பெயரிடப்பட்டது.[46] அதன்படி,

1. இந்நூலகம் அரசின் அனுமதியுடன் தஞ்சாவூர் அரண்மனையிலேயே அமைந்திருக்க வேண்டும்.
2. எக்காரணம் கொண்டும் நூலகம் அரண்மனையிலிருந்து இடமாற்றம் செய்யக்கூடாது.
3. அறக்கட்டளை நிறுவனமாக (Charitable Endowments Act VI of 1890) அறிவிக்கப்பட்டதால் அரசின் ஆணையின்படி ஐந்துபேர் கொண்ட ஓர் நிர்வாகக் குழுவும் அமைக்கப்பட்டது. அதன்படி

   அ. மாவட்ட நீதிபதி (Ex-officio)

   ஆ. மாவட்ட ஆட்சியர் (,,)

   இ. வழக்கு எண் 26/1912-இல் இடம்பெற்ற அரசக் குடும்பத்தின் மூத்த ஆண்வாரிசு, இவர் அரசால் நியமிக்கப்பட வேண்டும்.

இதன்படி சிவாஜி மன்னரின் மூத்த பேரன் சிவாஜிராஜா சாகேப் முதல் ஆயுள் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இவர் ஒன்பது ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றி 1927 செப்டம்பர் 8-ஆம் தேதி காலமானார். பின்னர், இவரது இளைய சகோதரர் பிரதாபசிம்ம ராஜா வாழ்நாள் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

ஈ மற்றும் உ இரண்டு உறுப்பினர்கள், இவர்கள் அரசு அலுவலராக இல்லாத இந்து மதத்தினைச் சேர்ந்த, தஞ்சை மாவட்டத்திற்குள் வசிப்பவராக, 'இ' குடும்பத்தினை சேராதவர்களாக இருக்க வேண்டும். இவர்களில் ஒருவரை அரசு நியமனம் செய்யும். மற்றொருவரை 'இ' குடும்பத்தினர் நியமனம் செய்வர்.

கம்பெனியார்கள் காலத்தின் அட்டவணைப் பணி

இரண்டாம் சிவாஜியின் இறப்புக்குப் பின்னர் அரண்மனை நிர்வாகமும் சரசுவதிமகாலும் கம்பெனியரின் ஆளுகைக்கு உட்பட்டன. இந்நூலகத்தில் இருந்த மிகப் பழமைவாய்ந்த அரிய சுவடிகளின் மேல் அவர்களுக்கு இருந்த மதிப்பின் காரணமாகவும் அவற்றினைக் கணக்கெடுக்க வேண்டியும், அப்போதை தஞ்சை மாவட்ட ஆட்சியர் Forbbes என்பவரின் ஆணைப்படி வரகப்பையர் என்பவரால் 1857-இல் சுவடிகளுக்கான அட்டவணை, ஓலைச்சுவடியிலும், அகரவரிசைப் பட்டியல் காகிதத்திலும் தயாரிக்கப்பட்டன.

"சாதவாகன சக 1778 நள நாம சம்வத்சரம் ஆங்கில வருடம் 1857, கலெக்டர் பேப் இட்ட ஆணையின்படி ராமையா வரகப்பையரால் தயாரிக்கப்பட்ட அட்டவணை" என ஓலைச்சுவடியின் அட்டவணையின் ஈற்றுக்குறிப்பில் காணப்படுகின்றது.

சுவடிகளுக்கான இரண்டு அட்டவணைகள் மற்றும் பொருள் தலைப்புக்கான அகரவரிசைப்பட்டியலும் தயாரிக்கப்பட்டு 1857-இல் அச்சிடப்பட்டது. மேற்குறிப்பிட்ட ஓலையிலான அட்டவணையும், காகிதத்தில் தயாரித்த அட்டவணையும் மற்றும் அச்சிட்ட அட்டவணையும் தற்போது நூலகத்தில் உள்ளன. அச்சிட்ட அட்டவணைக்கு "List of Books in the His late Highness the Rajah of Tanjore" எனத் தலைப்பிடப்பட்டுள்ளது.[47]

டாக்டர் ஏ.சி.பர்னலின் அரும்பணி காரணமாக 1878-80 இல் அட்டவணை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இவ்வட்டவணை "Classified Index to the Sanskrit Manuscript in the

Palace at Tanjore" என்று தலைப்பிடப்பட்டுள்ளது.

பர்னலின் அட்டவணை மூன்று பாகங்களாக வெளியிடப் பட்டது. அதில் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

பாகம் *1* : வேத இலக்கியம் (Vedic Literature)

பாகம் *2* : தற்கால வடமொழி இலக்கியம் (Modern Sanskrit Lit.,)

பாகம் *3* : Dissertations on Social Topics

இது முக்கியமான அட்டவணையாகக் கருதப்பட்டாலும் சுமார் *4000* வடமொழிச் சுவடிகள் இந்த பர்னல் அட்டவணைப்பட்டியலில் இடம்பெறாமல் போனது பெரிய இழப்பாகும்.[48] எனவே, இது முழுமையான அட்டவணையாகாது.

சுவடி விளக்க அட்டவணை (Descriptive Catalogue)

நிர்வாகக் குழு சரசுவதிமகால் நூலகத்தினை இயக்கிய நிலையில் டாக்டர் பர்னல் தயாரித்த அட்டவணைப் பட்டியலினைப் பரிசீலனை செய்ததில் *1878* முதல் *1918* வரையிலான நாற்பதாண்டு காலத்தில் அரிய நூல்கள் பல காணப்படவில்லை[49] என்பது குறிப்பிடத்தக்கது.

1919-இல் நூலகக்குழு - நிர்வாகக்குழு நூலகச் சுவடிகளுக்கு விரிவான அட்டவணைப்பட்டியல் தொகுதிகளை வெளியிடத் திட்டமிட்டு அரசின் உதவியைக் கோரியது. *1920*-இல் நூலகத்திலுள்ள அச்சிட்ட பிரஞ்சு, ஆங்கிலம், லத்தீன், கிரீக் ஆகிய மொழிகளிலுள்ள நூல்களுக்கு அட்டவணை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

1924-இல் மராட்டி சுவடிகளுக்கும் நூல்களுக்கும் அட்டவணை தயாரிக்கப்பட்டு முதன்முதலில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து தற்போது ஆறு தொகுதிகள் வெளியிடப் பட்டுள்ளன.

1926-இல் தமிழ்மொழிச் சுவடிகளுக்கான *3* அட்டவணைத் தொகுதிகள் தமிழ்ப் பேராசிரியர் பண்டித உலகநாதப்பிள்ளையால் பரிசீலனை செய்யப்பட்டு வெளியிடப்பட்டன.

1933-இல் இந்நூலகத்தில் உள்ள தெலுங்குமொழிச் சுவடிகளுக்கு இரண்டு விளக்க அட்டவணைகள் அச்சிட்டு வெளியிடப்பட்டன. இதில் ஒன்று ஆந்திரப் பல்கலைக்கழக ஆதரவுடனும், மற்றொன்று இந்நூலகத்தினாலும் வெளியிடப் பட்டன.

வடமொழிச் சுவடி விளக்க அட்டவணை

வடமொழிப் பேரறிஞர் பி.பி.எஸ். சாஸ்திரியாரின் கட்டுரைகள், சொற்பொழிவுகள் ஆகியவற்றின் தாக்கத்தால் அரசு பொதுத்துறை இயக்குநர் லிட்டில் ஹெயில்ஸ் என்பவர் இந்நூலக வளர்ச்சிக்கான முயற்சிகளை மேற்கொள்ளலானார்.

பி.பி.எஸ். சாஸ்திரியாரின் அறிக்கையின்படி 1926-இல் அட்டவணைத் தயாரிப்புக்கான அறிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டது. அரசு ஆணையின்படி[50] ரூ. 21,345 அளித்து நூலகத்திலுள்ள வடமொழிச் சுவடிகளுக்கு அட்டவணைத் தொகுதிகள் வெளியிட உதவியது. 1929-30 ஆம் ஆண்டில் 5000 பக்கங்கள் கொண்ட வடமொழி அட்டவணை 9 தொகுதிகளாக நூலகத்தின் சார்பில் வெளியிடப்பட்டன.

11.12.1929 இல் இந்நூலகத்திற்கு இந்திய வைசிராய் லார்டு இர்வின் தமது துணைவியாருடன் வருகை புரிந்தார். அப்போது இர்வினின் துணைவியார் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட ஓலைச்சுவடியைப் பார்க்க ஆசைப்பட்டார். நூலகப் பண்டிதர் ஒருவர் 400 ஆண்டுகள் பழமையான ஓலையில் ஆங்கிலத்தில் எழுதி அம்மையாரிடம் காட்டி அவரை மகிழ்விக்கச் செய்தார்.[51]

இர்வின் வருகை இந்நூலக வளர்ச்சிக்கு மேலும் ஊக்கம் அளிப்பதாக அமைந்தது. இவரின் பரிந்துரையின்பேரில் இந்திய அரசு சிறப்பு அறிக்கையைப் பெற்று 1930-இல் இந்நூலகத்திற்கு மேலும் ரூ. 21,960யை அளித்தது. நிர்வாகக்குழு ரூ. 1600 அளித்ததையும் சேர்த்து வடமொழிச் சுவடிகளுக்கு விளக்க அட்டவணைப் பணி தொடர்ந்து நடைபெற்றது. பி.பி.எஸ். சாஸ்திரியால் 10-20 தொகுதிகள் தொடர்ந்து வெளியிடப் பட்டன. பின்னாளில் வெளியிடப்பட்ட மூன்று தொகுதிகளையும் சேர்த்து மொத்தம் 23 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் 18 தலைப்புக்களில் சுவடிகள் பிரிக்கப்பட்டு வகைப்படுத்தப் பட்டுள்ளன.

1983-இல் நிர்வாக மாற்றம்

இந்நூலகம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நூலகமாக 1983-இல் அறிவிக்கப்பட்டது. இந்நூலகத்தினை நிர்வாகம் செய்த ஐந்து நபர் குழுவை நீக்கிய தமிழக அரசு, இதனைப் பதிவு செய்யப்பட்ட சங்கமாக (Society) மாற்ற ஆணையிட்டது.[52] இதற்கான இணைய

மேலாண்மையர்கள் நியமிக்கப்பட்டு சங்கமாக 9.7.1986-இல் பதிவு செய்யப்பட்டது. இதன்படி இணைய மேலாண்மையர்கள்,

தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர், தமிழக அரசு

துணைத்தலைவர் : செயலாளர், பண்பாட்டுத் துறை, மத்திய அரசு

உறுப்பினர்கள்:

1. *இயக்குநர், தேசிய நூலகம், கல்கத்தா*
2. *தலைவர், தேசிய ஆவணக் காப்பகம், புதுடில்லி*
3. *சிறப்பு ஆணையர் மற்றும் செயலர், கல்வித்துறை, தமிழக அரசு*
4. *மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர்*
5. *துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்*
6. *இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை, தமிழக அரசு*
7. *நிதித்துறை ஆலோசகர், பண்பாட்டுத் துறை, மத்திய அரசு*
8. *இணைச் செயலர், நிதித்துறை, தமிழக அரசு*
9. *தஞ்சை மராட்டிய மன்னர் குடும்பத்து உறுப்பினர்*
10. *கல்வித்துறை துணை ஆலோசகர், பண்பாட்டுத்துறை, மத்திய அரசு*

உறுப்பினர் மற்றும் செயலர்

இயக்குநர், சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர்.

தற்சமயம் இயக்குநருக்கான பணியிடம் நிரப்பப்படாமல் மாவட்ட ஆட்சியரே இயக்குநர் பொறுப்பையும் ஏற்று நிர்வாகம் செய்கின்றார்.

நிதிநிலை

இந்நூலகம் தமிழக அரசிடமிருந்து பராமரிப்பு நிதியினையும், மத்திய அரசிடமிருந்து வளர்ச்சிப் பணிகளுக்கான நிதியையும் பெற்று நல்லதொரு வளர்ச்சியினைப் பெற்றுள்ளது.

இன்றைய நிலையில் சரசுவதிமகால் நூலகம்

சுவடிகள் பிரிவு

இந்நூலகத்திற்கு மிகவும் சிறப்புச் சேர்ப்பது சுவடிகளின் தொகுப்புக்களாகும். இதில் சோழர்கள் காலச் சுவடிகள் சிலவும், நாயக்கர் காலம் முதல் மராட்டிய மன்னர்கள் காலம் வரையிலான எண்ணற்றச் சுவடிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பிரிவில் வடமொழி, மராட்டி, தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் சுவடிகள் உள்ளன.

இங்குள்ள சுவடிகளை ஓலைச்சுவடிகள் மற்றும் காகிதச்சுவடிகள் என இருவகைகளாகப் பிரிக்கலாம். இப்பிரிவில் மன்னர்கள் சேர்த்த தொகுப்புக்கள் நீங்கலாக, தனியார்கள், நிறுவனங்கள், மடங்கள், சமஸ்தானங்கள் மற்றும் அரண்மனைகளிலிருந்தும் சுவடிகள் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

படியாக்கப் பணிகள்

சுவடிகள் பிரிவில் பல சுவடிகள் புதியதாகக் காகித்தல் படியெடுக்கப்பட்டு, கட்டடம் செய்யப்பட்டுப் பயன்படுத்தப் படுகின்றன. இவை பழைய சுவடிகளில் எழுதப்பட்டவைகளைத் தற்கால எழுத்துவழக்கில், காகிதத்தல் எழுதப்பட்டு கட்டடம் செய்யப்பட்டவையாகும். இவை, தொடர்ந்து மூலச் சுவடிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும், பழைய சுவடியில் உள்ள எழுத்தினைப் படிக்க இயலாதவர்கள் பார்வைக்குப் புரியும் படியாகப் படிக்கவும், மேலும் பல படிகள் எடுப்பதற்கு ஏற்ற வகையிலும் உள்ளன. ஆய்வாளர்கள் இவ்வகைப் படிகளையே அதிகம் பயன்படுத்துகின்றனர்.

வடமொழிச் சுவடிகள் பிரிவு

வடமொழிச் சுவடிகள் பிரிவில் இப்பொழுது 39,293 சுவடிகள் உள்ளன. இவற்றில் 21,187 ஓலைச்சுவடிகளும், 18,106 காகிதச் சுவடிகளும் அடங்கும்.

வடமொழிச் சுவடிகள் கிரந்தம், தேவநாகரி, நந்திநாகரி, தெலுங்கு ஆகிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. மேலும், மலையாளம், கன்னடம், ஒரியா எழுத்துக்களிலும் எழுதப்பட்ட சுவடிகள் சில உள்ளன.

இப்பொழுது புதியதாகத் தொகுக்கப்பட்ட 8818 தலைப்புக்கள் கொண்ட ஓலைச்சுவடிகளுக்கும், 3076 தலைப்புகள் கொண்ட காகிதச் சுவடிகளுக்கும் அட்டவணைப்பட்டியல் தயாரிக்கப் பட்டுள்ளது. இத்தொகுப்பில் படங்களுடன் கூடிய காகிதச் சுவடிகள் அதிகம் உள்ளன.

மிகப் பழமை வாய்ந்த காகிதச் சுவடிகள்:
பாமதி

இது கி.பி. 1468-இல் எழுதப்பட்ட சுவடியாகும். இது சங்கரருடைய அத்வைதத்தின் பாஷ்யத்தைப் பற்றி விளக்கும் காகிதச் சுவடியாகும்.[53] காகிதத்தில் எழுதப்பட்ட இச்சுவடி இன்றளவும்

மிகவும் நல்லநிலையில் உள்ளது. வாசஸ்பதிமித்ரா என்பவர், தாம் இந்நூலை எழுதுவதற்கு மிகவும் துணைபுரிந்த தமது மனைவியின் பெயரான பாமதியை இந்நூலிற்குச் சூட்டினார். இச்சுவடி வேதாந்தப்பிரிவில் மூட்டை எண் 8-இல் உள்ளது.

வாமன புராணம்

192 பக்கங்களைக் கொண்ட இச்சுவடி[54] சம்வத் வருடம் 1578 இல் எழுதப்பட்டது. (கி.பி. 1521) இது புராணப்பிரிவில் மூட்டை எண் 21-ல் உள்ளது. மேலும் பல சுவடிகள் பழமையும் முக்கியத்துவமும் வாய்ந்தனவாக உள்ளன.

பழமையான வடமொழி ஓலைச்சுவடிகள்

பலவதி (Phalavati):

இந்நூலகத்தில் உள்ள ஓலைச்சுவடிகளில் பலவதி மிகவும் பழமையான சுவடியாகும்.[55] இதனை இந்நூலகத்தினர் 10-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்ததாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால் ஏ.சி. பர்னல், இது 1600-வது வருடத்தியது என்று கூறுகின்றார்.[56] இச்சுவடியில் எந்தவித பிற்குறிப்புக்களும் இல்லை.

வால்மீகி இராமாயணம்

இது வடமொழியில் கிரந்த எழுத்துக்களால் எழுதப்பட்ட சுவடியாகும். ஒரு பக்கத்திற்கு 24 முதல் 29 வரிகள் வரை மிகவும் கலைநயத்துடன் எழுதப்பட்டுள்ளது. இதில் 239 ஏடுகள் உள்ளன. ஆறு காண்டங்களைக் கொண்டது.[57]

கத்தியசிந்தாமணி (Gadyacintamani)

இது வடிபாசிம்மா (Vadibhasihma) என்ற ஜைனமுனிவரால் எழுதப்பட்டது. கிரந்த எழுத்தில் எழுதப்பட்ட இச்சுவடியில் எழுதப்பட்ட ஆண்டு குறிப்பிடப்படவில்லை.[58]

படங்களுடன் கூடிய காகிதச் சுவடிகள்

படங்களுடன் கூடிய காகிதச் சுவடிகளுள் முக்கியமானவை

அ. கஜ சாஸ்திரம்

ஆ. அசுவ சாத்திரம்

இ. ரிக்வேதம்

போன்றவையாகும்.

அ. கஜ சாஸ்திரம்

மன்னர் சரபோஜி யானைகளை வளர்ப்பதிலும் அவற்றிற்கு மருத்துவம் செய்வதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இந்நூலகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள உயரிய ஓவியக் கையெழுத்துப் பிரதிகளில் கஜசாஸ்திரமும் ஒன்றாகும். இதில் கஜசாஸ்திரம் தொடர்பான படங்களும் அவற்றிற்குரிய பழமையான சுலோகங்களும் விளக்கங்களும் தரப்பட்டுள்ளன.

பாலகாப்பியமுனி என்பவரால் தக்க சான்றுகளுடன் இப்படங்களுக்கு மராட்டி மற்றும் வடமொழியில் விளக்கம் தந்திருப்பது மிகச் சிறப்புடையது. மூன்று பெரும் கையெழுத்துப் பிரதிகளான இவை முழுமையடையவில்லை.

இச்சுவடியை அச்சுநூலாகப் பதிப்பித்த மாட்டிக்ராவ் இந்நூலின் முன்னுரையில் கஜசாஸ்திரப் படங்கள் சகஜி மன்னர் காலத்தவை என்றும், சகஜி மன்னர் காலத்தில் யானைப்படை, குதிரைப்படை மிகுதியாக இருந்தன என்றும், இப்படங்களைப் பார்த்தே பின்னாளில் சரபோஜி மன்னர் புதியதாகப் படத்தொகுப்புகளைத் தொகுத்தார்[59] என்றும் குறிப்பிடுகின்றார். இருநூறு ஆண்டுகளாகியும் இவ்வோவியங்கள் இன்றும் அழகாகக் காட்சியளிக்கின்றன.

ஆ. அசுவசாஸ்திரம்

இது குதிரைகளின் படங்களை அழகிய வண்ணத்தில் வரையப் பட்டுள்ள ஒரு தொகுப்புச் சுவடியாகும். நகுலர் என்பவரால் எழுதப்பட்ட இச்சுவடியைத் தொடர்ந்து சாலிஹோத்ரா, தினபதி (Dinapati), கார்கா, ஆர்யா போன்ற முனிவர்களால் எழுதப்பட்டது. இதில் குதிரைகளின் எட்டு வகையான குணங்கள் விளக்கப் பட்டுள்ளன. இதனை வரைய உபயோகிக்கப்பட்ட வண்ணங்களைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இ. ரிக்வேத சம்ஹிதை

வடமொழி காகிதச் சுவடிப் பிரிவில் உள்ள சுவடிகளில் ரிக்வேத சம்ஹிதை என்னும் பெயரில் 311 காகிதச் சுவடிகள் உள்ளன. அவற்றுள் 85 சுவடிகளின் மேல் பக்கத்தில் சிறிய அளவிலான வண்ண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இன்றளவும் வண்ணங்கள் மாறாமல் உள்ள இவ்வோவியங்கள் கி.பி. 17, 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் வரையப் பட்டதாகக் கருதப்படுகின்றது.[60]

இவற்றில் இந்தியாவில் தயாரான காகிதம் மற்றும் அயல்நாட்டுக் காகிதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இச்சுவடிகளின் இறுதிப் பக்கங்களில் பலவகைப் பூச்சிகளின் படங்கள் வரையப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன. இந்த 85 சுவடிகளில் உள்ள கதைகள் 25 தலைப்புகளில் வண்ண ஓவியங்களால் விளக்கப்பட்டுள்ளன.

அருச்சுனனுக்குப் பாசுபதமளித்தல்

இச்சுவடி, சிவபுராணத்தில் உள்ள ஞானசம்ஹிதையில் வருகின்ற நிகழ்ச்சியை விளக்குவதாக உள்ளது. இதில் மொத்தம் ஆறு சுவடிகள் உள்ளன. இவை சரசுவதிமகால் நூலகச் சுவடிகள் எண்களுடன் விளக்கப்பட்டுள்ளன.

1. அர்ச்சுனன் பன்றியைத் தனது அம்பால் குறிவைக்கின்றான். மறுபுறம் சிவன், பார்வதி, சிவகணங்கள் நிற்கின்றனர். இந்நிலையில் சிவனும் தனது அம்பினால் பன்றியைக் குறி வைக்கின்றான்.[61]
2. சிவபெருமான் மற்றும் அர்ச்சுனன் ஆகிய இருவரும் எய்த அம்பினால் பன்றி இறந்துவிடுவதாக வரையப்பட்டுள்ளது.[62]
3. யார் எய்த அம்பினால் பன்றி இறந்தது என்ற விவாதத்தினால் இருவரும் வில்லேந்தி போர் செய்கின்றனர். இக்காட்சியில் பார்வதி வேட்டுவச்சி வேடத்திலும் அவருடன் நான்கு சிவ கணங்களும் வரையப்பட்டுள்ளன.[63]
4. சிவனை வெல்லமுடியாத அர்ச்சுனன் வேடன் உருவத்தில் நிற்கும் சிவனைத் தனது காண்டீபத்தால் தாக்குகின்றான். காண்டீபம் சிவனின் தலையை நெருங்கியதும் இரண்டு துண்டுகளாகின்றது. இந்நிகழ்ச்சியைப் பார்வதியும் சிவகணங்களும் பார்த்துக் கொண்டிருப்பதாக வரையப் பட்டுள்ளன.[64]
5. அர்ச்சுனன், தோல்விக்குப் பின் சிவலிங்க பூசை செய்கின்றான். அவன் பூசை செய்யும் வில்வம் சிவன் தலையை அடைகின்றது. இந்நிகழ்ச்சியைப் பார்வதியுடன் சிவகணங்கள் பார்ப்பதாக வரையப்பட்டுள்ளது.[65]
6. அர்ச்சுனனின் பக்தியை மெச்சி அவனுக்கு சிவன் தெய்வீக உருவத்தில் பார்வதியுடன் தோன்றி, நாரதர், தும்புரு, சிவகணங்கள் ஆகியோர் முன்னிலையில் பாசுபதத்தினை அளிக்கின்றார்.[66]

இவ்வாறு மற்றுமுள்ள சுவடிகள் 24 தலைப்புக்களில் வண்ண ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன.

மன்னர்களின் ஆதரவுபெற்ற மராட்டிய மடங்களின் நூல் தொகுப்புகள்

மன்னர் ஏகோஜி தஞ்சையைக் கைப்பற்றி ஆட்சி செய்தபோது சாம்ராட் சிவாஜியின் குருவான சமர்த்த ராமதாசர் யாத்திரை செல்லும் வழியில் தஞ்சைக்கு வந்தார். மன்னர் அவரைத் தமக்குக் குருவாக இருக்குமாறு வேண்டிக் கொண்டார். ஆனால், ராமதாசர் தமது 13-வது சீடரான சகபூர்கர் பீமராஜ கோஸ்வாமிகள், அவருடன் அநந்தமௌனிகள் மற்றும் ராகவசுவாமிகளைத் தஞ்சைக்கு அனுப்பி வைத்தார்.

இவர்களில் கோஸ்வாமிகள் தஞ்சையிலும், அநந்தமௌனி சுவாமிகள் மன்னார்குடியிலும், ராகவசுவாமிகள் மாரியம்மன் கோவிலுக்கு அருகேயுள்ள கோணூரிலும் மடங்களை அமைத்தனர். இம்மடங்களின் மடாதிபதிகள் வடமொழி மற்றும் மராட்டியில் புலமை பெற்றவர்கள். இவர்கள் ஏராளமான காகிதச் சுவடிகளைத் தங்களுடைய மடங்களில் வைத்துப் பாதுகாத்தனர். மாதவ சுவாமிகள், ராம பண்டிதர், மேரு சுவாமிகள் போன்றோர் மராட்டியில் இலக்கியங்களையும் இயற்றினர். பாரம்பரியமாகச் சேர்க்கப்பட்ட காகிதச் சுவடிகளை அறிஞர்களும் மடத்தினைச் சேர்ந்தோரும் பயன்படுத்தினர். தஞ்சையில் 1855-இல் மராட்டியர்களின் ஆட்சி முடிவுற்ற பின்னர் இம்மடங்களுக்குச் சரியான ஆதரவு இல்லாமையால் சுவடிகளுக்குச் சரியான பாதுகாப்பு இல்லாமல் போயின. இவ்வகையிலான ஏராளமான சுவடிகளைச் சமர்த்த ராமதாச சுவாமிகளின் சம்பிரதாய மடங்கள் சரசுவதிமகால் நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கின. இவ்வகையிலான தொகுப்புகள் குறிப்பிடத்தக்கன.

1. தியாகராஜ சுவாமி தொகுப்பு (T.S. Collection)

பீமராஜ கோஸ்வாமிகள் 1680-இல் தஞ்சையில் மடத்தினை நிறுவினார். இவரின் பரம்பரையில் 4-வது பீடாதிபதியாகிய தியாகராஜ சுவாமிகளின் பெயரில் இவரது பேரன் ஆத்மாராம் கோஸ்வாமி அவர்கள் 1400 காகிதச் சுவடிகளை இந்நூலகத்திற்கு 28.3.1927 இல் அளித்தார்கள். இத்தொகுப்பில் 37 மூட்டைகளாகக் கட்டப்பட்ட 1335 வடமொழி காகிதச் சுவடிகளும், 65 மராட்டி

காகிதச் சுவடிகளும் அடங்கும். இம்மடத்தினைச் சார்ந்தவர்கள் மன்னருடன் தொடர்பு கொண்டிருந்ததால் அரண்மனையில் இயற்றப்பட்ட நூல்களும் இத்தொகுப்பில் உள்ளன.[67]

2. சுந்தரசுவாமிகள் தொகுப்பு (Sundaraswami Collection)

மன்னார்குடியில் மடத்தினை அமைத்த அநந்தமௌனி சுவாமிகளின் பரம்பரையில் வந்தவர் சுந்தரசுவாமிகள். இவர்களின் முன்னோரில் வந்த சேதுபாவா சுவாமிகள், மன்னர் பிரதாபசிம்மனுக்கு இராசகுருவாக விளங்கினார். இவரின் விருப்பப்படி மன்னன் தஞ்சை கீழவீதியில் சாமர்த்த ராமதாசர் மடத்தினைக் கட்டினான். இப்பரம்பரையில் வந்த சுந்தரசுவாமிகள் இம்மடத்தில் சேர்க்கப்பட்ட வடமொழி, மராட்டிய காகிதச் சுவடிகளை இந்நூலகத்திற்கு 1943-இல் வழங்கினார். இத்தொகுப்பில் மொத்தம் 34 சுவடிகள் உள்ளன.

3. இராம்பாவு சுவாமி தொகுப்பு (Rambavooswami collection)

பீமராஜ கோஸ்வாமிகளின் முக்கிய சீடர்களில் ஒருவர் கோவிந்த பாவா கோஸ்வாமிகள். இவரின் வழிவந்தவர் ஸ்ரீஇராம் பாவு சுவாமி பரம்பரை மடாதிபதிகள். இவருடைய முன்னோர்கள் வடமொழி மற்றும் மராட்டியில் புலமை பெற்று, சுவடிகள் பல எழுதியும் சேர்த்தும் வைத்திருந்தனர். இக்காகிதச் சுவடிகளை இராம்பாவு சுவாமிகள் 1965-இல் இந்நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கினார்கள். இத்தொகுப்பில் 19 சுவடிகள் உள்ளன.

4. தேவாஜிராவ் தொகுப்பு (Devaji Rao Collection)

இரண்டாம் சிவாஜியின் காலத்தில் இராமேஸ்வரம் யாத்திரைக்குச் செல்வதற்காகத் தஞ்சைக்கு வந்த இராமச்சந்திர பாவா அவர்கள் ஹரிகதையைச் சிறப்பாகச் செய்யும் கலைஞர். இவரின் புலமையை அறிந்த மன்னர் தஞ்சை வடக்கு வீதியில் ஒரு மடத்தினை ஏற்படுத்தி இவரை இருக்கச் செய்தார்கள். ஹரிகதையின் மறுமலர்ச்சியினைத் தஞ்சையில் ஏற்படுத்தியவர் இவரே. இவரின் பரம்பரையில் வந்த தேவாஜிராவ் மராட்டி மற்றும் வடமொழியில் மிகுந்த புலமை பெற்றவர். பாவா சுவாமிகள் பயன்படுத்திய சுவடிகளையும், இவர்கள் பாடிய திண்டி, சாகி, ஓவி போன்ற அரிய கீர்த்தனை சரித்திர நிரூபணங்களையும் தேவாஜிராவ் இந்நூலகத்திற்கு 1965-இல் வழங்கினார்கள். 44 சுவடிகள் இத்தொகுப்பில் உள்ளன.

5. தத்தாத்ரேய மடத்தின் தொகுப்பு (Dattatreya Mutt Collection)

தஞ்சையின் பழமையான மடங்களில் தத்தாத்ரேய மடமும் ஒன்றாகும். மராட்டிய மாநிலத்தில் சிறப்பாக விளங்கிய 'நாதசம் பிரதாயத்தில்' வந்த உத்தசித்தருக்கு இரண்டாம் சகஜி மன்னர் ஒரு மடம் அமைத்துக் கொடுத்தார். இம்மடத்தின் பீடாதிபதிகளாக இருந்தவர்கள் வடமொழி, மராட்டியில் புலமை பெற்று விளங்கினார்கள். இம்மடத்தில் சேர்த்து வைத்திருந்த மொத்தம் 95 சுவடிகளை இந்நூலகத்திற்கு 17.2.1975-ஆம் நாள் அளித்தார்கள்.

தனியார் தொகுப்புக்கள்

மன்னர்களின் ஆதரவுபெற்ற மடங்கள் மட்டுமன்றி பல மராட்டிய குடும்பத்தினரும், பிறரும் தங்கள் இல்லங்களில் சேர்த்துவைத்த சுவடிகளை இந்நூலகத்திற்கு வழங்கி இந்நூலக வளர்ச்சிக்கு உதவி செய்தனர். அவ்வகையில் பெறப்பட்ட தொகுப்புக்களில் சில வருமாறு:

எஸ்.காகல்கர் தொகுப்பு (S.K. Collection)

சுமார் 175 ஆண்டுகளுக்கு முன்னர் தஞ்சையில் வாழ்ந்தவர் எல்.சேதுராம்காகல்கர். இவரும், இவரின் முன்னோர்களும், இவருக்குப் பின்னவர்களும் வடமொழி இலக்கணத்தில் மிகவும் தேர்ச்சிபெற்றவர்கள். இவர்கள் சேர்த்து வைத்திருந்த 163 மராட்டி மற்றும் வடமொழி காகிதச்சுவடிகளை 6.6.1921-இல் இந்நூலகத்திற்கு அன்பளிப்பாக அளித்தனர். இச்சுவடிகள் எஸ்.காகல்கர் தொகுப்பு என்ற பெயரில் தனியாகப் பாதுகாக்கப்படுகின்றன.

ஜம்புநாத பட்லாண்டிக்கே தொகுப்பு (J.L. Collection)

சரசுவதிமகாலில் உள்ள தனியார் தொகுப்புக்களில் மிகச் சிறந்தது ஜே.எல். தொகுப்பாகும். இத்தொகுப்பில் காணப்படும் காகிதச் சுவடிகள் சம்புநாத பட்லாண்டிக்கின் தந்தையார் மானம்பட்டரின் 'விஜயவிலாசம்' என்ற நூலகத்தின் ஒரு பகுதியே ஆகும்.[68] மானம்பட்டர் ருக்வேதம் அறிந்த மராட்டிய அந்தணர் ஆவார். இவரின் காகிதச்சுவடிகள் 8.1.1921 இல் இந்நூலகத்திற்கு அளிக்கப்பட்டன.

தஞ்சை மராட்டிய மன்னர்கள் மானம்பட்டரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். இந்நெருக்கத்தின் காரணமாக இவரின் தொகுப்பில் அரண்மனையில் உருவான நூல்களும், இவர் காசி சென்று அரண்மனை நூலகமான சரசுவதிமகாலுக்காகவே

படியெடுக்கப்பட்ட பிற சுவடிகளும் அதிகமாக உள்ளன.[69] இத்தொகுப்பில் வேதம், வேதபாஷ்யங்கள், சூத்திரங்கள், காவியங்கள், நாடகம் போன்ற பல சுவடி நூல்கள் உள்ளன.

பதங்க அவதூத தொகுப்பு (P.A. Collection)

இரண்டாம் சகஜி மன்னர் காலத்தில் திருவிடைமருதூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் அரண்மனைப் புலவர்கள் பலர் வாழ்ந்தனர். இக்குடும்பத்தினர் தொகுத்து வைத்திருந்த சுவடிகளைத் திருமதி ஞானாம்பாபாய் அம்மாள் அவர்கள் 9.12.1921 இல் இந்நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கினார்கள். இக்காகிதச் சுவடிகள் சுமார் 200 ஆண்டுக் காலப்பழமை வாய்ந்தவை. இத்தொகுப்பில் 392 வடமொழிச் சுவடிகளும், 94 மராட்டிமொழிச் சுவடிகளுமாக மொத்தம் 486 சுவடிகள் உள்ளன. இதில் பக்தி இலக்கியம், இலக்கியம், வேதாந்தம் தொடர்பான சுவடிகளே அதிகம் உள்ளன.

கிருஷ்ணாஜி மேத்தா தொகுப்பு (K.M.Collection)

கிருஷ்ணாஜி மேத்தா தஞ்சை அரண்மனையில் பணியாற்றிய குஜராத்தி அந்தணர். இவரின் தந்தையார் விஸ்வநாத மேத்தா தெலுங்கு மொழியில் புலமை பெற்று ஆந்திராவில் பணியாற்றியவர். இவர் ஸ்ரீவித்யா மார்க்கத்தில் பற்றுக் கொண்டு, அது தொடர்பான நூல்களைத் தொகுத்தார். இத்தொகுப்பில் மந்திரம், தந்திரம், யந்திரம் தொடர்பான குறிப்புக்களைக் கொண்ட சுவடிகளே அதிகம் உள்ளன. இத்தொகுப்பில் 100 தெலுங்குமொழி காகிதச் சுவடிகளும், 5 ஓலைச் சுவடிகளும் உள்ளன. இச்சுவடிகள் 8.3.1924-இல் இந்நூலகத்திற்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்டன.[70]

வேதமூர்த்தி கோபாலகிருஷ்ணடவனேகர் தொகுப்பு (G.K.D. Collection)

கோபாலகிருஷ்ணடவனேகர் வேதம் அறிந்த மராட்டிய அந்தணர் வகுப்பைச் சேர்ந்தவர். இவரின் தொகுப்புக்களில் விரதங்கள், சமார்த்த பிரயோகங்கள் தொடர்பான சுவடிகளே அதிகம் உள்ளன. இந்நூலகத்திற்கு 1924-25 இல் 298 சுவடிகளையும், 1929-30 இல் 50 சுவடிகளையும், 1933-34 இல் 330 சுவடிகளையுமாக மொத்தம் 707 காகிதச் சுவடிகளை அளித்தனர். அதில் 678 வடமொழிச் சுவடிகள், 29 மராட்டிச் சுவடிகளும் அடங்கும். இவ்வகைத் தொகுப்புக்கள் முறையாகப் பாதுகாக்கப்பட்டு ஆய்வுக்குப் பயன்படுத்தப் படுகின்றன.

மராட்டி காகிதச் சுவடிகள் தொகுப்பு

தஞ்சை மராட்டிய மன்னர்கள் காலத்தில் தொகுக்கப்பட்ட மராட்டி மொழிச் சுவடிகள் (கி.பி. 1676-1855) இந்நூலகத்தில் சிறப்பாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் சுமார் 1856 காகிதச் சுவடிகள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை இராமதாசர் மற்றும் தத்ரேய மடத்திலிருந்து எழுதப்பட்டவையாகும்.

1918-இல் பொதுநூலகமாக அறிவிக்கப்பட்டபின் புலவர்களிடமி-ருந்தும், மடங்களிலிருந்தும் அன்பளிப்பாகச் சுமார் 1224 காகிதச் சுவடிகள் பெறப்பட்டன. இவற்றையும் சேர்த்து மொத்தம் 3080 சுவடிகள் இப்பிரிவில் உள்ளன.

இப்பிரிவில் உள்ள காகிதச் சுவடிகளில் மிகவும் பழமையானது 1739-இல் பிரதாபசிம்மர் காலத்தில் மகாராஷ்டிராவிலிருந்து படியெடுக்கப் பட்ட தாசபோதமாகும். இது ராமதாசரின் உபதேசங்களைக் கொண்டது.

இத்தொகுப்பில் உள்ள அதிகமான சுவடிகள் இதிகாசம் தொடர்பானவையாகும். இராமாயணம், மகாபாரதம், பாகவதம் போன்றவைகள் மடங்களிலிருந்து சேர்க்கப்பட்ட தொகுப்புக்களாகும்.

சமண சமயச் சுவடிகள்

சரசுவதிமகால் நூலகச் சுவடிகள் தொகுப்பில் குறிப்பிடும் படியான தொகுப்புகளுள் ஒன்று சமண சமய வடமொழிச் சுவடிகளாகும். இரண்டாம் சரபோஜி மன்னர் காலம்வரை சமணசமயச் சுவடிகள் இரண்டு மட்டுமே பாதுகாக்கப்பட்டுள்ளன.[71] 1921-இல் இந்நூலகத்திற்கு அளிக்கப்பட்ட ஜம்புநாத பட்லாண்டகே தொகுப்பில் 3 தலைப்புகளிலான சுவடிகள் இடம்பெற்றன.[72]

1973-74 ஆம் ஆண்டுகளில் சூ.மு.ராமானுஜ தாத்தாசாரியார் மற்றும் மு.நு.கோவிந்தன் ஆகிய இரண்டு வடமொழிப் பண்டிதர்கள் 297 தலைப்புகளிலான காகித மற்றும் ஓலைச்சுவடிகளை இந்நூலகத்தில் சேர்த்தனர். இவற்றில் கி.பி. 3, 4 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஸமந்தபத்ரர் இயற்றிய ஸ்வயம்பூ ஸ்தோத்ரம், ரத்னகரண்டகமும், கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்த்ததேவ திவாகரர் எழுதிய கல்யாணமந்த்ர ஸ்தோத்ரம், கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அகளங்கபட்டரின் அகளங்க

ஸ்தோத்ரம், தத்வார்த்தஸூத்ரம் ஆகிய நூல்களும் இத்தொகுப்பில் அடங்கும்.

கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அகளங்கபட்டர் கர்நாடக மாநிலம் சரவணபெளஹொளாவில் வாழ்ந்தவர். இவர் வடஆற்காடு மாவட்டம் பெண்ணாகடம் புத்தமதப்பள்ளியில் கல்வி பயின்று அம்மாவட்டத்திலேயே சமண மதத்தினைப் பரப்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மராட்டிமொழி ஓலைச்சுவடிகள்

தொடக்கக் கால மராட்டி நாடகங்கள் ஓலைச்சுவடிகளாகவே உள்ளன. இவற்றில் மராட்டி மொழி நாடகம் தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இப்பிரிவில் நாடகச் சுவடிகள் 44, பதங்கள் பற்றியது 10, ஆக மொத்தம் 54 ஓலைச்சுவடிகள் உள்ளன. மராட்டி மொழிச் சுவடிகள் பிரிவில் உள்ள காகிதம், ஓலைச்சுவடிகளை இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. புலவர்கள் மன்னர்களுக்காக எழுதியது, பாடியது, படியெடுக்கப்பட்டது.
2. வெளியில் இருந்து அரண்மனை நூலகத்திற்குக் கொண்டு வந்தது.

சுவடிகள் விளக்க அட்டவணை

இந்நூலகத்தில் தொகுக்கப்பட்டுள்ள மராட்டி சுவடிகளுக்கு விளக்க அட்டவணையாக ஆறு தொகுதிகள் அச்சிடப்பட்டுள்ளன. இவை தத்துவம், இலக்கியம், நாடகம், இசை, அகராதி, மருத்துவம், அறிவியல் போன்ற பல தலைப்புக்களில் பகுக்கப்பட்டுள்ளன.

தெலுங்குச் சுவடிகள்

இப்பிரிவில் நாயக்க மன்னர்கள் காலம் முதல் தொகுக்கப்பட்ட சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இதில் ஓலைச்சுவடிகள் அதிகமாகவும் காகிதச் சுவடிகள் குறைவாகவும் உள்ளன. ஓலைச்சுவடிகள் 1043ம், காகிதச் சுவடிகள் 44ம் சேர்த்து ஆக 1087 சுவடிகள் உள்ளன.

இப்பிரிவில் காவியம், சதகம், யக்ஷகானம், சோதிடம், மருத்துவம் போன்ற தலைப்புக்களில் பல சுவடிகள் உள்ளன. நன்னயா, திக்கண்ணா, போடண்ணா, கிருஷ்ணதேவராயர், விஜயரகுநாதநாயக்கர் ஆகியோர் எழுதிய சுவடிகள் பல

குறிப்பிடும்படியாக உள்ளன. மேலும், இச்சுவடிகள் தெலுங்கு இலக்கிய வரலாற்றுக்கு முக்கிய பங்களிக்கின்றன.

பாகவதமேளா தொடர்பாக முதன்முதல் எழுதப்பட்ட ஓலைச்சுவடிகள் பல இப்பிரிவில் உள்ளன. இச்சுவடிகளுக்கு விளக்க அட்டவணையாக இரண்டு தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தி ஓலைச்சுவடிகள்

பேச்சுமொழி இந்தி ஓலைச்சுவடிகள் (Old Hindi) தெலுங்கு எழுத்திலும் தேவநாகரி எழுத்திலுமாக ஐந்து சுவடிகள் உள்ளன. இவை தஞ்சை மராட்டியர்கள் காலத்தில் எழுதப்பட்டவை ஆகும்.[73]

தமிழ்ச் சுவடிகள்

தமிழ்மொழிச் சுவடிகள் அனைத்தும் ஓலைச்சுவடிகளாகவே உள்ளன. இவற்றில் இலக்கியம், தத்துவம், சமயம் சார்ந்த சுவடிகள் 2095. மருத்துவம் தொடர்பான சுவடிகள் 1722. ஆக மொத்தம் 3817 சுவடிகள் உள்ளன. இவற்றில் பல சுவடிகள் காகிதத்தில் படியெடுக்கப்பட்டு, கட்டடம் செய்து பாதுகாக்கப்படுகின்றன.

இவற்றுள் சங்க இலக்கியச் சுவடிகள், பதிக்கப்படாத சுவடிகள், சைவம், வைணவம், சைன நூல்கள், பிற்கால இலக்கியம் என நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

சுவடிகள் விளக்க அட்டவணை

இந்நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகளுக்கு விளக்க அட்டவணை தயாரிக்கும் பணி எல்.உலகநாதப்பிள்ளையவர்களால் தொடங்கப்பட்டு 1925-இல் முதல் தொகுதியும், 1954-இல் இரண்டாம் தொகுதியும், 1960-இல் மூன்றாம் தொகுதியும் வெளியிடப்பட்டன. தொடர்ந்து இலக்கியப்பிரிவுக்கு 6 தொகுதிகளும், மருத்துவப் பிரிவுக்கு 14 தொகுதிகளும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், புதியதாகச் சேர்க்கப்பட்டுள்ள சுவடிகளுக்கு அட்டவணை தயாரித்து வருகின்றனர்.

அரிய சுவடிகள்

இப்பிரிவில் பல சுவடிகள் அரியனவாக இருந்தாலும் சில சுவடிகள் மிகப் பழமையானவையாக உள்ளன.

திருவாய்மொழி வாசகமாலை

இது மணிப்பிரவாளநடையில் அமைந்த தமிழ் ஓலைச் சுவடியாகும். கோனேரி தாஸ்யை இதற்கு விரிவுரை செய்துள்ளார்.

திருவரங்கநாதப் பெருமாள் இலக்குமிதேவியுடன் பாம்பினைப் படுக்கையாகக் கொண்டு வீற்றிருப்பதான சித்திரம் இச்சுவடியின் மேற்புறத்தில் வரையப் பட்டுள்ளது. இவ்வாறான சுவடி வேறு எங்கும் இல்லை என்று இந்நூலகத்தினர் தெரிவிக்கின்றனர். இச்சுவடி இந்நூலக வெளியீடாக அச்சிடப்பட்டுள்ளது.

கம்பராமாயணம்

கம்பரால் எழுதப்பட்ட மிகவும் பழமையான இராமாவதாரம் என்னும் பெயருடைய ஓலைச்சுவடி இப்பிரிவில் உள்ளது. இச்சுவடியின் அளவு 19" x 11" x 1½" கம்பராமாயணத்தின் ஆறு காண்டங்களும் உத்திரக்காண்டமும் சேர்த்து 534 ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது.

சீவகசிந்தாமணி

நச்சினார்க்கினியர் உரையுடன் கூடிய சீவகசிந்தாமணியின் ஓலைச்சுவடி[74] மிகப் பழமையானது. இது, 230 ஏடுகளில் பக்கத்திற்கு 5-9 வரிகள் வரை எழுதப்பட்டுள்ளது. இச்சுவடி, கி.பி. 1628 இல் எழுதப்பட்டிருந்த பிரதிகளைப் பார்த்து கி.பி. 1703-ஆம் வருடம் எழுதப்பட்டுள்ளது. இதில் 9வது இலம்பகம் முதல் 13-வது முத்தியிலம்பகம் முடிய உள்ளது. முதல் எட்டு இலம்பகங்கள் இல்லை.[75]

இச்சுவடியில் உள்ள பிற்குறிப்பு வருமாறு:

"நமோஸ்து: விருஷபஜி நம:ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீசகாப்தம் 1550க்கு மேல் செல்லாநின்ற ஈஸ்வர வருஷத்து தைமாதத்து அபரபக்ஷத்து திதியையும் பெற்ற ஆதித்திய வாரநாள் எழுதி முடித்த பிரதியோடு பார்த்து சகாப்தம் 1625க்கு மேல் செல்லாநின்ற சுபானு வருஷத்து சித்திரை மாதத்து அபரபக்ஷத்து துவாதசி 5உ துவாதசி வெள்ளிக்கிழமை நாள் எழுதி முகிந்தது. இந்தச் சுவடி கண்ணங்குடை பொன்னம்பலத்தா பிள்ளை புத்திரர் முத்தையா பிள்ளையவர்கள் சிந்தாமணி எழுதி முகிந்தது முற்றும்".

இவற்றினைப் போன்ற பல அரிய சுவடிகள் இப்பிரிவில் உள்ளன.

சோதிட நூல்கள்

சோதிடம் என்பது காலத்தைப் பற்றி அறிகின்ற ஒரு உன்னத கலையாகும். தமிழர்களின் பழங்கலையாகிய இதனைத் தொல்காப்பியம்,

குடையும் வாளும் நாள்கோள்[76]

என்று விளக்கும்.

சோதிடம் பொய்யாது

என்று அறப்பளீசுவரர் சதகம் குறிப்பிடுகின்றது.

முதன்முதலாகச் சூரியன், வியாசர், வசீஷ்டர் போன்ற 18 முனிவர்கள் சோதிட சாத்திரத்திற்கு வழிகோலினர் என்பர். இவர்களைப் பின்பற்றியே பிற்காலத்தில் பல நூல்கள் எழுதப்பட்டன.[77]

கிரகங்களின் நிலையினைக் கொண்டு மனிதவாழ்வில் ஏற்படும் அனைத்து நல்லவை கெட்டவைகளை அறிய பல சோதிட வகைகள் உள்ளன. இதனை நமது முன்னோர்கள் ஒரே சுவடியாகவும், தனித்தனிச் சுவடியாகவும் ஓலையில் எழுதி வைத்தனர். இப்படிப்பட்ட சோதிடச் சுவடிகள் தமிழ்மொழியில் எழுதப்பட்ட முதல் நூலாகவும் மொழிபெயர்ப்புச் செய்த வழிநூலாகவும் பல உள்ளன. இவற்றினை இந்நூலகத்தில் பட்டியல் செய்துள்ளனர். ஒரே தலைப்பில் பல சுவடிகள் உள்ளன. தமிழ் தவிர வடமொழி, மராத்தி, தெலுங்கு மொழிகளிலும் ஓலைச்சுவடிகள் உள்ளன.

1. கௌளி சாத்திரம் : எந்தக் கிழமையில் பல்லி சொன்னால் எந்தவிதமான பலன் ஏற்படும் என்பதை விளக்கும் நூற்சுவடி.[78]
2. சகாதேவ நூல்: கயிறுபோட்டுப் பார்த்து சோதிடப்பலன் சொல்லும் வகையைச் சேர்ந்த சோதிட நூல்.[79]
3. சரநூல் : இதில் இடைகலை, பிங்கலை மற்றும் சுழிமுனை என்ற மூன்று நாடிகளின்வழி, எந்தவகை நாடி எந்தக் காலத்தில் மாறுபட்டால் எந்த வகையான பலன்கள் நடைபெறும் என்றும், எந்தவகையான நாடி நடைபெறும்போது எந்தவகையான செயல்களைச் செய்யலாம் என்றும் விளக்கப்பட்டுள்ளது.[80]
4. பஞ்சபட்சி சாத்திரம் : ஆந்தை, வல்லூறு, காகம், மயில், கோழி முதலிய ஐந்து வகைப் பறவைகளில் ஒவ்வொன்றின் உணவு, உறக்கம், நடை, இறப்பு ஆகிய செயல்களைக் கொண்டும், என்ன கிழமையில் எந்தத் தொழில் செய்யலாம் என்பதனை அவரவர்களின் பெயரின் முதல் எழுத்துக்குரிய பறவையைக் கொண்டு சொல்லும் நூல்.[81]
5. நட்சத்திரமாலை மரண கண்டிகை: எந்த நட்சத்திரத்தில் பிறந்தவன் எவ்வகை தன்மையுடையவனாக இருப்பான், அந்த

நட்சத்திரம் எவ்வகையான காரியங்களுக்கு ஆகும் என்றும் நோய் வந்தால் என்னவகையான பரிகாரம் செய்யலாம் என்றும் கூறுகின்றது.[82]

1984 வரை இந்நூலகம் இச்சுவடிகளிலிருந்து நான்கு சோதிட நூல்களை அச்சிட்டுள்ளது. அவை:

1. ஜாதகசார தீபிகா

17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வடமொழிப் புலவர் நரசிம்ம தெய்வஞன் என்ற வடமொழிப் புலவரால் இயற்றப்பட்ட சோதிட நூல்.

2. காலச்சக்கரம்

19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தொண்டைநாட்டு நந்தி மாநகர் தில்லைநாயகப் புலவரால் எழுதப்பட்டது. இந்த நூலுக்குக் 'காலச்சக்கரத் திசைப்புத்தி பலன்' என்ற மற்றொரு பெயரும் உண்டு.

3. வராகர் ஓரா சாத்திரம்

பிருகத் ஜாதகம் என்ற வடமொழி நூலை வராகர் சாத்திரம் என்று தமிழில் மொழிபெயர்ப்பு செய்து, இதனை வராகர் ஓரா சாத்திரம் என்று தமிழ்ப் பாக்களாக இலிங்கன் என்னும் புலவர் பாடியுள்ளார்.

4. பூர்வபராசர்யம்

பிருகத் ஜாதகம் மற்றும் பல வடமொழி நூல்களை ஆய்ந்து, அவற்றையும் பராசரர் முதலானவர்களின் கருத்துக்களையும் சேர்த்துத் தொகுக்கப்பட்ட ஒருதொகுப்பு நூலாகும். இதில் வடமொழி மூலமும் அதற்கான தமிழ் மொழிபெயர்ப்பும் உள்ளது.

இவையன்றி சரபோஜி மன்னர் தொகுப்பாகத் தனியே உள்ள ஐரோப்பிய மொழி நூல்களில் வானசாஸ்திரம் தொடர்பான பல நூல்கள் உள்ளன.

மோடி ஆவணங்கள்

சுவடிகளைப் பலவிதமாகப் பிரிக்கலாம். அவைகளை மொழி வாரியாகவும், எழுதப்பட்ட பொருள்களின் அடிப்படையில் ஓலைச் சுவடிகள், காகிதச் சுவடிகள் என இரு பிரிவுகளாகவும் பிரிக்கின்றனர். அவை தலைப்பு வகையிலும் பிரிக்கப்படுகின்றன. இச்சுவடிகள் இலக்கியமாகவும் நிகழ்வுப் பதிவுகளாகவும் இருக்கலாம். நிகழ்வுப் பதிவுகளே 'ஆவணங்கள்' எனப்படுகின்றன. இவற்றின் மூலமாகவே ஒரு அரசின் வரலாறு, பண்பாடு,

சமூகநிலை, பொருளாதாரம் ஆகியவற்றினை நாம் அறிய முடிகின்றது. ஆவணங்கள் வரலாற்று ஆய்வுக்குப் பயன்படும் மூலச்சான்றுகளாகும். தஞ்சை மராட்டிய மன்னர்கள் எழுதி வைத்த ஆவணங்களை மோடி ஆவணங்கள் என்றழைக்கின்றனர்.

மோடி எழுத்து

'மோடி' என்ற சொல் 'மோடணே' என்ற மராட்டி மொழிச் சொல்லில் இருந்து வந்ததாகக் கருதப்படுகின்றது. மோடணே என்றால் 'உடைதல்' என்று பொருள்.[83] இதிலிருந்தே மோடி என்ற சொல் உருவாகியிருக்கக்கூடும். பிறர் அறியாவண்ணம் சுருக்கெழுத்து முறையில் மராட்டிய மொழியில் ஆவணங்களில் எழுதிய முறை மோடி எழுத்து எனப்பட்டது. இவ்வெழுத்தில் எழுதப்பட்ட ஆவணங்கள் மோடி ஆவணங்கள் என்றழைக்கப் படுகின்றன.[84]

தேவகிரியாதவ் என்ற அரசனின் அமைச்சரான ஹேமாடுபந்த் *(1260-1309)* மராட்டி மொழிக்கு ஒருவகை சுருக்கெழுத்து முறையைக் கண்டுபிடித்தார். இது தேவநாகரி எழுத்தை உடைத்துச் சிதைத்து உருவாக்கப்பட்ட சுருக்கெழுத்து முறையாகும். அரசு ஆவணங்களை விரைவாகவும் மறைவாகவும் எழுதுவதற்கு இவ்வெழுத்துமுறையை உருவாக்கினர். இவருக்குப் பின்னர் வந்த ஆவண எழுத்தர்கள் இம்முறையையே பின்பற்றியதால் ஏராளமான மோடி ஆவணங்கள் தற்போது கிடைக்கின்றன.

மோடி எழுதும் முறை

இவ்வெழுத்துமுறை கண்டுபிடிக்கப்பட்டபோது கற்களிலும் பின்னர் செப்பேடுகளிலும் எழுதி வந்தனர். கையினால் காகிதம் செய்யக் கற்றுக்கொண்ட பின்னர் அதனை ஒரே அளவாக வெட்டிக் கொண்டு, அதன்மீது இடப்பக்கத்தில் இருந்து வலப்பக்கமாகக் கோடுகளை ஒன்றன்பின் ஒன்றாக இட்டுக்கொள்வர். அதன் பின்னரே கையினைக் காகிதத்திலிருந்து எடுக்காமலும், சொற்களைப் பிரிக்காமலும் எழுதவர். படிக்கும்போது சொற்களைப் பிரித்துப் படித்துக் கொள்ள வேண்டும். கடுக்காய் மையினைத் தொட்டு எழுதும் பழக்கமே நடைமுறையில் இருந்தது.[85] இந்த ஆவணங்களைப் படிப்பது மிகவும் கடினம். ஆவணத்திலுள்ள கையெழுத்தினைத் தன்வயப்படுத்திக் கொண்ட பின்னர்தான் படிக்க முடியும். அனுபவம் வாய்ந்தவர்களால்தான் மோடி ஆவணங்களைப் படிக்க இயலும்.

ஆவணத்தின் தலைப்பிலும், இடது ஓரத்தில் இடப்படும் முத்திரைகள் ஆவணத்தினை எழுதி அனுப்பும் அரசனின் முத்திரையாகும். ஆவணத்தின் முடிவில் செய்தியின் முடிவுகளைக் குறிப்பதற்காக முத்திரையிடப்படும். ஆவணத்தின் கீழ்ப்பகுதியில் ஆவணத்தினை அனுப்பும் அலுவலரின் முத்திரையிடப்படும்.

தஞ்சை மராட்டிய மோடி ஆவணங்கள்

மகாராட்டிரத்தில் ஆட்சிசெய்த மன்னர்கள் பயன்படுத்திய இம்முறை சுமார் 700 ஆண்டுகள் வழக்கிலிருந்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இம்முறை வழக்கில் குறையத் தொடங்கி, பின்னர் முற்றிலும் மறைந்தது. கி.பி. 1676-இல் தஞ்சையில் ஏகோஜி அரசுப் பொறுப்பேற்றார். தஞ்சை மராட்டிய மன்னர்களின் ஆட்சியின்கீழ் சுமார் 180 ஆண்டுகள் இருந்தது. இம்மன்னர்கள் ஆவணங்களை மோடி எழுத்திலேயே எழுதி வந்தனர். தஞ்சை மோடிஎழுத்து முறைக்குப் பழைய மோடி (Archaic Modi) என்று டி.வி.போட்தார் என்ற வரலாற்றாய்வாளர் குறிப்பிடுகின்றார்.[86]

தஞ்சை மராட்டிய மன்னர்களின் ஆட்சி கி.பி. 1855-இல் முடிவுக்கு வரும் வரை, அரண்மனை தஸ்தான் மகாலில் வைக்கப்பட்டிருந்த மோடி ஆவணங்கள் குடியிருப்பு ஆட்சியரின் (Resident) பொறுப்புக்கு மாற்றப்பட்டது. இச்செயலினைப் பொதுமக்களும் சரசுவதிமகாலின் ஆட்சிக்குழுவினரும் ஏற்காமையால், அவர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப 1926-இல் சரசுவதிமகால் நூலகத்திற்கு மாற்றியளிக்கப்பட்டது. சுமார் 1000 மூட்டைகளாகக் கட்டப்பட்டிருந்த மோடி ஆவணங்கள், 1952-இல் அரசின் முயற்சியால் பிரித்து வகைப்படுத்தப்பட்டன. மோடி ஆவணங்களை ஏ, பி, சி என்று மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தினர். 'சி' வகை மோடி ஆவணங்கள் சரசுவதிமகாலில் வைக்கப்பட்டன. முக்கியமான மோடி ஆவணங்களான ஏ, பி தொகுப்புக்கள் சென்னை ஆவணக் காப்பகத்திற்கு மாற்றப்பட்டன. இச்சுவடிகளுக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்றுவரை இச்சுவடிகள் பதிப்பிக்கப் படவில்லை.

தஞ்சை மராட்டிய மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, கடலூர், தரங்கம்பாடி ஆகிய இடங்களில் நிர்வாகம் செய்து கொண்டிருந்த ஆட்சியர்களுக்கு அனுப்பப்பட்ட

கடிதங்களும் ஆவணங்களும் அந்தந்த நிர்வாகத்தால் பாதுகாப்புடன் வைக்கப்பட்டன. தரங்கம்பாடியில் பாதுகாக்கப்பட்ட ஆவணங்கள் செர்மனியில் அச்சுவடிவம் பெற்றுள்ளது.[87] இந்த ஆவணங்களின் மூலம் சுமார் 200 ஆண்டுக் காலத் தஞ்சை வரலாற்றினை நாம் அறியலாம்.

நூல், நூலகம் தொடர்பான மோடி ஆவணக் குறிப்புகள் சில வருமாறு:

Bundle No 4C, Sub Bundle No. 10

"மாஹல் சரஸ்வதி பாண்டாரம் திம்மதி சேனாதுரந்தர் ராஜே ஸ்ரீ ராமயா வராஹப்பையா தீஷிதர் சூஹர்கள் 1246 ம் வருடம் - ரஜப் மாதம் தேதி தினம் - சாலிவாகன சகே 1767 விளம்ப நாம சம்வத்ஸரம்-வேலை செய்யும் விதம்"[88] (சகம் 1767 - 1845 கி.பி.)

இதில் வேலைசெய்பவர்கள் பற்றிய விவரம் உள்ளது. அதில் நூலகப்பணி செய்தவர்களை மட்டும் தனியாகப் பார்க்கலாம்.

மகாலின் புஸ்தகம் சோதனை வகையறாவின் வேலை 1- வேதகவி சுப்பிரமணி சாஸ்திரி[89]

காகிதத்தின் புத்தகம் எழுதுகிறவர்கள்

மகாலில் புத்தகம் எழுதுகிறவர்கள்

1-அச்சுதபட் நாராயணபட்

1-நாராயணபட் பாபாபட்

1-ராமபட் கௌவசி

1-ரங்காச்சார்ய, அப்பண்ணச்சார்ய

புத்தகம் எழுதுகிறவன் மேலும் டஸாமகாவில் வேலை பார்க்கிறவன்.

1-ஸ்ரீனிவாசபட் ராமபட்[90]

எனக் குறிப்பு உள்ளது.

ராஜே ஸ்ரீ வாமதேவ ராயரின் வீட்டில் புத்தகம் எழுதுகிறவன்

1-நரஸம்பட்ராமபட்[91]

காகிதத்தின் புத்தகம் எடுப்பவர்கள்

1-பாபாபட் சாம்பபட்

1-சாம்பசிவ ரகுநாத

1-பாலம்பட் நாராயணபட்

1-சதாசிவபட் சோமநாதபட்

1-வெங்கட்டபட் சக்கபட்ஹுப்ளி

1-வெங்கடபட் நாகம்பட்"

—

6 பேர்

பனைஓலைப் புத்தகம் எடுப்பவர்கள்

1-சுப்புதீட்க்ஷதர்

1-ராமசாஸ்திரி பஞ்சநிதி சாஸ்திரி

1-பஞ்சநதி சாஸ்திரி சுப்ரமணி சாஸ்திரி

1-குப்பாபட் சாம்பபட்

ஸ்ரீசங்கராச்சார்யர் மடம்

1-வெங்கடகிருஷ்ண சாஸ்திரி[92]

மகாலில் தமிழ்ப் புத்தகம் எழுதுகிறவர்கள்

1-அப்பாசாமி பிள்ளை வெங்கடாசல பிள்ளை

1-சாமிநாதபிள்ளை வாசுதேவபிள்ளை

ஆங்கிலப்புத்தகம் ரட்க்ஷகர்

1-ரங்கசாமி நாயக் வெங்கடாசல நாயக்

1-ஆறுமுகம் பிள்ளை[93]

Bundle 5C, Sub Bundle No. 3A "*(தாள் 1)*

பனைஓலை (சுவடி) புத்தகங்களின் ஜாபிதா சரஸ்வதி மஹால்

சூஹர்சன 1264 சாலிவாகன சகே 1785 ருதிரோத்காரி நாமசம்வத்ஸரம் மஹால் மஜ்கூரில் ஆஜர் உள்ளபடி

162 தர்மசாஸ்த்திர புத்தகம் 363

தலைப்பு

1 நிர்ணய சிந்து 3 படிகள்

1 சம்ஸ்கார சிந்து 2 படிகள்

1 சம்வத்ஸர கௌஸ்துப 1

என்று ஆரம்பித்து 5 தாள்களில் 162 தலைப்புகளில் 363 படிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரே தலைப்பில் சில நூல்களின் பல படிகள் உள்ளன.

தாள் 6, 7

37 ஸப்தாஸ்கா புத்தகம் 113

தலைப்பு

1-சுத்தாந்த கௌமுதி 5 படிகள்

1 லகுசித்தாந்த கௌமுதி 2

1 ஸப்த கௌமுகி 1"

என்று தொடங்கி தாள் 7 இல் 37 தலைப்புக்களில் 113 படிகள் உள்ளன.[94]

தாள் 8 இல் தொடங்கி தாள் 9இல் முடிவடையும் நிகண்டு புத்தகங்கள் ஜபிதாவில் 79 நிகண்டுகளில் 211 படிகள் உள்ளன.

காவியம் தாள் 19 இல் தொடங்கி தாள் 24 இல் முடிவடையும் நிலையில் 694 புத்தகங்கள் உள்ளன. ஒரே தலைப்பில் பல புத்தகங்கள் உள்ளன.

பனைஓலைப் புத்தகங்களின் ஜாபிதா ப்ராக்ருத நாடகங்கள்

(தாள் 52)

1 லெக்ஷ்மி நாராயண கல்யாணம் மாஹாராஷ்டிர பாஷை 4

1 வள்ளி கல்யாணம் தெலங்க பாஷை 5

1 ஹரிஹத விலாஸ் மஹாராட்டிரபாஸ 6

. . . ."[95]

ஓலைச்சுவடிப் புத்தகங்களின் விவரம்

பிராக்ருத பத்ய காவியம்

(தாள் 45)

"1 பத்யகாவியம் ராமாயண காண்டம் 7

1 புத்தகம் உத்தரகாண்டம் 1

1 புத்தகம் பாஸ்கர ராமாயண காண்டம் 6

. . . .[96]

தாள் 51 இல் முடிவடைகிறது. ஆக புத்தகம் 534 ஆகும்.

(பிராகிருதம்-வடமொழித் திரிபுள்ள மொழி, பத்யகாவியம்-செய்யுள்கள்)

தாள் 57

பனைஓலைப் புத்தகங்களின் ஜாபிதா - தமிழ்ப் புத்தகங்கள் - வைத்ய விஷயம்

1 அகத்திய பாடல் 781க்கு புத்தகம் 1

1 புத்தகம் பாடல் 781க்கு 1

1 புத்தகம் பாடல் 582 க்கு 1

. . . . . தாள் 89 இல் முடிகிறது.[97]

தமிழ்ப் புத்தகங்கள்

தாள் 9

1 கம்பராமாயணம் சப்த காண்டம் 1

1 புத்தகம் காண்டம் 6க்கு 1

தாள் 17 இல் முடிவடையும் ஜாபிதாவில் மொத்தம் 732 நூல்கள் உள்ளன.[98]

இவ்வாறு புத்தகக் கணக்கு எழுதப்பட்டுள்ளது விளங்குகின்றது.

Bundle No. 5C, Sub Bundle W. 6

(தாள் 1)

"மஹால் சரஸ்வதி பாண்டாரம் - வருடம் 1868 ஆங்கில ஆண்டு, டிசம்பர் மாதம் தேதி 26 மேற்சொன்ன மகாலில் ஆஜராயுள்ள சாமான்களின் விபரம்.

52 படம்

8 கிருஷ்ணனின் படம் மரச்சட்டத்துடன் கூடியது.

1 - இரண்டு பெரிய கிருஷ்ணனின் படம் (சிறிய) கல்வேலை செய்தது

4 - உட்கார்ந்த கிருஷ்ணனின் படம் சட்டம் இல்லாதது

1 - தவழும் கிருஷ்ணன் படம்

2 - நின்றுகொண்டிருக்கும் கிருஷ்ணனின் படம்

- - - - -

8

- - - - -

20 - ராஜாக்களின் படம், சிறிய மரச்சட்டத்துடன்

5 - கண்ணாடியுடன் ஜதை 1

15 - காலி

- - - - -

20

- - - - -

1 - விருஷபாரூட பார்வதி பரமேஸ்வரரின் படம் மரச்சட்டத்துடன்

1 - மஹாராஜ் சபையின் சதருடன்

2 - சேதுகோசாமியின் படம்

1 - பெரியது

1 - சிறியது

பீரங்கியின் படம் - கண்ணாடியுடன்

18 - ராணிகளின் படம் மரச்சட்டத்துடன்

1 - ஞானேஸ்வரரின் படம் சட்டம் இல்லாதது

——

52[99]

——

இதன் மூலம் மகாலில் நூல்களுக்குப் பட்டியல்செய்யும்போது 26.12.1868 இல் அங்கு இருந்த 52 படத்தொகுப்புகளுக்கும் பட்டியல் எடுக்கப்பட்டது விளங்குகின்றது.

மோடி ஆவணங்களின் மொழிபெயர்ப்புப் பணி

அக்கால வீட்டுமனை, விளைநிலங்கள் ஆகியவற்றின் ஆவணங்களும் மோடியில் எழுதப்பட்டு அவர்களின் இல்லங்களில் பாதுகாக்கப்பட்டுள்ளன. இவ்வாறான செய்திகளைத் தெரிந்து கொள்ள சரசுவதிமகால் நூலகத்தினை மக்கள் நாடுகின்றனர். இங்கு, கட்டணம் பெற்றுக்கொண்டு மொழிபெயர்ப்புச் செய்து தரப்படுகின்றது. இந்நூலகத்தில் மோடியில் எழுதப்பட்ட ஐந்து செப்பேடுகள் பாதுகாக்கப் பட்டு வருகின்றன.[100] இச்செய்தியின் மூலம் மராட்டிய மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் பொது மக்களிடமும் மோடி ஆவணத்தின் பயன்பாடு இருந்ததை அறியமுடிகின்றது.

மோடி ஆவணங்களால் அறியப்படும் செய்திகள்

மோடி ஆவணங்களால் அறியப்படும் செய்திகளின் அடிப்படையில் இவற்றைப் பலவகையாகப் பிரிக்கலாம்.

1. தஞ்சை மராட்டியர் கால எல்லை, பரப்பளவு, அரசு அலுவலர்கள், இவர்களோடு தொடர்பு கொண்ட பிற நாட்டவர்கள், பன்னிரண்டு மகால்கள், 18 கானாக்கள் பற்றிய செய்திகள்.
2. அரண்மனைக்குச் சொந்தமான தேவஸ்தானங்கள், அவற்றின் திருப்பணி, பூசை பற்றிய செய்திகள், கிறித்தவ,

இசுலாமியர்களுக்குக் கொடுக்கப்பட்ட இனாம்கள் தொடர்பான விபரங்கள்.

3. அவர்கள் காலத்தில் வசூலிக்கப்பட்ட வரிகள், நாணயங்கள், அரசின் வருவாய் போன்ற பொருளாதாரச் செய்திகள்.
4. சமுதாய நிலை தொடர்பான செய்திகள்.
5. கலைவளர்ச்சி மற்றும் கலைஞர்களுக்கு அளிக்கப்பட்ட ஆதரவு, நாடகம், இசை நூல்கள் உருவாக்கம்.
6. முதலாம் சரபோஜி மன்னரின் தலயாத்தரை, அவர் நூலகத்திற்காகச் சேகரித்த நூல்கள், ஓவியம், சுவடிகள், கலைப்பொருட்கள் ஆகியவையாகும்.

மோடி ஆவணத்தினை அச்சிடும் பணி

வரலாற்றறிஞர் ஆர்.எஸ்.சல்வாக்கர் 1933-ஆம் ஆண்டு பாட்னாவில் நடைபெற்ற இந்திய வரலாற்று ஆவணங்கள் பற்றிய கூட்டத்தில் தஞ்சை வரலாற்று ஆவணங்களை மொழிபெயர்த்து வெளியிடும் முயற்சிக்கான அறிக்கையை அளித்தார்.[101] பின்னர், சரசுவதிமகால் பண்டிதர்களால் மொழிபெயர்க்கப்பட்ட 120 மூட்டைச் செய்திகளை 1989-ஆம் ஆண்டில் தமிழ்ப் பல்கலைக்கழகம் மூன்று தொகுதிகளாக வெளியிட்டது. மோடி ஆவணத்தில் உள்ள செய்திகளின் குறிப்புக்களை 48 நோட்டுப் புத்தகத்தில் தமிழில் எழுதி இந்நூலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மோடி ஆவணங்களை மூலச்சான்றாகக் கொண்டு தமிழ்ப் பல்கலைக்கழகம் 'தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்' என்ற நூலினை வெளியிட்டுள்ளது. மோடி ஆவணங்களில் பலவகைச் செய்திகள் பொதிந்திருப்பதற்குச் சான்றாக இந்நூல் அமைந்துள்ளது. சென்னை ஆவணக் காப்பகத்தில் இருந்த மோடி ஆவணங்கள் தற்போது தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன.

பல இடங்களில் உள்ள மோடி ஆவணங்கள் அனைத்தையும் மொழி-பெயர்த்து வெளியிட்டால் சுமார் 200 ஆண்டுக்காலத் தமிழக வரலாற்றினை நாம் முழுமையாக அறியமுடியும்.

மோடி அட்டவணை

இந்நூலகத்தில் இருந்த புத்தகங்களுக்கு மோடியில் அட்டவணை செய்யப்பட்டுள்ளது. 1844-இல் சிவாஜி காலத்தில் மோடியில்

நூல்களுக்கு அட்டவணை செய்யப்பட்டு தேவநாகரி எழுத்தில் எழுத்து மாற்றம் செய்யப்பட்டு எழுதி வைத்துள்ளனர். மகாராஷ்டிர மாநில அரசு இங்குள்ள மோடி ஆவணங்களை நுண்படமாக்கும் திட்டத்தினை மேற்கொண்டுள்ளது.

அட்லாஸ் மற்றும் நிலவரைபடங்களின் தொகுப்பு

சுவடிகள் மற்றும் அச்சுப் புத்தகங்களுடன் இந்நூலகம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அட்லாஸ் மற்றும் நிலவரைபடங்களையும் தொகுப்புக்களாகப் பெற்றுள்ளது. இப்படங்களில் பெரும்பான்மை மன்னர் இரண்டாம் சரபோஜியின் காலத்தில் சேர்க்கப்பட்டதும் விலைகொடுத்து வாங்கப்பட்டதுமாகும். இவற்றின் மூலம் பண்டைய வரலாறு, நில அமைப்பு (Geographical details), கடல்வழி, நாட்டின் எல்லைகள் பற்றி அறியமுடிகின்றது.

பண்டைய காலத்தில் ஒவ்வொரு நாட்டிற்கும் இருந்த பெயர்கள் பற்றியும் அறியலாம். உதாரணமாக, 18 மற்றும் 19-ஆம் நூற்றாண்டுகளில் அச்சிடப்பட்ட வரைபடங்களில் இரான், இராக், 'பர்சியா' என்றும், ஜப்பான் 'நிப்பான்' என்றும் ஆஸ்திரேலியா 'நியூஹாலந்து' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

பழமையான அட்லாஸ்

இந்நூலகத்திலுள்ள மிகவும் பழமையான அட்லாஸ் 1662, 1663 மற்றும் 1696-ஆம் ஆண்டுகளில் அச்சிடப்பட்டவையாகும். இதில் 78 படங்களுடன் பிரஞ்சு மொழியில் விளக்கம் தரப்பட்டுள்ளது. மேலும், இதில் ஒவ்வொரு நாட்டினைப் பற்றிய விளக்கமும், கடல்வழியும் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்நூல் பின்னாளில் மூன்று தொகுதிகளாகக் கட்டடம் செய்யப்பட்டுப் பாதுகாக்கப் பட்டுள்ளது. 1692-இல் அச்சிடப் பட்ட இந்திய வரைபடமும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

இத்தொகுப்பில் உள்ள "A Map of Hindustan or The Mohul Empire" என்னும் இந்திய நில வரைபடம் 1788-இல் தயாரிக்கப் பட்டதாகும். 112 x 106 செ.மீ. அளவு கொண்ட இந்த படம் J.Rennal என்னும் புகழ்பெற்ற வரைபட நிபுணரால் தயாரிக்கப்பட்டது. இவ்வரைபடத்தின் அசல்படி இந்நூலகத்தில் உள்ளது.

இப்படத்தில் தமிழ்நாட்டின் கடற்கரை, ஆந்திரப்பிரதேசம் ஒங்கோல் வரை குறிப்பிடப்பட்டு, அப்பகுதி கர்நாடிக் மண்டலமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படத்தில்

இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் ஆடம்பாலம் (Adams Bridge) குறிப்பிடப்பட்டுள்ளது. 'Glossary of Madras Presidency' என்னும் நூலில் மேக்கலன் என்பவர் கி.பி. *1480* வரை இப்பாலம் நடைபாலமாகப் பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார். பின்னாளில் கடல் அரிப்புகளால் இப்பாலம் அழிவுக்குள்ளானது. இதை உறுதிப்படுத்த அமெரிக்க விண் வெளிக்கலம் எடுத்த படத்தில் இப்பாலம் இருந்ததற்கான தடயங்களைக் கண்டறிந்துள்ளனர்.

19-ஆம் நூற்றாண்டில் அச்சிடப்பட்ட சில குறிப்பிடத்தக்க நில வரைபடங்கள் :

1. Maps of the World

இதில் கேப்டன் குக் பயணம் செய்த பாதை, அவரின் கண்டுபிடிப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இது P.J.ரசல் என்பவரால் *1811*-இல் லண்டனில் வரையப்பட்டது. இந்த அட்லாசில் *29* படங்கள் (Plates) உள்ளன. இதில் மிகப் பெரிய வரைபடம் *70* x *42* செ.மீ. அளவுள்ளது.

2. Atlas to Thompsons Alcedo or Dictionary of America and West Indies, by Arrow Smith, Hydrographer to his Royal Highness the Prince Regent, London, 1819.

இந்த அட்லாசில் *21* நில வரைபடங்கள் உள்ளன. இவற்றில் மிகப் பெரியது *85* x *100* செ.மீ. அளவு கொண்டதாகும்.

3. Collections of the Maps and plans to accompany to History of the millitary transaction of the British Nation in Indoostan by Robert Orme, 1862.

இவ்வரைபடம் பிரிட்டனின் இராணுவ நடவடிக்கைகளையும், பழைய இந்தியக் கோட்டைகளில் அரசர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் விளக்குவதாக உள்ளன. இதில் மொத்த *36* படங்கள் உள்ளன.

1. Maps of India, 4 Vols. by A.Arrow Smith, London, 1816. அளவு *146* x *166* செ.மீ.
2. District of Tanjore, Madras, 1874, msî 27 x 19 c.m.
3. Map of China Sea : Navigation of China Sea, அளவு 92 x 62 c.m.
4. Map of the Dominions of Mysoor at the death of Chick Deo Raja

Wadeyar in 1704 by Liut Col Mackonzie, London, 1810. அளவு *34.5* x 30.5 cms.

என இதனைப் போன்ற படங்கள் குறிப்பிடும்படியாக உள்ளன.

நோக்கீட்டு நூல்கள் பிரிவு

இப்பிரிவில் தமிழ், ஆங்கிலம், வடமொழி, தெலுங்கு, மராட்டி ஆகிய மொழிகளில் அச்சிடப்பட்ட நூல்கள் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டு அவற்றிற்கு வரிசை எண் அளிக்கப்பட்டு அதன்படி அடுக்கப்பட்டுள்ளன.

அயல்நாட்டிலிருந்தும், பல மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழங்களில் ஆய்வினை மேற்கொள்வோரும், பொதுமக்களும் இங்கு நூல்களைப் பெற்றுப் பயன்படுத்துகின்றனர். இந்நூலகத்தில் உள்ள நூல்களை வெளியில் எடுத்துச் செல்ல அனுமதிப்பதில்லை. அனைத்து நூல்களும் ஒரே இடத்தில் உள்ளதால் ஆய்வாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளன. பயன்படுத்துவோர் நூலடுக்குகளில் இருந்து நூல்களை எடுக்க அனுமதிப்பதில்லை.

இங்குள்ள நூல்களுக்குத் தலைப்பு, ஆசிரியர் மற்றும் பொருள் வாரியாக அட்டைப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்வழி ஆய்வாளர்கள் தேவையான நூல்களைத் தேர்வு செய்கின்றனர். இப்பிரிவில் உள்ள அச்சுநூல்கள் மொழிவாரியாக,

1. தமிழ்	- *12,323*
2. ஆங்கிலம்	- *11,760*
3. வடமொழி	- *13,575*
4. இந்தி	- *3,211*
5. மராட்டி	- *2,485*
6. தெலுங்கு	- *1,752*
7. இதர மொழிநூல்கள்	- *7,027*
8. மன்னர் தொகுப்பு	- *4,503*
மொத்த நூல்கள்	- *56,636*

நூல்கள் வெளியிடுதல்

சுவடிப்பதிப்பு மற்றும் பதிப்புத்துறை

இந்நூலகத்தின் முக்கிய நோக்கம் இந்நூலகத்தில் உள்ள அரிய, பதிப்பிக்கப்படாத சுவடிகளை அச்சுநூல்களாகப் பதிப்பித்து வெளியிடுவதேயாகும். இந்நூலகத்தில் உள்ள வடமொழி, மராட்டி, தெலுங்கு, தமிழ்ப் பண்டிதர்கள், பதிப்பிக்கப்பட

வேண்டிய சுவடிகளைத் தேர்வுசெய்து பதிப்புப் பணியினை மேற்கொள்கின்றனர். சில சிறப்புப் பதிப்பாசிரியர்களும் நியமிக்கப்பட்டு இவ்வேலை செய்யப்படுகின்றது. அந்தந்தத் துறையைச் சார்ந்த வல்லுநர்கள் அழைக்கப்பட்டுப் பதிப்புக்குத் தயாரான வேலையை சீர்தூக்கி பார்க்கப்பட்டுப் பின்னர் அச்சுக்கு அனுப்பப் படுகின்றது.

1948-ஆம் ஆண்டு சென்னை அரசாங்கம் இங்குள்ள சுவடிகளை அச்சிட்டு வெளியிடக் கருதியது. சென்னை அரசின் கல்வித்துறை குறிப்பாணை எண்:34913/ 4810 நாள் 4.4.1949 இன்படி டி.எம். நாராயணசாமி பிள்ளை, டாக்டர் இரா.பி.சேதுப்பிள்ளை, சி.எம். இராமச்சந்திரரெட்டியார், கல்கி இரா.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.கோபாலன், டி.சந்திரசேகரன் போன்ற 21 வல்லுநர்கள் கொண்ட குழுவை நியமனம் செய்தது. 1949-இல் அமைக்கப்பெற்ற இக்குழு மொழி வாரியாகத் துணைக்குழு எனச் செயல்பட்டு இந்நூலகத்தில் உள்ள 11 தமிழ்ச் சுவடிகள் அச்சிடத் தேர்வு செய்யப்பட்டன. இவை அரசினர் கீழ்த்திசை வெளியீடு என வெளிவரத் தொடங்கியது. இதன் பொதுப் பதிப்பாசிரியராக அந்நிலையக் காப்பாளர் டி.சந்திரசேகரன் நியமிக்கப்பட்டார். அவ்வாறு தேர்வு செய்த நூல்கள்

1) சரபேந்திர வைத்தியமுறை (நீரிழிவு சிகிட்சை),
2) சரபேந்திர வைத்தியமுறை (சிராரோக சிகிட்சை),
3) கொங்கணர் சரக்கு வைப்பு,
4) திருச்சிற்றம்பலக் கோவையார் (உரையுடன்),
5) சரபேந்திர வைத்தியமுறை (பாண்டு காமாலை சிகிட்சை),
6) தாள சமுத்திரம்,
7) பரதம்,
8) தமிழ் நாடகங்கள்:
   அ) பாண்டிச்சேரி விலாச நாடகம்,
   ஆ) புரூரவ சக்ரவர்த்தி நாடகம்,
   இ) மதனசுந்தரி விலாச நாடகம்,
9) மலையருவி (நாடோடி பாடல்கள்),
10) இராமையன் அம்மானை,
11) சரபேந்திர வைத்திய முறைகள் (காச, சுவாசி சிகிட்சை)

என்பன. இதனைத் தொடர்ந்து இந்நூலக வெளியீடாக இதுவரை 421 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் தமிழ் மொழியில் 201, வடமொழி 149, மராட்டி 43, தெலுங்கு மொழியில் 20, ஆங்கிலம் 8 நூல்கள் அடங்கும்.

காலமுறை இதழ்

வெளியீட்டுப் பிரிவிலிருந்து ஒரு காலாண்டு இதழ் 1939முதல் வெளியிடப்பட்டு வருகின்றது. இவ்விதழில் பலமொழிப் பண்டிதர்களும், இந்நூலகத்தில் ஒவ்வொரு பிரிவினைச் சேர்ந்த தலைவர்களும் தங்களது ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றனர். இந்நூலகப் பதிப்புத்துறை, அச்சுப்பிரிவு, விற்பனைப் பிரிவு என்ற மூன்று பிரிவுகளுடன் செயல்பட்டு வருகின்றது. 1998-இல் இந்நூலகத்திற்காகக் கணினிவழி அச்சாக்க (DTP) சாதனங்கள் வாங்கப்பட்டுப் பயன்பாட்டில் இருந்துவருகின்றன.

நூல் விற்பனைப் பிரிவு

அச்சிட்ட நூல்களைக் கட்டடம் செய்ய ஒரு பிரிவும், நூல்களை விற்பனை செய்ய தனியாக ஒரு பிரிவும் உள்ளன.

நுண்படப்பிரிவு (Micro Film Unit)

இந்நூலகத்தில் 1980 முதல் அரிய சுவடிகளைக் காப்பதற்காக நுண்படம் எடுக்கும் பணி துவக்கப்பட்டது. இதன்மூலம் காலத்தால் பழமையான நிலையில் உள்ள ஓலைச்சுவடிகள், காகிதச் சுவடிகள், பழமையான நூல்கள், அரிய ஓவியங்கள், வரைபடங்கள் போன்றவை நுண்படச்சுருள்களாக எடுக்கப்பட்டுப் பாதுகாக்கப் படுகின்றன. ஆய்வாளர்கள் தங்களுக்குத் தேவைப்படும் சுவடிகளையும் படங்களையும் இவ்வகையில் பெற்றுத் தங்களது ஆய்வினைத் தொடர்கின்றனர்.

இதுவரை 5,000 தேர்வுசெய்த தமிழ், மராட்டி மற்றும் தெலுங்கு சுவடிகள் நுண்படமாக எடுக்கப்பட்டுள்ளன. மேலும், புதுதில்லியில் உள்ள இந்திராகாந்தி நினைவு தேசிய நுண்கலை மையத்துடன் சேர்ந்து 13,062 வடமொழிச் சுவடிகள் நுண்படமாக எடுக்கப்பட்டுள்ளன. இத்துடன் மன்னர் சரபோஜியின் சேகரிப்பான 650 நூல்கள் நுண்படமாக்கப்பட்டுள்ளன.

இந்நூலகச் சுவடிகள் அனைத்தையும் டிஜிட்டலைசேஷன் முறையின் மூலம் நுண்படமெடுத்துக் காக்கும் தொழில்நுட்பம்

மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பொறுப்பினைப் பெங்களூரில் உள்ள மத்திய அரசின் நிறுவனமான C-DAC ஏற்றுள்ளது. இதற்காக ரூ. 40 இலட்சம் செலவிட்டு அதி நவீன புகைப்படக் கருவியை (Kodak Zutchel Camera) அந்நிறுவனம் வாங்கியுள்ளது.

கணினி மையம் (Computer Centre)

இந்நூலகத்தில் டிசம்பர் 1997-இல் கணினி மையம் அமைக்கப்பட்டது. இம்மையத்தில் உள்ள DTP கருவியின் மூலம் புத்தகப்பிரதிகள் எடுக்கப்பட்டு அச்சிடப்படுகின்றன. மேலும், ஸ்கேனர் கருவியின் மூலம் சுவடிகளும் அரிய நூல்களும் டிஜிட்டல் முறையில் பாதுகாக்கப் படுகின்றன.

இந்நூலகத்திலுள்ள நூல்கள் மற்றும் சுவடிகளுக்கான அட்டவணை கணினியில் தயாரிக்கப்பட்டு ஆய்வாளருக்கு இணையத்தின் வழியாக அளிக்க வழிவகை செய்யப்பட்டு வருகின்றன. இவ்வசதி டிசம்பர் 1998-முதல் இந்நூலகத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

சுவடிகளைப் பாதுகாக்கும் பிரிவு

அரண்மனை நூலகத்திலும் மடங்களிலும் சேர்த்துப் பாதுகாக்கப் பட்ட சுவடிகள் பின்னர் சரசுவதிமகால் நூலகத்தில் தொகுக்கப் பட்டன. இவ்வகைச் சுவடிகளில் காலத்தால் பழமையான பல சுவடிகள் உள்ளன. அவற்றினைச் செப்பனிட்டுப் பாதுகாப்பது இந்நூலகத்தின் முக்கியப் பணியாகச் செய்யப்பட்டு வருகின்றது.

ஓலைச்சுவடிகளைப் பாதுகாத்தல்:
கறைகளை நீக்குதல்

இந்நூலகத்தில் உள்ள பழமையான ஓலைச்சுவடிகளின் மேற் புறத்தில் பூச்சிகளின் எச்சம், தூசு, பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தப் படும் பொருள்கள், பூஞ்சைக் காளான்களினால் ஏற்படும் கறைகள் மற்றும் புள்ளிகள் சிறு கத்தியைக் கொண்டு சுரண்டி நீக்கப் படுகின்றன. மேலும், தண்ணீருடன் ஆல்கஹாலினைக் கலந்து கறையினை ஈரப்படுத்தியும் கறைகள் நீக்கப்படுகின்றன. அசிடோன், ட்ரைகுளோரோஈதேன், கற்பூர எண்ணெய் ஆகியவற்றினைப் பயன்படுத்தியும் நீக்கப்படுகின்றன.

ஓலைகளின் நிறமாற்றம்

நிறம் மாறும் ஓலைகள், அமிலத்தன்மை இல்லாத சோப்பு திரவத்தினைச் சுத்தமான நீரில் கலந்து சுத்தம் செய்யப்படுகின்றன. மேலும், இவை இரண்டு விழுக்காடு ஹைட்ரஜன் பாராக்ஸைடு திரவம் அல்லது இரண்டு விழுக்காடு அமோனிய நீர் அல்லது எதில் ஆல்கஹால் கொண்ட கலவையைக் கொண்டு சுத்தம் செய்யப் படுகின்றன.

பூச்சிகளால் பாதிப்பு

ஓலைச்சுவடிகள் கேஸ்டரலஸ் இண்டிகஸ் எனப்படும் புத்தகப்புழு, கரப்பான் பூச்சி, கரையான்கள் ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றன. புத்தகப்புழு ஓலைகளில் துளை செய்வதுடன், அது வெளிப்படுத்தும் திரவத்தால் ஓலைகள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்கின்றன. கரையான் மற்றும் கரப்பான் பூச்சிகளால் சரிசெய்யமுடியாத பாதிப்பு ஏற்படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்த வேப்பிலை, புகையிலை, கற்பூரம், வசம்பு, கருஞ்சீரகம் போன்ற இயற்கையான பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன.

பூச்சிகளைக் கட்டுப்படுத்த கருஞ்சீரகம், வசம்பு, பட்டை ஒரு பங்கு, கிராம்பு, மிளகு ஆகியவை கால்பங்கு எடுத்து அவற்றை நிழலில் காய வைத்து, பொடி செய்து, அவற்றுடன் கற்பூரத்தினைச் சேர்த்து வெள்ளைத் துணியில் சிறுசிறு உருண்டைகளாகக் கட்டி பயன்படுத்துகின்றனர். மேலும், பூச்சிகளைக் கொல்ல ஆவியூட்டுதல் முறையில் பாராடை குளோராபென்சின் என்ற வேதிமப் பொருளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பூஞ்சைக்காளான்களால் ஓலைச்சுவடிகளுக்கு ஏற்படும் பாதிப்பினைத் தடுக்க முன்னர் சுவடிகளின் மேல் மஞ்சளைப் பூசி வைத்தனர். ஆனால் தற்போது வேதிமப்பொருள்கள் கொண்டு சுத்தம் செய்யப்படுகின்றது. நீராவியில் வேகவைத்து ஒன்றோடொன்று ஒட்டியுள்ள சுவடிகள் பிரிக்கப்படுகின்றன. மேலும், தைமால் என்னும் வேதிமப்பொருளைக் கொண்டு ஆவியூட்டப்பட்டு காளான் பாதிப்பிலிருந்து சுவடிகள் பாதுகாக்கப் படுகின்றன.

பொதுவாக ஓலைகளில் உள்ள ஈரத்தன்மை குறையும்போது ஓலைகள் உடைந்து போகின்றன. இதனைத் தடுக்க ஆவியாகும் சிட்ரனில்லா எண்ணெய் ஓலைகளின்மேல் தடவப்படுகின்றது.

ஓலைச்சுவடிகளைச் செப்பனிடுதல்

புத்தகப்புழுவினால் ஏற்பட்ட துளைகள் மெழுகு அல்லது காகிதக்கூழ் கொண்டு செப்பனிடப்படுகின்றது. மிகவும் பாதிக்கப்பட்ட ஓலைகளின்மேல் இரண்டு விழுக்காடு பாலிவினைல் அசிடேட் பூசப்படுகின்றது. உடைந்த ஓலைகளைச் சேர்ப்பதற்குப் பழைய ஓலைகளைப் பொடிசெய்து, நீர்த்த பெவிக்கால் பசையுடன் சேர்த்துப் பயன்படுத்தப்படுகின்றது.

காகிதச் சுவடிகள் பாதுகாப்பு

காகிதச் சுவடிகளுக்கு வெப்பம், ஒளி, காற்றிலுள்ள ஈரப்பதம், உயிரியல் காரணிகளான இராமபாணம், புத்தகப்பேன், புத்தகப் புழு, கரப்பான்பூச்சி, கரையான் போன்றவைகளால் பாதிப்புகள் ஏற்படுகின்றன. கையினால் செய்யப்பட்ட காகிதத்தினையே மராட்டியர்கள் காலத்தில் எழுதப் பயன்படுத்தினர். பூஞ்சைக் காளான் பாதிப்பிலிருந்து சுவடிகளைப் பாதுகாக்கச் சுவடிகளின் மேல் மஞ்சளைப் பூசிவைத்தனர்.

சிவப்புநிறப் பட்டு அல்லது சிவப்புநிறப் பருத்தித் துணி கொண்டு சுவடிகளைக் கட்டி வைத்தனர். துணியில் சுவடிகளைச் சுற்றும்போது பூச்சிகள் வராமல் தடுக்கும்முகமாக வசம்பு, கற்பூரம், பாம்பின் தோல், உலரவைத்த வேப்பிலை, புகையிலை போன்றவற்றில் ஒன்றாகச் சேர்த்துக் கட்டி வைத்திருந்தனர். மர அலமாரிகளையே அதிகம் பயன்படுத்தினர்.

நவீனமுறை

தற்போது புகையூட்டுதல் முறையில் பூச்சிக்கொல்லியாக 'பேராடை-குளோரோபென்சினும்', பூஞ்சைக்காளான் கொல்லியாக 'தைமாலும்' பயன்படுத்தப்படுகின்றன. காகிதச் சுவடியின் அமிலத்தன்மையைக் கட்டுப்படுத்த 'அமோனியத் திரவம்' பயன்படுத்தப்படுகின்றது.

காகிதச் சுவடியினைச் செப்பனிடுதல்

காகிதச் சுவடிகளில் ஏற்படும் சிறிய சேதங்களைப் போக்கக் கைவினைக் காகிதங்களுடன் பூச்சிக்கொல்லி கலந்த மாவுப்பசை கொண்டு செப்பனிடப் படுகின்றது. இரு பக்கமும் மைகொண்டு எழுதப்பட்ட சுவடிகளை ஒளிபுகும் தன்மையுடைய கைவினைக் காகிதம் கொண்டு 'மெண்டிங்' என்னும் முறையினால் செப்பம் செய்யப்படுகின்றது. மேலும், ஒளிபுகும் கைவினைக் காகிதம்

மற்றும் செல்லுலோஸ் அசிடேட் தாள்கள் கொண்டு 'லேமினேசன்' முறையில் செப்பனிடப்படுகின்றது.

நூலகத்தின் வெப்பநிலையை *21%* இலிருந்து *24%*க்குள் இருக்குமாறு பார்த்துக் கொள்ளப்படுகின்றது. அடிக்கடி சுவடிகளைக் கவனித்தல், தூசு படியாமல் செய்தல், பாதுகாப்பாக் கையாளுதல் போன்ற செயல்களினால் சுவடிகள் பாதுகாக்கப் படுகின்றன.

வேதிமக் காப்புப் பிரிவு (Conservation Section)

1980-இல் இப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இப்பிரிவு வேதிமக் காப்பாளர் ஒருவரின் கீழ் மேற்கண்ட பணிகள் சிறப்புற நடைபெறுகின்றன. அச்சுநூல்களும் இப்பிரிவின் மூலம் செப்பனிடப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன.

செப்பனிடப்பட்ட ஓலைச்சுவடிகளின் இருபுறமும் தேக்குமரச் சட்டங்கள் வைத்துக் கட்டப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன. இதனைப் போலவே காகிதச் சுவடிகளும் அமிலத்தன்மையற்ற, கையினால் செய்யப்பட்ட காகித அட்டைகளை இருபுறமும் வைத்துக் கட்டப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன.

அருங்காட்சியகம் (Museum)

இந்நூலகத்தில் சிறியதாக ஒரு அருங்காட்சியகம் அமைக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்கள் இந்நூலகத்தின் முக்கியத்துவத்தினை அறியும் வகையில் பழமையான, அரிய சுவடிகள், படங்களுடன் கூடிய சுவடிகள், மிகப் பழமையான அச்சு நூல்கள், அச்சிடப்பட்ட படங்கள், வரைபடங்கள், காகிதம், துணி, மரம், கண்ணாடியில் வரையப்பட்ட தஞ்சாவூர் ஓவியங்கள் போன்றவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த அருங்காட்சியகத்தில் கீழ்க்கண்ட முக்கியமான படங்கள் இடம் பெற்றுள்ளன.

1. ஆதிசங்கரர் படம்

ஆதிசங்கரர் சின் முத்திரையுடன் தாமரை மலர்ப் பீடத்தில் அமர்ந்து தமது நான்கு சீடர்களுக்கு உபதேசம் செய்வதாக அமைந்துள்ளது. அவர்களே பின்னாளில் துவாரகா, பூரி, சிருங்கேரி, பத்ரிநாத் ஆகிய இடங்களில் நிறுவப்பட்ட மடங்களில் தலைவர்களாக இருந்து சமயப் பணியாற்றினர்.

2. சரசுவதிதேவி படம்

கல்விக்குத் தெய்வமான சரசுவதிதேவியின் வண்ணப்படம் ஒன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. 18-ஆம் நூற்றாண்டில் தஞ்சை மரபுப்படி வரையப்பட்டதாக இது கருதப்படுகின்றது.[102]

3. சமர்த்த இராமதாசர்

மராட்டிய மாமன்னர் சத்திரபதி சிவாஜிக்கும் அவரின் மரபினருக்கும் குருவாகத் திகழ்ந்தவர் சமர்த்த இராமதாசர். தஞ்சை மரபுப்படி வரையப்பட்ட இவ்வோவியத்தில் சமர்த்த இராமதாசர் புலித்தோலை இடது கரத்திலும் வலது கரத்தில் ஜபமாலையும் பிடித்துக்கொண்டு பூமியைப் பார்த்தவண்ணம் தோற்றமளிப்பதாக வரையப்பட்டுள்ளது.

4. மூலிகைப் படங்களின் தொகுப்பு

சரபோஜி மன்னர் தமது தன்வந்தரி மகால் மருத்துவமனைக்குத் தேவைப்படும் மூலிகைத் தாவரங்களைப் பற்றிய விபரங்களுடன், இயற்கை வண்ணங்களினால் வரையச் செய்து நூலகத்தில் வைத்துப் பாதுகாத்தனர். அவ்வோவியங்கள் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளன.

5. சரபோஜி மன்னரின் சேகரிப்பு நூல்

இம்மன்னர் 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல மருத்துவ நூல்களை வாங்கித் தொகுத்துள்ளார். அவற்றுள் மனிதனின் உடற்கூறு பற்றிய ஆங்கில நூல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

6. பஞ்சபட்சி சாத்திரம்

இது, இந்நூலகத்தில் உள்ள மிகச் சிறந்த, மிகச் சிறிய ஓலைச் சுவடியாகும். இச்சுவடியில் சோதிடங்களைப் பற்றி ஐந்து பறவைகள் சொல்வதுபோல் அமைந்துள்ளது.

7. பகவத்கீதை

வடமொழியில் தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்ட ஒரு கையடக்கக் காகிதச் சுவடி.

8. பர்மிய எழுத்து ஓலைச்சுவடி

இது, பௌத்தமதம் தொடர்பாக பர்மிய எழுத்துக்களில் பாலி மொழியில் எழுதப்பட்ட சுவடியாகும்.

9. சித்திர இராமாயணம்

இராமாயணத்தின் பாலகாண்டம், அயோத்யா காண்டம், ஆரண்ய காண்டம் ஆகியவை அழகிய சிறு சிறு ஓவியங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு படத்திற்கும் தெலுங்கில் விளக்கம் தரப்பட்டுள்ளன. இப்படங்கள் தென்னிந்திய மரபு வகையைச் சார்ந்ததாக உள்ளன.

10. பறவைகள் பற்றிய படங்கள்

இங்கு, பலவகைப்பட்ட பறவைகளின் படங்கள் அதற்குரிய குணங்களுடன் வரையப்பட்டுள்ளன. இதில் சரபோஜி மன்னரின் வல்லூறுப் பறவையின் படமும் ஒன்றாகும். இம்மன்னர் பாஜிநாமா என்ற பறவைகளின் நோய்க்கான மருத்துவத்தினை உருது மொழியிலும் அதன் மராட்டி தழுவலையும் எழுதியுள்ளார். அவையும் இங்குக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

11. செப்புப் பட்டயங்கள்

மராட்டியர்களின் ஐந்து செப்புப் பட்டயங்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. இவற்றில் நான்கு மராட்டி மொழி மற்றும் மோடி வடிவிலும் ஒன்று தமிழிலுமாகவுள்ளது. இவற்றில் அரசு ஆவணங்கள் பற்றிப் பொறிக்கப்பட்டுள்ளது. இவை வெவ்வேறு மகால்களில் பணிபுரிந்த அரசு அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட அரசு ஆணையின் நகல்களாகும். இவற்றில் அரசு முத்திரைகள் எதுவும் காணப்படவில்லை. இவற்றில் ஒன்று சூன்மாதம் 3-ஆம் தேதி *1741*-இலும், மற்றொன்று *1744*-ஆம் ஆண்டிலும் பொறிக்கப் பட்டதாகும். இவை முறையே பிரதாப சிம்மர், இரண்டாம் ஏகோஜி காலத்தில் பொறிக்கப் பட்டவையாகும்.

12. மருத்துவமனையில் கண்நோய் பற்றிய குறிப்பு

கண்நோய் மற்றும் மருத்துவம் தொடர்பான பதிவுகள் இரண்டாம் சரபோஜி மன்னரால் நடத்தப்பட்ட மருத்துவமனையில் பதிவு செய்து பாதுகாக்கப்பட்டன. இவற்றில் கண்நோயினைப் பற்றியும் அதனைக் குணப்படுத்தும் முறை பற்றியும் விரிவான பதிவுகள் உள்ளன. இதில் கண்களைப் பற்றிய விரிவான படமும் கண்ணில் தோன்றும் நோய்களைப் பற்றியும் இயற்கையான வண்ணங்களில் வரையப் பட்டுள்ளன. நோயாளியின் பெயர் மற்றும் அனைத்து மருத்துவக் குறிப்புக்களும் மருத்துவ அதிகாரியின் கையொப்பத்துடன் அழகாக விளக்கப்படமாகக் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

12. மராட்டி காகிதச் சுவடிகள்

பெரும்பாலான மராட்டி காகிதச் சுவடிகளின் முதல் ஏட்டில் அந்தச் சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய நிகழ்ச்சி பற்றியோ அல்லது கடவுளைப் பற்றியோ அழகிய தஞ்சைபாணியிலான வண்ண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவற்றில் இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றின் வண்ணப் படங்களில் மிகவும் அழகாக உள்ளவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இக்காட்சியில் இராமதாசர் சிவாஜிக்குச் செய்த வேதாந்த உபதேசம், அரண்மனைப் பண்டிதர் இயற்றிய 'இராமிர்த தரங்க விவேகசிந்து', 'வேதாந்த சூரியா', 'சித்த சங்கேதா' போன்றவையும் உள்ளன. தேசிய ஒருமைப்பாட்டிற்கு உதாரணமாக அக்பர் ஹுசைன் என்பவரால் பகவத்கீதைக்கு மராட்டி மொழியில் எழுதப்பட்ட உரையும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது.

நூலக வளர்ச்சிப் பணிகள்

இந்நூலகத்திலுள்ள சுவடிகளை அனைத்துவகை ஆய்வாளர்களும் அறியும் படியாகவும், அவற்றினைப் பயன்படுத்துவதற்கு ஏற்றபடியும் பலவகைப் பயிற்சி வகுப்புக்களும், கருத்தரங்குகளும் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப் படுகின்றன. அவ்வகையில் *2000-2001* ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப் பணிகள்:

1. தேசிய இயக்கம் (National Mission)

இந்திய அரசின் சுவடிகளைப் பாதுகாக்கும் திட்டத்தின்கீழ் இந்நூலகம் தமிழ்ச்சுவடி பற்றிய விவரங்களைச் சேர்க்கும் பணியின் முதற்கட்டமாக நிறுவனங்கள், மடங்கள், தனியார் என்று *120* பேருக்குக் கேள்வித்தாள்கள் (Questionnaires) அனுப்பப்பட்டு *30* பேரிடமிருந்து பதில் பெறப்பட்டுள்ளன.

2. பயிற்சி (Training)

இந்நூலகத்தில் கீழ்க்கண்டவற்றுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

1. *15.5.2000* முதல் *13.6.2000* வரை *30* நாள்களுக்குக் கிரந்த எழுத்துச் சுவடிப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டன.
2. *20.5.2000* முதல் *21.5.2000* முடிய இரு நாள்களுக்கு நூல்கள்/ சுவடிகள் பாதுகாப்புப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது.

3. 13.6.2000 முதல் 3.7.2000 முடிய 21 நாள்களுக்குத் தெலுங்கு மொழிப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது.
4. 4.6.2000 முதல் 24.7.2000 முடிய மூன்று வாரகாலத் தமிழ்ச் சுவடியியல் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது.
5. 24.8.2000 முதல் 23.9.2000 முடிய ஒருமாத காலத்திற்கு மராட்டிமொழிப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது.
6. 3.9.2000 முதல் 24.9.2000 வரை மூன்றுவார காலத் தமிழ்ச் சுவடிகள் பதிப்பித்தல் தொடர்பான பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது.
7. இந்நூலக அச்சகத்தின் அச்சுக்கோர்ப்போர் ஐந்துபேருக்கு D.T.P. பயிற்சி அளிக்கப்பட்டது.

3. சுவடிகள் பாதுகாப்பு

லக்னோ INTACH நிறுவனத்தின் இரு நிபுணர்கள் 21.6.2000 முதல் 23.6.2000 வரை இந்நூலகத்திற்கு வருகைபுரிந்து இங்குள்ள சுவடிகளைப் பாதுகாத்தல் மற்றும் செப்பனிடுதல் தொடர்பான அறிக்கையை அளித்துள்ளனர்.

4. நுண்படத்திட்டம் (Microfilm Project)

இத்திட்டத்தின்கீழ் மகாராட்டிரா மாநில அரசு, இங்குள்ள மோடி ஆவணங்களை நுண்படமாக எடுத்துக்கொண்டு அதன் நெகட்டிவ் பிலிமை இந்நூலகத்திற்கு அளிக்கும் திட்டம் செயல்படத் தொடங்கியுள்ளது.

5. இலக்கியச் சொற்பொழிவு

பொதுமக்களிடம் இலக்கிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு மாதமும் ஒரு சிறந்த இலக்கிய அறிஞரின் சொற்பொழிவு நடத்தப்படுகின்றது.

6. பதிப்புத் தேர்வுக்குழு

இந்நூலகச் சுவடிகளைத் தேர்வுசெய்து அச்சுநூல்களாகக் கொண்டுவர, தமிழக அரசு 15 உறுப்பினர்களைக் கொண்ட குழுவினை அமைத்தது. இக்குழு 6.11.2000 இல் இந்நூலகத்தில் கூடி, பதினான்கு நூல்களை மறுபதிப்பாகவும் பதினோரு நூல்களைப் புதியதாகவும் தேர்வுசெய்து அவை அச்சிடப்பட்டன.

7. காட்சிப்படுத்தல்

சிறப்புக்காட்சியாக இந்நூலகத்தில் உள்ள அரிய சுவடிகள், நூல்கள் 25.9.2000 முதல் 3.11.2000 வரை பொதுமக்களின் பார்வைக்காகக் காட்சிப் படுத்தப்பட்டன.

புதிய திட்டம்

இந்நூலகத்தினைப் பற்றி உலகெங்கும் உள்ள மக்கள் அறியும் வண்ணம் இதற்கென்று தனியாக ஒரு வெப்சைட் (Website) உருவாக்கப்படவுள்ளது. இப்பணியினைப் பெங்களூரில் உள்ள C.DAC நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

மன்னர் இரண்டாம் சரபோஜியைப் போலவே இரண்டாம் சிவாஜியும் பழைய ஏடுகளையும் நூல்களையும் காப்பாற்றுவதில் மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளார். இவர் காலத்திலும் பல நூல்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. நூலக விரிவாக்கப் பணிகள் பல குறிப்பிடத்தக்கன. நூல்களைப் புதுப்பித்தல், பாதுகாத்தல், நூல் வழங்குதல் போன்ற செயல்பாடுகள் மராட்டியர்களின் நூலக ஆர்வத்தினை வெகுவாகப் புலப்படுத்துகின்றன. நூலகர் மற்றும் நூலகப் பணியாளர்களின் பொறுப்புள்ள பணித்திறன் மன்னர்களால் போற்றப்பட்டதையும் காண்கிறோம். அக்கால முறைப்படி, நீதி மன்றங்களின் செயல்பாட்டிற்கும், தீர்ப்புகள் பல வழங்குவதற்கும் இந்நூலகத்திலிருந்த நூல்கள் பயன்பட்ட நிலைகளையும் அறிகிறோம். மராட்டிய மன்னர்களின் தனிப்பட்ட சொத்தாக விளங்கிய இந்நூலகம் பொதுநூலகமாக மாற்றம் பெற்ற வரலாறு மிகவும் குறிப்பிடத்தக்கது. ஆங்கிலேயரின் அட்டவணைப்பணி, கம்பெனியார்கள் காலத்தின் அட்டவணைப் பணி, பின்வந்த சுவடிவிளக்க அட்டவணைப்பணி போன்றவை இந்நூலகத்தின் அருமை, பெருமைகளை விளக்குவனவாக உள்ளன. பல்வேறு காலங்களில் தொகுக்கப்பட்ட இந்நூலகத்திலுள்ள பல்வேறு நூல் தொகுப்புகள் மிக அரியன. இங்குள்ள மோடி ஆவணங்கள் வேறு எங்குமே கிடைக்காதனவாம். இத்தகைய அரிய அறிவுக் கருவூலத்தை இன்றைய நவீன நிலையில் சிறப்பாகப் பாதுகாத்து வரும் நிர்வாக அமைப்பு, அரிய சுவடிகளை அச்சில் பதிப்பித்து வெளியிட்டு வருவதும் குறிப்பிடத்தக்க பணியாகும்.

மேற்கோள் சான்றுகள்

1. Rajaram Rajah Sahib Chattrapathy, 'Educational Activities of H.H. Rajah Serfoji Chattrapathy of Tanjore', The Rajah Serfoji College Magazine, p. Nil.

2. *ச.ம.மோ.த., 10-5.*

3. *ச.ம.மோ.த. 4-28.*

4. க.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 245.
5. சுவடி எண் D 499.
6. ஆ.கிருஷ்ணசாமி மாட்டிக்ராவ், சரபேந்திர வைத்திய ரத்னாவளி, பக். xxix.
7. சுவடி எண் D 636, 637.
8. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 253.
9. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 253.
10. த.ம.ம.மோ.ஆ.த.கு. தொகுதி I, பக். 213.
11. ச.ம.மோ.த. 5-3.
12. மேலது, 4-24.
13. மேலது, 11-35.
14. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 467; த.ப.க.மோ. த. 1-313.
15. ச.ம.மோ. த. 2-41.
16. மேலது, 5-30.
17. மேலது, 13-19.
18. த.ம.ம.மோ.ஆ.த.கு. தொகுதி 1, பக். 92.
19. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 251.
20. P.Perumal, 'A Note on the Catalogue of The Tanjore Sarasvati Mahal Library', JTMSSML, Vol. 39 No. 1, p. 53.
21. ச.ம.மோ.த., 1-307.
22. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி I, பக். 567.
23. த.ப.க.மோ.த., 12-133.
24. மேலது, 12-132.
25. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 245.
26. ச.ம.மோ.த., 23-38; கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 254.

27. R.Jayaraman, Sarasvati Mahal : A Short History and Guide, p. 86.
28. R. Jayaraman, Sarasvati Mahal : A Short History and Guide, p. 88.
29. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி II, பக். 374-375.
30. மேலது, பக். 373.
31. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி II, பக். 375.
32. மேலது, பக். 372.
33. T.Padmanaban, Library and Library Services in Thanjavur District upto Independence, p. 154.
34. த.ம.மமோ.ஆ.த.கு., தொகுதி II, பக். 377.
35. மேலது, பக். 375.
36. மேலது, பக். 372.
37. N.Subramaniam, History of Tamil Nadu, p. 242.
38. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 167.
39. புலவர் சொக்கலிங்கம் பேட்டி.
40. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி I, பக். 86.
41. P.P.S. Sastri, A Descriptive Catalogue of Sanskrit Manuscripts in the T.M.S.S.M. Library, Vol. XIX, p. IV.
42. Government of Madras, G.O.Ms. No. 71 Home Department dated 16 March 1871.
43. P.P.S. Sastri, 'The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library Tanjore', Third Oriental Conference, p. 3.
44. வழக்கு எண் O.S. 25/1912.
45. கூட்டு ஒப்பந்தம் I, I of O.S. 26 of 25.3.1918; "A Compromise degree was passed in pursuarance of the application field by them on 25.3.1918 with reference to this particular item of property (i.e.) the library" - R.Jayaraman, Sarasvathi Mahal : A Short History and Guide, p. 90.
46. G.O.1306 of Government of Madras, Home (Education), dated 5th October 1918.
47. "The attention of the Government of India and through it of the Government of Madras was directed in 1868 to the importance of the examination, purchase of transcription of Sanskrit manuscripts in Indian Libraries and the framing of printed list of catalogue of

the same". - G.O.Ms. No. 71 dated 16th March 1871; P.P.Sastri, 'T.M.S.S.M. Library, Thanjavur', Third Oriental Conference, p. 1.

48. P.P.S.Sastri, Descriptive Catalogue of Sanskrit Manuscrippts in the TMSSML, Vol. 19, p. IV.

49. "Between 1880 and 1918 for very nearly forty years, the Library has been the victim of many an outrage. Those who were in possession gave out an loan very many manuscripts which were never returned. And many more somehow or other, found themselves into Libraries other than at Tanjore. Dr.Burnell's catalogue is very useful to us to trace out lost manuscripts, which are never likely to come back to us. Our losses are probably far more : for even Dr.Burnell's admirable catalogue was by no means a complete catalogue of all that existed. For, where he mentions a single work in a bundle, we are able to-day to trace two or more works in the same bundle". -P.P.S. Sastri, Descriptive Catalogue of Sanskrit Manuscripts in the TMSSML., Vol. I, p. IV.

50. G.O.Ms. No. Mis. 563 dated 9th April 1927.

51. P.P.S. Sastri, 'The Tanjore Maharaja Serfoji's Saraswati Mahal Library, Tanjore', JTMSSML, Vol. I, No. 1 p. 7.

52. G.O.Ms. No. 209 (EST) dated 1.2.1983.

53. சுவடி எண் D *6298.*

54. சுவடி எண் *1584* D.f.f. 292.

55. சுவடி எண் B. *9595.*

56. A.C.Burnell, South Indian Palaeography, p. 41.

57. சுவடி எண் D *11678.*

58. சுவடி எண் D *10200.*

59. டி.ஆர்.பீமாராவ், 'சரபோசி மன்னரும் மராத்தி இலக்கியமும்', மாமன்னர் சரபோசி ஆய்வுக்கோவை தொகுதி-2, பக். 115-16.

60. ம. சீராளன், 'தஞ்சை சரசுவதிமகாலின் ரிக்வேதப் பிரிவிலுள்ள காகிதச் சுவடிகளின் படத்தொகுப்புக் கதை', JTMSSML., Vol. 29, No. 1-3, p. 20.

61. சுவடி எண் D *135*/B 2345-a.

62. சுவடி எண் D *138*/B 2345-b.

63. சுவடி எண் D *141*/B 2345-c.

64. சுவடி எண் D *144*/B 2345-d.
65. சுவடி எண் D *147*/B 2345-e.
66. சுவடி எண் D *150*/B 2345-f.
67. TMSSM Library Committee Annual Report 31.3.1927.
68. என்.ஸ்ரீனிவாஸன், ஸரஸ்வதிமகால் நூலகத்தின் ஸம்ஸ்க்ருதச் சுவடித் தொகுதிகளின் வரலாறு, JTMGSMI., Vol. 40, No. 3, 4, p. 37.
69. E.Hultzsch (Ed.), Report on Sanskrit Manuscripts of South India, vol. III, p. 2.
70. எஸ்.ஸ்ரீனிவாஸன், 'ஸரஸ்வதிமஹால் நூலகத்தின் ஸம்ஸ்க்ருதச் சுவடித் தொகுதிகளின் வரலாறு', JTMSSML, Vol. 40, No. 3, 4, p. 38, 39.
71. N. Srinivasan, A Catalogue of Sanskrit Manuscripts of Jainism in Saraswathi Mahal Library, p. 12.
72. சுவடி எண் D *8239-8243*.
73. தகவல்: சரசுவதிமகால் தெலுங்குமொழிப் பண்டிதருடன் ஆய்வு குறித்து அளவளாவிய போது கிடைத்த தகவல்.
74. சுவடி எண் *145*.
75. Descriptive Catalogue of Tamil Manuscripts in TMSSML, Vol. I, p. 123.
76. தொல்காப்பியம், பொருளதிகாரம், *69*.
77. ம.சீராளன், 'சரசுவதிமகால் நூலகத்திலுள்ள சோதிட நூல்கள்-ஒரு கண்ணோட்டம்', JTMSSML, Vol. 34, pp. 1-9.
78. சுவடி எண் D. *1527*/ஆ *802*க.
79. சுவடி எண் D.*1456*/ஆ *890*.
80. சுவடி எண் D. *1458*/ஆ *720*.
81. சுவடி எண் D.D. *1511*/ஆ *808*-d.
82. சுவடி எண் D.*1024*/ஆ *666*.
83. த.ம.ம.மோ.ஆ.த.கு. தொகுதி *3*, பக். III.
84. R.Vivekanandagopal, Modi Documents in Tamil Nadu, p. 246.
85. இராக. விவேகானந்தகோபால், 'மோடி ஆவணம்-ஓர் அறிமுகம்', JTMSSML, Vol. III, No. 1.2, p. 3.
86. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி-*3*, ப. iv.

87. Elizabeth Strandberg, The Modi Documents of Tanjavur in Danish Collections, West Germany, 1983.

88. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி III, பக். 285.

89. மேலது, பக். 286.

90. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி III, பக். 286.

91. மேலது, பக். 287.

92. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி III, பக். 287.

93. மேலது, பக். 290.

94. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி III, பக். 330, 331.

95. மேலது, பக். 381-386.

96. மேலது, பக். 374-381.

97. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி III, பக். 387-391.

98. மேலது, பக். 391-406.

99. த.ம.ம.மோ.ஆ.த.கு., தொகுதி III, பக். 415-416.

100. இராக. விவேகானந்தகோபால், 'மோடி ஆவணம் - ஓர் அறிமுகம்', JTMSSML Vol. XLIII, No. 1 & 2, 1995, ப. 4.

101. R.S.Shelvankar, A Report on the Modi Manuscripts in the Sarasvati Mahal Library, 1930.

102. அ. பஞ்சநாதன், சரசுவதிமகால் வழிகாட்டி நூல், ப. 13.

முடிவுரை

இந்தியாவின் பழமை வாய்ந்த நகரங்களில் ஒன்றான தஞ்சை தென்னகத்தின் மிகச்சிறந்த கலைக்கும் பண்பாட்டிற்கும் இலக்கியத்திற்கும் பல நூற்றாண்டுகளாகப் பெரும்புகழ் பெற்று விளங்கிவரும் நகரமாகும். இச்சிறப்பிற்கு இந்நகரம் அமைந்துள்ள நில அமைப்பும் ஒரு காரணமாகும். தஞ்சை வளநாடு வடக்கு அட்சரேகை 9 முதல் 12 வரையிலான டிகிரி இடத்தில் அமைகின்றது. நைல் வடிகால், கங்கை வடிகால் நிலப்பகுதி போலக் காவிரி டெல்டா பகுதி பற்றி அறிவதும் தேவையாகின்றது. இப்பகுதி சம நிலமாகவும் களிமண் கலந்ததாகவும் உள்ளது. நெல், வாழை, தென்னை என இவை நிறைந்து காணப்பெறுகின்றன. இயற்கையான அமைதிச் சூழலின் காரணமாகக் கல்வி, பக்தி, கலைகளுக்குரிய சிறந்த நிலப்பகுதியாக அமைந்துள்ளது. மேலும், இப்பகுதியை ஆண்ட சோழ, நாயக்க, மராட்டிய மன்னர்களும் இவற்றிற்கு வளம் சேர்த்தனர். சோழர்கள் படைத்த கோயில்களும், சிற்பங்களும் ஓவியங்களும் தனிப்புகழுக்குரியனவாயினும், அவர்கள் காலத்திய நூலாக்கப் பணிகளும் நூல் பாதுகாப்புப் பணிகளும் வரலாற்றுப் புகழ் வாய்ந்தன. அடுத்துவந்த நாயக்கர்கள் இலக்கியம், நாடகம், இசைக் கலைகளை வளர்த்தும் பரப்பியும் வந்தனர். மராட்டிய மன்னர்கள் தம் முன்னோரின் கலைச் செல்வங்களைப் பாதுகாப்பதில் மிகுந்த கவனம் செலுத்தினர். மராட்டிய மன்னர்கள் நல்ல அறிஞர்களாகவும், பன்மொழிப் புலவர்களாகவும், சிறந்த எழுத்தாளர்களாகவும் இருந்ததுடன் நூலகப்பணிகளில் அளவில்லா ஈடுபாடு கொண்டவர்களாகவும் திகழ்ந்தனர். இதன் காரணமாகத் தஞ்சை சரசுவதிமகால் நூலகம் உலகின் அறிவுநூற்களஞ்சிய மையங்களில் ஒன்றாகவும், மிகப்பெரிய சுவடி ஆய்வு நூலகமாகவும் திகழ்கிறது.

1.1 நூல் மற்றும் நூலகம் பற்றிய தன்மைகளையும் வரலாறுகளையும் அறியும் முன்பு, நூலின் தோற்றத்திற்கு அடிப்படையான சுவடிகளின் தோற்றமும் வளர்ச்சியும்

நூலகங்களின் தோற்றமும் வளர்ச்சியும் உலக அளவிலும், இந்திய அளவிலும் மற்றும் தமிழக அளவிலும் ஆராய்ந்து அறியப்பெறல் வேண்டும். ஏனெனில் தொன்னூலகங்கள் பலவற்றில் கையெழுத்துச் சுவடிகளே மிகுதி. அவை அரிய பழமையான ஆதாரங்களாக உள்ளன. அவற்றை இனங்காண்பது வரலாற்று ஆய்வுக்கு இன்றியமையாததாகும்.

1.2 இவ்வகையில், நூல் மற்றும் நூலகம் பற்றிய எண்ணங்களில் தமிழகம் உலகின் முன்னோடியாக விளங்குவதை இப்பகுதியில் கூறப்பெறும் சான்றுகளால் உறுதி செய்யலாம். பல்வேறு எழுதப்படும் பொருள்களில் தமிழகத்தில் ஓலைச்சுவடிகளே பெரும்பான்மை என்பதும் தெளிவாகிறது.

1.3 உலக நூலக இயக்கம் பற்றியும், இந்திய நூலக இயக்கம் பற்றியும் தெளிவாக அறியும் நிலையில், தனிப்பட்ட தொன்னூலகங்களின் சிறப்பும் பண்பு நிலைகளையும் தெளிவாக அறிய இயலும் என்னும் நோக்கில் இவ்வியலில் இவை ஆராயப் பெற்றன.

1.4 சங்க காலம் முதலாகப் பல்வேறு சமய காலங்களிலும் நூலக அமைப்புகளைப் பற்றி நிறைய சான்றுகள் கிடைக்கின்றன. கோயில்களும், திருமடங்களும், சிறந்த வழிபாட்டுத் தலங்களும் சிறப்பான நூலகங்களின் இருப்பிடங்களாக அமைந்திருந்தன என்பதையும், சாதி, மத, இன, சமய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு இது ஒரு தொடர் நிகழ்ச்சியாக நடைபெற்றது என்பதையும் வரலாறு காட்டுகின்றது.

1.5 ஆங்கிலேயரின் வருகைக்குப் பின் இந்தியாவில் எழுந்த பொது நூலக இயக்கங்களால் நம் நாட்டு ஆய்வாளர்கள் பெற்ற பயன்கள் மிகுதி என்பதும், பிறநாட்டு ஆய்வாளர்களுக்கு நம் இந்திய நூலகங்கள் சிறந்த அறிவுக் கருவூலங்களாக வெளிப்பட்டன என்பதும் இம்முதல் இயலில் காணும் செய்திகளால் அறியலாகின்றன.

2.1 'கல்விக் கடவுளான கலைமகளின் உறைவிடம்' அல்லது 'சுவடிகளின் கருவூலம்' என்ற பொருளில், பழங்கால நூலகங்கள் 'சரசுவதி பண்டாரகம்' என அழைக்கப்பெற்றன. கி.பி. 10-ஆம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே இத்தகைய சரசுவதி பண்டாரகங்கள் தமிழகத் திருக்கோயில்களைச் சார்ந்து விளங்கின என்பதை வரலாற்று அறிஞர்கள் நிறுவியுள்ளனர்.

2.2 தஞ்சை மாவட்டத்திலுள்ள மிகப் பழமையான திருமடமான திருவாவடுதுறை ஆதீனத்திலுள்ள நூலகம் 'சரசுவதிமகால்' என்ற பெயரிலேயே இன்றும் வழங்கப்பெற்று வருகிறது.

2.3 காகிதமும் அச்செழுத்தும் தோன்றாத காலத்திற்கு முன்பிருந்த ஓலைச் சுவடிகளைக்கொண்ட நூலகம் தொன்னூலகம் எனப்பெறும். காகிதம் வந்த பின்னர் ஓலைகள் காகிதத்திலும் படியெடுக்கப்பெற்றன. இவ்வாறு கைப்பிரதிகள் பல கொண்ட தொன்னூலகமாகத் தஞ்சை சரசுவதிமகால் நூலகம் விளங்குகின்றது.

2.4 உலகின் பழமை வாய்ந்த நூலகங்களில் முதலாவதான வாடிகன் நூலகத்திற்கு அடுத்த இடத்தை இந்நூலகம் பெற்றுள்ளது என்பதையும், இந்திய நாட்டில் மிகத் தொன்மையான நூலகம் இதுவே என்பதையும், சோழர்கால நூல்களுடன் நாயக்கர்கள் காலத்தில் நிலைபெற்ற இந்நூலகம் மராட்டியர்கள் காலத்தில் உலகப்புகழ் பெற்றது என்பதையும் அறியமுடிகின்றது.

2.5 கல்வி வளர்ச்சிக்கும், கலை, பண்பாட்டு ஒற்றுமைக்கும் உரிய சிறப்பான படைப்புக்கள் பலவற்றை ஆயிரம் ஆண்டுக்கால எல்லையில் தொடர்ந்து உருவாக்கிப் பாதுகாத்து வந்துள்ள தனிப்பெருமையைப் பெற்றுள்ள தொன்னூலகம் இந்நூலகம் ஒன்றேயாகும்.

2.6 இரண்டாம் சரபோஜி மன்னர் தஞ்சை நூலக வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டதன் காரணமாகப் பிற்காலத்தில், 'தஞ்சை மகாராசா சரபோசி சரசுவதிமகால் நூலகம்' என்று பெயரிடப் பெற்றுள்ளது. 'மகால்' என்று அழைக்கும் வழக்கம் மராட்டிய மன்னர்களின் காலத்தில்தான் ஏற்பட்டதெனத் தெரிகின்றது.

2.7 சோழர்காலத் தொகுப்புகள் பல இந்நூலகத்தில் சேர்க்கப் பெற்றதையும், தஞ்சையில் ஆதித்தசோழன் காலத்திய மீமாம்சா நூல்களின் தொகுப்பு இந்நூலகத்தில் இடம்பெற்றிருந்தன என்பதையும் அறியமுடிகின்றது. பராந்தகச் சோழன் ஆட்சிக் காலத்தில் சரசுவதி நூலகத்தில் பல நூல்கள் சேர்க்கப்பட்டன எனத் தெரிகின்றது. இராஜராஜன் காலத்தில் இசை, நாடக நூல்கள் பல இங்கே சேர்க்கப்பட்டன.

2.8 கி.பி. 985-1014 வரை ஆட்சிபுரிந்த இராஜராஜன் கட்டிய பெரிய கோயில் நிர்வாகம் மகுடாகமம் என்ற ஆகம நூலின்படி நடைபெற்றதாக அறிகிறோம். வடமொழி நூலான இம்மகுடாகமம்

அக்காலத்திய முறைப்படி கிரந்த எழுத்தில் எழுதப்பட்டது. டாக்டர் ஏ.சி.பர்னல் தொகுத்த அட்டவணையின் படி மிகப் பழமையான இச்சுவடி இந்நூலகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது இவண் குறிக்கத்தக்கது. கிரந்த எழுத்திலான இப்பழைய ஓலைச்சுவடி இராஜராஜன் காலத்திலேயே எழுதப்பட்டு அரண்மனை நூலகத்தில் பாதுகாக்கப் பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

2.9 அடுத்துவந்த முதலாம் இராஜேந்திரன் காலத்திய தமிழ், வடமொழி நூல்கள் பலவும் இங்குள்ளன. இம்மன்னன் காலத்தில் கல்வெட்டுக்களைப் புதுப்பித்தல், படியெடுத்தல், அவற்றைப் பனையோலைகளில் எழுதுவித்து மீண்டும் கல்லில் பொறித்தல் போன்ற செயல்கள் செய்யப்பெற்றதையும் அறிகிறோம்.

2.10 இவ்வாறே முதலாம் குலோத்துங்கன், விக்ரமசோழன், இரண்டாம் இராஜராஜன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன் போன்ற பிற சோழ மன்னர்கள் காலத்திலும் பல புலவர்களால் நூல்கள் பல யாக்கப்பெற்று, சரசுவதி நூலகத்தில் பாதுகாக்கப்பெற்றுள்ளன. இவை கிரந்த எழுத்தில் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

2.11 பாண்டியர் படையெடுப்பிற்குப் பின்னர், சோழர் அரண்மனைகள் அழிக்கப்பட்டன. எனினும், அவர்கள் திருக்கோயில்களை அழிக்கவில்லை. எனவே, கோயில்களைச் சார்ந்த நூலகங்கள் காப்பாற்றப்பட்டிருக்க வேண்டும் என்றே கருத வேண்டியுள்ளது. அடுத்துவந்த அந்நியர் தாக்குதல்களால் இத்தகைய நூலகங்கள் இடம் மாற்றப்பட்டுப் பாதுகாக்கப் பட்டிருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது.

2.12 மேலும், சோழர் மரபில் ஒரு கிளையினர் ஆந்திராவுடன் தொடர்பு கொண்டிருந்ததால் அவர்கள் தெலுங்குச் சோழர்கள் என்றும் அழைக்கப் பட்டனர். அவர்கள் நுண்கலைகளிலும் இலக்கியங்களிலும் மிகுந்த ஆர்வங் கொண்டவர்கள். இத்தகைய பழைய நூல்கள் பின்னால் தெலுங்கு நாயக்கர்கள் மூலமாக இந்நூலகத்தில் வந்து சேர்ந்திருக்க வேண்டும் என்றும் கருதப் பெறுகின்றது.

2.13 இந்நூலகத்திலுள்ள சமஸ்கிருதச் சுவடிகள் பல கிரந்த எழுத்திலும், தெலுங்கு எழுத்திலும் எழுதப்பட்டிருப்பதும் இதற்குச் சான்றாகும்.

2.14 தஞ்சையில் நாயக்கர்கள் ஆட்சிக்காலத்தில் சரசுவதி நூலகத்திற்குப் பலதரப்பட்ட நூல்கள் வந்து சேர்ந்துள்ளன. சேவப்ப நாயக்கர் காலத்தில் (1532-1561) ராஜகுரு கோவிந்த தீட்சதர் வடமொழி, தெலுங்கு, தமிழ் ஆகியவற்றில் உள்ள சிறந்த இலக்கியக் கருவூலங்களைச் சரசுவதி நூலகத்தில் தொகுக்கவும் பாதுகாக்கவும் பெருமுயற்சி மேற்கொண்டார் என்பதை அறிகின்றோம்.

2.15 இவ்வாறே, அச்சுதப்ப நாயக்கர், இரகுநாத நாயக்கர், விஜயராகவ நாயக்கர் போன்ற நாயக்க மன்னர் காலங்களில் ஏராளமான நூல்கள் எழுதப்பெற்றும், படியெடுக்கப்பெற்றும், இந்நூலகத்தில் பாதுகாக்கப் பெற்றன என்பதும் தெளிவாகின்றது.

2.16 தஞ்சை நாயக்க மன்னர்களால் நாடக சாலை எனப்பட்ட இடமே (அரங்கே) மராட்டியர்கள் காலத்தில் சங்கீதமகால் என வழங்கப் பெற்றது. இங்கு நடைபெற்ற பல இசை, நாட்டிய மற்றும் நாடக நிகழ்ச்சிகளுக்கான அடிப்படை நூல்கள் - சுவடிகள் பலவும் சரசுவதி மகால் நூலகத்திலிருந்தே பெறப்பட்டன எனவும் அறியமுடிகின்றது.

2.17 தஞ்சை அரண்மனை வளாகத்தில் இந்நூலகம் நாயக்கர் கால விஜயவிலாசம் என்ற கட்டடத்தின் பெரும்பகுதியிலும் இந்திர மந்திரத்தின் ஒரு பகுதியிலும் தொடர்ந்து திகழ்ந்து வருகிறது என்பதும் தெளிவாகின்றது. அரண்மனை வரைபட ஓவியங்களும் இதற்குச் சான்றாகின்றன.

3.1 மராட்டிய போசள வம்ச மரபினரின் ஆட்சி தஞ்சையில் ஏற்பட்டதிலிருந்து நூலகப் பணிகள் சிறப்புற்றமை குறிக்கத் தக்கதாகும்.

3.2 முதலாம் ஏகோஜி (1676-1682) மன்னர் காலம் முதல் தமிழகத்தில் தமிழ், வடமொழி, தெலுங்கு மொழிகளுடன் மராட்டியும் வளம்பெறத் தொடங்கியது. இம்மன்னரும் இந்நான்கு மொழிகளிலும் புலமை பெற்றிருந்ததால் இவர் காலத்தில் நூலகப்பணிகள் பல மேம்பட்டிருந்ததை அறியமுடிகிறது.

3.3 நாயக்க மன்னர்கள் கட்டிக்காத்த சரசுவதிநூலகம் என்ற அரண்மனை நூலகம் மராட்டிய மன்னர் ஏகோஜி காலத்திலும் சிறப்புற்றது. இவர் காலத்தில் ஓலைச்சுவடிகள் பல படியெடுக்கப் பட்டதையும், காகிதச்சுவடிகள் ஆயிரக்கணக்கில் உருவாக்கப்

பட்டதையும் அறிகிறோம்.

3.4 ஏகோஜியின் அமைச்சரான ரகுநாத பண்டிதர் எழுதிய நள சரித்திரம் என்ற மராட்டி மொழிச் சுவடி இந்நூலகத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது. பகவத் கீதைக்கு வியாக்கியான நூலான 'ஞானேச்வரி' மற்றும் 'அம்பர்ஹீசைனி' போன்ற மராட்டி மொழிச் சுவடிகள் இங்குள்ளமையும் குறிக்கத்தக்கது.

3.5 அக்காலத்தில் தெலுங்கு எழுத்தின் தாக்கம் இருந்தமை புலனாகின்றது. நாயக்கர் காலத்தில் தமிழ்நாட்டுக்குரிய கிரந்த எழுத்தில் பிற மொழி நூல்கள் எழுதப்பட்டன என்பதும், வடமொழி நூல்களின் நகல்கள் தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டன என்பதும், மராட்டியர்கள் காலத்தில் கையினால் செய்த காகிதத்தின் வரவால் நாகரி எழுத்தில் பிறமொழிச் சுவடிகள் படியெடுக்கப்பட்டன என்பதும் அரிய செய்திகளாகும்.

3.6 தெலுங்குமொழி மட்டுமேயல்லாமல் பிறமொழி நூல்களையும் தெலுங்கு எழுத்தில் ஓலைச்சுவடிகளில் எழுதி உருவாக்கியவரும் மராட்டிய மன்னர்களே ஆவர்.

3.7 மராட்டிய இசை நாடகங்கள் பெரும்பாலானவை தெலுங்கு எழுத்தில் படியெடுக்கப்பட்டுள்ளன. தெலுங்கு மொழி நாடகங்கள் தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்டுக் காகிதச் சுவடிகளாக இங்குள்ளன.

3.8 பன்மொழி வித்தகரான இரண்டாம் சகஜி மன்னர் *(1684-1712)* தமிழ் மரபில் நின்று பெரும்புலவராகத் திகழ்ந்தவர் இசைப் பாடல்கள் இயற்றுவதில் சற்குரு தியாகராஜருக்கு ஒப்பானவர். இவருடைய அவைக்களம் ஒரு பல்கலைக்கழகம் போலிருந்து நூலாக்கப் பணியிலும் நூல் தொகுப்புப் பணியிலும் சிறப்புற்றிருந்தது என அறிகிறோம். ஆன்மீக ஈடுபாட்டின் காரணமாக எழுந்த பல மராட்டிய பக்தி நூல்கள் இவர் காலத்தில் எழுதப்பட்டு இந்நூலகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

3.9 சகஜி மன்னரின் நூற்றுக்கணக்கான இசைப்பாடல்கள், சிற்றிலக்கியங்கள், நாடகங்கள் பல இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. இவரும் பழமையான புராண இதிகாசச் சுவடிகளை எழுத்தர்களைக் கொண்டு படியெடுக்கச் செய்து, இந்நூலகத்தில் சேர்த்தமை புலனாகின்றது.

3.10 இம்மன்னரால் போற்றப்பெற்ற புலவர்கள் பலர் இயற்றிய நூல்களும் இந்நூலகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றால் பல வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கக்கூடும்.

3.11 இரண்டாம் சகஜிக்குப் பிறகு கி.பி. 1712 இல் ஆட்சிக்கு வந்த அவருடைய சகோதரர் முதலாம் சரபோஜியின் பெயர் விளக்கம் அறியத்தக்கது. போரில் எதிர்க்கவரும் எதிரிகள் விட்டில் பூச்சிகளைப் போல் தானே அழிந்துபோகும் அளவில் சிறந்த பொலிவைப் பெற்றிருந்ததால் இவருக்கு இப்பெயர் ஏற்பட்டது என்பது குறிக்கத்தக்கது.

3.12 அபிராமி அந்தாதி இயற்றிய அபிராமி பட்டர் வாழ்ந்த காலம் இம்மன்னர் காலம் என்பதும், இவர் காலத்தில் வடமொழி மற்றும் தெலுங்கில் பல நூல்கள் எழுதப்பட்டு நூலகத்தில் சேர்க்கப்பட்டன என்பதும் தெளிவாகின்றன.

3.13 முதலாம் துளஜா என்னும் துக்கோஜி *(1729-1736)* மன்னர் காலத்திய நூலாக்கப் பணிகள் குறிப்பிடத்தக்கனவாக உள்ளன. சிறந்த புலமையும், மருத்துவ அறிவும், இசையார்வமும் கொண்ட இம்மன்னரே பல நூல்களை இயற்றியுள்ளார். இவர் எழுதிய ஒன்பது சுவடிகள் இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

3.14 துக்கோஜியின் மூத்த மகனான பாவாசாகிப் என்ற ஏகோஜி *(1736-1737)* மன்னர் மராட்டி மொழியில் எழுதிய நூல்கள் யாவும் இந்நூலகத்தில் பாதுகாக்கப் பட்டுள்ளன.

3.15 பின்வந்த பிரதாபசிம்மன் *(1739-1763)* மன்னரும் பன்மொழிப் புலமை கொண்டவரானதால் பல நாடக நூல்களை இயற்றியுள்ளார்.

3.16 பிரதாபசிம்மனுடைய மகன் இரண்டாம் துளஜா காலத்தில் *(1763-1787)* பெரும் போர்கள், பொருளாதார நெருக்கடிகள் காரணமாக நூலகப் பணிகள் அவ்வளவு சிறப்பாக நடைபெற்றதாக அறியமுடிய வில்லை.

3.17 இவருடைய காலத்தில் ஏற்பட்ட போரில் சரசுவதி மகாலினைப் பகைவரின் தாக்குதலிலிருந்து நூலகராகப் பணியாற்றிய தாதாராவ் என்பவர் காத்ததாகப் பின்னாளில் ஒரு கதை எழுதப்பட்டுள்ளது. இது மேலும் ஆய்வுக்குரியது.

3.18 அமரசிம்மர் காலத்தில் (1787-1798) குறிப்பிடும்படியான நூலகப் பணிகள் அமையவில்லை. ஆயினும், முந்தைய மராட்டிய மன்னர்கள் சேர்த்து வைத்த நூல்கள் அழியாமல் பாதுகாத்ததும், ஒருசில இலக்கியங்களை உருவாக்கக் காரணமாக இருந்ததும் புலனாகின்றன.

4.1 தஞ்சை மராட்டிய மன்னர்களின் நூலகப்பணிகளில் குறிப்பிடத் தக்க சாதனை புரிந்தவர் இரண்டாம் சரபோஜி (1798-1832) ஆவார். இதனாலேயே இவர் அனைத்துலக மக்களால் பேசப்படும் ஒரு மன்னராகத் திகழ்கிறார்.

4.2 பழமையான சரசுவதி நூலகத்தின் பெயர் இப்பொழுது இம்மன்னரின் பெயருடன் இணைத்தே வழங்கப்பெறுவது குறிப்பிடத் தக்கதாகும்.

4.3 "தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதிமகால் நூலகம்" என்னும் இப்பெயரே மிகவும் சிறப்பான பொருள் பொதிந்ததாகும். முதலில், இந்நூலகம், கல்விக்கடவுளான சரசுவதியின் பெயருடன் அழைக்கப்படுகிறது. இரண்டாவது, இப்பெயர் மகாராஜா சரபோஜியுடன் இணைத்துக் கூறப்படுகிறது. வரலாற்று அடிப்படையில் நோக்கின், ஆங்கிலேயரின் வருகைக்குப்பின் இம்மன்னர் மிகக் குறுகிய காலமே ஆட்சிப்பொறுப்பில் இருந்தார். இருப்பினும் அவர் ஒரு மகாராஜா என்றே இறுதிவரையில் அழைக்கப்பெற்றார். இந்த சரசுவதி மகால் நூலகமே அவருடைய ஆட்சிப் பரப்பாக அமைந்தது; அவருடைய பெயராலும் இந்நூலகம் அழைக்கப் பெறுகிறது. இத்தகைய சிறப்பினாலேயே உலக அதிசயங்கள் ஏழுக்கும் அதிகம் எனின், தஞ்சை சரசுவதிமகால் நூலகம் அதில் ஒன்றாகும் என அறிஞர்கள் கூறுவர். மூன்றாவது, தஞ்சாவூர் என்னும் ஊர்ப்பெயரை இந்நூலகப் பெயருடன் சேர்த்துக் கூறுவது தென்னிந்தியாவின் சிறப்பையும் புகழையும் நிலை நிறுத்துவதாகும்" என்னும் கருத்துக்கள் மிகவும் பொருத்தமாக உள்ளன.

4.4 1799-இல் தஞ்சையின் ஆட்சியுரிமையைக் கிழக்கிந்திய கம்பெனியார் எடுத்துக் கொண்ட பின்னர் சரபோஜி பெயரளவிலேயே மன்னராக நியமிக்கப்பட்டார். மன்னருக்கு அரசின் நிருவாகப் பொறுப்பு இல்லாததால் தாம் பெற்ற ஆங்கில அறிவின் காரணமாகப் பல நூல்களைப் படித்து, மேலைநாட்டு

முறையில் கலைகளை வளர்ப்பதிலும் நூலகத்தைப் போற்றிக் காப்பதிலும் முழுமையான கவனம் செலுத்த முடிந்தது எனத் தெரிகின்றது.

4.5 சுவார்ட்ஸ் பாதிரியாரால் சரபோஜியினுடைய இளமைக் காலம் மேன்மையடைந்தது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

4.6 சரபோஜி காலத்தில் தஞ்சைக்கு வந்த பல மேனாட்டினரின் குறிப்புக்களிலிருந்து இவருடைய கல்விப்பணி, இலக்கியப்பணி, கலைப் பணி, நூலகப்பணி ஆகியவற்றை அறியமுடிகின்றது. லார்டு வாலண்ஷியா, பிஷப் ஹீபர், கேப்டன் சால்மினார், கமாண்டர் ஹசி, கேப்டன் ஜான்பிபியி, ஜான் பிளாக் பர்ன், ஆர்ச்டிகான் ராபின்சன், கோல்ப் போன்ற அயல்நாட்டினரின் கருத்துரைகள் பலவும் இம்மன்னரின் சிறப்புக்களை எடுத்துரைக்கின்றன.

4.7 இவர் காலத்திய நவவித்யா கலாநிதிசாலா என்ற கல்விநிலையம் சரசுவதி பண்டாரத்தில்தான் இருந்தது என்பதையும், இங்கிருந்த அச்சகத்தையும் சரசுவதிபண்டாரகம் வரகப்பையரே கவனித்தார் என்பதையும் மோடி ஆவணக் குறிப்பினால் அறிகிறோம்.

4.8 இம்மன்னர் காலத்திய முக்தாம்பாள் சத்திரத்திலிருந்த பள்ளியில் பயிலும் மாணவர்கள் படிப்பதற்கான சுவடிகள் சரசுவதி பண்டாரத்திலிருந்தே பெறப்பட்டன. இதற்காகவும் பல சுவடிகள் படியெடுத்துப் பாதுகாக்கப் பெற்றன என அறிகிறோம். இவ்வாறு சரபோஜி கல்விநிலையங்களைப் பராமரித்ததோடு, நூலகப் பணியினையும் மேற்கொண்டார் என்பது தெளிவாகின்றது.

4.9 இம்மன்னர் காலத்தில் வடமொழி, ஆங்கிலம், தெலுங்கு, உருது, மராட்டி, தமிழ் ஆகியன ஒன்றாக உறவாடி வளர்ந்தன என்பதால் தஞ்சை தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது எனவும் அறிகிறோம்.

4.10 சரபோஜி பல கல்விக்கழகங்கள், இலக்கியக் கழகங்களில் உறுப்பினராக இருந்ததால் பல ஆங்கில நூல்களைத் தமது நூலகத்தில் சேர்த்துள்ளார்.

4.11 இவருடைய அவைக்களத்திலிருந்த பன்மொழிப் புலவர்கள் மற்றும் பல்துறை அறிஞர்களால் பல நூல்கள் உருவாக்கப்பட்டு இந்நூலகத்தில் சேர்க்கப் பெற்றன.

4.12 முந்தைய மன்னர்கள் காத்த பன்மொழிச் சுவடிகளும் நூல்களும் அழிந்து படாமல் பேணிக்காத்த பெருமையும் சரபோஜிக்கு உரியது.

4.13 இவர் காலத்தில் நடைபெற்ற மருத்துவ ஆராய்ச்சிகள், மருத்துவ நூல்கள் உருவாக்கம், அவை நூலகத்தில் சேர்க்கப்பட்டமை, தன்வந்திரி மகாலில் அவற்றின் பயன்பாடுகள் ஆகியன குறிப்பிடத்தக்கன.

4.14 அரண்மனைப் புரோகிதர் மானப்பட்டரை வட இந்தியாவிற்கு அனுப்பி, அங்கு வாழ்ந்த வடமொழிப் புலவர்கள் இல்லங்களிலிருந்த சுவடிகளைப் படியெடுத்து வந்து இந்நூலகத்தில் சேர்த்துள்ளார் சரபோஜி.

4.15 இம்மன்னரின் காசிப் பயணமும் நூல்கள் சேகரிப்பும் மிக முக்கியமான செய்திகளாக உள்ளன. இவர் நூல்களை வெளியில் எடுத்துச்சென்று பரப்பியது பற்றிய குறிப்புகளும் கிடைக்கின்றன.

4.16 அயல்நாட்டில் வெளியிடப்பட்ட ஆங்கிலம், பிரெஞ்சு, கிரீக், ஜெர்மன், இலத்தீன் போன்ற மொழி நூல்களை சரபோஜி மன்னர் வாங்கி இந்நூலகத்தில் சேர்த்தமை குறிக்கத்தக்கது.

4.17 இத்தகைய நூல்கள் அனைத்தையும் சரபோஜி படித்தமைக்குச் சான்றாக, ஒவ்வொரு நூலிலும் அவரே தம் கைப்படக் குறிப்புக்களை எழுதி வைத்துள்ளார்.

4.18 இவர் தாம் கண்ட காட்சிகளை ஓவியமாக வரையச்செய்து அவற்றை இந்நூலகத்தில் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இவர் ஓவியங்களையும் பிற கலைப்பொருட்களையும் சேகரித்து வைத்து இந்நூலகத்தை ஓர் அருங்காட்சியமாகவும் உருவாக்கியுள்ளார்.

4.19 சரபோஜி மன்னர் காலத்திலிருந்த திப்புசுல்தானும் ஒரு நல்ல நூலகத்தைத் தம் அரண்மனையில் வைத்திருந்தார். ஆங்கிலேயரின் பகையின் காரணமாக அந்நூலகம் அழிக்கப்பட்டு விட்டது. ஆனால், சரபோஜி மன்னர் ஆங்கிலேயருடன் நல்லுறவு கொண்டிருந்ததால் இச்சரசுவதிமகால் நூலகம் அழியாமல் பாதுகாக்கப்பட்டது.

4.20 'உண்மையான மன்னரை இப்போதுதான் கண்டேன்' என்று சரபோஜியைப் பற்றிப் பிஷப் ஹீபர் கூறுவது முற்றிலும்

பொருத்தமாகும். பழமையைக் காப்பதிலும் புதுமையை நேசிப்பதிலும் பெரிதும் ஆர்வம் காட்டிய இவர் தலைசிறந்த நூல் ஆர்வலராகவும் மாமன்னராகவும் திகழ்ந்துள்ளார் என்பது தெளிவாகின்றது.

5.1 இரண்டாம் சரபோஜி மன்னருக்குப் பிறகும் அவர் வழிவந்தவர்களால் இந்நூலகம் சிறப்பான வளர்ச்சி பெற்று வந்துள்ளது. பன்மொழிப் புலமை பெற்ற இரண்டாம் சிவாஜி (1832-1855) காலத்திலும் பல நூலகப் பணிகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

5.2 பல புலவர்களை ஆதரித்த இவர் காலத்திலும் நூல்கள் இயற்றுதல், தொகுத்தல், படியெடுத்தல், அட்டவணை தயாரித்தல் போன்ற நூலக விரிவாக்கப் பணிகள் பல நிகழ்ந்துள்ளன.

5.3 மராட்டிய மன்னர்களின் ஆதரவுபெற்ற மடங்கள் பலவற்றில் நூல் தொகுப்புகள் பல இருந்தன. அவற்றுள் பல இந்த நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாம்.

5.4 1855-க்குப் பின் சரசுவதிமகால் நூலக நிலைமை மிகவும் குறிப்பிடத்தக்கது. தஞ்சையின் ஆட்சியுரிமை முழுவதையும் ஆங்கிலேயர்கள் ஏற்றுக்கொண்ட பின்னர் மன்னர்களின் சொத்துக்களையும் கைப்பற்றிக் கொண்டனர். இதில் சரசுவதிமகால் நூலகமும் சேர்ந்தது. நூலகத்தை இங்கிருந்து அப்புறப்படுத்தவும் முயற்சிகள் நடந்துள்ளன.

5.5 ஆங்கில அரசிடமிருந்து இந்நூலகத்தினைக் காப்பாற்றியதில் இராணி காமாட்சிபாயின் பங்கு பற்றிய வரலாறுகள் குறிப்பிடத்தக்கன.

5.6 பொதுநிலையில், மராட்டிய மன்னர் குடும்பத்தவர்கள் அனைவருமே நூலகப் பணிகளில் ஆர்வங்கொண்டு நூலகத்தைப் பாதுகாத்து வந்ததை இவ்வரலாற்று ஆய்வால் நன்கு அறிகிறோம்.

5.7 பொதுநூலகமாக மாற்றம் பெற்ற பிறகு இந்நூலகம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாகக் கருதப்படுகிறது. இங்குள்ள நூல்கள், சுவடிகள் பாதுகாப்பில் மிகுந்த கவனம் செலுத்தப் படுகின்றது.

5.8 இந்நூலகத்திலுள்ள வரலாற்று ஆவணக்குறிப்புகள், மோடி ஆவணங்கள், காகிதச் சுவடிகள், ஓவியங்கள், அரிய தொகுப்புகள் வேறு எங்கும் கிடைக்காதவை.

5.9 கலை, இசை, நாட்டியம், சிற்பம், ஓவியம், இலக்கியம், மருத்துவம், வரலாறு, புவியியல், கணிதவியல், வானியல், சோதிடவியல், கஜசாஸ்திரம், அசுவ சாஸ்திரம், ஆகமங்கள், தத்துவம், மெய்யியல், வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், பத்ததிகள், தரும சாஸ்திரங்கள், புராணங்கள், தாவரவியல், கனிமவியல், விலங்கியல், கால்நடையியல் எனப் பல்துறை சார்ந்த நூல்கள் பலப்பலவாக இந்நூலகத்தில் பல மொழிகளில் காணப்பெறுவது வேறு எங்கும் காணக்கிடைக்காதவையாகும்.

5.10 நுண்ணிய ஓவியங்கள், மிக நுணுக்கமாக எழுதப்பட்ட சுவடிகள், செப்புப் பட்டயங்கள் போன்றனவும் இந்நூலகத்திலுள்ளமை குறிக்கத் தக்கன.

5.11 அரிய சில நிலவரைபடங்கள் இங்குள்ளன. ஆடம்பிரிட்ஜ் இருப்பதைச் சுட்டிக் காட்டும் ஒரு பழைய வரைபடத்தின் மூலம் கி.பி. 1480 வரை அங்குப் போக்குவரத்து இருந்தது என்பதை அறியமுடிகிறது. இவ்வாறு பல அரிய வரலாற்றுக் குறிப்புக்களை இந்நூலகம் மூலமாக ஆராயலாம்.

5.12 சென்ற நூற்றாண்டிலும், அதற்கு முந்தைய காலங்களிலும் இந்நூலகத்திலிருந்த பல அரிய நூல்கள் மறைந்துவிட்டன என்பது டாக்டர் ஏ.சி.பர்னல் போன்றோரின் கருத்தாக உள்ளது. நீதி மன்றத்திற்குச் சென்ற சுமார் 500 சுவடிகள் திரும்பி வந்து சேரவில்லை என்றும், நூலகத்திலிருந்து இரவல் வாங்கியவர்கள் திரும்ப அளிக்காத நூல்கள் பல என்றும் இவர் குறிக்கின்றார். இவை மேலும் ஆராயத்தக்கன.

5.13 மராட்டிய மன்னர்களின் நல்லெண்ணப்படியே நூல்களைப் பாதுகாத்தல், அச்சிடல், பயன்பாட்டிற்கு உதவுதல் என்னும் நூலகப் பணிகளை முக்கிய நோக்கமாகக் கொண்டு இன்றைய நிலையில் இந்நூலகம் நன்கு இயங்கி வருகிறது.

5.14 ஆஸ்திரேலியா, ஸ்வீடன், கலிபோர்னியா, பெர்லின், பாரிஸ், நியூயார்க், சியோல், நெதர்லேண்ட், பெனின்சுல்வேனியா, ரோம், ஜப்பான் போன்ற பல நாடுகளிலிருந்தும் ஆய்வாளர்கள் வந்து இந்நூலகத்தைப் பயன் கொள்கின்றனர்.

5.15 இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்தும் ஆராய்ச்சி-யாளர்கள் இந்நூலகத்தால் சிறப்பான பயன்பெற்று வருகின்றனர்.

5.16 பல்கலைக்கழகம், கல்லூரி மற்றும் ஆய்வு நிறுவனங்களிலிருந்து ஆய்வாளர்கள் பலர் தினமும் இந்நூலகத்திற்கு வந்து செல்கின்றனர்.

5.17 முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி போன்ற பல முக்கியமானவர்கள் இந்நூலகத்திற்கு நேரில் வந்து பாராட்டிச் சென்றுள்ளமையை இங்குள்ள பார்வையாளர் குறிப்பேட்டின் மூலமாக நன்கு அறியலாம்.

5.18 சரசுவதிமகால் நூலகத்தில் சுவடி வடிவில் இருந்த, பாகவத மேளா பாணியில் தெலுங்கு எழுத்தில் இடம்பெற்ற மராட்டி நாடகமான சாகுந்தலம் மும்பையில் 2002 ஜனவரியில் முதன்முதலாக நடித்துக் காட்டப்பட்டது (The Hindu 1.3.2002) என அறிகிறோம். இவ்வாறு இந்நூலகம் தேசிய மற்றும் சர்வதேச நிலையில் பலதரப்பட்ட ஆய்வுகளுக்கும் நிலைக்களமாகத் திகழ்கின்றது.

உலகின் அறிவுநூற்களஞ்சிய மையங்களில் ஒன்றாகத் திகழும் இந்நூலகம் பல பண்பாடுகளின் சங்கமமாகக் காட்சியளிக்கிறது. தமிழ்ச் சோழர்கள், தெலுங்கு நாயக்கர்கள், மராட்டிய மன்னர்கள், வெளி நாட்டவர்களான முஸ்லீம்கள், கிறித்தவர்களின் தாக்கங்கள் அனைத்தும் கொண்டதொரு நூலகமாகவும் உள்ளது. அதிலும் மேற்கத்திய நாட்டாரின் தாக்கம் மிகத் தெளிவாக உணரக் கூடியதாகும். பல காலங்களில் பல பண்பாட்டுக் கலவைகளுடன் மிக அற்புதமான அறிவாலயமாக இந்நூலகம் மலர்ந்துள்ளதை நன்கு மதிப்பிட்டு உணரலாம்.

பிரிட்டிஷ் மியூசியக் காப்பாளராக இருந்த பானிஸ்ஸியின் கருத்துப்படியே இந்நூலகம் இந்திய நாட்டின் பண்பாடு மற்றும் இந்திய மொழி இலக்கியங்களும் உள்ளடக்கிய ஒரு தேசிய நூலகமாக விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

தஞ்சை மராட்டிய மன்னர்களின் காலத்தில் மிகச் சிறப்பு நிலையைப் பெற்ற இந்நூலகம், வரலாற்று அடிப்படையில் கிடைக்கக் கூடிய தரவுகளின்படி பல நூற்றாண்டுகளாக வளர்ந்து வருவதை அறிய முடிகின்றது. சேர, சோழ, பாண்டியர்களால் இந்நூலகம் நிறுவப் பட்டதாகச் சான்றுகள் இல்லை. இருப்பினும், தெலுங்கு நாயக்க மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்டு, மராட்டிய மன்னர்களால் விரிவு படுத்தப்பட்டது என்பது தெளிவாகும்.

குறிப்பாக, மராட்டிய மன்னர்களின் நூலக அறிவு எத்தகையது என்பதை இந்த நூலக வரலாறு தெளிவாக்குகிறது.

இரண்டாம் சரபோஜி மன்னரின் பன்மொழிப் பயிற்சியும், பல்கலை அறிவும், ஆங்கிலேய ஆட்சியாளர்கள் மற்றும் கிறித்தவப் பாதியாரின் தொடர்பு மற்றும் உதவியும் இந்நூலகம் பெருவளர்ச்சி பெறக் காரணங்களாயின. தமிழகத்தின் முதல் பல்கலைக்கழகமான சென்னைப் பல்கலைக்கழகம் தோன்றுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சை சரசுவதிமகால் நூலகம் ஒரு பல்கலைக்கழகமாகத் திகழ்ந்ததற்குக் காரணமானவர்கள் இம்மராட்டிய மன்னர்களேயாவர்.

பின்னர், பொதுமக்களின் விருப்பத்திற்கேற்ப மன்னர் குடும்பத்தினரின் ஆதரவுடன் இந்நூலகம் பொதுச்சொத்தாக மாற்றப் பட்டதால் இன்று பன்மொழி ஆய்வு நூலகமாக உலக அளவில் முன்னிலையில் நிற்பது நம் தமிழகத்திற்குப் பெருமை சேர்ப்பதாகும்.

பண்டார்க்கர் நூலகம் இந்தியாவில் பெரிய நூலகமாகும். ஆயின், வரலாற்றுக் காரணங்களால் தஞ்சை சரசுவதிமகால் நூலகமே மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

பயன்பட்ட நூல்கள்

தமிழ்நூல்கள்

அச்சுக்கலை, மா.சு.சம்பந்தன், தமிழர் பதிப்பகம், சென்னை, 1976.

இந்திய நூலக இயக்கம், வே. தில்லைநாயகம், பாரி நிலையம், *சென்னை, 1981.*

இராமாயணம் - பாலகாண்டம் (முதற்பகுதி), கம்பர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், 1957.

இலக்கிய உதயம் (முதற்பகுதி), எஸ்.வையாபுரிப்பிள்ளை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1958.

எழுத்தும் அச்சும், மா.சு. சம்பந்தன், தமிழர் பதிப்பகம், சென்னை, 1981.

என் சரித்திரம், உ.வே.சாமிநாதையர், உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1990.

கம்பராமாயணம், கம்பன் கழகம், சென்னை, 1984.

கல்கத்தா தேசிய நூலகத் தமிழ்ச் சுவடிகள், மு.சண்முகம்பிள்ளை, இ.சுந்தரமூர்த்தி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1979.

கலிங்கத்துப்பரணி மூலமும் அரும்பதப்பொருள் விளக்கமும், அ.கோபாலையர் (ப.ஆ.), கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை, 1923.

கலித்தொகை, நச்சினார்க்கினியருரை, தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம், பாகனேரி, 1938.

கிருஸ்துவத் தமிழ்த் தொண்டர், ரா.பி.சேதுப்பிள்ளை, எஸ்.ஆர். சுப்பிரமணியப் பிள்ளை, திருநெல்வேலி, 1964.

கொட்டையூர் ஸ்ரீசிவகொழுந்து தேசிகர் இயற்றிய பிரபந்தங்கள், உ.வே.சாமிநாதையர் (குறிப்புரை), கேஸரி அச்சுக்கூடம், சென்னைப் பட்டணம், 1932.

சரசுவதிமகால் மோடி ஆவணத் தமிழாக்கம் (கையெழுத்துப்படி), தொகுதி 1-48.

சரசுவதிமகால் - வழிகாட்டி நூல், அ. பஞ்சநாதன், சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர், *1992*.

சரஸ்வதிமஹாலும் தஞ்சை வரலாறும், O.A. நாராயணசாமி, தஞ்சை மகாராஜா சரபோஜி ஸரஸ்வதிமஹால் நிர்வாகக் கமிட்டி, *1964*.

சரபேந்திர வைத்திய ரத்னாவளி, ஆ.கிருஷ்ணசாமி மாடிக்ராவ், சரஸ்வதிமகால் நூல்நிலையம், தஞ்சாவூர், *1985*.

சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், புலியூர்கேசிகன் (உரை), பாரி நிலையம், சென்னை, *1964*.

சீவகசிந்தாமணி, நச்சினார்கினியருரை, உ.வே.சாமிநாதையர் (பதிப்பு), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், *1986*.

சுவடிக்கலை, இரா. இளங்குமரன், அரிமாப் பதிப்பகம், சேலம், *1991*.

சுவடிப் பதிப்பியல், வே.இரா.மாதவன், பாவை வெளியீட்டகம், தஞ்சாவூர், *2000*.

சுவடியியல், பூ.சுப்பிரமணியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, *1991*.

சோழர்கலைப்பாணி, எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம், Mudgala Trust, Madras, 1966.

சோழர்கள் - பாகம் 1, K.A.நீலகண்ட சாஸ்திரி, இந்தியன் கவுன்சில் ஆப் ஹிஸ்டாரிகல் ரிசர்ச், நியூதில்லி, *1989*.

சோழர் கோயிற்பணிகள், ஜே.எம்.சோமசுந்தரம்பிள்ளை, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, *1948*.

தஞ்சாவூர், குடவாயில் பாலசுப்பிரமணியன், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, *1995*.

தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு, குடவாயில் பாலசுப்ரமணியன், தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், *1999*.

தஞ்சாவூர் மாவட்டம், சோமலெ, பாரி நிலையம், சென்னை, *1961*.

தஞ்சை மராட்டிய அரசர் மோடி ஆவணக் கருத்தரங்கக் கட்டுரைகள் (உருளச்சு), அரிய கையெழுத்துச் சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், *1983*.

தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள், செ.இராசு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், *1987*.

தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் - 50, செ.இராசு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1983.

தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், கே.எம்.வேங்கடராமையா, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1984.

தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும் (முதல் தொகுதி), பா.சுப்ரமணியன், (ப.ஆ.), தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1989.

தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும் (இரண்டாம் தொகுதி), பா.சுப்ரமணியன், (ப.ஆ.), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989.

தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும் (மூன்றாம் தொகுதி), பா.சுப்ரமணியன், (ப.ஆ.), தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1989.

தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு (மெக்கன்சி சுவடி 3180), கே.எம். வேங்கடராமையா, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1987.

தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம், முதல் தொகுதி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989.

தஞ்சை மன்னரும் சரசுவதிமகால் நூலகமும், வ.வேணுகோபாலன், மயில் பதிப்பகம், தஞ்சை, 1979.

தஞ்சை மாமன்னர் சரபோஜி, நா.எத்திராஜ், அரசி பதிப்பகம், தஞ்சாவூர், 1998.

தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், தா.வி.தேவதாசன், கிறிஸ்துவ இலக்கியச் சங்கம், சென்னை, 1956.

தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணை, தொகுதி 1, த.கோ.பரமசிவம் (ப.ஆ.), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1987.

தமிழ்ப் பல்கலைக்கழக மோடி ஆவணத் தமிழாக்கம் (கையெழுத்துப் படி), தொகுதி 1-11.

தமிழ்ப் பல்கலைக்கழக மோடிப் பலகணி (கையெழுத்துப்படி) நோட்டு எண் 6, 7.

தமிழ்விடுதூது, மதுரை சொக்கநாதர், உ.வே.சா. பதிப்பு, கேசரி அச்சுக் கூடம், சென்னை, 1941.

தமிழகத்தில் மராட்டியர் ஆட்சி, ம.ஆபத்சகாயன், தி புக் சென்டர், கோயமுத்தூர், 1961.

தமிழக வரலாறு, கே.இராசைய்யன், மதுரை தமிழியாலஜி பப்ளிஷர்ஸ், மதுரை, 1985.

தமிழக வரலாறும் பண்பாடும், சி.எம்.கணபதி, அருள் பதிப்பகம், சென்னை, 1991.

திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் (நான்காம் பகுதி), ஊ.மு.சுப்பிரமணிய முதலியார் (உ.ஆ.), கோவைத் தமிழ்ச் சங்கம், கோயமுத்தூர், 1949.

திருவாசகம், மாணிக்கவாசகர், ஜீ.யு.போப் (பதிப்பு), ஆக்ஸ்போர்டு சர்வாங்க கல்விச்சாலை அச்சுக்கூடம், 1900.

திருவிளையாடல் புராணம் - அரும்பதவுரையுடன், பரஞ்சோதி முனிவர், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, 1931.

தென் இந்திய வரலாறு, முதற்பாகம், கே.கே.பிள்ளை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1969.

தென்னிந்திய நூலக இயக்கம், ஆர். இராமசாமி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2000.

தொல்காப்பியம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1981.

தேவநேயப்பாவாணரின் சொல்லாய்வுகள், இரா. இளங்குமரன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1985.

நல்லுரைக்கோவை (முதற்பாகம்), உ.வே.சாமிநாதையர், கபீர் அச்சுக் கூடம், சென்னை, 1945.

நன்னூல் காண்டிகையுரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1984.

நாலடியார், வேதகிரி முதலியார் (உரை), பூமகள் விலாச அச்சகம், சென்னை, 1919.

நூலகர் : நூல் வல்லோர், எம். முத்துசாமி, Madras University Library Staff Association, Madras, 1993.

நூலகம், இராம. சுப்பிரமணியன், தமிழ்க்கடல் பதிப்பகம், சென்னை, 1986.

நூலகம் - அன்றும் இன்றும், பி.எ.மோகன்ராஜன், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1989.

நெஞ்சை அள்ளும் தஞ்சை, செ.இராசு, கொங்கு ஆய்வு மையம், தஞ்சாவூர், *1994*.

பாண்டியர் செப்பேடுகள் பத்து, தமிழ் வரலாற்றுக் கழகம், சென்னை, *1967*.

பிற்காலச் சோழர் சரித்திரம், பகுதி I, T.V.சதாசிவ பண்டாரத்தார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், *1949*.

பிற்காலச் சோழர் சரித்திரம், பகுதி II, T.V.சதாசிவ பண்டாரத்தார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், *1951*.

புத்தகம் தோன்றிய கதை, பி.எல்.முத்தையா, உமா பதிப்பகம், சென்னை, *1988*.

புத்தகமும் வித்தகமும், மு.அருணாசலம், தமிழ் நூலகம், திருச்சிற்றம்பலம், *1957*.

பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணம் (முதற்பகுதி), C.K.சுப்பிரமணிய முதலியார் (உ.ஆ.) கோவைத் தமிழ்ச் சங்கம், கோயமுத்தூர், *1937*.

பெருங்கதை, கொங்குவேளிர், உ.வே.சாமிநாதையர் (உரை), கேசரி அச்சுக்கூடம், சென்னை, *1935*.

போன்சலே வமிச சரித்திரம், வி.சீனிவாச்சாரி, சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர், *1980*.

மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும், உ.வே.சாமிநாதையர் (ப.ஆ.), கேசரி அச்சுக்கூடம், சென்னை, *1931*.

மூதுரை, ஔவையார், ந.மு.வேங்கடசாமி நாட்டார் (உரை), திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, *1956*.

வாக்குண்டாம், ஔவையார், ஆறுமுகநாவலர் (உரை), வித்தியாநு பாலன யந்திர சாலை, சென்னப்பட்டணம், *1955*.

வாழ்வியற் களஞ்சியம், தொகுதி எட்டு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், *1988*.

வாழ்வியற் களஞ்சியம், தொகுதி பத்து, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், *1988*.

வில்லிபாரதம், முதற் புத்தகம், கே.ராஜகோபாலாச்சாரியார் (உரை), ஸ்டார் பிரசுரம், சென்னை, *1985*.

ஆங்கில நூல்கள்

Annual Report on Indian Epigraphy 1905, Archeology Survey of India, New Delhi, 1922.

Annual Report on Indian Epigraphy 1922, Archeology Survey of India, New Delhi.

Annual Report on Indian Epigraphy 1930-34, Archeology Survey of India, New Delhi, 1986.

Annual Report on Indian Epigraphy for 1961-62, Government Epigraphic for India, Ootacamund, 1962.

Catalogue of French, Latin, Italian and Greek Books in the Tanjore Maharaja Serfoji's Saraswathi Mahal Library, Thanjavur, Institute of Indology, Pondicherry, 1920.

A Catalogue of Sanskrit Mss., of Jainism in Saraswathi Mahal Library, N.Srinivasan.

Catalogue of Serfoji's Personal Collection and other Rare Books (in English), T.M.S.S.M. Library Society, Thanjavur, 1989.

Classified Index to the Sanskrit Mss., in the Palace at Tanjore, Part I, A.C.Burnell, Trubner & Co., London, 1880.

Classified Index to the Sanskrit Mss., in the Palace at Tanjore, Part III, Philosophy and Law, A.C.Burnell, Truber & Co., London.

Classified Index to the Sanskrit Mss., in the Palace at Tanjore, Part II, A.C.Burnell, Truber & Co., London, 1879.

Colas (2nd Ed.), K.A.N.Sastri, University of Madras, Madras, 1955.

Descriptive Catalogue of the Marathi Manuscripts and Books in the Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library, Tanjore Vols. I-VI.

Descriptive Catalogue of the Sanskrit Manuscripts in the Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library, Tanjore, Vols. I-XXIII.

Descriptive Catalogue of the Tamil Manuscripts in the Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library, Vols. 1, 2, 6, 7, 10, 16.

Descriptive Catalogue of the Tamil medical Manuscripts in the Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library, Vols. 3-5, 8, 9, 11-15, 17-20.

Descriptive Catalogue of the Telugu Manuscripts in the Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library, Tanjore, Vols, 1, 2.

Education in South India, S.Gurumurthy, New Era Publications, Madras, 1979.

Encyclopaedia Britannica, 11th Edition, Vol. XVII, 1911.

Epigraphica Indica, Vol. 3, 1894-95, Government of India, Calcutta.

Epigraphica Indica Vol. XVII (1923-24), Archeological Survey of India, New Delhi, 1983.

Epigraphica Indica Vol. XXV (1930-40), Archeological Survey of India, New Delhi, 1985.

Five Marathi Dance Dramas, N.Viswanathan, TMSSML Society, Thanjavur, 1989.

General History of Pudukkottai State, S.Radhakrishna Aiyar, Puddukkottai Darbar, Puddukkottai, 1916.

History of British Diplomacy in Tanjore, K.Rajayyan, Rao and Raghavan, Mysore, 1969.

History of Printing and Publishing in India Vol. I : South Indian Origins of Printing and its Efflorescence in Bangal, B.S.Kesavan, National Book Trust, New Delhi, 1985.

History of South India, K.A.N.Sastri, Oxford University Press, London, 1955.

History of Tamil Nad (A.D. 1565-1956), N.Subrahmanian, Kodal Publishers, Madurai, 1982.

Imperial Library of the Mughuls, Abdul Aziz, Idarah-I Adabiyat-I Delli, Delhi, 1974.

Indian Antiquary, Vol. II (1873), Swati Publications, Delhi, 1984.

Indian Antiquary, Vol. V (1875), Swati Publications, Delhi, 1984.

Indian Antiquary : A Journal of Oriental Research, Vol. XI-1882, Swati Publication, Delhi, 1984.

Indian Antiquary, Vol. 33, (1904), Swati Publications, Delhi, 1985.

Introduction to Manuscriptology, R.S.Shivaganesha Murthy, Sharada Publishing House, Delhi, 1996.

Last days of Bishop Heber, Thomas Robinson, Vepery Mission Press, Madras, 1829.

Librarianship : Its Philosophy and History, A.K.Mukherjee, Asia Publishing House, Bombay, 1966.

Library Movement : A Collection of Essays, Madras Library Association, Madras, 1929.

Madras District Gazetteers, Tanjore, Vol. I, F.R.Hemingway, Government Press, Madras, 1906.

Madras Presidency Administration Manual, Vol. I & II. C.D.Maclean, Asian Educational Services, New Delhi, 1987, 1989.

Manual of the District of Tanjore, T.Venkasami Row, Lawrence press, Madras, 1883.

Maratha Rajas of Tanjore, K.R.Subramanian, Asian Educational Services, New Delhi, 1988 (Reprint).

Maratha Rule in the Carnatic, C.K.Srinivasan, Annamalai University, Annamalai Nagar, 1944.

Maratha Supremacy, R.C.Majumdar (Ed.), Bharatiya Vidya Bhavan, Bombay, 1977.

Memoirs of the Life and Correspondence of the Rev. Christian Frederick Swartz, (Two Volumes), D.D. Hugh Pearson, London, 1834.

Modi Documents from Tanjore in Danish Collections, Elisabeth Strandberg, Franz Steiner Verlag, Wiesbadan, 1983.

Modi Documents in the T.M.S.S.M. Library, Vol. I, R.Vivekananada Gopal, (Ed.), Thanjavur Maharajah Serfoji's Sarasvati Mahal Library, Thanjavur, 1999.

Mohini Vilasa Kuravanchi, Mahakavi Saptarchi, Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library, Thanjavur, 1985.

Nayaks of Tanjore, V.Vriddhagirisan, Annamalai University, Annamalainagar, 1942.

New Catalogue Catalogorum: An alphabetical Register of Sanskrit and Allied Works and Authors, Vol. I, V.Ragavan, (Ed.), University of Madras, Madras, 1968.

Oxford English Dictionary (2nd Ed.), Vol. IX, Clarendon Press, Oxford, 1991.

Palm-Leaf and other Manuscripts in Indian Languages (Proceedings of the National Seminar), Institute of Asian Studies, Madras, 1996.

Peeps into Saraswati Mahal with a Short Account of the History of Thanjavur, S.Gopalan, Saraswati Mahal Library, Thanjavur, 1973.

Report of the Tanjore Commissionors, A.D. 1799, Tanjore District, 1905.

Report on Sanskrit Manuscripts in Southern India, Vol. III, E.Hultzsch, Government Press, Madras, 1905.

Report on the Modi Manuscripts in the Saraswati Mahal Library, Tanjore, R.S.Shelvankar, Saraswathi Mahal Library, Thanjavur, 1933.

Rise of the Maratha Power, Mahadeo Govind Ranade, Publications Division, New Delhi, 1974.

Saraswati Mahal - A Short History and Guide, R.Jayaraman, Tanjore Maharaja Serfoji's Saraswati Mahal Library, Thanjavur, 1981.

Sources of Vijayanagar History, S.Krishnaswami Ayyangar, University of Madras, Madras, 1919.

South Indian Inscriptions, Vol. II, Part I & II, Navarang, New Delhi. 1983.

South Indian Inscriptions, Vol. II, Part III, IV & V, E.Hultzch, Navrang, New Delhi, 1984.

South Indian Inscriptions, Vol. III, Part I & II, Archaeological survey of India, New Delhi, 1987.

South Indian Inscriptions, Vol. IV, Archaeological Survey of India, New Delhi, 1986.

South Indian Palaeography, A.C.Burnell, Asian Educational Services, New Delhi, 1994.

Tanjore as a seat of Music, S.Seetha, University of Madras, Madras, 1981.

Tanjore District Handbook, Baliga (B.J.)

Tanjore Maratha Principality in South India, W.Hickey, St.Thome, 1874.

Tamil Lexicon, Vol. IV, Part 1, University of Madras, 1982.

TMSSML Administrative Committee Annual Report, 31.3.1927.

Voyages and Travels to India, Ceylon, Red Sea, Abyssinia and Egypt in 1802, 1804, 1805 and 1806, Vol. I, George Viscount, Valentia, William Miller, London, 1809.

கட்டுரைகள்

தமிழ்

'இரண்டாம் சரபோசி மன்னர் காலத்து விலங்கின ஓவியங்கள்', இராசு. பவுன்துரை, மாமன்னர் சரபோசி ஆய்வுக்கோவை, தொகுதி-2, சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர், 1990, பக். 133-142.

'இரண்டாம் சரபோசியும் சிவக்கொழுந்து தேசிகரும்', ம.சா. அறிவுடைநம்பி, JTMSSML, Vol. 38 No. 1-3, 1989, pp. 22-25.

'இரண்டாம் சரபோஜி காசிப் பயணம்' கே.எம்.வேங்கடராமையா, தமிழ்க்கலை, தமிழ் 1, கலை 2, சூன் 1988, பக். 33.

'ஓவியம் வளர்த்த நாயகன்', ச. திலகம், மன்னர் சரபோசி பிறந்தநாள் விழா மலர், சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர், 1989, பக். 40-42.

'கலைகாத்த காவலன்', சூ.ஏ.வேங்கடசுப்ரமணிய சாஸ்திரி, JTMSSML, Vol. XXX, No. 1, 2 & 3, p. 1-2.

'சரசுவதிமகால் நூலகத்தில் இடம்பெற்றுள்ள தமிழ் இலக்கிய, இலக்கணச் சுவடிகளின் அகரவரிசைப் பட்டியல்', ச. திலகம், JTMSSML, vol.XLIII, No.1-2, 1995, pp. 1-18.

'சரசுவதிமகால் நூலகமும் தமிழும்', அ.பஞ்சநாதன், JTMSSML, Vol. XLIII, No. 1-2, 1995, pp. 1-4.

'சரஸ்வதிமகால் நூலகத்திலுள்ள சோதிட நூல்கள் - ஒரு கண்ணோட்டம்', ம.சீராளன், JTMSSML, Vol. 34, No. 1, 1984, pp. 1-9.

'சரஸ்வதிமகால் நூலகத்தின் ஸமஸ்க்ருதச் சுவடித் தொகுதிகளின் வரலாறு', என்.ஸ்ரீனிவாசன், JTMSSML, Vol. XV. No. 324, p. 34-44.

'சரஸ்வதிமகால் நூலகத்தின் ஸமஸ்க்ருதச் சுவடித் தொகுதிகளின் வரலாறு', என்.ஸ்ரீனிவாசன், JTMSSML, Vol. 29, No. 1-3, 1977, pp. 1-20.

'சரபோசி காலத் தமிழ் இலக்கியங்கள்', ம.சா.அறிவுடைநம்பி, மாமன்னன் சரபோசியின் 221-ஆம் பிறந்தநாள் விழாக் கருத்தரங்கம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1997, பக். 1-7.

'சரபோசி மன்னரும் சரசுவதி மகாலும்', ப.பெருமாள், மாமன்னன் சரபோசியின் 221-ஆம் பிறந்தநாள் விழாக் கருத்தரங்கம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், *1997*, பக். *1-5*.

'சரபோசி மன்னரும் மராத்தி இலக்கியமும்', கூ.சு. பீமாராவ், JTMSSML, Vol. 30, No. 1-3, 1975, p. 1-15.

'சரபோசி வளர்த்த கலைகள்', ம.சா.அறிவுடைநம்பி, மாமன்னர் சரபோசி ஆய்வுக்கோவை, தொகுதி *2*, சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர், *1990*, பக். *81-94*.

'சரபோசியின் காசி யாத்திரை', கே.இராமதிலகம், மாமன்னன் சரபோசியின் 221-ஆம் பிறந்தநாள் விழாக் கருத்தரங்கம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், *1997*, பக். *1-5*.

'சரபோசியின் மருத்துவத் தொண்டு', வே.இரா.மாதவன், மாமன்னன் சரபோசியின் 221-ஆம் பிறந்தநாள் விழாக் கருத்தரங்கம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், *1997*, பக். *1-5*.

'சரபோசியும் வேதநாயக சாஸ்திரியாரும்', செ.இராசு, JTMSSML, Vol. 39, No. 1-3, 1989, pp. 17-21.

'சரபோஜி ஒரு சிறந்த கலைவேந்தன்', த.ரா.பீமாராவ், மாமன்னர் சரபோசி ஆய்வுக்கோவை, தொகுதி *2*, சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர், *1990*, பக். *17-26*.

'சரபோஜி மன்னர் காத்த தமிழ்ச்சுவடிகள்', ய.மணிகண்டன், மாமன்னன் சரபோசியின் 221-ஆம் பிறந்தநாள் விழாக் கருத்தரங்கம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், *1997*, பக். *1-4*.

'சரபோஜி மன்னர் கால வடமொழி இலக்கியங்கள்', ந.சீனிவாசன் மாமன்னன் சரபோஜியின் 221-ஆம் பிறந்தநாள் விழாக் கருத்தரங்கம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், *1997*, பக். *1-4*.

'சரபோஜி மன்னர் பிள்ளைத்தமிழ்', வீ.சொக்கலிங்கம், JTMSSML, Vol. XXXVIII, No. 1, 2 & 3, p. 26-34.

'சரபோஜி மன்னரும் கல்வெட்டுக்களும்', வீ.சொக்கலிங்கம், JTMSSML, Vol. XXX, No. 1, 2 & 3, p. 1-8.

'சரபோஜி மன்னரும் மராத்தி இலக்கியமும்', கூ.சு.பீமாராவ், மாமன்னர் சரபோசி ஆய்வுக்கோவை, தொகுதி-*3*, சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர், *1990*, பக்.

'சரபோஜி மன்னரும் மருத்துவ நூல்களும்', வீ.சொக்கலிங்கம், JTMSSML, Vol. 32, No. 1-3, 1984, pp. 1-19.

'சரபோஜியும் மேநாட்டவரும்', ஜெ.துரைராசு, மாமன்னன் சரபோசியின் 221-ஆம் பிறந்தநாள் விழாக் கருத்தரங்கம், பக். 8.

'சுவடி நூலகங்களும் பாதுகாப்பு முறைகளும்', ப.பெருமாள், JTMSSML, Vol. XLIII, No. 1-2, 1995, pp. 1-14.

'சுவடிப் பதிப்பும் சரசுவதிமகால் நூலகமும்', மு.சதாசிவம், JTMSSML, Vol. 39, 1990, p. 42-47.

'தஞ்சை சரசுவதிமகால் நூலகத்திலுள்ள அரிய தமிழ் காகிதச் சுவடிகள்', ம.சீராளன், JTMSSML, Vol. XLIII, No. 1-2, 1995, p. 1-14.

'தஞ்சை சரசுவதிமகாலின் தமிழ்ப்பணி', எம்.சீராளன், JTMSSML, Vol. 40, No. 3, 4, 1992, pp. 1-11.

'தஞ்சை சரசுவதிமகாலின் ரிக்வேதப் பிரிவிலுள்ள காகிதச் சுவடிகளின் படத்தொகுப்புக்கதை', ம.சீராளன், JTMSSML, Vol. 29, No. 1-3, 1977, pp. 1-20.

'தஞ்சை மராத்தியர் காலச் சுவடி நூலகம்', ஆ.குணசேகரன், சுவடிப் பதிப்பு வரலாறு-3, கருத்தரங்க மலர், ஓலைச்சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1996.

'தஞ்சை மராட்டியப் புலவர்களின் மான்மிய நூல்கள்', டி.ஆர்.பீமராவ், JTMSSML, Vol. XL, No. 1 & 2, p. 1-20.

'தஞ்சை மராட்டியர் வரலாறு கூறும் வடமொழி இலக்கியச் சுவடிகள்', எஸ்இராஜலக்ஷ்மி, JTMSSML, Vol. XLIII, No. 122, p. 1-10.

'தஞ்சையில் நடைபெற்ற ஸம்ஸ்க்ருத நாடகங்கள்', என்.ஸ்ரீநிவாஸன், JTMSSML, Vol. XLIII, No. 1-2, 1995, pp. 1-12.

'தமிழகத்தில் நூலகங்கள்', என்.சேதுராமன், மன்னர் சரபோசி பிறந்த நாள் விழா மலர், சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர், பக். 18-20.

'நூலகர் பார்வையில் சுவடிப் பதிப்புகள்', ம.சீராளன், சுவடிப்பதிப்பு வரலாறு-3, கருத்தரங்க மலர், ஓலைச் சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1996. பக். 1-6.

'நூலகவியக்கத்தில் சுவடிப் பதிவுகள்', க.இராமதிலகம், சுவடிப் பதிப்பு வரலாறு-3, கருத்தரங்க மலர், ஓலைச்சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1996, பக். 1-6.

'பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிவந்த தமிழ்நூல்கள்', கே.இராம திலகம், JTMSSML, Vol. XLIII, No. 1-2, 1995, pp. 1-10.

'மருத்துவத்துறையில் மன்னர் சரபோசி', இரா. திலகம், JTMSSML, Vol. 30, No. 1-3, 1979, pp. 1-7.

'மன்னர் ஏகோஜி', கூ.சு.பீமராவ், JTMSSML, Vol. XXXVI, No. 1-3, 1985, pp. 1-27.

'மன்னர் சரபேந்திரரின் மருத்துவப் பணிகள்', வே.இரா.மாதவன், மாமன்னர் சரபோசி ஆய்வுக்கோவை, தொகுதி 2, சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர், 1990, பக். 94-103.

'மன்னர் போற்றிய மருத்துவக்கலை', எஸ்.இராஜலெட்சுமி, மன்னர் சரபோசி பிறந்தநாள் விழா மலர், சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர், 1989, பக். 74-77.

'மாமன்னர் சரபோசியின் அரிய சேகரிப்புகள்', அ. பஞ்சநாதன், மாமன்னர் சரபோசி ஆய்வுக்கோவை, தொகுதி-2, சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர், 1990, பக். 127-132.

'முதலாம் சரபோஜியும் அவர்காலத்து நூல்களும்', என்.ஸ்ரீநிவாசன், JTMSSML, Vol. XXXV, No. 1-3, 1985, pp. 1-24.

'முதலாம் சரபோஜியும் அவர்காலத்து நூல்களும்', என்.ஸ்ரீநிவாசன், JTMSSML, Vol. XXXV, No. 1, 2 & 3, p. 1-18; Vol. XXXVI No. 1, 2 & 3, pp. 1-28.

'மோடி ஆவணம் - ஓர் அறிமுகம்', இராக. விவேகாந்தகோபால், JTMSSML, Vol. XLIII, No. 1-2, 1995, pp. 1-8.

'மோடி எழுத்து', இரா.இராமபாவுசுவாமி, JTMSSML, Vol. No. XXXVII, No. 1, 2 & 3, pp. 1-8.

கட்டுரைகள்

ஆங்கிலம்

'British Admirers of Maharaja Serfoji', JTMSSML, Vol. XIV, No. 3, p.12.

'Cabinet of King Serfoji of Tanjore', Indira Viswanathan Peterson, Journal of the History of Collections, No. 3, 1999, p. 79-80.

'Charity the Soul of Serfoji', JTMSSML, Vol. XX, No. 1, pp. 3-6.

'Chemical conservation', P.Perumal, JTMSSML, Vol. 33, No. 1-3, 1984, pp. 1-6.

'Did India invent Paper?:The Facts Suggest that Indians may have been the Early Inventors of Paper', P.G.Gosavi, Tappi Journal, Atlanta, Vol. 67, No. 2, Feb. 1984, pp. 42-44.

'Educational Activities of H.H.Rajah Serfoji Chattrapathy of Tanjore, Rajaram Rajah Sahib Chattrapathy, The Rajah Serfoji College Magazine, Thanjavur, March 1956.

'Gajasastra', A.Krishnasamy, Maladik, Illustrated Weekly of India, 28 May 1978.

'Glimpses in to Modi Records' (Dhanvantri Mahal), JTMSSML Vol. XXI, No. 2, p. 1-4.

'Greatness of Serfoji', S.Gopalan, The Rajah Serfoji College Magazine, Thanjavur, March 1956.

'Historical Research Training in TMSSM Library', JTMSSML, Vol. XVIII, No. 3, pp. 1-3.

'Impressions of the Sarasvati Mahal Library, Tanjore', P.A.Khoroche, IAVRI Bulletin, International Association of the Vrindaban Research Institute, University of London, No. 1, 1975, pp. 3-5.

'India:Earliest Paper Making?' J.N.Mc Govern, Tappi Journal, Atlanta, Vol. 67, No. 8, August 1984, pp. 13, 14.

'Introduction to Modi Documents', R.vivekanandagopal, JTMSSM, Vol. XL. No. 3, 4, p. 81-84.

'Libraries in Ancient India', Bernard Anderson, Journal of Indian History, Vol. XXVII, 1-3 (No. 79-81), 1949, p. 165.

'Maharaja Serfoji Scholar Prince' Thulojendra Rajah Sahib, JTMSSML, Vol. 30, No. 1-3, 1979, pp. 1-5.

'Manuscripts and Manuscript Libraries - A Study', P.Perumal, JTMSSML, Vol. XXXVII, No. 1-3, 1988, pp. 1-10.

'Maratta rule in the South and their contribution towards cultural heritage of Tamil Country', Thulajandra Rajah P.Bhosale, JTMSSML, Vol. XLIII, No. 1-2, 1995, pp. 1-2.

'Modi Documents in Tamilnadu', R.Vivekanandagopal, Palmleaf and other Manuscripts in Indian Languages, Ed. by A.Pandurangan, Maruthanayagam, pp. 246-255, Institute of Asian Stuies, Chennai, 1995.

Modi Record', JTMSSML, Vol. XVIII, No. 3, pp. 1-6.

'Most Remarkable library in India', P.Perumal, R.Vivekanandagopal, SAMSOTHAK, Marathi Journal, Quarterly.

'Notable events in the Life of Rajah Serfoji', M.Seeralan, JTMSSML, Vol. XXX, No. 1,2 & 3, p. 10.

'Note on the Atlas and Maps Collection in the Sarasvati Mahal Library, Thanjavur', P.Perumal, JTMSSML, Vol. XLIII, No. 3-4, pp. 1-6.

'Note on the Catalogue of the Tanjore Sarasvati Mahal Library', P.Perumal, JTMSSML, Vol. 39, No. 1, 1990, pp. 49-56.

'Note on the Marathi Manuscripts in the Sarasvathi Mahal Library Tanjore', V.Srinivasachari, JTMSSML, Vol. 30, No. 1-3, 1975, pp. 1-15.

'Oldest Educational Institution', Seline D Angustine, The Hindu, August 2, 1991.

'Places Visited by Schwartz', E.Johnson Rathinasamy, Cheristian Fredrick Schwartz:His Contribution to South India, Lutheran Heritage Archives, Chennai, 1999.

'Raja Serfoji' R.Jayaraman, *மாமன்னர் சரபோசி ஆய்வுக்கோவை, தொகுதி 2, சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர், 1990, பக். 61-70.*

'Raja Serfoji's Contribution to Technology' K.Manamalar, *மாமன்னர் சரபோசி ஆய்வுக்கோவை, தொகுதி 3, சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர், 1990, பக். 123-127.*

'Rare Manuscripts and Curios' that are displayed in TMSSM Library, Thanjavur', A.Panchanathan, JTMSSML, Vol. 33, No. 1-3, 1984, pp. 1-9.

'Repository of Wisdom', G.Srinivasan, The Hindu, January 5, 1999.

'Samartha Ramadasi Mutts in Tanjore', T.N.Bhima Rao Goswami, *மாமன்னர் சரபோசி ஆய்வுக்கோவை, தொகுதி 2, சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர், பக். 17-20.*

'Saraswati Mahal, Tanjore', V.Raghavan, House Magazine of Indian Telephone Industries Ltd., Bangalore, Vol. 24, No. 3, Sept, 1972, pp. 8-13.

'Serfoji Maharaj', M.Seeralan, JTMSSML, Vol. 30, No. 1-3, 1979, pp. i-iv.

'Serfoji's Printing press:First press with Devanagiri', Type in South India was started in 1805 A.D', The Indian Antiquary, june 7, 1872, p. 194.

'Serfoji Rajah's Contribution to the Sarasvati Mahal Library', P.Perumal, Seminar on Dance, Karthick Fine Arts, Chennai, 2nd December 2001, pp.

'Sidelights on the Annexation of Tanjore Kingdom in 1855 A.D' T.K.Nagaraja Rao, N.B.Gadra, JTMSSML Journal Vol. XV, No. 1, p. 1-25.

'Thanjavur Natya on Canvas', R.Nagasamy, மன்னர் சரபோசி பிறந்தநாள் விழா மலர், சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர், *1989*, pp. *16,17*.

'Tanjore Maharaja Serfoji's Sarasvati mahal Library, Tanjore', P.P.S.Sastri, Third Oriental Conference, Madras, 1924, pp. 1-10.

'Tanjore Maharaja Serfoji's Saraswati Mahal Library, Tanjore', P.P.S.Sastri, JTMSSML, Vol. I, No. 1, p. 7.

'Tanjore Manuscripts', Illustrated Weekly of India, No. 81, 4th January 1959, pp. 18-19.

'Three botanical Albums in the Thanjavur Maharaja Serfoji's Saraswati Mahal Library in India', James J.White, Hundia, vol. 9, No. 2, 1998, pp. 161-163.

'Traditional Practices for the control of Insects in India', P.Perumal, Michael Wheeler, Conservation Journal, Victoria & Albert Museum, London, No. 23, April, 1997, pp. 8-9.

'Trasure trove of Knowledge' R.Jayaram, The Hindu, Sunday 19, March 1995.

'Who is the Victor? An Episode in Tanjore History in the year 1773, relating to Saraswati Mahal', JTMSSML, Vol. 16, No. 1, pp. 18-27.

ஆய்வேடுகள்

'தமிழ் இலக்கியம் காட்டும் தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாயமும்', சோ. சுந்தரி, (ஆய்வியல் நிறைஞர் ஆய்வேடு), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், *1992.*

'தஞ்சை மராட்டியர் ஆட்சியில் மேலைநாட்டினரின் தாக்கம்', ஆ.மீனாட்சி, (ஆய்வில் நிறைஞர் ஆய்வடே), தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், *1998.*

'தஞ்சை மராட்டியர் கால அரசியர், க.தனலெட்சுமி, (ஆய்வியல் நிறைஞர் ஆய்வேடு), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், *1998.*

'History of Shivaji II (1832-1855) Based on the Modi Records', S.Usha, Bharathidasan University, Thiruchirappalli, M.A. Dissertation, April, 1985.

'Libraries and Library Services in Thanjavur District up to Independence' T.Padmanaban, (Ph.D. Thesis), Department of Library and Information Science, University of Madras, May 1998.

'Organisation and Administration of Saraswati Mahal Library at Thanjavur - A Case Study' Prabhu Dayal, (M.Phil. Dissertation), Department of Political Science, Madurai Kamaraj University, Madurai, 1998.

'Study of Manuscript Libraries in Tamil Nadu : The Tanjore Maharaja Sarawathi Mahal Library, Thanjavur and Government Oriental Manuscript Library', P.Perumal, (MLIS Dissertation), Department of Library and Information Science, Madurai Kamaraj University, Madurai, 1984-85.

'Thanjavur Maharaja Serfoji's Saraswathi Mahal Library:A Critical Evolution of its Resources for Global Access', A. Kaliammal, (Ph.D. Thesis), Bharathidasan University, Thiruchirappalli, May, 1997.

□□□

காகிதச்சுவடி ஓவியம்-கஜ சாஸ்திரம்



காகிதச்சுவடி ஓவியம்



காகிதச்சுவடி ஓவியம்-கஜ சாஸ்திரம்



மிகச் சிறிய ஓலைச்சுவடி - பஞ்சபட்சி சாஸ்திரம்

18ஆம் நூற்றாண்டில் வரையப்பட்ட தஞ்சை மரபிலான சரசுவதி ஓவியம்



காகிதத்தில் வரையப்பெற்ற செம்பருத்தி ஓவியம்

சரபோஜி மன்னர் ஆரம்பித்த அச்சகத்தில் அச்சான
காரிகாவல்யாக என்ற மராட்டி நூலின் அட்டைப் படம்



Lenticular Cataract,
Cappannah . Age 50
1827. Complete Cataract of two years standing in the left & 7
Months in the right. Pupil fully dilated in both eyes Cataracts look
of a Mahogany Color. Extracted a large dark Lens from the left
Eye & Apply Extract of Belladona. Purging powder to be given
in the Evening
. No pain Continue
He is doing very well. Sight improves daily
. Apply Blister on the left Temple . & Ext. of Belladona
Discharged with well with Enam of 2 Pag.

சரபோஜியின் தன்வந்திரி மகாலில் நடைமுறைப்படுத்திய கண்நோயாளியின் மருத்துவக் குறிப்பு

இரண்டாம் சரபோஜி – துணி ஓவியம்

மராட்டி காகிதச் சுவடி ஓவியம்



Plate 43 Rigveda Manuscript – Birth of Ugrapandiyan

ரிக்வேத காசிதச்சுவடி –உக்கிரபாண்டியன் பிறப்பு

படங்கள் : நன்றி தஞ்சை சரசுவதிமகால் நூலகம்

முனைவர் ஆ.குணசேகரன் அவர்கள் கடலூர் மாவட்டம் காட்டு மன்னார்குடி வட்டம், இலக்குமிகுடி கிராமத்தைச் சார்ந்த திரு ஆறுமுகம்–திருமதி சிவபாக்கியம் ஆகியோரின் மகனாவார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சுற்றுலாவியல், நூலகவியல் ஆகியவற்றில் இளங்கலைப் பட்டமும் சமூகஅறிவியலில் முதுகலைப் பட்டமும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும் [வரலாறு] சென்னைப் பல்கலைக்கழகத்தில் நூலகவியலில் முதுகலைப் பட்டமும், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 'தஞ்சை மராட்டிய மன்னர்களின் நூலகப் பணிகள்' என்னும் தலைப்பில் முனைவர் பட்டமும் பெற்றுள்ளார். சென்னையில் உள்ள மறைமலையடிகள் நூலகத்தில் மூன்று ஆண்டுகள் உதவி நூலகராகப் பணியாற்றிய பின்பு 1983 முதல் 2014 வரை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நூலகராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

9 789301 320208